
# புதியதோர் உலகு செய்வோம்



ராஜம்கிருஷ்ணன்

தாகம்

# புதியதோர் உலகு செய்வோம்

For more ebooks visit: https://getmyebook.in/

# ராஜம் கிருஷ்ணன்



**2004**

**24 பிப்ரவரி, 2024 அன்று விக்கிமூலத்தில் இருந்து பதிவிறக்கப்பட்டது**

For more ebooks visit: https://getmyebook.in/




**உலகளாவிய பொதுக் கள உரிமம் (CC0 1.0)**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என

For more ebooks visit: https://getmyebook.in/

பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டு முயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

### No Copyright

For more ebooks visit: https://getmyebook.in/

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community

( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

---

# புதியதோர் உலகு செய்வோம்

## ராஜம் கிருஷ்ணன்

For more ebooks visit: https://getmyebook.in/



**தாகம்**

G3/8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார்

தி.நகர், சென்னை - 600 017 Fax & போன் 24345904

மின்அஞ்சல் : tamilputhakalayam@yahoo.com

வலைப்பக்கம்: http://expage.com/tamilputhakalayam

http://akian.50megs.com

---

**புதியதோர் உலகு செய்வோம்** (கட்டுரைகள்)

முதற் பதிப்பு : டிசம்பர் 2004

விலை ரூ.80.00

PUDHIYATHOR ULAGU SEIVOM

Articles in Tamil

by RAJAM. KRISHNAN

(C) Rajam Krishnan

First Edition : December 2004

Cover design : K. Uma

Pages : 232

**DHAGAM**

G3/8, Masilamani Street

Pondybazaar, T. Nagar

For more ebooks visit: https://getmyebook.in/

Chennai - 600 017
Ph. & Fax : 24345904
E-mail : tamilputhakalayam(a)VSnl.com
Website : http://expage.com/tamilputhakalayam
http://akilan.50megs.com

**Price : Rs.80.00**

Copyright warning: No part of this book may be reproduced or transmitted in any form or by any meanselectronic or mechnical including photocopying or recording or by any information storage and retrieval system without prior permission in writing from Mrs. Rajam Krishnan, Chennai.

---

**Laser Typeset at: Sri Srinivasa Designs, Chennai -34. Ph: 28210403**
**Printed at : Malar Printers 044-8224803**

---

# முன்னுரை

சுதந்தரப் பொன்விழா ஆண்டை ஒட்டியும், புத்தாயிரத் துவக்க விழாவை ஒட்டியும் மகளிர் சமுதாய நிலை குறித்து ஆயும் வகையில் பல்வேறு அரங்குகளில் நிகழ்ந்த கருத்தரங்குகளில் வாசிக்கப் பெற்ற கட்டுரைகளுடன் அணிமைக்காலங்களில் தினமணி, பாரதமணி, பெண்ணே நீ தினமலர் இதழ்களில் எழுதிய கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன.

For more ebooks visit: https://getmyebook.in/

அரசியல் சுதந்தரத்துக்காகப் போராட்டத்தில் குதித்த தலைவர்கள் பலரும், முதலில் மகளிரை ஒடுக்கிய சமுதாயத் தீமைகளை உணர்ந்து அவற்றை அகற்றத்தான் பாடு பட்டனர். இளம்பருவத் திருமணம், குழந்தைக் கைம்பெண்களை உருவாக்கி இருட்டில் தள்ளியது. பலதார மணம், மணம் புரிந்து கொண்டு அற்பக் காரணங்களுக்காக ஒதுக்கி வைத்து அபலைகளாக்குதல், தேவதாசி முறை என்ற பெயரில் விலைமகள் வாழ்வைக் கட்டாயமாக்குதல் என்றெல்லாம் பெண் எந்த உரிமையும் இல்லாதவளாக ஒடுக்கப்பட்டாள்.இந்த ஒடுக்குதலுக்குச் சமய சாத்திரங்கள் துணை நின்றன. நூற்றாண்டுகள் இக்கொடுமைகளால் குறுக்கப்பட்டு, ஆணாதிக்க மரபுகளாலும், சமயம் சார்ந்த நெறிகளாலும் பதப்படுத்தப்பட்ட பெண், அரசியல் சுதந்தரத்துக்குப்பின், சட்ட பூர்வமாகப் பல தீமைகளில் இருந்து விடுதலை பெற்றாள். ஆணும் பெண்ணும் சமம் என்ற அடித்தளத்தில் அவள் குடியாட்சி உரிமையையும் எந்தப் போராட்டமும் இல்லாமல் பெற்று விட்டாள். இத்துணை ஆண்டுகளில் பெண்களின் நிலை எல்லா அரங்குகளிலும் மாற்றம் பெற்றிருக்கிறது.

பெண்கல்வி பெற்று, எல்லாத்துறைகளிலும் ஆணுக்குச் சமமாகவும் மேன்மையாகவும், தன் ஆற்றலை நீரூபித்து வருகிறாள். விண்கலம் செலுத்தி ஒரு கல்பனா சாவ்லா இந்தியப் பெண்ணின் பேராற்றலை நிலை நிறுத்தியிருக்கிறாள். கலைகள், பண்பாடு, இலக்கியம், தொழில் நுட்பம், மருத்துவம்,

For more ebooks visit: https://getmyebook.in/

பொறியியல், என்று ஒரு துறைகூட அவள் பங்கு பெறாத இடமாக இல்லை. என்றாலும் ஆணாதிக்க மரபுகள் பெண்களின் ஆளுமையையே இன்னமும் மலரவிடாமல் செய்திருக்கின்றன. சமூகப் பொருளாதாரம், சமத்துவம் இல்லாத நிலைகளில் அவளுக்கு வறுமையையே வழங்கி அவள் முன்னேற்றத்தைக் கிடுக்கிப்பிடிக்குள் வைத்திருக்கிறது. அடித்தளத்திலும், அவள் பேராற்றலை விளக்கப் போராடிச் சமாளிக்கிறாள். ஆட்டோ, பேருந்து என்று ஓட்டுகிறாள். கட்டுமானத்தளங்களிலும், கடினமான உடலுழைப்பை நல்குகிறாள். குடும்பப் பொறுப்புடன் நவீனமான அழுத்தங்களுக்கும் அவள் ஈடுகொடுக்கிறாள்.

இத்தனை ஆற்றல்களும் அவள் இருத்தலுக்குப் போராடும் அவலத்தில் விடிவதை யாரே ஏற்றுக்கொள்வர்?

இயல்பான வாழ்வளிக்கும் திருமணமும் தாய்மையும் கூட வரதட்சணை பூதத்தை வென்று, குடும்பக்கட்டுப்பாட்டு நிர்ப்பந்தங்களை ஏற்கும் அழுத்தங்களைச் சுமந்து தான் அமைகிறது. அவள் அறிவு சார் முன்னேற்றப் பாதையில் அடிவைக்கிறாள், பாரம் சுமந்துமே. இந்நிலையில் பெண்களுக்கு ஆட்சி மன்ற ஒதுக்கீடு, சமத்துவ உரிமை என்றெல்லாம் ‘ஆதிக்க மரபுகள்’ விட்டுக் கொடுக்கவேண்டி இருக்கிறது. கிடைத்த இடத்தைப் பற்றிக் கொள்வோம் என்று, எழுத்தறிவு அற்ற பெண்ணும் பஞ்சாயத்துத் தேர்தல்களில் வெற்றி பெற்று, மூச்சுக்கு முக்குளிக்கிறாள். சுயநிதிக் குழுக்கள் புதிய

For more ebooks visit: https://getmyebook.in/

வரலாற்றை எழுதுகின்றன. கிராமப் பெண்கள், விவசாயம் அது சார்ந்த நீரூபித்து வருகிறாள். விண்கலம் செலுத்தி ஒரு கல்பனா சாவ்லா இந்தியப் பெண்ணின் பேராற்றலை நிலை நிறுத்தியிருக்கிறாள். கலைகள், பண்பாடு, இலக்கியம், தொழில் நுட்பம், மருத்துவம், பொறியியல், என்று ஒரு துறைகூட அவள் பங்கு பெறாத இடமாக இல்லை. என்றாலும் ஆணாதிக்க மரபுகள் பெண்களின் ஆளுமையையே இன்னமும் மலரவிடாமல் செய்திருக்கின்றன. சமூகப் பொருளாதாரம், சமத்துவம் இல்லாத நிலைகளில் அவளுக்கு வறுமையையே வழங்கி அவள் முன்னேற்றத்தைக் கிடுக்கிப்பிடிக்குள் வைத்திருக்கிறது. அடித்தளத்திலும், அவள் பேராற்றலை விளக்கப் போராடிச் சமாளிக்கிறாள். ஆட்டோ, பேருந்து என்று ஓட்டுகிறாள். கட்டுமானத்தளங்களிலும், கடினமான உடலுழைப்பை நல்குகிறாள். குடும்பப் பொறுப்புடன் நவீனமான அழுத்தங்களுக்கும் அவள் ஈடுகொடுக்கிறாள்.

இத்தனை ஆற்றல்களும் அவள் இருத்தலுக்குப் போராடும் அவலத்தில் விடிவதை யாரே ஏற்றுக்கொள்வர்?

இயல்பான வாழ்வளிக்கும் திருமணமும் தாய்மையும் கூட வரதட்சணை பூதத்தை வென்று, குடும்பக்கட்டுப்பாட்டு நிர்ப்பந்தங்களை ஏற்கும் அழுத்தங்களைச் சுமந்து தான் அமைகிறது. அவள் அறிவு சார் முன்னேற்றப் பாதையில் அடிவைக்கிறாள், பாரம் சுமந்துமே. இந்நிலையில் பெண்களுக்கு ஆட்சி மன்ற ஒதுக்கீடு, சமத்துவ உரிமை என்றெல்லாம்

For more ebooks visit: https://getmyebook.in/

'ஆதிக்க மரபுகள்' விட்டுக் கொடுக்க வேண்டி இருக்கிறது. கிடைத்த இடத்தைப் பற்றிக் கொள்வோம் என்று, எழுத்தறிவு அற்ற பெண்ணும் பஞ்சாயத்துத் தேர்தல்களில் வெற்றி பெற்று, மூச்சுக்கு முக்குளிக்கிறாள். சுயநிதிக் குழுக்கள் புதிய வரலாற்றை எழுதுகின்றன. கிராமப் பெண்கள், விவசாயம் அது சார்ந்த

---

# உள்ளே ...


1. பெண்கள் பிரச்னைகளும் ஐக்கியமும் 7
2. ஏழு அறங்கள் 30
3. அமிவைக் தடுத்து நிறுத்தும் ஆற்றல் 43
4. அறிவாற்றலா? நுகர்வு கலாசாரமா? 50
5. மானுடச் சிறப்பு 58
6. பெண் மொழி 67
7. இன்றைய பாரத குமாரி 74
8. பெண்களின் பலவீனம் ஏது? 78
9. மாதா - பிதா - குரு 85
10. பெண்களும் குழந்தைகளும் 90
11. வெறும் சாதனமா? 96
12. வெறும் செய்தியா? 104
13. நச்சுக்கனிகளை 108


For more ebooks visit: https://getmyebook.in/

அகற்றுவது எப்படி?
14. பற்றிப் படரும் 'பற்றுதல்' 112
15. ஆயிரம் காலத்து பயிர் அரக்கன் 119
16. செல்லாக் காசாகும் சட்டங்கள் 126
17. சட்டம் யாருக்கு? 130
18. புள்ளி ராஜா என்ன சொல்கிறார்? 134
19. அவல் இடிக்கும் ஆயுதம் 140
20. அவலங்களுக்கு அடிப்படை 144
21. மெய்ப்படாக முப்பது சதவிகிதம்! 149
22. நிறைவேறுமா ஒதுக்கீட்டு உத்தரவாதம்? 154
23. மிகப் பெரிய கேள்வி? 159
24. பெண்ணைப் பீடத்தில் வைத்த மாமனிதர் 173
25. தத்தி விளிம்பில் பயணம் 181
26. பெண்கள் படைப்பில் பெண்கள் 187
27. புதியதோர் உலகு செய்வோம்! 200

---

For more ebooks visit: https://getmyebook.in/

# 1. பெண்கள் பிரச்னைகளும் ஐக்கியமும்

பெண்களின் பிரச்னைகள், ஐக்கியம் என்ற நோக்கில், மகளிர் சம்பந்தப்பட்ட அவசியமான கருத்தாக இதுகாறும் ஆராயப்பட்டிருக்கவில்லை என்றே கொள்ளலாம். உருட்டிவிடும் கோலிகள், ஆங்காங்கே உரிய பள்ளங்களில் சென்றமருவது போல், பெண்களின் பிரச்னைகள், இதுகாறும் சில நிலைகளை ஒட்டியே நோக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பெண்கள் தொடர்பான எந்தப் பிரச்னையும், தனித்த கூறுகளுக்குடையன அல்ல - மொத்த சமுதாயத்துக்கும் தொடர்புடையதாகும். எனவே, பரந்ததொரு பின்புலத்துடன், பெண்களின் பிரச்னைகளை ஆராய வேண்டி இருக்கிறது.

முதலில் பெண்கள் சார்ந்த பிரச்னைகள் எவ்வாறு உண்டாகின்றன என்று பார்ப்போம்.

பெண்கள் ஒவ்வொருவருக்கிடையே, குடும்பம் சார்ந்தும், சமூகம் சார்ந்தும் நல்லுறவு இல்லை. நல்லுறவு இருக்க முடியாது என்றே உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. தொன்று தொட்ட மரபாக, அரணாக, பெண்களிடையே நல்லுறவும் ஒருமித்த உணர்வும் கூடாத இயல்பாக நிலையுறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒருவருக்கொருவர் பொறாமையுணர்வு கொண்டிருப்பது மிக இயல்பாகக் கருதப்பட்டு வருகிறது. இத்தகைய பிளவு மனப்பான்மை பல்வேறு கதை, புராணங்கள் வாயிலாகப் பெண்களுக்கு

For more ebooks visit: https://getmyebook.in/

நியாயப்படுத்தப்பட்டு, அவர்கள் மனப்பான்மை பதப்படுத்தப்பட்டிருக்கிறது.

இது ஏன்?

ஆடவர்களுக்கிடையே குடும்ப ஐக்கியம், சமுதாய உறவுகள் பெரிதாகப் பாராட்டப்பட்டு, கௌரவிக்கப்பட்டிருப்பதுபோல், பெண்களுக்கிடையே நிலைப்படுவது, கூடாது என்று அஞ்சும் வகையில் அந்த உறவுகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலை ஏன்?

கூர்ந்து நோக்கினால், மிகப் பழைய காலத்திருந்தே, குடும்ப அமைப்புக்கள் சார்ந்தும், சமுதாய, சமய அமைப்புக்கள் சார்ந்தும் பெண் ஆணுக்குச் சமமான மதிப்புடையவளாகக் கருதப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகும்.

சொல்லப் போனால், பெண்தான் சமுதாயத்தின் தூலமான வளர்ச்சிக்கோ, அல்லது நலிவுக்கோ காரணியாக இருக்கிறாள். இயற்கையளித்திருக்கும் தாய்மைப் பொறுப்பு, அவளைத் திண்மை, நொய்ம்மை என்ற இரு கூறுகளுக்கும் உடையவளாக்கியிருக்கிறது. உணர்ச்சிமிகு இயல்பினால் உயிர்க்கருவை ஏந்தித் தன்னுள் ஒரு பகுதியாகச் சுமந்து, அதன் ஆக்கத்துக்கும் எதிர்கால வளமைக்கும் தானே முழுதுமாகப் பொறுப்பேற்கிறாள். உலகின் தலையாய நோவை உடற்பரமாகப் பொறுக்கிறாள். அதன் பிரதிபலிப்பாக, உள்ளத்தில் தனக்கென வாழாத் தன்மையை இயல்பாகப் பெற்றுவிடுகிறாள். இவள்

For more ebooks visit: https://getmyebook.in/

இல்லையேல், மனித சமுதாயமே இல்லை. இத்தகைய ஆதாரமான சிறப்பியல்பு பெண்ணை அடைந்திருந்த போதிலும், அதற்குரிய வகையில் அவள் உயர் மதிப்பைப் பெற்றிருக்கவில்லை. மாறாக, அந்தத் தனிப் பொறுப்புக்களே அவளுடைய சுதந்தரமான இயக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன. அத்துடன் அவள் ஒரு மானுடப் பிறவி என்ற அடிப்படை நியாய உரிமைகளையும் கூடப் பறித்துவிடக் காரணமாக அமைந்துவிட்டன.

ஒரு மனிதரின் அடிப்படை உரிமை என்று நோக்குங்கால், அவர் உழைக்கவும், உண்டு உறங்கி வாழவும், கல்வி கற்று அதன் வாயிலாக எல்லா வகைகளிலும் தன்னை மேன்மையாக, செம்மைப்படுத்திக் கொண்டு முழு அளவில் முன்னேற்றம் பெறவும், பொருள் சார்ந்தும், எல்லாச் சலுகைகளையும் பெற உரிமையுள்ளவராகிறார். பெண்ணுக்கே உரிய கடமையாக இயற்கை அவளிடம் தாய்மைப் பொறுப்பை அளித்திருக்கிறது. இதையும் அவள் ஏற்று உரிய காலத்தில் இப்பொறுப்பை, தனக்குரிய விருப்பத்துக்கேற்ப நிறைவேற்றத் தேவையான வசதிகள், மற்றும் சலுகைகளைப் பெறவும் உரிமையுள்ளவளாக இருக்கிறாள்.

ஆனால், இத்தகைய உரிமைகள் மகளிருக்கு முழுமையாக எந்தக் காலத்திலும் அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை வருத்தத்துடன் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஏன், அளிக்கப்பட வேண்டும்? எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே என்றால், அந்த நிலையிலும் மகளிர் இல்லை.

For more ebooks visit: https://getmyebook.in/

ஒரு மகவைப் பெறும் தாய், தனது பெயர் முத்திரையை அந்தக் குழந்தைக்கு அளிக்கும் முறை பழைய காலத்தில் இருந்திருப்பதை அறிகிறோம். மக்கள் தாய்வழி அறியப்பட்டார்கள். ஆனால் நாடோடி மக்கள் ஓரிடத்தில் தங்கி, நிலத்தை உடமையாக்கிக் கொண்டு, அரசு, அரசுரிமை என்ற நாகரிகங்களைப் பெற்ற பின், இனப்பெருக்கத்துக்கும், வளர்ச்சிக்கும் பெண் ஒரு கருவி என்ற நிலைக்குத் தாழ்ந்தாக வேண்டி வந்தது.

ஆண் அவளைப் போற்றிக் காக்க, பொருள் தேடிக் கொண்டு வர வெளியில் சென்றான். பெண் இருப்பிடத்தில் ஊன்றி உழைத்தாள். நீர் கொண்டு வந்தாள்; நெருப்பைப் பாதுகாத்தாள், உணவு படைக்கும் பொறுப்பை ஏற்றாள்; கன்று காலிகளைப் பராமரித்துப் பாதுகாத்தாள். ‘துஹித’ என்று மகளைக் குறிப்பிடும் சொல்லே, பெண் பால் கரப்பவள் என்ற பொருளைக் காட்டுகிறது. ஆனால் இவளுடைய உழைப்பு சிறந்ததாக மதிக்கப் பெறாமல், பொருள் தேடி வரும் ஆணுடைய நிலையே, உயர்ந்ததாகக் கருதப்படுவது ஏன்?

மக்கட்செல்வம், ஒரு தனி மனிதனின் படைபலத்துக்கு இன்றியமையாததாயிற்று. பொருள் தேடி வந்து பெண்ணுக்கு அளித்துப் போற்றுபவன் ஆதரிப்பவனாக, முதன்மை பெற்றான். தன் இனம் பெருக, வம்ச உரிமையை விரிவாக்கப் பெண் தேவைப்பட்டாள். இந்த நிலையில் ஓர் ஆண் பல பெண்களுடன் வாழ்ந்து மக்களைப் பெறலாம் என்பதும் நியாயமானதாக ஆயிற்று. ஒரு

For more ebooks visit: https://getmyebook.in/

பெண்ணுக்காக ஆடவர் தமக்குள் சண்டையிடுவதும், தோற்றவர் மனைப் பெண்கள் வென்றவருக்கு உரியவராக ஆவதும், சாதாரணமாகக் கருதப்பட்டது. இவ்வாறு தொடர்ந்த காலக்கிரமத்தில் பெண், உயிரும் உணர்வும் உடைய மனிதப்பிறவியின் பெண், நிலத்தைப் போல் கன்று காலிகளைப் போல் தனிமனிதரின் உடமைப் பொருளாகித் தீர்ந்தாள்.

குடும்ப அமைப்புக்கள், இந்தத் தனிப்பொறுப்புகளை அவளுக்குக் கட்டாயமாக்கும் நெறியை வலியுறுத்தின. இது அவள் புற ஒழுக்கம் மட்டுமின்றி, மனஅளவிலும், ஒரு மனிதனுக்குட்பட்டவளாகக் கட்டுப்படுத்தப்பட்டது. ஆணுக்கு ஏகபோகமான உரிமைகளையும், அதிகாரங்களையும் வழங்கி, பெண்ணை அடிமையாகவே கருதும் நிலையில், அறம் சார்ந்த நெறிகளும்கூட விதிக்கப்பட்டன.

குழந்தை மணம், சதி, கைம்பெண் கொடுமை, போன்ற கூறுகள் அந்த நெறிகளின் விளைவே.

குழந்தை மணத்தின் நோக்கங்கள் இரண்டு : ஓர் ஆடவனின் வாழ்வுக்கு இன்றியமையாத பெண்ணை முன்னதாகவே நிச்சயித்துக் கொள்ளும் வாய்ப்பு; அந்தப் பெண்ணுக்கு விவரம் தெரியாப் பருவமாக இருப்பதனால், இளமையிலேயே மனதைத் திருமணப் பந்தத்திலும், அடங்கிய நெறிகளிலும் பிணித்து விடுவது சாத்தியமாகிறது.

இதனால் ஆணுக்கு எந்தவிதமான இழப்பும் துன்பமும் இல்லை. ஏனெனில் அவன் எப்போதும் சுதந்தரமானவன்; கல்வி கேள்விகளில் தன்னைச் செம்மைப்படுத்திக் கொள்ளும் உரிமை பெற்றவன்.

For more ebooks visit: https://getmyebook.in/

அவன் கிராமத்திலிருந்து பொருள் தேடவோ, உயர் கல்வி கற்கவோ செல்லும்போது அங்கு தன்னிச்சையாக வாழ்வதில் தடையேதும் இல்லை. இன்பத்துக்காக வேறு மகளிரை நாடலாம்; இன்னொரு மணம் புரிந்தும் வாழ்க்கை நடத்தலாம். ஆனால் கிராமத்தில், திருமண பந்தத்தில் பிணிக்கப் பெற்று, சதி என்ற நெறிகளின் கூட்டுக்குள் உயிர் வாழும் பெண், அந்த நாயகனை நினைந்தே உருக வேண்டும். வடமாநிலங்களில் குழந்தை மணங்களும் அதன் விளைவுகளும் இன்றும் இயல்பாகவே இருக்கின்றன.

கைம்பெண் கொடுமையே, குழந்தை மணங்களின் காரணமாக, வெகு முனைப்பாகச் சமுதாயத்தில் புரையோடியிருந்தது. துரதிர்ஷ்டவசமாக சிறுவனான கணவன் இறந்துவிட்டால், கன்னி கழியாத சிறுமி வாழ்நாள் முழுவதும் எதற்கும் ஆகாதவளாக ஒதுக்கப்பட்டாள்; அந்நாட்களில் உயிருடன் எரிக்கப்பட்டாள். இதற்கு அடிப்படைக் காரணம், அவள் வேறொருவனுக்காக மக்களைப் பெற்று, அவன் வமிச ஆற்றலை, உடைமைகளைப் பெருக்கிவிடக்கூடாது என்பதுதான்.

இத்தகைய அநியாயங்கள், நியாயமானவை என்று கருதப்படும் வகையில், பெண், சடங்குகளாலும், சம்பிரதாயங்களாலும், வழிவழி மரபுகளாலும் (மூளைச் சலவை செய்யப்பட்டாள்) பதப்படுத்தப்பட்டாள் என்றால் மிகையில்லை.

காந்தியடிகளிலிருந்து, கவியரசர் பாரதி வரையிலும் குழந்தை மணத்தின் தீமைகளைக் கண்டித்துப் பெண் கல்வியை வற்புறுத்தி, பெண்ணடிமைத்தனத்தை

For more ebooks visit: https://getmyebook.in/

ஒழிக்க முனைந்தனர். கைம்பெண்கள் நிலை மாறி, மறுமலர்ச்சியும் நல்வாழ்வும் பெற, கல்வி கற்று அவர்கள் பொருளாதார சுதந்தரம் பெற வாய்ப்புகளை ஏற்படுத்தியும், மறுமணம் அவர்களுக்கும் உரியதாக வேண்டும் என்றும் முனைப்புடன் அரும்பாடு பட்டனர். சில கொடுமைகளுக்குச் சட்டத்தின் மூலம் தீர்வு காணலாம் என்றும் கண்டனர்.

இன்னொரு பெரிய தீமை, பெண்ணை விலை பொருளாகக் கணிக்கும் கணிகையர் மரபு. பெண் வெறும் அடித்தள உழைப்பாளி - அடிமையாகக் கருதப்படும்போது அவள் குடும்பத்துக்குரியவளாகிறாள். இன்னொருபுறத்தில், சிற்சில உரிமைகளை அவளுக்குக் கொடுத்து, அவள் அறிவை ஆடல் பாடல் என்ற கலைத்தேர்ச்சிகளில் பயன்படுத்துகின்றனர்.இந்த வாய்ப்புகளின் நோக்கமும், ஒர் ஆணின் மகிழ்ச்சிக்கான இன்ப அநுபவங்களின் பொருட்டாகவே இருக்கிறது. இதற்கென்றே ஒரு வகுப்பை நிர்ணயித்து அவளுக்குக் குடும்ப மேன்மை கிடையாது என்று இழிவுக்குரிய நோக்கில் நிலைநிறுத்தியிருக்கின்றனர்.

இந்தத் தேவதாசி முறை, கடவுளின் பெயரால் நியாயப்படுத்தப்பட்டாலும், ஒரு போகப் பொருளாக அவளை வாணிபச் சரக்காக்கும் அவலமே நிகழ்ந்து கொண்டு இருந்தது. விலைமகளுடன் தொடர்புகொள்ளும் ஆண், சமூகக் கவுரவம் பெற்றான். ஆனால், அந்த இழிவுக்குத் தள்ளப்பட்ட பெண்ணோ எல்லா வகுப்பினராலும் அவமதிக்கப்பட்டாள். இந்தக் கொடுமையை ஒழிக்க, சட்டம் கொண்டு வர, இந்த

For more ebooks visit: https://getmyebook.in/

நூற்றாண்டின் தொடக்க காலத்தில டாக்டர் முத்துலட்சுமி, மூவலூர் இராமாமிர்தம் போன்றோர் அரும்பாடுபட்டிருக்கின்றனர்.

இவ்வாறு பெண் சமமில்லாத ஒரு சுயாதீனமற்ற வாழ்முறைக்குக் கட்டாயப்படுத்தப்படுவதன் காரணத்தை ஆராயும்போது, சில கூறுகள் தெளிவாகின்றன.

பெண் பிறப்பெடுக்கும் நேரத்திலிருந்தே, உடற் கூறியலை முதன்மைப்படுத்தும் மரபுகளில்தான் வளர்ச்சி பெறுகிறாள். இனப் பெருக்கத் தொழிலுக்காகவே அவள் - பிறப்பெடுத்திருக்கிறாள் என்ற கருத்து, அவளின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் அவளுக்கு வலியுறுத்தப்படுகிறது. இதனால் அவள் ஆணின் சார்புக்கு மிக முக்கியத்துவம் அளிக்கும் மனப்பாங்கைப் பெறுகிறாள். காது குத்திக் கம்மல் அணிவதும் மூக்கைத் துளைத்துக் கொண்டு பொன்னணி பூணுவதும், பட்டுப் பட்டாடைகளை உடுத்துவதும், உடலழகை மிகைப்படுத்திக் கொள்ளும் நோக்கையே குறிப்பாக்குகிறது. இவ்வாறே, அறிவுமலர்ச்சி என்ற குறிப்பே, பின்னுக்குத் தள்ளப்படுகிறது.

திருமண வயதுக்குப் பெண் வருமுன், அவள் அழகு, அடக்கமான இயல்பு, பொறுமை, தியாகத்தன்மை, ஆடவனை மகிழ்விக்கக்கூடிய பல்வேறு கலைகளில் தேர்ச்சி, ஆகிய சிறப்புக்களே கணிக்கப்படுகின்றன. இவள் ஓர் ஆடவனை மகிழ்விக்க வேண்டும்; ஆண் குழந்தைகளைப் பெற வேண்டும். இன்னும் சுமங்கலியாக உயிரையும் விட வேண்டும். இதிலும் ஒரு

For more ebooks visit: https://getmyebook.in/

முரண்பாடு. கணவன் எத்தனை வயதுடையவனாகவும் இருக்கலாம். நோயாளியாக, வறியவனாக, வாழத் தகுதியற்றவனாக இருக்கலாம். எப்படி இருந்தாலும் இவள் வாழ்நாளில் இவள் அவனைத் தெய்வமாக மதித்து அவனை மகிழ்விப்பதும் போற்றுவதும் இவள் கடமை. இத்துடன் இவள் சுமங்கலியாக இறப்பது மேன்மை!

இவ்வாறு இவளுடைய சொந்தமான அறிவும் திறமைகளும் சுதந்தரமாக மலர வாய்ப்பில்லாத நிலையில், கடமைகள், மரபு அழுத்தும் நெறிகளில் திணிக்கப்படுகின்றன. மிகப் பெரிய அரச குடும்பத்துப் பெண்ணானாலும், வறியநிலையில் ஏவல் செய்து வயிறு வளர்க்கும் வகுப்பிற்பட்டவளானாலும், இந்த அடிப்படையிலேயே அவனது மனம் பதப்படுத்தப்படுகிறது.

ஒரு பெண் தனிப்பட்ட முறையில் அறிவிலும் திறமையிலும் சிறந்து விளங்கினாலும் மேன்மையில்லை. எல்லாச் சிறப்புக்களும் உடைய ஓர் ஆண்மகனைச் சார்ந்து அவனுக்கு உரியவள் என்று வரும்போதுதான் அவள் சமூகத்தில் மதிக்கப் பெறுகிறாள்.

இந்நாள் பெண் கல்வி கற்று வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும், பொருளாதார அளவில் முன்னேற்றம், பல சலுகைகள் அளிக்கப் பெறுகின்றன. பெண்கள் நலத்துறை என்பது சமூக இயலில் ஒரு முக்கியமான பிரிவாகவே இயங்குகிறது.

சுதந்தரம் பெற்ற நாள் முதலாக வயது வந்தோர் அனைவரும் வாக்குறுதி பெற்று அரசைத்

For more ebooks visit: https://getmyebook.in/

தேர்ந்தெடுக்கும் உரிமைகளைப் பெற்றபின், தூலமான இந்தக் குடியரசு அமைப்பில், உயர்நிலை மாளிகைவாழ் மக்களும், அடித்தள ஆண்டியும் ஒரே மாதிரியான உரிமைகளைப் பெற்றிருப்பதாகவே கருதப்படுகிறது. நாகரிகமடைந்த மேலை நாடுகளில் கூடப் பெண்களுக்கு வாக்குரிமை இல்லாத நிலை உண்டு. ஆனால், இங்கே ஒரே கோட்டில் இந்தச் சமத்துவம் வந்துவிட்டது. எனினும் பெண் இன்னமும் பழைய பிரச்னைகளை முற்றிலும் வெற்றி கொள்ளவில்லை; புதிய பிரச்னைகளையும் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. அத்துடன் தனது கூட்டுக்குள்ளிருந்து தூலமாக வெளியே வந்து புதிய அறைகூவல்களை எதிர்நோக்கும்போது மனஅளவில் விடுபடாத நிலையிலேயே பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்கிறாள்.

பாரத நாட்டின் பல கோடி மக்களில் இன்று பொருளாதாரம் சார்ந்து வாழ்க்கைத் தேவைகளைக்கூடப் பெற இயலாத அடித்தளப் பிரிவில் பாதிக்கு மேற்பட்ட சதவிகிதத்தினர் நெருங்குகின்றனர். கல்வி மற்றும் சமுதாயம் சார்ந்த நாகரிகப் பிரக்ஞை செம்மைப்படாமல் அந்தப் பழைய அடிமைப்படுத்தும் கோட்பாட்டிலேயே பெண்களை நிலைநிறுத்தும் மனப்பாங்கு மேல்தளத்திலும் கீழ்நிலையிலும் அகன்றிருக்கவில்லை. வரதட்சணை போன்ற அவலங்கள் அகலவில்லை; மாறாக, பல்வேறு பரிமாணங்களில் கோரங்களைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

For more ebooks visit: https://getmyebook.in/

உயர்மட்டத்தில், பெண் வெறும் அலங்காரப் பொருளாக, கணவனின் வாணிப வெற்றிக்கு மதுவார்க்கும் அடிமையாகச் செயல்படுவதும்,

இடை மட்டத்தில் பெண் அலுவலகத்திலும் வீட்டிலும் கொத்தடிமைபோல் செயல்பட வாழ்வைப் பல ஆயிரங்கள் கொடுத்து வாங்கும் நிலையில் இருப்பதும், அடித்தளத்தில் எல்லா வகைகளிலும் எந்த மறுமலர்ச்சிக்கும் வழியின்றி அழுத்தப்படுவதும் இத்துணை சட்டங்களும் திட்டங்களும் வந்த பின்னரும் ஏன் மாறவில்லை?

அடித்தளத்தில் சட்டங்களைப் பற்றிய உணர்வோ, மீறுவது பற்றிய அச்சமோகூட இல்லை. இதனால் பெண்ணின் உரிமைகள் அன்றாடச் சட்டமீறலில் பறிக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றன.

பெண் குழந்தைகள் அதிகமாக உழைக்கிறார்கள்; கல்வி மறுக்கப்படுகிறது. வயது வந்ததும் வராததுமாக ஓர் ஆடவனின் உரிமைப் பொருளாவதற்குத் தடையில்லை. தாய்மை திணிக்கப் பெறுகிறது. உடல் நலம் அலட்சியமாக்கப்படுகிறது. இந்தப் படியில் சிசு மரணங்கள், பெண் மரணங்கள் அதிகம்.

இந்த நிலை ஏன்?

வரதட்சணைக் கொடுமையை எடுத்துக் கொண்டால் நேராக, எதிர்க்கேள்வி வரும் தாய்மார்தான் குற்றவாளிகள். கணவனின் சகோதரியும் தாயுமே புதிய மணப்பெண்ணைக் கொடுமைப்படுத்துவதில் இணைந்து நிற்கின்றனர்.

For more ebooks visit: https://getmyebook.in/

நமது நாட்டை ஆண்ட ஆங்கிலேயர் மக்கள் ஒற்றுமையைக் கூறு போட்டால் எளிதாகத் தாம் ஆதிக்கம் செலுத்த முடியும் என்று கண்டிருந்தனர். அந்நாள் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட, மக்கள் சக்தியை ஒன்று திரட்ட, பல்வேறு சாதி சமயப் பிரிவுகளுக்கு அப்பால் ஒன்றுபட்ட உணர்வை, நமது தேசப்பிதா காந்தியடிகள் தூண்டிவிட முன்நின்றார். சர்வாதிகார வெறியை எதிர்த்து, புதிய பொருள் முதல் கொள்கையை அமுலாக்கி, சமத்துவக் குடியரசை நிலைநிறுத்த, ஏழைப்பாட்டாளிகள், உழவர், பெண்கள் ஆகியோரை ஒன்று திரட்ட, பிளவுகளைத் தாண்டி லெனின் அழைத்துச் சென்றார்.

சாதியில்லை, சமயமில்லை, ஒன்றுபடுவோம் வாருங்கள்; ஒன்றுபடுவோம், உரிமைக்குப் போராடுவோம் என்றெல்லாம் தாராளமாகக் கோஷங்கள் இன்றும் ஒலிக்கின்றன. ஆனால் இதெல்லாம் ஆண்களுக்குத்தான் பெண்களுக்கு இல்லை என்ற பொதுக்கருத்து இன்னமும் தகர்க்கப்பட்டிருக்கவில்லை. சொல்லப் போனால், பெண்களுக்குள் ஏது சாதி? ஏது சமயம்? ஏது பிரிவு? பெண்ணைப் பொறுத்தவரையில் அவள் மாளிகையில் பிறந்தாலும் கணவனுக்குக் குற்றேவல் செய்கிறாள். அவன் உடலநலிவுற்றபோது, அவள் எல்லாப் பணிகளையும் செய்பவளாக இருக்கிறாள். ஒரு மகவுக்குத் தாயென்றால் அவள் எல்லா அழுக்குகளையும் கழிவுமலங்களையும் பொறுக்கிறாள். இதனாலேயே காந்தியடிகள், துப்புரவுப்

For more ebooks visit: https://getmyebook.in/

பணி செய்யும் தோட்டி வருக்கத்தினரை, சமுதாயத்தின் தாய்க்குலத்தினர் என்றார்.

துப்புரவுக்காரி, சலவைக்காரி, வீடு சுத்தம் செய்து குற்றேவல் செய்பவள், சமையற்காரி, செவிலி என்று அவள் செய்யாத வேலை என்ன இருக்கிறது?

‘மலையில் வளர்ந்தாலும் உரலில் மசிய வேண்டும்’ என்ற பழமொழிக்கே உரித்தானவள் பெண். பெண்ணின் இந்த உழைப்புக்குச் சமூக மதிப்புக் கிடையாது என்ற கருத்துக்கு நல்ல விளக்கம்கூடக் கூறலாம். அவளுக்கே என்று உரியதாக்கபட்ட சமையற்பணி, சமுதாயத்தில் கடை நிலை ஊழியமாகக் கருதப்படுகிறதே!

இதில் எந்த ஒரு பணியைச் செய்யாமல் ஒரு பெண் வாழ்நாளைக் கழிக்க முடியும் ஒரு செல்வனான ஆண், உடல் வருந்த, அசையக்கூட வேண்டாம். தன் படுக்கையைத் தட்டிப் போட்டுக் கொள்ள வேண்டாம். தன் உணவுத் தாலம் கூடக் கழுவ வேண்டாம். ஆனால் மாளிகையில் வாழ்ந்த பெண்ணானாலும், தனது மகவு மடியில் அசுத்தம் செய்யும்போது மகிழ்வுடன் ஏற்றுத் துப்புரவு செய்கிறாள். அதற்காக இரவு பகல் பாராது உழைக்கிறாள்.

இவருக்குச் சாதி இருக்கிறதா? சாதி தொழிலைச் சார்ந்துதான் அமைகிறது என்றால், பெண் எந்த சாதிக்கு உரியவள்? இவள் இயக்கத்தில் எந்தத் தொழிற்கூறும் விலக்கில்லையே? இந்த சாதிக்குரியவள் என்று தன்னைக் கூறிக் கொள்ள இவருக்கு என்ன தகுதி இருக்கிறது?

For more ebooks visit: https://getmyebook.in/

சமயம்... என்று எடுத்துக் கொண்டால், எந்த ஒரு சமயமும் பெண்ணை ஆணுக்குச் சமமாக ஒப்பிடவில்லை. கோயில் குருமார் என்ற உரிமையை எந்த உயர்ந்த சாதிப் பெண் பெறுகிறாள்?

எல்லாச் சமயங்களும், பெண்ணை இரண்டாம்பட்ச நிலையில் ஆணைச் சார்ந்து வாழும் கோட்பாட்டில் வைப்பதில் முதன்மை பெற்றிருக்கின்றன.

பால் சார்ந்த குற்றங்கள் இருவருக்கும் பொது வென்றாலும், பெண்ணுக்குக் கல்லெறியும் கசையடியும் நியாயமாக்கப்பட்டிருக்கிறது. ஆண் குற்றம் புரிய உரிமை கொண்டவனைப் போல் விடப்படுகிறான். பெண் சுமையும் சுமக்கிறாள்; ஏச்சுக்கும் பேச்சுக்கும் சமூகப் புறக்கணிப்புக்கும் ஆளாகிறாள். அவளுடைய உயிரையே குடிக்கும் விளைவுகளும்கூட, சமயம் சார்ந்து அவள் மனம் மிகவும் நொய்ம்மைப்படுவதாலேயே ஏற்படுகின்றன. எனவே, சமயம் என்று சார்ந்து அவள் பெருமை கொண்டாடுவதும்கூட தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் செயல்தான்.

ஆனால் இதுபற்றிய விழிப்புணர்வு பெண்ணுக்குப் பூரணமாக வர இயலாதபடி, அவள் அறிவுக்கண்கள், ‘கலாசார’ மரபுகள் என்ற திரைகளால் மூடப்படுகின்றன. சமயநெறிகள் என்ற கோட்பாடுகள் இறுக்கமாக அவளைத்தான் பிணிக்கின்றன.

அடுத்து, பெண்களின் உறவுகள், குடும்பம் சார்ந்தும் , சமூகம் சார்ந்தும் எவ்வாறு நிலைப்படுத்தப் பட்டிருக்கின்றன என்று பார்ப்போம்.

For more ebooks visit: https://getmyebook.in/

தாய்-மகள், சகோதரி-சகோதரி மாமி-மருமகள்; அண்ணி நாத்தி, இவை முக்கியமான உறவுகள். இவைதவிர, ஒரே ஆணை மணந்து கொண்ட பெண்களுக்கிடையே உறவுகள்; சகோதரர்களை மணந்த பெண்களுக்கிடையே உறவுகள் - என்றும் வகைப்படுத்தலாம்.

தாய்-மகள் உறவு, பற்றும் பாசமும் உடைய உறவு.

இந்த உறவு, தாய்க்கும் மகனுக்குமிடையே உள்ள உறவுபோல் நெறிப்படுத்தப்படவில்லை.

என்ன இருந்தாலும் மகள் - இவள் பிறந்த வீட்டைத் துடைத்துக் கொண்டு போகிறவள்; இவளால் புகுந்த வீட்டுக்குத்தான் ஆதாயங்கள்; இவளிடமிருந்து எந்த நன்மையையும் எதிர்பார்க்க இயலாது; இவருக்கு வண்ணம் வரிசைகள் செய்யும் போதுதான் சமூகக் கவுரவமும் மதிப்பும் உண்டாகிறது.

மகளின் நோக்கிலோ, தாய் இவருக்காக உடலாலும் பொருளாலும் கடமைப்பட்டிருப்பதாக நினைக்கும் வண்ணம் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தாய் உடல் நலமில்லாமல் சாகும் மூச்சை விட்டுக் கொண்டிருந்தாலும் , கணவன் போகக்கூடாது என்று சொன்னால் அந்த வாக்கைக் கடைப்பிடிப்பதுதான் அவளுக்கு மேன்மை. உத்தமமான தாயன்பும் எவ்வாறு மகள் விஷயத்தில் பிரித்து நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது! கணவனின் தாயாதி பங்காளி இறந்தால்கூட இவள் பத்துநாள்-கருமாதிச் சோகச் சடங்குகளைக் கொண்டாட உரிமையுள்ளவள்.

ஆனால் சொந்தத் தாய்க்கு மூன்றே நாட்கள்தாம் துட்டி நாட்கள்.

தாயின் இடத்தில் சிற்றன்னை என்று வந்து விட்டாலோ, நிச்சயமாக அவள் ஒரு கொடியவளாகவே நெறிப்படுத்தப்படுகிறாள். மறுதாரம் எத்துணை அன்புடனும் ஆதரவுடனும் முதல் தார மக்களைப் பேணினாலும், சுற்றியுள்ள பெண்களே அவளைச் சந்தேகக் கண்கொண்டுதான் துருவுவார்கள். அந்த மக்களிடையே அவள் காட்டாத வேற்றுமையை சாடைமாடையாக ஏற்றி நஞ்சை ஊட்டுவார்கள். இதனாலெல்லாம் அந்தப் பெண்களுக்கு ஏதேனும் ஆதாயம் உண்டா? கிடையாது. பெண்கள் தங்கள் குடும்ப - சமூக உறவுகளை ஒருவருக்கொருவர் குதறிக் கொள்வது இயல்புக்குரியதாக நிலைப்படுத்தப்பட்டு, காலம் காலமாக, இதிகாச, புராண ரீதியாக வலுவிக்கப் பெற்று, பின்பற்றப்படுகிறது.

சகோதரி - சகோதரி உறவுகளில், போட்டியும் பொறாமையுமே முதன்மை பெறுகின்றன. இந்தப் போட்டியில், அறிவு மற்றும் திறமைகளுக்கிடமில்லை. அழகு - ஆபரணங்கள் உடைமை, கணவர் பெருமை, தாய்வீட்டிலிருந்து பெற்றுச் செல்லும் வண்மை வரிசைகளின் சிறப்பு என்றுதான் அமைகின்றன. தனது மகனோ மகளோ சிறப்பாக இல்லாமல் சகோதரி மக்கள் சிறப்படைந்தனர் என்ற மாதிரியான கூறுகளில்கூட, எரிச்சலும் பகைமை உணர்வும் இயல்பானதாகப் பாதுகாக்கப்படுகிறது. சகோதரர்களை மணந்த பெண்களுக்குள் ஒற்றுமை இல்லாத நிலையிலேயே கூட்டுக் குடும்பங்கள் கலகலத்துப்

For more ebooks visit: https://getmyebook.in/

போய் பிரிவுகளுக்கும் பிளவுகளுக்கும் உள்ளாகின்றன என்பதே உலகுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

‘ஆண்பிள்ளைகள் ஒண்ணு சேர்ந்திடுவாங்க! பொம்பிளங்க சேராது’ என்பது பிரசித்தம்.

ஓர் ஆணைச் சார்ந்து அவனுக்கே தனியுடமையாக வாழும் வாழ்வில் இன்னொரு பெண் பங்கு கொள்ள வருகிறாள் என்ற பெருமையிலும்கூட, சார்புநிலையே ஆதாரமாக நிற்கிறது.

இந்தக் காரணங்களைக் காட்டியே, பெண்களை வெறும் அடிமைகளாக, வெளி உலகம் தெரியாதவர்களாக, கணவனின் நடவடிக்கைகளில் சம்பந்தம் இல்லாதவர்களாக, பொருளாதார உரிமைகளில், குடும்ப இயக்கம் மற்றும் சிறப்பம்சங்களில் பங்கு மறுக்கப்பட்டு, உழைப்பாளிகளாகவே சுரண்டிக் கொண்டிருக்கும் குடும்ப அமைப்புக்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. பெண்ணின் கல்வித்திறமைகளும், பொருளாதாரப் பங்கேற்புக்களும், குடும்ப அமைப்புகளை மேலும் வளமுடையதாக உயர்த்திவிடவில்லை.

இன்னமும் பாரதத் திருநாட்டில், பின்தங்கிய வடமாநிலங்களில், பெண் ஏழு வயசு மகளுக்குத் தாய்ப் பால் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறாள். மாமியார் அதட்டலும், கணவனுடன் மைத்துனர் அடிப்பதும்கூட நிகழ்கின்றன.

கிராமங்களில், கூட்டுக் குடும்பங்களில் ஆடவர் வயலிலோ கொட்டிலிலே வரும் வருமானத்தைக்

For more ebooks visit: https://getmyebook.in/

கள்ளிலும் சூதிலும் செலவு செய்ய ஒற்றுமையாக இருப்பார்கள். ஆனால் பெண்கள், தங்கள் புழுக்கங்களை ஒருவர் மீது ஒருவர் வசைபாடிக் கொண்டும் ஏசிக் கொண்டும், பேசிக் கொண்டும் அழுது கொண்டும் உழைப்பில் அழுந்திக் கொண்டும் அன்பும் இதமும் மேன்மையும் அறியாத பாழ்குழியில் விழுந்த நிலையில் காலம் கழிக்கின்றனர். நாம் ஏன் இந்த நிலைக்கு ஆளானோம் என்று நினைத்துப் பார்க்க, அவர்களைப் பிரித்து வைத்திருக்கும் சக்திகள் இடம் கொடுப்பதில்லை.

‘எனக்கொன்னும் மறுப்பு இல்லை. என் மனைவிதான் சம்பிரதாயம் குறையக்கூடாது என்கிறாள்’ என்று தந்தை நழுவுவார்.

‘அம்மா சொல்கிறபடி தான் எல்லாம்’ என்பான் பையன்.

ஆக, தாயாராகிய பெண்மணி மகனுக்குப் பெண்ணைக் கொடுக்க வரும் வீட்டாரிடம் பேரம் பேசுவதிலும் கறப்பதிலும் பெருமை கொள்கிறாள்.

நாம் நம் இனமான ஒரு பெண்ணின் நல்வாழ்விலும் மகிழ்ச்சியிலும் பங்கு கொள்கிறோம். அவளை வருந்தச் செய்யலாகாது என்ற உணர்வே சிறிதும் அவளிடம் தலைகாட்டுவதில்லை.

பொருளாதார உரிமை பெற்று உழைக்கும் மகளிரிடமும், உரிமை பெயருக்குத்தான் இருக்கிறது. உண்மையில் ஆணே கோலோச்சுகிறான். தனது ஊதியத்தைக் கொண்டவனுக்குக் காட்டாமல் இவள் விருப்பப்படி எதுவும் செய்ய இயலாது.

For more ebooks visit: https://getmyebook.in/

தன் பெற்றோருக்கு ஓர் அவசியம் என்று இவள் பெறும் ஊதியத்தில் ஒரு பங்கை அளிப்பதற்கும் அவனுடைய அநுமதி பெறுவது உசிதமாகக் கருதப்படுகிறது. ஏன்? அவளுடைய உடல், பொருள், ஆவி அனைத்தும் அந்தக் கணவன், இல்லாவிட்டால் அவனைச் சார்ந்த மக்களுக்கு உரிமை.

பீடி சுருட்டுதல், மற்றும் பாய் முடைதல் போன்று தொழில் செய்யும் பெண்கள், தங்கள் ஊதியம் பதிவு செய்யப்படும் அட்டைகளில் கணவன் அல்லது தந்தை பெயர்களே இருப்பதைப் பல பெண்கள் முறையிட்டிருக்கின்றனர். பெண்களின் உரிமைகளுக்குப் போராடும் கூட்டங்களில் ஊதியம் பதிவு செய்யும் பாஸ்புக்குகள் அவரவர் பெயர்களிலேயே இருக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்படுவதும் புதிதல்ல.

இன்னமும் பெண் பள்ளிக்கூடங்களில், பெண் குழந்தைகளைச் சேர்ப்பதற்கும்கூடத் தந்தை வந்து கையெழுத்துப் போட வேண்டும் என்ற விதிகள் கூர்மையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

ஆணைச் சார்ந்துதான் வாழ வேண்டும் என்ற தாழ்வு மனப்பான்மை, பத்திரமின்மை பெண்ணை விட்டு அகலாமல் நிலைத்திருக்கும் வண்ணம், எல்லாப் பழைய நெறிகளும் ஆழமாகப் பேணப்படுகின்றன. மாற்றங்கள், முற்போக்கு நாகரிகங்கள் எல்லாம் மேல் எழுந்த வாரியான கண்துடைப்புக்களே.

எனவே அவளுடைய உணர்வுகள் அனைத்தும் அந்த ஆதாரத்திலேயே பிறக்கின்றன.

For more ebooks visit: https://getmyebook.in/

ஆணைச் சார்ந்து வாழவேண்டிய சமூக மதிப்பின் காரணமாக, பெண்களின் உறவுகளிடையே பிளவு மனப்பான்மை தோன்றுகின்றன.

ஒரு மாமியார் இதன் காரணமாகவே மருமகளை விரோதமாகப் பார்க்கிறாள். ஒரு சகோதரி தன் சகோதரன் மனைவியை எதிரி போல் பாவிக்கிறாள். தாய்-மகன் பாசம் கட்டுப்படுத்தும் உடமைக்குரிய மூடப்பாசமாக உருவாவதற்கும் இந்த ஆழ்ந்த உணர்வே காரணமாகிறது.

ஒரு பையன் திருடுவது, குடிப்பது போன்ற தீய பழக்கங்களில் விழும்போதுகூட, அவனைத் திருத்திக் கண்டிக்கும் துணிவு ஒரு தாயிடம் தோன்றுவதில்லை. ஏன் இந்தக் கண்மூடிப் பாசம்?

இதே சமயம், மகள் தவறாக நடந்தால், அவளுக்கு மட்டும் கடும் தண்டனை கொடுக்கிறாளே, அது ஏன்?

உண்மையில் மோசம் போகும் மகளே, சமுதாயக் குற்றம் செய்யும் மகனைவிடப் பரிதாபத்துக்குரியவள். ஆனால் மகனை மறைத்து வைக்கும் தாய் மகளை நாலு பேரறியக் கொடுமைப்படுத்துகிறாள். ஏன்?

அடுத்து, பெண்களைப் பிளவுபடுத்தும் இன்னொரு முக்கியமான கூறு, பெண்ணைப் பற்றிய ஒழுக்க விமரிசனங்கள்.

ஒழுக்க அவதூறு, பெண்ணுக்கு இழைக்கப்படும் மிகப்பெரிய கொடுமை. அவள் நல்வாழ்வையும் எதிர்கால மேன்மையையும் குலைக்க ஒரு சிறு அவதூறு போதுமானதாக இருக்கிறது. ஏன்? மிகச்சிறந்த தொழில் புரிபவளை, திறமைசாலியை

For more ebooks visit: https://getmyebook.in/

ஒன்றுக்கும் உதவாமல் மழுங்கடிக்கச் செய்யவும் இந்த ஒழுக்கப் பழியே காரணமாகிறது. இதையும் பெண்ணே பெண்ணுக்கு இழைக்கிறாள்.

பழைய காலங்களில் பெண்களின் உணர்வுகளுக்கு எந்த வடிகாலும் இல்லாமலே கல்வி - சமூக உணர்வும் முடக்கப்பட்டு அழுத்தப்பட்ட நிலையில் இது போன்ற பொறுப்பற்ற அவதூறு பேசுவது தவிர்க்கப்படாதபடி இருக்கலாம்.

ஆனால் இந்நாளிலோ

வாணிபரீதியாக இது மிகக் கேவலமான பரிமாணங்களைப் பெற்று, சினிமா நடிகைகளைப் பற்றிய தகவல்களாகப் பத்திரிகை பக்கங்களை நிரப்புகின்றன.

இந்தப் போக்கு ஆண்களிடம் இருந்தாலும், பெண்களே இந்த வகைச் செய்திகளை எந்த எதிர்ப்பும் காட்டாமல் ஆதரிக்கின்றனர்.

ஒரு பெண்ணின் நடத்தை ஒழுக்கம் பற்றி இன்னொரு பெண் விமரிசிக்கும்போது, தம்மினத்தின் மீதே சேற்றை வாரி இரைப்பதாக உணர வேண்டும்.

எந்தப் பெண்ணும் சமூகம் புறக்கணிக்கும் ஒழுக்கக் கேட்டைத் தானாக ஏற்கத் துணியமாட்டாள். அவள் தூண்டப்படுகிறாள்; தள்ளப்படுகிறாள்.

சமுதாயக் குற்றங்கள் பெரும்பாலும் பொருளாதார வறுமையிலும் மிதமிஞ்சிய செல்வ - அதிகாரக்குவிப்பின் ஆணவத்திலும்தான் நிகழ்கின்றன.

For more ebooks visit: https://getmyebook.in/

குறைந்தபட்சம் ஓர் ஆணைத் திட்டும்போதுகூட, அவன் தாயின் ஒழுக்கக் கேட்டைக் குறிக்கும் சொல்லால் குத்தி வாங்குகிறார்கள். இன்னார் மகனை - என்று தாயைத் தாக்குகிறார்கள்.

ஒரு பெண்ணுக்கு அங்கீகரிக்கப்படாத தாய்த் தன்மை உயிரையே மாய்த்துக் கொள்ளும் அளவுக்குக் கொடுமையானதாக சமூகப் புறக்கணிப்பை விளைவிக்கிறது. எனவே அவள் மனமொப்பி அந்தக் குற்றம் புரிய மாட்டாள்.

ஆனால் அவள் வஞ்சிக்கப்படுகிறாள்; உடலியல் சார்ந்தும், சமூகம் சார்ந்தும் தண்டனைகள் ஏற்கிறாள். எனவே விழிப்பும் மலர்ச்சியும் பண்பும் உடைய எந்தப் பெண்ணும் பொறுப்பற்ற அவதூறுகளை வீசமாட்டாள்.

இப்போது, இந்தக் கூறுகளை வகைப்படுத்தித் தீர்வுகளைச் சிந்திப்போம்.

பெண், தன் காலால் நிற்கும் உரிமையைப் பெறுவதுடன், தான் எந்த நிலையிலும் பத்திரமற்றவள் என்ற உணர்வைக் கெல்லி எறிந்துவிட்டுத் தன்னம்பிக்கையைக் கொள்ள வேண்டும்.

இந்நாள் படித்துப் பொருளாதார சுதந்தரம் பெற்ற பல லட்சக்கணக்கான பெண்கள் இதை நிச்சயமாக உணர்ந்து செயல்பட வேண்டும்.

இன்றைய உழைக்கும் மகளிரிடையும் குடும்ப வேற்றுமைகள் - சுமுகமற்ற உறவுகள் பிளவுகளைப் போக்க முனைய வேண்டும்.

வசதிகளும் சலுகைகளும் வாய்ப்புகளும் பெற்ற இடைநிலைக் குடும்ப மகளிர் ஆசிரியர்களாகவும்

For more ebooks visit: https://getmyebook.in/

மருத்துவர்களாகவும் அலுவலக ஊழியர்களாகவும் பல நிலைகளிலும் பணிபுரிகின்றனர். அவர்களும் மாமியார் - மருமகள், அண்ணி - நாத்தி பிளவுகளால் பாதிக்கப்படுகின்றனர்.

மாமியார்களாக இருக்கும் மூத்த தலைமுறையினர் இளைய தலைமுறையினர் அலுவலகப் பொறுப்புக்களை ஏற்க வேண்டியிருக்கும் பிரச்னைகளைப் புரிந்து கொண்டு வீட்டுப் பொறுப்புக்களில் இணக்கமாக உதவுவதற்கு முன் வர வேண்டும். ஆனால் அதேசமயத்தில், அலுவலகம் செல்லும் இளைய தலைமுறையினர், புதிய பொருளாதார சுதந்தரம் காரணமாக, ஊதியம் தேடிவரும் உரிமையில் உடுத்தவும், உண்ணவும், உல்லாச யாத்திரை செல்லவும் சுயநலம் பேணுவதும் நியாயம் என்றும், மூத்த தலைமுறை உறவினர், அவ்வழியில் உழைக்கவும் மக்களைப் பார்க்கவும் கடமைப்பட்டவர்கள் என்று கருதுவதும் மிகத் தவறு.

மூத்த தலைமுறையினரிடையே புதிய விழிப்பை உணர்த்தி மூடக் கருத்துக்களைப் போக்கவும், அன்பும் ஆதரவுமாக அவர்களின் ஒத்துழைப்பைப் பெறவும் இளைய தலைமுறைப் பெண்டிர் கடமையாகக் கருதி நடக்க வேண்டும். குடும்பங்களிடையே ஆணாதிக்கக் குவிப்பைக்கரைத்து, சமத்துவமான மனித சுதந்தரங்களைக் கொண்டு வர, ஆரவாரமற்ற புரட்சி மனமாற்றங்களாலேயே இயலும். குடும்பம் என்ற அமைப்பு மிகப் பழமையானது. அது ஒரு நாட்டை வலியுறுத்தும் சிறுசிறு தொகுதிகள். இத்தொகுதிகளின் இணையங்களே, நமது சமுதாயம். எனவே, ஒவ்வொரு

For more ebooks visit: https://getmyebook.in/

பெண்ணும் அமைப்புக்களைப் பலப்படுத்துவதன் வாயிலாக, சமுதாய - நாட்டு ஒற்றுமையைக் குலைக்கும் பிளவுச்சக்திகளையே விரட்டியடிக்கும் நோக்கில், சமுதாய உணர்வையும் பொறுப்பையும் ஏற்கிறாள்.

அடுத்து, பொருளாதார அடிப்படையில் பற்றாக் குறையுடன் போராடும் வாழ்வில் எந்த ஒரு உரிமையும் சுகமும் காணாத நிலையில் பல கோடி பெண்கள் நலிகின்றனர்.

மேற்படியில் உள்ள பெண்கள், தங்கள் சுயநலங்களே, உரிமைகள் எனக் கருதுவது பரிதாபத்துக்குரியது. அவர்களுக்குச் சமுதாயக் கடமைகள் உண்டு.

நாம் கல்வி பெறவும், இந்த முன்னேற்றத்தை அடையவும் நமது மூத்த தலைமுறைப் பெண்கள் எத்துணை போராடியிருக்கின்றனர் என்பதை மறக்க இயலாது. நாம் சமுதாயத்தில் இன்று பெற்றிருக்கும் சலுகைகள் அனைத்தும், ஏனைய பெண்களும் பெற வேண்டும்; அதற்காக நாம் கடமைப்பட்டுள்ளோம் என்பதை மறக்கலாகாது. இன்னும் நாம் பல காதம் கடக்க வேண்டும்.

இந்நாள் வசதியற்றோர், முதியோர், ஊனமுற்றோர், கைம்பெண்கள் என்று அரசு கருணைக்கரம் கொண்டு படியளக்கிறது. மனைவியை இழந்த ஆண் நலிந்தவனாகக் கருதப்படுவதில்லை. ஆனால் பெண் மட்டும் துணையை இழந்தால், சகல வகைகளிலும் ஊனமானவளாகக் கருதப்படும் நிலை ஏன்? எனவே, மகளிர் புறச்சலுகைகள் வெறும் ஊன்றுகோல்

For more ebooks visit: https://getmyebook.in/

என்பதை உணர்ந்து அகத்தின் தாழ்மையுணர்வைப் போக்கிக் கொள்ள நிமிர வேண்டும்.

பெண்கள் எல்லா நிலைகளிலும் ஒருங்கிணைந்த உணர்வுடன் செயல்படும்போது, தங்களைப் பிணிக்கும் தடைகளை உண்மையாக அடையாளம் கண்டு கொள்வர். அப்போது, தாம் இரண்டாந்தரப் பிறவியல்ல என்ற விழிப்புணர்வு பெற முடியும். சமுதாயத்தில் சரிபாதி எண்ணிக்கையினர் என்பது மட்டுமின்றி ஆக்க சக்திக்கே உறைவிடமாகத் திகழுபவர் பெண்கள்.

எனவே குடும்ப உறவுகளும் சமூக உறவுகளும் அவர்களுக்குள் ஆக்கபூர்வமான அடிப்படை அறிவு மலர்ச்சியிலும், தளையற்ற இயக்கங்களிலும் ஒழுங்கு பெறும்போது சீரான சமுதாய வளர்ச்சியைக் காண முடியும்.

இந்நாள் சமுதாய மேம்பாடுகளைக் குலைக்கும் பல்வேறு தீயசக்திகளை ஒடுக்க வேண்டுமானால், பெண்களின் ஒருங்கிணைந்த மனமாற்றமும், செயல்பாடும் இன்றியமையாதவை. அந்த இலட்சியத்தை நாம் செயற்படுத்துவோம்.

**- மகளிர் தினக் கருத்தரங்கு**
**உளுந்தூர் பேட்டை - 1988.**

For more ebooks visit: https://getmyebook.in/

## 2. ஏழு அறங்கள்

காந்தியடிகள் ஏழுவகை அறங்களை நல்லதொரு மக்கள் சமுதாயம் பெற வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர் கூடாது என்று மொழிந்த குற்றங்கள் -

1. கொள்கையில்லாத அரசியல், 2. பக்தியில்லாத இறைவழிபாடு, 3. ஒழுக்கமில்லாத கல்வி, 4. நாணயம் இல்லாத வாணிபம், 5. மனிதநேயம் இல்லாத அறிவியல் வளர்ச்சி, 6. உழைப்பில்லாத செல்வம், 7. மனச்சாட்சிக்கு ஒப்புதலில்லாத இன்பம்.

இந்த ஏழு குற்றங்களில் ஒன்று இருந்தாலும் சமுதாயமாகிய மரத்தில் பூச்சிகள் அப்பி, பலன் கொடுக்கும் உயிர்த்தன்மையை உறிஞ்சிவிடும். இந்நாள் நாம் அரசியல் விடுதலை பெற்று அரை நூற்றாண்டுக்கு மேலாகிவிட்ட நிலையில், புதிய நூற்றாண்டின் தலைவாயிலில் நிற்கிறோம். மேற்குறிப்பிட்ட ஏழு குற்றங்களையும் உட்கொண்டு திணறும் மக்களாட்சியில் தத்தளிக்கிறோம்.

கத்தியின்றி, இரத்தமின்றி, அஹிம்சை, சத்தியம், தியாகம் என்ற வேள்வியில் காந்தியடிகள் இந்திய மக்களை ஈடுபடச் செய்தார். இருநூறு ஆண்டுக்காலம் நம்மை ஆட்சி செய்த அந்நிய நாட்டவரிடம் இருந்து பகைமை இல்லாத நட்புறவுடனேயே நாம் விடுதலை எய்தினோம்.

ஆனால், சோதரராக வாழ்ந்த வாழ்வில் குத்தப்பட்டு இரத்த வெள்ளம் பெருக்கெடுக்க, முழுமையாக இருந்த ஒரு நாட்டு சமுதாயமும் நாடும் பிளவுபட்டது.

For more ebooks visit: https://getmyebook.in/

அண்ணல் அன்றே இந்த நாட்டின் மாசற்ற எதிர்காலத்தின் மீது அவநம்பிக்கையை வெளியிட்டுவிட்டார் எனலாம்.

நூறாண்டு கடந்து வாழ்வேன் என்று மொழிந்திருந்த அவர், தம் எழுபத்தொன்பதாம் அகவையிலேயே, 'ராம்' என்ற சொல் உதட்டிலிருந்து பிரியும்போதே உயிரும் உடலைவிட்டுப் பிரிய, ஒரு சக மனிதனின் கைத் துப்பாக்கிக்கு இரையானார். இந்தத் துவக்கமே சூசகமாக இத்துணை அறங்களும் அழியும் சூழலுக்கு வித்திட்டதோ?

கொள்கையற்ற அரசியல் ஒரு தனி மனிதர் மக்களிடம் எவ்வகையிலேனும் செல்வாக்குப் பெறுவதிலிருந்து தொடங்குகிறது. இந்தச் செல்வாக்கு, அந்தத் தனிமனிதரின் ஏனைய அறம் சார்ந்த பண்புகளால் நிலை பெறுவதாக இருந்தால், அந்தச் செல்வாக்கை, அதிகாரக் குவிப்புக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கமாட்டார்.

ஆனால் அந்தச் செல்வாக்கு நவீன மக்கள் தொடர்பு சாதன உத்திகளில் மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபடும் சுயநலவாதியான மனிதனையும் வந்தடைகிறது. அவன் மக்கள் தலைவனாகி, மக்களாட்சிக்குத் தேவையான பெரும்பான்மையை அவனைத் தலைமைப்பீடத்தில் ஏற்றுக் கொண்ட அரசியல் கட்சிக்குப் பெற்றுத் தந்துவிடுகிறான். இதை நாம் அநுபவபூர்வமாக அறிந்துவிட்டோம்.

மக்களாட்சியில், அதன் குடிமக்களுக்குத் தேவையான அடிப்படைக் கல்வியும், சுயாட்சி பற்றிய அரசியல் பிரக்ஞையும் இல்லாமலே இங்கே

For more ebooks visit: https://getmyebook.in/

பெரும்பான்மைக் குடிமக்களும் ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நாடகங்கள் நடந்து முடிகின்றன.

மாறாக, அறம் சார்ந்த பண்புகளால் ஒரு தனி மனிதர் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தால், அந்தச் செல்வாக்கு அதிகாரக் குவிப்புக்கு இடமளித்திருக்காது.

அவர் மக்களனைவரையும் மனித நேயக் கண்ணோட்டத்துடன் கல்வி பெறச் செய்திருப்பார். சமத்துவம் என்ற நிலையை எய்த ஒழுக்கம் சிறந்த பண்பாடாகப் போற்றப்பட்டிருக்கும். இறைவழிபாடு பேதம் காணும் சமயச் சடங்குகளையும், புற சின்னங்களையும் முனைப் பாக்கியதாக ஆடம்பர நிகழ்ச்சிகளாக மக்களைக் கூட்டும் உத்தியாக மாறி இருக்காது. வாணிபம் பொருளியல் வளர்ச்சியுடன், அனைத்துப் பிரிவினரின் இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றக்கூடியதாகச் செழித்திருக்கும். இந்த வளமையில், மனித நேய உறவுத் தொடர்புகள் பேராசையும் வஞ்சகமும் மோசடியும் தலைதூக்காத அளவில் ஏற்றம் பெற்றிருக்கும். அறிவியல் வளர்ச்சி, சமுதாயத்தின் கடைகோடி மனிதன் வரையிலும் தொடர்புள்ளதாக, உழைப்புக்கு மேன்மையும் கௌரவமும் அளிப்பதாகப் பயனடைந்திருப்போம். மனிதவள ஆற்றல் சமுதாயத்தை மேம்படுத்தும். செல்வம் மக்களனைவரும் பயன்பெற, பங்கீடு சமமானதாகவே இருக்கும். இத்தகைய சமுதாயத்தில் மனிதர், தமக்கு இயல்பான, நியாயமான இன்பங்களைத் துய்க்க முடியும். ஸத்யமேவ ஜயதே-மாந்தர் அனைவரும் சமம் -

For more ebooks visit: https://getmyebook.in/

வயது வந்தோர் அனைவரும், ஆண், பெண், ஊனமுற்றோர் உட்பட இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் பங்கு கொள்கின்றனர் என்ற கொள்கைகள் இந்நாள் வெறும் கொடிக் கொள்கைகளாக, நடப்பியலில் செல்லரித்த சிதிலங்களாக எஞ்சியுள்ளன.

காலம் காலமாக ஆட்சிபீடங்களுக்காகவே மனிதரை மனிதர் குத்திக் கொன்றிருக்கின்றனர். சகோதரர்கள், தந்தை, தாய், பிள்ளை என்று வெட்டி மடிந்திருக்கின்றனர். சூழ்ச்சிகள், சதிகள் எல்லாம் இராஜதந்திரம் என்ற பட்டுப் போர்வைக்குள் மறைக்கப்பட்டிருக்கின்றன.

முடியாட்சியில் தான் அத்தகைய கேடுகளுக்கு இடமிருக்கும்; மக்களாட்சி, மக்களே மக்களை, மக்களுக்காக ஆண்டு கொள்வது என்ற முறையில் எதேச்சாதிகாரத்துக்கு இடமில்லை என்று நம்பி எதிர்பார்த்தது பொய்த்துவிட்டது.

கொள்கையில்லாத அரசியல் கட்சிகள், தனிமனிதர்களுள் சுயநலங்களைக் கொழுக்க வைக்கும் சூதாட்டங்களில் ஈடுபடுவதனால் எத்துணை விபரீதங்கள் ஏற்படுமோ, அத்துணையும் ஏற்பட்டிருக்கின்றன.

இப்போது, கடிகாரத்தைத் திருப்பி வைப்பது சாத்தியமா? எங்கிருந்து, எப்படி இந்தச் சமுதாயத்தில் இந்நாள் வேரோடிப் போன தீமைகளைக் களைந்து நல்ல உயிரோட்டத்தை ஏற்படுத்த முடியும்?

For more ebooks visit: https://getmyebook.in/

1. பூச்சி விழுந்து சேதமாகிவிட்ட பயிரைக் காப்பாற்றச் சக்தியைச் செலவழிப்பது ஒருபக்கம் இருந்தாலும், இனி தலை நீட்டும் பயிரை, அதே பூச்சிகள் தொற்றாமல் காப்பாற்றிப் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாத முக்கியத்துவம் பெறுகிறது. அதற்கு முதல் படி, குடும்பம் என்ற அமைப்பைச் செம்மையாக்க வேண்டும். அடுத்த படி, கல்விச்சாலைகள் வருங்காலச் சமுதாயத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

குடும்பம் என்ற அமைப்பு, ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்கும் பாலியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், ஆணுக்குச் சந்ததி பெருக்கவும் அமைந்ததென்று கொள்ளப்படுகிறது. இது முற்றிலும் சரியன்று. ஆண் முதன்மைச் சமுதாயத்தில் அவனுக்குத் துணையாக இருந்து,அவன் தேவைகளைனைத்தையும் குறிப்பறிந்து நிறைவேற்றி வைக்கவும், ஆண் மக்களைப் பெற்றுத் தரவும் பெண் படைக்கப்பட்டிருக்கிறாள் என்ற கருத்தே நிலைப்படுத்தப்பட்டது. குடும்பம் என்ற அமைப்பில் அவன் நாயகன்; அவளும் மக்களும் அவனுக்கு அடங்கியவர்கள். அதுவும் பெண் மக்களுக்கு எந்த உரிமையும் சலுகையும் இல்லை.

அந்நாள் ஆணாதிக்கக் கோட்டையாக இருந்த குடும்ப அமைப்பில் இந்நாள் மாறுதல்கள் வந்துவிட்டன. பெண் ஊமையாய் உழைப்புப் பாவையாய் பிள்ளை பெறும் இயந்திரமாக அந்நாள் இயங்கினாள். இந்நாட்களிலே, அவள் குடும்பத்தின்

For more ebooks visit: https://getmyebook.in/

பொருளாதார உற்பத்தியில் ஆணைப் போல பங்கு பெற கல்வியும் அறிவாற்றலும் பெற்றிருக்கிறாள். கூட்டுக் குடும்ப அமைப்புகள் இந்நாள் தகர்ந்துவிட்டன. எனவே, குடும்பம் என்ற அமைப்பில், மக்களைப் பெற்று நல்ல சமுதாயக் குடிமக்களாக உருவாக்கும் பொறுப்பு இருவருக்குமே உரியதாகிறது. மனையறம் என்பது பெண்ணுக்கு மட்டுமே என்ற நியதி இன்று பொருந்தாது. குடும்பம், மக்கள் சார்ந்த எல்லாப் பொறுப்புகளையும் பற்றி முடிவு செய்யும் உரிமை அவளுக்கும் உண்டு. பெண், உழைப்புக்கும் உடல் போகத்துக்கும் உரிய ஆணின் உடமை என்ற ‘இலக்கணம்’ முதலில் தகர்க்கப்பட வேண்டும். குடும்பப் பராமரிப்பு, வீடு, துணிமணிகள் சுத்தம் செய்தல், சமையல் போன்ற அனைத்துப் பணிகளுமே இருபாலரும் பகிர்ந்து கொள்ளும் கடமையாக இருக்க வேண்டும். பாலியல் சார்ந்து அவள் பலவீனமானவள், எந்த நிலையிலும் அவள் ஆணின் ஆளுகைக்குள் தான் இருக்க வேண்டும் என்ற கருத்தைத் திணிக்கும் ஆணாதிக்கப் போக்கும், பொருளியல் சார்ந்து அவளைப் பொருளுக்காக மட்டுமே பேரம் பேசும் திருமண வழக்கங்களும் அறவே ஒழிக்கப்பட வேண்டும்.

ஒரு பெண்ணுக்கு ஆண்துணை அவசியம் என்று கருதுமளவுக்கு ஆணுக்கும் பெண் துணை அவசியமே. ஒரு பெண் சமுதாயத்தில் தனித்து வாழ விரும்பினால் அதைச் சமுதாயம் ஏற்றுக் கொண்டு அவளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.

For more ebooks visit: https://getmyebook.in/

இத்தகைய மனிதநேய அடிப்படையிலான மதிப்பைப் பெண்ணுக்கு அளிப்பதன் வாயிலாக, குடும்ப அமைப்பில் குழந்தைகள் நல்ல மனவளத்துடனும் உடல் வளத்துடனும் உருவாக முடியும். சமஉரிமை, சமத்துவம் என்ற பண்பை, இத்தகைய குடும்பச் சூழலில் குழந்தைகள் சுவாசிக்க முடியும்.

அடுத்ததாக, பிறவி எடுத்த எல்லா மக்களுக்கும் இன்றியமையாத கல்வியைப் பார்ப்போம். இந்நாட்களில் எல்லோருக்கும் கல்வி என்ற கொள்கை நூற்றுக்கு நூறு உண்மையாக இல்லை. அந்தக் கல்வியும் முற்றிலும் வணிகமயமாகி, மக்கள் சமுதாய வளர்ச்சியைக் கூறு போடவே உதவுகிறது. பல்வேறு தட்பவெப்பச் சூழல் கொண்ட பிரதேசங்கள் அடங்கிய இந்தியத் துணைக் கண்டத்தில், பல சமயங்கள், சாதிகள், மொழிகள்,இனங்கள் கொண்ட மக்கள் வாழ்கின்றனர். என்றாலும் இவர்கள் அனைவரும் ஒரே கலாசாரச் சரட்டினால் இணைக்கப்பட்டிருக்கின்றனர் என்றால் தவறில்லை. இந்த உண்மையை, கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை பயணம் செய்யும்போதும், மேற்கு மாநிலங்களில் இருந்து கிழக்கு மாநிலங்களுக்குப் பயணம் செய்யும்போதும் ஒருவரால் நன்கு உணர முடியும். இந்நாட்டில் வேரூன்ற வந்த பல்வேறு சமயங்களும்கூட, இந்தியத் தன்மை கொண்ட சமயங்களாக மக்களை ஒன்றச் செய்துவிட்ட சிறப்பையும் உணர முடியும். புறச்சின்னங்களுக்கப்பால் இந்த ஒருமைப்பாடு காலம் காலமாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

For more ebooks visit: https://getmyebook.in/

இந்தச் சிறப்பு, இன்றைய சுயநல அரசியல் இலாபங்களுக்காகக் குலைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சீர்குலைவு, சின்னஞ்சிறு பிஞ்சுகளின் தாய்மொழியறிவில், பெற்றோர், உறவினர், சூழல் என்று உலகை உணரும் உந்துதல்களில் கூடச் சுமையைக் கூட்டும் வாணிபக் கல்விக் கட்டாயங்களில் பிரதிபலிக்கிறது.

எவ்வகையிலேனும் பொருளிட்டுதலே கல்வியின் பயன் என்ற இலக்கை நோக்கிய கட்டாயப் போட்டிப் பந்தயங்களுக்கு இன்றைய தலைமுறையின் சுயமான அறிவு வளர்ச்சியும், இயல்பான மலர்ச்சிகளும் பலியாக்கப்படுகின்றன.

அந்நியர் நம்மை ஆண்ட காலங்களில் குழந்தை, மழலைக் கல்வியைத் தாய், பாட்டி, என்ற பரம்பரையில், அன்புடனும் பாச உரிமையுடனும் சுதந்தரமாக ஆடியும் பாடியும் மிக இயல்பாகப் பெற்றது. பின்னர் எழுத்தறியும் கல்வி, தாய்மொழியிலேயே புகட்டப்பட்டது.

இந்நாட்களில் கூட்டுக் குடும்பச்சூழல் இல்லை; பணிக்குச் செல்லும் தாயால் மகவுக்குப் பாலூட்டக்கூட முடியாத நிலையில் தடுமாறுகிறாள். நமது வருங்காலச் செல்வம் இன்றைய குழந்தைகளே என்ற நோக்கில், தாய்மார் குழந்தைகளைப் பெற்றபின் குறைந்தபட்சம் ஒன்றரை அல்லது இரண்டு வயது வரையிலும் பராமரிக்கத் தகுந்தபடி அரசு பொறுப்பேற்கத் தாயாருக்குப் பணி விடுப்புச் சலுகை வழங்க வேண்டும். பின்னரும், இதற்கென்றே சிறப்புக் கல்விப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் கண்காணிப்பில்

For more ebooks visit: https://getmyebook.in/

மழலைப் பள்ளிகள், ஆங்காங்கு கட்டாயக் கல்விக்கு முன்னோடி இடங்களாக அமைக்கப்பட வேண்டும். இந்த மழலைப் பள்ளிகளில் ஆண்-பெண், சாதி, சமயம், ஏழை, பணக்காரர் என்ற எந்தப் பாகுபாடும் இருக்கலாகாது. வசதிபடைத்த பெற்றோரிடம், அவரவர் வருவாய்க்கேற்ப பொருளும், வசதிகளில்லாத பெற்றோருக்கு எந்தக் கட்டணமும் இல்லாமலும், அந்த வித்தியாசத்தைக் குழந்தைகள் உணர இடமில்லாத வகையிலும், மழலைப் பள்ளிகள் இயங்க வேண்டும்.

இப்பள்ளிகள், நாடு முழுவதும் ஒரே மாதிரியில், ஒரே சீராக இயங்க அந்தந்தப் பிரதேச மொழியே - தாய்மொழியே கல்விப் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும். சிறுவர் ஒரே சமயத்தில் நாலைந்து மொழிகளைக் கற்க முடியும் என்றாலும், தாய்மொழி மட்டும்தான், வெளியீட்டுத் திறனை இயல்பாக ஊக்குவிக்கும் முதல் மொழியறிவாகக் குழந்தையைப் பிற உலகுடன் தொடர்பு கொள்ளச் செய்கிறது. அந்த இயற்கை முறையைப் பற்றி எறிந்துவிட்டு, வீட்டிலும் வெளியிலும் பழக்கமில்லாத வேற்றுமொழியை, அந்த மொழியே தாய்மொழியில்லாத ஒர் ஆசிரியரைக் கொண்டு பிஞ்சு நெஞ்சங்களில், மூளைகளில், கைகளில் திணிக்கும் கட்டாயம் இந்நாள் சுதந்தர இந்தியாவில் நடைமுறையாக்கப்பட்டிருக்கிறது. கட்டாயமாக்கப்படும் வேற்று மொழிப் பயிற்றுக்கல்வி, பிள்ளைகளின் இயல்பான படைப்புத்திறன், கூரிய அறிவு, சிந்தனையாற்றல் என்ற ஊற்றுக்கண்களில், வெளிப்பட வழியில்லாமலேயே மூடிவிடுகின்றன. தாய், தாய்மொழி, தாய்நாடு என்று எந்த உணர்வும்

For more ebooks visit: https://getmyebook.in/

இல்லாமல், பொருள், பொருள் என்ற இலக்கிலேயே தாங்கள் பெற்றிருக்கும் அறிவியல் திறமைகளை அடகு வைப்பதற்குத் துணிகிறார்கள்.

மாறாக, அடிப்படையில் தாய்மொழியறிவும், இயல்பான திறமைகளின் உந்துதல்களும் தடைபடாமல் வெளிப்படும்போது, உலகை, பல நுட்பங்களை, மேலும் பல்வேறு மொழிகளைக் கற்றறியும் திறமையும் சிறப்பாகவே கூடும். இதனால், இந்நாட்களில் இன்னும் எழுத்தறிவே பெற்றிராமல் இருக்கும் அடித்தளப் பெற்றோரின் மக்களும், எளிதில் அடிப்படைக் கல்வியில் தேர்ச்சி பெற்று, வேற்று மொழியில் அறிவியல், தொழில் நுட்பக் கல்வியில் பயிற்சி பெறவும் முன்னேற்றமடைவர். பின் தங்கிய வகுப்புக் குழந்தைகளுக்குச் சிறப்புப் பயிற்சிகள் கொடுக்க, ஆசிரியர்-மாணாக்கர்-என்ற விகிதம், குறைவானதாக இருக்க வேண்டும். பாடச்சுமை, புத்தகங்கள், சோறு, தண்ணீர்ச் சுமைகள் என்று பிஞ்சுகளை முதுகு வளையும், கை இழுக்கும் சுமைகளிலிருந்து விடுபடச் செய்வது கட்டாயமானதொரு திருத்தம் மழலைப் பள்ளிகளில், ஐந்து வகுப்பு வரையிலான துவக்கப்பள்ளிகளில், தாய்மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்போது, புத்தகச்சுமைகள் தேவையில்லாமலிருக்கும். ஒவ்வொரு பள்ளியிலும், தண்ணீர்- குடிநீர் குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்வதும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

இந்தப் பள்ளிகள் ஒரே மாதிரியான பாடங்கள், பயிற்சிகள் என்று அந்தந்த இடத்தின் தேவைக்கேற்ப

For more ebooks visit: https://getmyebook.in/

நிறுவப்படும்போது, எந்தப் பெற்றோரும் எந்தப் பள்ளியிலும் குழந்தைகளைச் சேர்க்கலாம். எனவே, வீட்டுக்கு அருகாமையிலுள்ள பள்ளியே குழந்தைக்கு உரியதாக்கப்படும். காலை நேரத்தில், சாலைகளில், கோழிக்குஞ்சுகளைப்போல் குழந்தைகளையும், புத்தகப்பை, தண்ணீர்குப்பிகள் தொங்கும் வண்டிகளும் நெருங்கும் அபாயங்களும் தவிர்க்கப்படலாம்.

பெண் மக்களைத் தரம் தாழ்த்தும், உடலுழைப்பைக் கேவலப்படுத்தும், தொழில், சாதி என்று பிரிவும் தரந்தாழ்த்துதலும் கற்பிக்கும் பாடப்புத்தகங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

இறையுணர்வு, ஒரு மனிதரின் நல்லொழுக்கத்துக்கு அடிநாதமாக இருந்து வருகிறது. இந்த உணர்வு, ஒரு தனிச் சமயச் சொத்தாகக் கற்பிக்கப்படாமல், உலகனைத்தும் பரந்த உயிர்களிடத்துக் காட்டும் நேயமாக, சக மனிதரை எக்காலத்தும் நேசிக்கும் மனிதாபிமானமாக, உயர் பண்புகளை மனதில் பதிய வைக்கும் வாசகங்கள் - பல சமயங்களில் இருந்தும் எடுத்துக் கோக்கப்பட்ட மணிக்கோவைகள், இன்ன சமயம் என்ற வண்ண பேதம் கற்பிக்கப்படாத நிலையில் ஒழுக்கக் கல்விப் பாடங்களாக அமைய வேண்டும். இந்த ஒழுக்கமே வருங்காலக் குடிமக்களின் வாழ்வுக்கு ஆதார சுருதியாக அமையும்.

பெற்றோரும், ஆசிரியருமே வருங்கால சந்ததியினரின் முன்மாதிரிகளாக இளம் மனங்களில் பதிந்து போகின்றனர். எனவே, இளம் பருவத்திலும், பின்னர் எழுச்சிமிகுந்ததாக வளர்ச்சி பெறும்

For more ebooks visit: https://getmyebook.in/

குமரப்பருவத்திலும், பெற்றோர், ஆசிரியர் காட்டும் அன்பும், நட்பும், குணநலன்களுமே பிள்ளைகளின் சீரான மலர்ச்சிக்கு உத்தரவாதமாகத் திகழ்கின்றன. சண்டையிடும் பெற்றோரும், ஒருவரை மற்றவர் ஏமாற்றும், பொய் சொல்லும் வழக்கங்களும், மது, சூது, போன்ற தீமைகளும், நல்ல பிள்ளைகளை உருவாக்க முடியாத தடைக்கற்கள் எனலாம். சமூகக் கொடுமைகளான தீண்டாமை, பெண்ணடிமைத்தனம், வன்முறைகள் ஆகியவை எந்தக் குடும்பத்திலும் தலைகாட்டலாகாது. ஆசிரியர், புகைபிடிப்பதும், மதுவருந்துவதும், வசைச் சொற்கள் பொழிவதும், பிள்ளைகளையும் அதே வழிக்கு இட்டுச் செல்லும்.

3. அடுத்து, ஒரு குடியரசு நாட்டின் மக்களின் அறிவு வளர்ச்சியிலும், உருவாக்கத்திலும் மக்கள் தொடர்பு சாதனங்களாகிய பத்திரிகைகள், வானொலி, சினிமா, சின்னத்திரை ஆகியவை பெரும்பங்கு வகிக்கின்றன. சுதந்தரம் பெற்று ஐம்பதாண்டுகளுக்கு மேலாகியும் இந்நாட்டு மக்களிடம் இருக்கும் எழுத்தறியாமையை முற்றிலுமாக ஒழித்துவிட முடியவில்லை. எனவே வானொலிக்கு மக்களை மூலைமுடுக்கெல்லாம் தேடிச் சென்று தொடர்பு கொள்ளும் சாதனம் என்பதில் ஒரு சிறப்பிடம் உண்டு. ஆனால், பொழுதுபோக்கு, களிப்பூட்டல் என்ற அம்சத்தை அதிகமாகப் பெற்றிருக்கும் காட்சி ஊடகங்கள் மக்களிடையே வானொலியைக் காட்டிலும் அதிக செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. இந்நாட்களில் தொலைக்காட்சிப் பெட்டி, அன்றாட உணவுக்கும் குடிநீருக்கும் உத்தரவாதம் இல்லாத குடிசை வாழ்மக்களிடையேகூட

For more ebooks visit: https://getmyebook.in/

முன்னுரிமை பெற்றிருக்கிறது. வான் வழி வரும் எந்தத் தாக்கத்துக்கும் அரசு கட்டுப்பாடு எல்லைகளை வகுக்க முடியாது. எனவே விளம்பரம் என்ற கருப்புக்கட்டியைக் கவரும் ஈக்கள் போல், போட்டி போட்டுக் கொண்டு மக்களின் மனதைக் கீழ்முகமாக இழுக்கும் நிகழ்ச்சிகளும் காட்சிகளும் மடலவிழ்கின்றன.

இந்த ஆக்கிரமிப்பில், குஞ்சு குழந்தைகள், ஆண் பெண், முதியவர் ஈறாக அனைத்து வர்க்கத்தினரும் அடக்குகின்றனர் என்றால் மிகையில்லை.

எழுதுகோலை ஆயுதமாகக் கொண்டு இயங்கும் படைப்பாளரும், சிந்தனையாளரும், சமுதாயத்தின் முதுகெலும்பாகக் கருதப்படுகின்றனர். ஒரு பள்ளி ஆசிரியர், வகுப்பறையில் மட்டுமே செயல்படுகிறார். ஆனால் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் வாயிலாகத் தம் படைப்பாற்றலை, சிந்தனை வண்மையை வெளிப்படுத்தும் இலக்கிய ஆசிரியர், பரந்த வெளி உலகிலும் தம் செல்வாக்கைப் பதிக்கிறார். இவர்கள், பொருள், புகழ் என்ற நோக்கில் சோரம் போகும் தீமை இந்நாள் சர்வ சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது,

இந்நாள், தகவல்-அறிவுக்களஞ்சியமாக, பலநோக்குப் பயன்பாட்டுச் சாதனமாக கூடிவிட்ட கணினியும்கூட, தொலைக்காட்சிபோல், வெறும் களிப்பூட்டும் பண்பாட்டுச் சீரழிவுக்கான சாதனமாக மாறிவிடுவதும் கூடத் தவிர்க்க முடியாதது என்று அண்மையில் ஒர் அன்பர் குறிப்பிட்டார். பெண்களையும் சிறார்களையும் பயன்படுத்தி, இந்த

For more ebooks visit: https://getmyebook.in/

வணிக அமைப்புகள், நவீன விளம்பர உத்திகளாக, கட்டறுத்து விடப்படும் பாலியல் விகாரங்களையும், வன்முறைத் தாக்குதல்களையுமே ஒளிபரப்புகின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நுகர்பொருள் வாணிபத்தை மிகச் செல்வாக்குடன் அடிப்படைத் தேவைகளே நிறைவேறாத மக்களின் மீது திணிக்கின்றன.

இந்திய இலக்கியம் - குறிப்பாகத் தமிழ் இலக்கியம், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டதென்றாலும், சென்ற நூற்றாண்டுகளில்தான் அது ஜனநாயகத்தன்மை கொண்டதாக, சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மந்திரங்களுக்கேற்ப கனவு கானும் படைப்புகள் மலர்ந்திருக்கின்றன. என்றாலும், கொள்கையற்ற அரசியல் எல்லாப் பிற துறைகளிலும் புகுந்து குலைத்திருப்பது போல், எழுத்துத் துறையையும் வணிகமயமாக்கி, அதன் அடிநாதத்தைக் குலைத்து வருகிறது.

கவிஞருக்கும் கலைஞருக்கும் தன்மானம் உண்டு. முடிமன்னரானாலும் உண்மைக்குப்புறமாக எழுதுகோலை வளைக்கமாட்டார். இந்நாட்களில், எழுது கோல்கள், அவற்றின் உரிமையாளரை, சமுதாயத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் மனோபாவத்திலிருந்து பிரித்து, ‘தான்’ என்ற உயர்கொம்பில் ஏற்றி வைப்பது ஒன்றே குறியாக, அகமும் புறமும் ஒன்றாத வெறும் தந்திர வித்தைகளுக்கு இரையாகின்றன.

For more ebooks visit: https://getmyebook.in/

இந்நாள் மண், நீர், காற்று, ஆகாயம், வெற்றிடம் என்று ஐம்புலன்களும் மாசுபடுகின்றன. பெண் கருக்கள் மனித இனத்தில் அழிக்கப் பெறுகின்றன.

வரும் நூற்றாண்டில் இந்தத் தீமைகளுக்கான வேர்களைக் கெல்லி எறிவதே எம் கடமையாக இருக்கிறது. எழுதுகோல்களைப் பிடிப்பவர்கள், புனைகதையோ, காவியமோ, கவிதையோ, வானொலி நிகழ்ச்சியோ, திரைக் காட்சிக்கான சித்திரங்களோ எதுவாயினும், நழுவி விழும் ஆதார சுருதியைச் செம்மையாக்கிக் கொள்ள வேண்டும். மானுடத்தைக் கீழ் முகமாக்கும், பூமியைச் சீர்குலைக்கும், காற்றை மாசுபடுத்தி, வெற்றிடத்தைக் கரும்புகையாக்கும் அழுக்கை உமிழமாட்டோம் என்று உறுதி கொள்வோம்.

**- புத்தாயிரம் கருத்தரங்கு**
**சென்னை.**

For more ebooks visit: https://getmyebook.in/

# 3. அழிவைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல்

‘ஒடும் ரயிலில் பெண் போலீஸை வெட்டி நகைப் பறிப்பு’ ‘பெண்ணிடம் சங்கிலி பறிப்பு’... ‘பல் வலி தாங்காமல் மனமுடைந்த பெண், மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தீக்குளித்தாள்’... ஒரே நாளில் வெளிவந்த இச்செய்திகள் பெரிதும் சிந்திக்க வைத்தன. சாதாரணமான பெண்ணிடம் நகைபறிப்பு செய்தியில் இல்லாத முக்கியத்துவம், ‘பெண் போலீஸிடம் நகை பறிப்பு, வெட்டும் கொடுமை’ ஆகிய இரண்டு அழுத்தங்கள், இன்றைய பெண்களை நோக்கி அறைகூவல் விடுவதாகத் தோன்றுகின்றன. பல் வலி தாங்காமல் மனமுடைந்த பெண், இரு குழந்தைகளுக்குத் தாய், கணவரிடம் சொல்ல, பொழுது விடிந்து மருத்துவமனைக்குச் செல்லலாம் என்று சொன்னார். ஆனால் அவள் தீக்குளித்தாள். அடுப்பெரிக்க மண்ணெண்ணெய்க்கு அதிக விலை கொடுத்தாலும் கிடைக்காத நடப்பியல் வாழ்வில், உயிர்கள் இத்துணை மலிவாகப் போய்விட்டனவா? தீக்குளியல்கள், சர்வ சாதாரணமான செய்திகளாக வருகின்றன. மிகவும் பழகிய செய்தியாக, தொலைக்காட்சித் தொடர்களில், குடும்பங்களில், மாமியார் மண்ணெண்ணெய் ஊற்றி மருமகளை எரிப்பதும் பிள்ளையே பிறக்காது என்று ஒரு (பெண்) டாக்டர் சொல்லிவிட்டதனால், திருமணமான பெண் தீக்குளிப்பதும் பழக்கமானவை. தொலைக்காட்சியின் பயங்கரங்கள் ‘வெறும் பொய்கள்’ என்று மரத்துப்போகச் சமாதானம் செய்து கொண்டாலும் பத்திரிகைச் செய்திகள் உறுத்தலை ஏற்படுத்துகின்றன.

For more ebooks visit: https://getmyebook.in/

இந்நாட்களில் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள், மோசடிகள் இல்லாத செய்திகளே இல்லை.

அண்மைக்காலங்களில், மொத்த இந்திய சமுதாயமும் பல்வேறு வகைகளில் வாழ்வுப் பிரச்னைகளில் சிக்கி நலிந்துபோயிருக்கிறது. விலைவாசி ஏற்றம், நுகர்வுக் கலாசாரத்தின் கிடுக்கிப்பிடிகள், கல்வியும், இளமைத் திறனும் ஆக்கபூர்வமான மனிதவள ஆற்றல் மேம்பாடுகளுக்குப் பயன்படாமல் அழியும் வேலையில்லா, வாழ்க்கையில்லாத சூழல், விரக்திமனப்பான்மையில் நம்பிக்கைத் துளிர்கள் கருகும் சோகங்கள், எல்லாமே கீழ், இடைநிலை மக்களைப் பெரிதும் பாதித்திருக்கின்றன. சட்டங்களும், அறநெறிகளும், செல்லாக் காசுகளாகிவிட்ட இந்த நிலையில், பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவள் பெண்ணே.

மேலை நாடுகளில் பெண்கள் வாக்குரிமைக்காக, நூற்றாண்டுகள் போராட வேண்டி இருந்தது. பெண் தன் உடலின் மீதுள்ள சுயஉரிமையைக்கூட இழந்த நிலையில், அறியாமை இருட்டிலிருந்து மீளும் கல்வி உரிமையைப் பெறவே வாக்குரிமை முதல் கட்டத் தேவையாக இருந்தது. ஆனால் இந்த நாட்டில், பெண்களுக்கு வாக்குரிமை எந்தப் போராட்டமும் இல்லாமல் கிடைத்துவிட்டது. கல்வி உரிமை, தொழில் செய்து பொருள் ஈட்டும் உரிமை என்று, தற்சார்புக்கான அனைத்து உரிமைகளும் அவருக்கு இருக்கின்றன. புதிய புதிய துறைகளில், ஆணே கோலோச்சிய

For more ebooks visit: https://getmyebook.in/

நிர்வாகத் துறைகளில், அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த கண்டுபிடிப்புகளில், அவள் தன் ஆற்றலை நிரூபித்தும் இருக்கிறாள்.

எனினும் இந்த 'வசீகரங்கள்' மகளிர் தினங்களில் புள்ளி விவரங்கள் கூறுவதற்கும், பெருமையுடன் பேசிக் கொள்வதற்கும் மட்டுமே பயன்படுகின்றன. முப்பத்து மூன்று சதவிகித ஒதுக்கீடு - அரசியல் சார்ந்த பிரதிநிதித்துவம் பெறுவதற்கு என்ற கோரிக்கை சின்னபின்னமாக இழுக்கப்படுகையில், பல்வேறு பாசாங்குகளும் வேடங்களும் கலைய, ஆணாதிக்கத்தின் கோர உருவங்கள் தெரிகின்றன. பெண்கள் தங்கள் சொந்த அடையாளங்களை இழந்து, ஒர் ஆணுக்கு உரிய அவனுக்குள் அடக்கம் என்ற உரிமை பெற்ற, பெறாத முத்திரைக்குள் அறியப்பட உட்பட்ட நாளிலிருந்தே அந்த அடையாளங்களில் இருந்து மீள வேண்டும் என்ற உணர்வே இல்லாத மனக்கோட்டத்துள் புதைந்து போயிருக்கிறாள். ஒரு நாள், இரண்டு நாட்கள், சில மாதங்கள் அல்ல - நூற்றாண்டு, பலப்பல நூற்றாண்டுகள் அவன் இச்சை, அவன் தலைமை, அவன் அடையாளங்கள் என்று ஊறிப் பதம் பெற்றிருக்கிறாள். ஒரு பெண்ணுக்குத் தாயும் தகப்பனும்கூட உரியவர்களாக முடியாது. அவள் உடலின்மீது, உரிமை கொண்டவன்தான் அவளுக்கு நாயகன். அந்த நாயகன் கயவனோ, காமுகனோ, கண்ணியமானவனோ, எப்படி இருந்தாலும் அவன் மதிப்பை, அவன் உயர்வை அவள்தான் தூக்கிப் பிடிக்கிறாள். அவனுக்காக, அவன் வித்தினால் பெறும் ஆண்மக்களுக்காக அவள் தன்னைத் தேய்த்துக்

For more ebooks visit: https://getmyebook.in/

கொள்வதில்தான் மேன்மை பெறுகிறாள். அவள் பொதுவாழ்வுக்கு வரும் வாய்ப்புகள் நேர்ந்தாலும், கட்டியவன் காப்பாளன் என்ற நிலையில் ஆண்கள் இல்லை என்றாலும் அவர்களின் அடையாளங்களைக் கொண்டு தான் அவள் தலைதூக்க முடியும்.

அரசியல் பிரதிநிதித்துவம் என்று வரும்போது, ஒரு பெண் ஆண் ஆதிக்கத் தடைகளை மீறும் உணர்வுப் பொறிகளைப் பற்றிய பிரக்ஞையே இல்லாதவளாகத்தான் இருக்க முடியும். பல்வேறு துறைகளில் பெண் தன் அறிவாற்றலை நிரூபித்து, பதவிகளை அலங்கரிக்கலாம். இது தனிப்பட்ட ஆற்றலின் வெளிப்பாடாக விளங்குகிறது. ஆனால், குடியரசு நாட்டில், அரசியல் ஆட்சிப் பிரதிநிதித்துவம் என்பது, மக்கள் ஒப்பி அளிக்கும் தீர்ப்பில் நிலைபெறுகிறது.

இந்தத் தீர்ப்பில், பெண்ணின் தனிப்பட்ட ஆற்றல் தேவையில்லை. அவள் எழுதப்படிக்கத் தெரியாதவளாக இருக்கலாம். அவளைத் தேர்ந்தெடுக்கும் மக்களே முக்கியமாகின்றனர். ஏனெனில், ஆணாதிக்கக் கட்டுமானத்தின் ஒரு முக்கியமான கூறாக இந்தப் பிரதிநிதி விளங்க வேண்டும்.

கிராமப் பஞ்சாயத்துகளில் தேர்வுக்கு நிறுத்தப்படும் பெண்கள், கணவன், சகோதரன், மாமன், அல்லது கட்சி சார்ந்த (ஆண்) ஆதிக்கங்களின் பிரதிநிதிகளாகவே விளங்குகின்றனர். என்றாலும், முற்றிலும் இருள் சூழ்ந்த ஓர் அறையில், கூரையினுடே வரும் ஓர் ஒளிக்கதிர்போல் பெண்களுக்கு இது சுயஉணர்வைப்

For more ebooks visit: https://getmyebook.in/

பற்றிய பிரக்ஞையை அவர்களறியாமலே ஏற்படுத்தலாம். அந்த ஒளிக்கதிரில் தூரசுகளும் மாசும் பளிச்சென்று தெரிந்தாலும் அது ஒளிக்கதிர்.

ஆனாலும், ஆணாதிக்க அடையாளங்களை அவள் தாங்கியே நிலைக்க வேண்டி இருக்கிறது. ஏனெனில், பாலியல் சார்ந்த அவதூறுகளோ, (உண்மைகளோ) அவள் உட்காரும் பீடத்துக்கடியில் ஒரு தீக்குச்சிக் கொள்ளி பெரும்பான்மை கரியச் செய்யப் போதுமானது. இந்தக் காரணங்களால், ஒரு பெண் ஆட்சியதிகாரங்களை எப்படியேனும் பெற்றாலும்கூட ஆணாதிக்கத் தடத்தில் நிலைபெறும் சர்வாதிக்காரக் கூறுகளுடன்தான் நிலைக்க முடிந்திருக்கிறது.

எந்த நிலையிலும், ஓர் ஆணினால், ஒரு பெண் சமமாகவோ, விஞ்சியோ அதிகாரம் பெறுவதைப் பொறுக்க முடிவதில்லை. நல்ல நீரினுள், அசுத்தங்கள் கலக்கும்போது கொப்புளங்கள் தோன்றுவதுபோல், கண்ணியத்துக்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுபவர் நாவிலிருந்தும்கூட, கூட்டமாக இருக்கும்போதோ மோதல்கள் நேரும்போதோ பெண்ணைக் குறிக்கும் இழிவான வகைச் சொற்கள் தெறித்து விழுகின்றன. பெண் மீதான வன்முறைகள், பொதுவான பெண் முன்னேற்ற வளர்ச்சியை ஏற்க முடியாத ஆதிக்க சமுதாயத்தின் வெளிப்பாடுகள் என்று கொள்ள வேண்டி இருக்கிறது.

இந்நாட்களில், எல்லாத் தளங்களிலும் வன்முறைகள் கட்டவிழ்வதும், பொதுச் சொத்துகளும், உயிர்களும் கோரமாக அழிக்கப்படுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. ஆக்கத்துக்கான பயன்பாடுகளை

For more ebooks visit: https://getmyebook.in/

விளைவிக்கக்கூடிய உத்தரவாதம் இன்றைய ஆட்சித் தலைமைகளில் இல்லை.

ஆனால் இன்றைய இந்திய சமுதாயம் வன்முறைகளில் இருந்தும் ஆதிக்கப் போட்டிகளின் விளைவான பகையுணர்வுகளில் ஏற்படும் அழிவுகளில் இருந்தும் மீள வேண்டுமானால், பெண்களின் சுயமான உணர்வுகளின் வெளிப்பாடுகளில் குவியும் ஆற்றல் அவசியமாகிறது. இது பழிக்குப் பழி வாங்கும் அழிவாற்றல் அல்ல.

இந்நாள் நம் சமுதாயத்தைப் பிடித்து ஆட்டும் அவலங்களில் ஒன்று மதவெறி மற்றது சாதி வெறி.

‘மதநல்லிணக்கம்’ என்ற கருத்தைத் தலைவர்கள் முன் வைக்கும்போது, “எல்லா மதங்களும் அன்பையே போதிக்கின்றன. உன்னைவிட அயலானை நேசி என்றே சொல்கின்றன. பிறருக்குத் துன்பம் விளைவித்து உன் மதத்தின் ஆதிக்கத்தைப் பெருக்க வேண்டும் என்று கூறவில்லை” என்று விளக்கம் தருகின்றனர். உண்மை அதுவாக இருக்கலாம்.

ஆனால், பெண் என்று வரும்போது எந்த ஒரு மதமும் அவளுக்குச் சம மனித உரிமை அளித்திருக்கவில்லை என்பதே தெளிவு.

தன்னுடைய கொல்லும் வில்லாலும், ஏகாதிபத்தியத்துக்கான வேள்வியினாலும் முதன்மை பெறும் நாயகன் அறிந்து பூரண கர்ப்பிணியான மனைவியைக் கானகத்துக்கு அனுப்பி வைத்தான். அவளை மண்ணுக்குள் அனுப்பும் வரை, அவளிடம் புதல்வர்கள் தன்னுடையவர்கள்தாம் என்பதற்கு

For more ebooks visit: https://getmyebook.in/

சான்று கேட்டான். அவள் மண்ணுக்குள் மறைந்த பின்னரே, ஐயம் தெளிந்து மக்களை ஏற்றான். இந்த நாயக தெய்வம் அடையாளமாகிப் போன சமய அடையாளம் பெண்ணுக்குத் தேவையா? முகத்திரை இடவில்லை என்றால் அக்கினித் திராவகம் என்ற சமய அடையாளம் பெண்ணுகுக்குத் தேவையா? பெண்ணே பாவம் செய்யத் தூண்டுபவள் என்று முத்திரையிடும் சமய அடையாளம் பெண்ணுக்குத் தேவையா? சமயம் கற்பிக்கும் வருண பேத சாதிப் பிரிவுகளின் பெண் வருக்கம் தன்னை குதறிக் கொள்வது தேவையா? ஆதிப் பெண்ணின் பூப்புக்குருதி, ஆதி மனிதனுக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், பெண், மனிதனின் பரிணாம வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்தின் நெருக்கடிகளையும் துன்பங்களையும் சுமைகளையும் அநுபவித்தவள்.

குரூரங்களையும் கொலைகளையும் அன்பும் கருணையும் வளரும் உள்ளங்களில் ஏற்கப் பழகியவள். இன்றும், நாய், பூனை போன்ற விலங்குகள், முதற்குட்டியின் முகம்கூடப் பாராமல் கவ்விக் கொன்று பசி தீர்ந்து வலிமை பெற்ற பிறகே அடுத்த குட்டிகளை ஈன்று நக்கிக் கொடுத்துப் பாசத்தைக் காட்டுகின்றன. இந்தப் பெண்மையை வெல்ல, ஆண் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, முயன்று வெற்றி பெற்றிருக்கிறான். மதங்கள், புராணங்கள், தத்துவங்கள் எல்லாம் மனங்கவரும் ஆண் ஆதிக்கக் கோட்பாடுகளைச் சாரமாகக் கொண்டவை. எனவே தன்னை ஒன்றுமில்லாத பூச்சியங்களாக்கும் அடையாளங்களை

For more ebooks visit: https://getmyebook.in/

உதறித் தள்ளிவிட்டு, பெண்கள் முன்வர வேண்டும். பெண்களுக்குச் சாதி, மதம், இல்லை. அழிவைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஆற்றல் இவர்களுக்கு உண்டு. சாதி, மதம், ஆண் ஆதிக்க அடையாளங்களான அரசியல் கட்சிகள் ஆகிய அனைத்துப் பிரக்ஞைகளையும் உதறிவிட்டு, அழிவைத் தடுத்து நிறுத்த ஒன்று திரள வேண்டும்.

**'தினமணி',**
**22.3.2003**

For more ebooks visit: https://getmyebook.in/

# 4. அறிவாற்றலா? நுகர்வு கலாசாரமா?

1958ம் ஆண்டில் குந்தை (நீலகிரி) நீர் மின் திட்டக் குடியிருப்பில் நான் வாழவந்த நாட்கள். நீர் மின் திட்டத்தில் பணியாற்றும் பொறியாளர், அலுவலகங்களிலும் தணிக்கைப் பிரிவிலும் பணியாற்றுபவர்கள். பல்வேறு கனரக ஊர்திகள், இயந்திரங்களை இயக்குவோர் ஆகியோருக்கான குடியிருப்பு அது. அங்கு தற்காலிக அலுவலகங்களும் வசிப்பிடங்களும் ஒரு சிறு துவக்கப் பள்ளியுமே இடம் பெற்றிருந்தன. கடைகண்ணி, பொழுது போக்குத் தலங்கள் எதுவுமே இல்லாத நிலையில், வீட்டுப் பெண்கள் அவ்வப்போது, சினிமா, கடைத்தெரு என்று செல்வதற்கு, குடியிருப்பை ஒட்டியிருந்த படகர் கிராமத்தையே நம்பியிருந்தனர். அங்கே கடைத்தெரு, காய்கறிச் சந்தை எல்லாம் தோன்றியிருந்தன. நான் அங்கு சென்றிருந்த நாலைந்து நாட்களுக்கெல்லாம், பொறியாளரின் மனைவியர் நாலைந்து பேர் என்னிடம், “மஞ்சூர் போகலாமா?” என்று வினவினர். பத்து நிமிடங்களில் ஏறிச் செல்லும் அந்த கிராமம் அப்போது நீர் மின் திட்டத்தினால் வளர்ச்சி பெற்றிருந்தது. ஓர் உயர்நிலைப் பள்ளியும், ஆசிரியர்களுக்கான குடியிருப்புகளும் இருந்தன. அப்போது, பிற்பகல் நேரம் நடக்கவோ, சுற்றித்திரியவோ இதமான வெயிலும் இருந்தது. கடைவீதியில் கால் வைத்ததுமே, புதிதாகத்

For more ebooks visit: https://getmyebook.in/

தோன்றியிருந்த துணிக்கடை எல்லோரையும் கவர்ந்தது எனலாம். தேன்மலர் கண்ட வண்டினம் போல இந்த வண்ணக் கும்பல் உள்ளே நுழைந்தது. ஆனால் என்னை ஈர்த்தது வேறோர் இலக்கு. கிளை நூலகம் - மஞ்சூர் - என்ற முகப்புடன் தெரிந்த கட்டிடத்துள் நான் நுழைந்துவிட்டேன். நூலகத்தின் காப்பாளர் போல் தென்பட்ட இளைஞர் எழுந்து நின்று என்னை வரவேற்றார். நூலகத்துக்குள் வேறு ஓர் ஈ காக்கை இல்லை. புதிய அலமாரிகளில் அணி அணியாகப் புதுக்கருக்கழியாத நூல்கள் காட்சியளித்தன. வின்ஸ்டன் சர்ச்சிலின் போர்க்கால நினைவுகள், ஆறு தொகுதிகளும், ஏ.ஜே.கிரானின் பர்ள்பக், மேரிகாரெல்லி போன்ற புகழ்பெற்ற ஆசிரியர்களின் பல படைப்புகளும், நேருவின் டிஸ்கவரி ஆஃப் இந்தியா, எமர்ஸன் கட்டுரைகள் போன்ற நூல்களும் இடம் பெற்றிருந்தன. தமிழ்ப் பிரிவில் நூல்கள் அதிகமில்லை என்றாலும், டாக்டர் மு.வ.வின் படைப்புகள் என்னை மிகுதியாகக் கவர்ந்தன. நான் புத்தகங்களைப் பிரித்துப் பார்த்துக்கொண்டே ஊன்றியிருந்ததில் என்னுடன் வந்த தோழிகளின் நினைவே வரவில்லை. சுமார் ஒரு மணிநேரம் சென்றதும், உணர்வு வந்த நிலையில் நூலகத்தில் உறுப்பினராக ஒரு விண்ணப்பப் படிவம் பெற்றுக் கொண்டு படி இறங்கினேன். அப்போதுதான் அவர்கள் என்னைத் தேடிக் கொண்டு வந்தார்கள். “ஏய், நீ இங்கேயா இத்தனை நேரம் இருந்தாய்?” என்று வியப்புடன் வினவிய தோழி, இந்த அணைக்கட்டுத் திட்டத்துக்கு நான் வருமுன்பே நெருக்கமாகப் பழகியவள். கல்லூரிப் பட்டம் பெற்றவள். “இங்கே

For more ebooks visit: https://getmyebook.in/

நல்ல புத்தகங்கள் இருக்கு வரீங்களா?” என்றேன் ஆர்வமுடன். “அப்ப, நீ புடவை, துணிகள் பார்க்க வரவேயில்லையா?” என்றாள் அவள். நான் எனக்கு அதில் சுவாரசியம் இல்லாததால் எதுவும் விடையிறுக்காமல் சிரித்தேன். “You are not at all a Woman!” - (நீ ஒரு பெண்ணே இல்லை!) என்று அவள் கூற மற்றவர் அதை ஆமோதித்துத் தீர்ப்பளித்தார்கள்.

இது நிகழ்ந்து நாற்பத்தைந்தாண்டுகள் ஓடிவிட்டன. நம் நாட்டிலும் அரசியல் - சமூக அரங்குகள் பெரிதும் மாற்றமடைந்திருக்கின்றன. பெண்கள் முன்னேற்றம் பெரிதும் வளர்ச்சி பெற்றிருக்கின்றது. கல்வி, தொழில், கலைகள் சார்ந்து மிகப் பெரிய முன்னேற்றத்தைப் பெண்கள் எட்டி இருக்கின்றனர். அறிவு சார் உலகை அவர்கள் ஆக்கிரமிக்கிறார்கள் என்றுகூடச் சொல்லலாம். மருத்துவம், கல்விப் பயிற்சி, தகவல் தொழில்நுட்பம் ஆராய்ச்சி ஆகிய பல துறைகளில் அவர்கள் தங்கள் திறமைகளை வியக்கத்தக்க வகையில் ஆக்கபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளனர். காலம் காலமாக முடக்கி வைக்கப்பட்டிருந்த ஆற்றல், சமுதாய வளர்ச்சிக்குப் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. பெண்ணின் சக்தி, மரபார்ந்த தடைகளுக்குள்ளும், நூற்றாண்டுகளின் அறியாமையில் பதப்படுத்தப்பட்ட மனப்பாங்குகளில் குறுக்கப்பட்ட எல்லைகளுக்குள்ளும் சிறைப்பட்டிருந்த நிலை மாற்றப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்துகளில் கட்டாயமான மூன்றில் ஒரு பங்கு ஒதுக்கீடு பல பெண்களின் போராடும் ஆற்றலையும்

For more ebooks visit: https://getmyebook.in/

ஆக்கப்பூர்வமான படைப்பாற்றலையும் வெளி உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

எனினும், இத்துணை வளர்ச்சி - முன்னேற்றங்களும் சமுதாயத்தில் பெண்களின் நிலையை உயர்த்தியிருக்கின்றனவா? வரதட்சினைக் கொடுமை, பாலியல் வன்முறையால் நலங்கள் சூறையாடப்படும் அவலம், பெண்கருவழிப்பு, மிருகத்தனமாகக் கசக்கிப் பிழியும் கொடுமைகள் எல்லாம் அன்றாடம் சமூக அவலங்களாக விரிகின்றன. வறுமைக்கோடு, பெண்ணை மையமாக்கியே மேலே மேலே உயர்ந்து நடுத்தர வருக்கத்தையும் கோட்டுக்குக் கீழே தள்ளிக் கொண்டிருக்கிறது. பெண்ணரசு, பெண் நிர்வாகம், பெண்-காவல் பாதுகாப்புத் துறைத் தலைமை, எல்லாமே, அடித்தளப் பெண்களின் நிலைமையை மாற்றி அமைக்க இயலாத செல்லாக் காசுகளாகவே எதிர்பார்ப்புகளைப் பொய்யாக்கிக் கொண்டிருக்கின்றன. ஏன்?

பெண்களின் பல்துறை அறிவு சார் மலர்ச்சியும் முன்னேற்றமும் ஆக்கபூர்வம் என்று கணக்கிடுவோம். இந்த மலர்ச்சி, வரவு வருமானம், ஒட்டுமொத்தமான சமுதாய வளர்ச்சியை மேம்பாட்டுக்குக் கொண்டு செல்கிறது. அதேசமயம்,பெண்ணின் ‘நான்’ என்ற சுய உணர்வு, அறிவுசார் பண்புகளில் மேம்பட வேண்டும். அந்தப் பண்புகளில் குறிப்பிடப்பட வேண்டிய தற்சார்பாகிய விடுதலை உணர்வு; துணிவு; தன்னம்பிக்கை, உறுதி ஆகியவையாகும்.

இது ஒரு வகை வழுக்கு மரம்தான்.

For more ebooks visit: https://getmyebook.in/

இவள் சாண் ஏறுமுன், முழம் சறுக்க, தண்ணீரை அடிக்கிறார்கள்; கவனம் சிதறக் கொட்டலும் கூச்சலும், இழுத்தலும் நிகழ்கின்றன. பெண்ணுக்கு - மையழகு; இடுப்பழகு நடக்க முடியாத சீறடி அழகு, அணிபணிகள், மேலும் மேலும் அழகு சேர்க்கும்; அவளுக்கு நாணம், மூடத்தனம் எல்லாமே அழகு... இத்தகைய அழகுகளாலேயே அவள் மாட்சிமை பெறுகிறாள் - புடவைகள், மேற்பூச்சுகள், அலங்காரங்கள் என்று அவள் தன்னை மையப்படுத்திக் கொள்ளும் கருத்தியலில் இருந்து விடுபடாததால், அவளால் எத்துணை அறிவுசார் வருமானம் பெற்றிருந்தபோதிலும், முற்றிலுமாக அந்த வருமானத்தால் சமுதாயத்தில் புதிய மாற்றங்களைக் கொண்டுவர முடியவில்லை. வருமானத்தைத் தேய்த்து மேலும் சுரண்டும் செலவுகளாக உடல்சார் உணர்வுகளைத் துண்டி இழுக்கும் கவர்ச்சிகள் அவளுடைய உண்மையான ஆளுமையை அமுக்குகின்றன. அல்லது அழித்து, தற்கொலைக்கு வழி வகுக்கின்றன. பொருளாதார சுதந்தரமும் பட்டப்படிப்பும் உள்ள பெண், கற்புச்சுருக்கில் கழுத்தைக் கொடுக்கிறாள். உடல் சார்ந்த கற்புக் கருத்தியல் உளவியல் சார்ந்த ஆளுமையை எப்போதுமே அவளை சுருக்குக் கயிற்றுள் வைத்திருப்பதால், பெண் சீண்டலிலிருந்து, அவளை அநுமதியின்றி, உரிமையின்றி ஆள்வது வரை ஆணுக்குச் சாத்தியமாகிறது. ஆணுக்குச் சமமாக மட்டுமின்றி, மேலாகவே பட்டங்களையும் பதவிகளையும் பெற்றாலும், திருமணம் என்ற ஒரு

For more ebooks visit: https://getmyebook.in/

முளையில் கட்டப்பட வேண்டும் என்ற கட்டாயம், வாழ்க்கைக்கு உத்தரவாதமாகிறது.

இந்தக் கட்டாயக் கருத்தியல்களில் இருந்து விடுபடும் சுதந்தர மலர்ச்சி எந்தப் படியிலும் பெண்ணுக்குக் கிடைக்கவில்லை என்பதே நடப்பியல் உண்மை. 'உடலழகை' மட்டும் குறிப்பாக்கும், 'மாடலிங்' சினிமாத்துறைகளில் இன்றைய இளம் பெண்கள் விட்டில் பூச்சிகள் போல் கவரப்படுகிறார்கள். நவீன விளம்பர உத்திகள், காட்சி ஊடகங்களில், அன்றைய தேவதாசி முறையே சிறந்ததாகக் கருதும் வகையில் பெண் கடை விரிக்கப்படும் சரக்காகப் பரிணமிக்கச் செய்கின்றன.

இந்நாள் கைத்தறித் தொழிலாளரைக் காப்பாற்ற மாணவிகள், ஆசிரியர்கள் எளிய சேலைகளில் பவனி வந்தது பற்றிச் செய்திகள் ஆறுதலளிக்கின்றன. இளம் பெண்களுக்கு, கவர்ச்சித் தூண்டில்களில் மனம் கொடுக்காமல் உறுதி கொள்ள பள்ளிப் பருவத்தில் இருந்தே பக்குவப்படுத்தும் உரையாடல் பாடங்கள் இடம் பெற வேண்டும். பள்ளிகளில் இருந்தே அழகுப்போட்டிகளுக்குத் தயாராக்கப்படும் அவலம் கண்டிக்கப்பட வேண்டும். பன்னாட்டு அழகு சாதன வலைகளில் பெண்கள் சிக்கிவிடாமல் பாதுகாக்க வேண்டும். அழகுப் பராமரிப்பு நிலையங்கள், சாதனங்கள் தயாரிப்பு, தொழில் வளமல்ல. பல கோடிகளும், நேரமும் விரயமாகும் தேசிய இழப்பாகவே கணக்காகிறது.

பணிகள், முகப்பூச்சுகள் எல்லாமே அவளை வாணிப சாதனமாக்கித் தீர்ந்திருக்கிறது. அறிவுத்திறமை,

For more ebooks visit: https://getmyebook.in/

சாதனை, பொருளாதார சுயச்சார்பு ஆகிய வண்மைகளை, உடலழகுக் கருத்தியல் சுரண்டிச் சாப்பிட்டுவிடுகின்றன. தனது ‘ஏற்றம்’ என்ற உயர்நிலையில் இருந்து, புதிய நகைகள், சேலைகள், கவர்ச்சிகள் என்ற பளபளப்புக்கு இளைய தலைமுறையினர் வஞ்சகமாக, பள்ளி அழகுப் போட்டிகளில் இழுக்கப்படுவதற்கு எதிர்ப்புக் காட்டுவதில்லை; மாறாக, அது சுதந்தரம் என்று பெருமிதம் கொள்கிறாள். மாடலிங், அழகிப் போட்டி வெற்றி திரை மின்மினி என்ற ஏணிகள் இளைய தலை முறையினரின் அறிவார்ந்த உணர்வுகளையே இருளுக்குள் தள்ளிவிடுகின்றன.

இளமைக்குத் துணிவு உண்டு; வேகம் உண்டு; ஆற்றலும் அதிகம். இந்த ஆற்றல், ஆணிடம் ஒடுக்கி அழிக்கும் ஆற்றலாகவும், பெண்ணிடம் பலவீனமாகவும் வலுப்பெறுகிறது. கலைத்துறையில் திரைக்குப்பின் ஓசைப்படாமல் நிகழும் தற்கொலைகள், கொலைகள், மனிதவள ஆற்றலின் பேரிழப்புக்களாகும். வயது முதிர்ந்தவர் தற்கொலை செய்து கொள்வதில்லை.

காந்தியடிகள், சுதந்திரப் போராட்டத்தின் போது, தம்மைச் சந்திக்க வந்த பெண்களில் நகையணிந்த பெண்களைக் கண்டால், சிரித்தபடியே கழற்றச் சொல்லி, வாங்கி அரிசன நிதிக்கு ஆதாரமாக்கிக் கொண்டார். சுதேசிக் கதர் ஆரணங்குகளுக்கு ஆடையாயிற்று. இசை போன்ற கலைத்திறமை, மக்கள் மனங்களை இறையுணர்வுடன் இணைக்கும் ஊடகமாயிற்று. அந்நாட்களில் கல்லூரியில் அடி

For more ebooks visit: https://getmyebook.in/

வைத்த பெண், நகைகளில்லாமல், வெள்ளையோ, வேறு பளப்பளப்பில்லாத எளிய நூல் சேலையோ அணிவதை நாகரிகமாக்கினாள்.அந்நாட்களில் சேவைப்பணிகளில் இருந்த மருத்துவர்கள், செவிலியர், உதவியாளர், வெறும் வெள்ளைச் சேலையணிவது வழக்கமாக இருந்தது. சேலை ஓரத்துக் கரைகள், சிறுபூக்கள் அச்சிட்ட தலைப்புகள் மட்டுமே வேறுபட்டன. திருமணங்கள் ஓசைப்படாமல் மனம் ஒத்த இணைதலுடன் சான்றோரின் ஆசிகளுடன் நடந்தேறின.

ஆனால் இந்தக் குறுகிய கால விரதங்கள், சுதந்தரம் வந்தவுடன் பெரும்பாலும் அரசியல்வாதிகளாலேயே உடைக்கப்பட்டன. தொழில்மய, முதலாளித்துவ கலாசாரங்களில் பெண் மீண்டும் ‘துரெளபதை’யாக்கப்பட்டாள். சீதைகளாக அக்கினிப் பிரவேசக் கற்பியலில் நெறிக்கப்படுகின்றனர். வழக்கொழிந்து விடுமோ என்ற அச்சத்துடன் வெள்ளைச் சீலை வைதவ்யமாகிய கைம்மையையும் மீண்டும் மீண்டும் காட்சி ஊடகங்கள் வலியுறுத்துகின்றன. இவற்றை எதிர்த்துச் சமாளிக்கக்கூடிய கல்வி, பெண்களுக்குக் கிடைக்கவில்லை.

காலையில் இரண்டு மூன்று அறுவை சிகிச்சை செய்துவிட்டு, மாலையில் அவர்களைப் பார்க்க வரும் தனியார் மருத்துவமனை பெண் மருத்துவர்கள் கண்களைப் பறிக்கும் பட்டுடைகள், நகைகள், அடுக்கு மல்லிகைச் சரங்கள், கனத்த உதட்டுச் சாயம் என்று விளங்குவதை பார்த்துத் திகைக்கிறேன்.

For more ebooks visit: https://getmyebook.in/

‘நான் வெறும் உடலல்ல - அனைத்து மனித அறிவாற்றல்களுக்கும் உரிமைகளுக்கும் சொந்தக்காரி’ என்ற உணர்வைப் பெண்ணுக்குப் பிஞ்சுப் பருவத்திலிருந்து பதிய வைப்பது, ஒரு தாய், மூத்த சகோதரி, ஆசிரியை, பொதுநலம் பேணும் ஆட்சிபீடங்களில் உள்ள பெண்கள் அனைவருக்கும் கடமையாகிறது. ஒவ்வோர் ஆணாதிக்க வேர்களையும் கண்டறிந்து செயலிழக்கச் செய்ய வேண்டும். இந்தக் கருத்தியலே, ஒரு தாயைக் கருவழிக்கும், சிசுக் கொலை புரியும் இனவழிப்புக்குத் துணிய வைக்காமல் தடுக்கும்.

**- பெண்ணே நீ**

For more ebooks visit: https://getmyebook.in/

# 5. மானுடச் சிறப்பு

அண்மையில், மூளை வளர்ச்சிக் குறைபாடுடைய சிறுவர் சிறுமியர், வளர்பருவத்தினருக்காக அமைந்த ஒரு தொண்டு நிறுவனத்தில் சுயச்சார்பு என்ற இலக்கை எட்டப் பணிபுரியும் ஒருவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. இவர் குழந்தையாக, சிறுமியாக இருந்து வளர்ச்சி பெற்று, பெற்றோர் ஆசிரியர் அரவணைப்பிலும் சிறப்புப் பயிற்சியாளர் கண்காணிப்பிலும் மலர்ச்சி பெற்று இப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

இவரை நான் குழந்தையாக இருந்த நாளிலிருந்து அறிவேன். குறைபாடு உள்ளவராகவே தெரியாது. வளர் பருவத்தில்தான் சிக்கல்கள் தொடங்கின. சராசரி இயல்புடைய குழந்தைகளைப்போல், மனத்திண்மையுடன் செயலில் ஒன்றி நிலைக்கும் நிதானம் இருக்காது. உணர்ச்சிகள் கட்டுக்கடங்காத எழுச்சிச் செயல்களாக வெளிப்படும். சாதாரணமாகவே குழந்தைகளிடம், காரண காரிய விளக்கம் தேட முடியாது. ஒன்றரை, இரண்டு வயசுக் குழந்தை, கொடுக்க இயலாத ஒன்றைக் கேட்கும். எனக்குத் தெரிந்து ஒரு குழந்தை, தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு, குண்டு துளைத்து, ஒருவரைக் கொல்லக்கூடிய துப்பாக்கி வேண்டும் என்று அடம் பிடித்தது. ‘அதற்கெல்லாம் லைசன்ஸ் வேணும். உனக்குக் கிடைக்காது’ என்று தந்தை சாக்கு சொன்னார். அவனுக்கு லைசன்ஸ் என்று சொல்லத்

For more ebooks visit: https://getmyebook.in/

தெரியவில்லை. நாள்தோறும் தந்தை அலுவலகத்தில் இருந்து வந்ததும் ‘லைசுஸ் வாங்கி வந்தியா? எனக்கு குண்டு போட்டா, செத்துவிடுற துப்பாக்கி வேணும்’ என்பான். கேப்பட்டாசு வெடிக்கும் துப்பாக்கியைத் துக்கி எறிவான். விரைவில் அந்தப் பருவம் மாறிவிட்டது.

ஆனால், அறிவு வளர்ச்சி பெற்று, தொழில் நுட்பக் கல்லூரிகளில் படிக்கும் இளைஞர், யுவதிகள், காதல் என்ற ஒன்றைக் காரணமாக்கி தங்கள் விருப்பத்துக்கு மற்றவர் இணங்கவில்லை என்றால், வெட்டிச் சாய்ப்பதும், மண் எண்ணையை ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொள்வதும், அறிவு வளர்ச்சிக்கோ, மூளைத் திறனுக்கோ எடுத்துக்காட்டாகுமா? இன்றைய சமுதாயத்தில் அன்றாடம் நிகழும் கொலைகளுக்கும் தற்கொலைக்கும் வறுமை மட்டும் காரணமா? தமது கட்சித் தலைவருக்கு ஏதேனும் ஆபத்தென்றால் தீக்குளிக்கும் தொண்டர்களை உள்ளடக்கிய அரசியல் கட்சிகள், இன்றைய குடியாட்சிச் சமுதாயத்தின் ஆரோக்கிய அடையாளங்களா? ஒரு தொண்டர் விரல்களை வெட்டிக் கொண்டு தியாகம் செய்கிறார். கோபுரத்திலிருந்து குதிப்பதாக அச்சுறுத்துவதும், வன்முறையினால் பொதுமக்களுக்குச் சேதம் விளைவிப்பதும் ஆரோக்கியமான சமுதாயத்தின் அடையாளங்களா?

யோசிக்க வேண்டி இருக்கிறது.

அரசியல் கட்சிகளின் தலைவர்களின் பலம், இத்தகைய வன்முறைத் தொண்டர்களாலும்

For more ebooks visit: https://getmyebook.in/

சிறுபிள்ளைகள் போல ஒருவருக்கொருவர், அறிக்கைகளால் குத்திக் கொள்வதும், மக்கள் தொடர்பு சாதனங்கள் இந்த வகையில் ஊட்டம் பெற்று, வாழ்வாதாரங்கள் சுரண்டப்பட்ட நிலையில் அன்றாடம் போராடும் மக்களைக் குழப்புவதும் ஒரு நாகரிக வளர்ச்சி பெற்ற குடியாட்சி சமுதாயத்துக்குரிய அடையாளங்களா? புரியவில்லை.

நாம் அரசியல் விடுதலை பெற்று ஒரு பொன் விழாக் காலமும், மேலும் ஏழாண்டுகளும் ஓடிவிட்டன. விடுதலைப் போராட்டம், காந்தியடிகளின் வருகைக்குமுன், வளர்ச்சி பெறாத குழந்தையின் செயல்களைப் போல் உணர்ச்சி கரமான குண்டுவீச்சுகளும், வன்முறை, தற்கொலைகளுமாகத்தான் இருந்தது. உணர்ச்சிகளை அடக்கி, மனஉறுதியும், இலட்சியத்துக்கான வலிமையுடனும் அடக்குமுறைகளைச் சாத்துவீகமாக எதிர்நோக்கும் போராட்டத்தைக் காந்தியடிகள் முதன் முதலில் செயல்படுத்தினார்.

அந்நிய நாட்டில், ரயில் வண்டிப் பயணத்தில் தாம் முதல் வகுப்புக்குரிய பயணச்சீட்டை வைத்திருந்தும், நடுவழியில் சாமான்களைத் தூக்கி எறிந்து அவரையும் வெளியேற்றியபோது, தம் ஒருவருடைய தன்மானம் மட்டும் குத்தப்பட்டதாக அவர் உணர்ச்சி வசப்படவில்லை. தாம் பிறந்த இந்திய நாட்டின் மக்கள் சமுதாயத்துக்கே ஊறு ஏற்பட்டுவிட்டதாகச் சிந்தித்தார். வெள்ளைக்கார ஆட்சிக்கு எதிராக, அவர் படைபலம் திரட்டவில்லை. ஆனால், அடிமைகளாக உழைத்துத் தேய்ந்த எழுதப் படிக்கத் தெரியாமல், எதிர்த்துப் பேசத்

For more ebooks visit: https://getmyebook.in/

தெரியாமல், ஒடுங்கிக் கிடந்த, இந்திய மண்ணில் அடி வைத்துக்கூட அறிந்திராத மக்களின் உள்வலியில் நம்பிக்கை கொண்டார்.

உலகிலேயே முதன்முதலான அறவழிப் போராட்டம், வரலாறு பெற்றது. தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என்று கைத்தறித் துணிகள் விற்பனை மாளிகைக்கும் பெயரிடப்பட்டிருக்கிறது.

தில்லையாடியைப் பார்த்தேயிராத வள்ளியம்மை, காந்தியடிகளின் உள்ளத்தில் இந்த அறப்போராட்டத்தை நாட்டு விடுதலைக்கான முக்கிய சாதனமாகக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையின் ஆதாரமாகத் திகழ்ந்தாள் என்பதை நம்மில் பலரும் அறிந்திருக்கமாட்டார்கள். கைத்தறி மாளிகைக்கு மட்டும் அவர் பெயர் வைக்க வேண்டுமா?

ஆடம்பரமான பட்டுச்சரிகை மாளிகைக்கும் வைக்கலாம். காந்தி பெயரிலோ, இராஜாஜி பெயரிலோ, மதுக்கடையோ, புகையிலை, சிகரெட் சாமான்களோ தயாரித்தாலும் இந்நாட்களில் யாரும் கண்டுகொள்ளப் போவதில்லை. பிரபலமான பெயர்கள், வாணிபம், இலாபம், அவற்றால் ஏற்படும் பொருள் வளம், அரசியல், பதவிகள், அதிகார உரிமைகள் எல்லாமே படிப்படியாக இந்தக் குடியாட்சியில் மக்கள் புரிந்துகொண்டிருக்கும் செய்திகள். எந்த வழியிலும் பெறக்கூடியவை. காந்தி ஜெயந்தி, சுதந்திர நாள், குடியரசு நாள் எல்லாம் விடுப்பு நாட்கள். தொலைக்காட்சியில், புத்தம் புதிய என்ற அடைமொழியுடன் ஒரு வன்முறை, வெட்டு, குத்து, பெண் கூடிய படங்கள் ஒளிபரப்பாகும். தியேட்டர்களில்

For more ebooks visit: https://getmyebook.in/

இளைஞர்களுக்காகவே திரையிடப்படும் படங்கள், கூட்டங்களை இழுக்கும் ஆளுயர விளம்பரங்கள், போக்குவரத்தைத் தடுமாறச் செய்யும். இந்த விடுப்புகளுக்கும் வழக்க நடைமுறைக்கும் தொடர்பே இல்லை. இன்றைய அடையாளங்களில் அந்தப் பழைய சத்தியத்தின் ஓர் இழைகூட இல்லை என்பது பெரும் சோகம்.

பிறப்பினாலேயே அறிவினால் ஞானம் பெறும் சாதியென்றும் ஆளும் சாதியென்றும் அடிமை ஊழியச் சாதியென்றும், போகத்துக்கும் மக்களைப் பெற்றுத் தருவதற்கும் பெண் பிறப்பென்றும், எட்டடிக்கு அப்பால் நின்றாலே தீட்டென்று ஓராயிரம் பிளவுகளையும் பல்வேறு சமயங்களையும், வழிபடு கடவுளரையும், மூடதருமங்களில் பெயர் பெற்ற ஆயிரமாயிரம் சிற்றரசுகளையும் கொண்டிருந்த இந்தத் துணைக்கண்டம், அடிகளின் வரவுக்குப் பின்னரே, காலனியாதிக்கத்தை எதிர்க்கத் திரண்டது.

அவர் திரட்டியது, உள்வலியை சுயநலம் கொன்ற தியாகங்களை; ஆத்மசக்தியை இங்கே ஆதிக்கம் செலுத்திய பகைவன் அழியவில்லை; நண்பனானான். ஆகஸ்டில் சுதந்தரம் பெற்றபோது, நாட்டுப் பிரிவினை நடப்புகள் அண்ணலைத் துயரத்தில் ஆழ்த்தியிருந்தன. அப்போது, மவுண்ட்பேட்டன் துரை, எலிசபெத் அரசியின் திருமண அழைப்பிதழை, காந்தியிடம் அளித்தார். அண்ணல் மனமுவந்து, “நான் ஒரு பரிசளிக்க விரும்புகிறேன் கொண்டு சேர்ப்பீர்களா?..” என்றார். “இந்த ஏழைப் பக்கிரியிடம்

For more ebooks visit: https://getmyebook.in/

அரசியாரின் மணவிழாவுக்குப் பரிசு கொடுக்க என்ன இருக்கும் என்று பார்க்கிறீர்களா?” என்று நகைத்தார்.

அவர் கையால் நூற்று இரட்டை இழை முறுக்கால் உறுதி செய்யப்பட்ட நூலைக் கொண்டு ஒரு பஞ்சாபிச் சிறுமியினால் குரோஷே ஊசியினால் பின்னப்பட்ட அற்புதமான சால்வை அது. மிக உயரிய பரிசுப் பொருட்களுக்கிடையே, அந்தப் பூச்சால்வையைப் பார்த்த அரசியும், மணாளரும் மனம் உருகிப் பாராட்டி, வியந்து, நன்றிக் கடிதம் எழுதினார்களாம். ‘இதை நான் எந்தப் பொது விழாவுக்கும் எடுக்கமாட்டேன். நெஞ்சோடு வைத்துப் பாதுகாக்கும் மிக உயர்ந்த பரிசாகக் கருதுகிறேன். அன்பின் அடையாளமாக வைத்திருப்பேன்’ என்று ஒரு தடவை மட்டுமல்ல, பல ஆண்டுகள் சென்ற பின்னரும் குறிப்பிட்டாராம்.

அந்த மனிதப் பண்பு, அன்று எப்படிப் பூத்தது?

கத்தியின்றி இரத்தமின்றி இந்த ஒரு சாதனையைச் சாதிக்கச் செய்த அன்றைய இந்திய மக்களிடையே எழுதத்தறியாமை, வறுமை, மூடநம்பிக்கைகள் எல்லாம் இருந்தன. ஆனால் மனித நாகரிகத்தின் அடையாளம், வன்முறை கிளர்த்தும் உணர்ச்சிகளை அடக்கி, உள்வலியைப் பெருக்குவதுதான். அதற்குத் தன்னலம் கருதாது, எளிய வாழ்வில் மேன்மை கண்டு, உடலுழைப் பினால் உண்டு, அறிவினால் மக்கள் சேவை செய்யப் பழகி ஒவ்வொரு மனிதரும் உள்ஆற்றலைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். உலகமே வியந்தது அந்நாள்.

ஆனால், அன்றைய போராட்ட இலக்கு வேறு. அரசியல் விடுதலைக்குப்பின் அதே ஒற்றுமை,

For more ebooks visit: https://getmyebook.in/

ஆக்கபூர்வ வளர்ச்சிக்குக் காக்கப்பட வேண்டும். அடிகள் தம் இன்னுயிரை ஈந்தும், எந்தத் தலைவரும் பாடம் கற்கவில்லை. இது இந்த ஐம்பத்தேழு ஆண்டு மக்கள் சமுதாய நடவடிக்கையில், வாழ்க்கைப் போராட்டங்களில் பளிச்சிடுகிறது. மண் வறண்டு நீராதாரம் வற்ற, செல்வம் கோடி கோடியாக எங்கோ சேருகிறது. தன்னலம் அழிக்கும் ஒழுக்கங்கள், எதுவுமே இந்த நாள், வருங்கால சமுதாயத்துக்கு உதாரணங்களாக எவரிடமும் இல்லை. ஆடையாபரணங்கள், அலங்கார உரைகள், சொல் வன்மைகள், மாலை மரியாதைகள், வண்ண விளம்பரங்கள், இவற்றைச் சாதிக்கும் திறமை, பணவசதி ஆகியவை எல்லா இளைஞருக்கும் இன்று இலக்காக இருக்கின்றன.

தொழில் நுட்பவியல் படித்துப் பட்டம் பெற்ற ஒரு பெண், காட்சி ஊடகத் துறையில் இருக்கிறாள். பின் ஏன் அந்தத் துறையில் படித்துப் பட்டம் வாங்கினார்கள்? இது வீண்தானே?

“இல்லை, இதில் திறமையாகச் சாதிக்கலாம் என்று வந்தேன்.”

“என்ன திறமை? படம் எடுப்பீர்களா? அல்லது அழகிய முகத்தால், நடிப்பால் பலர் முன் தோன்றிப் புகழ் பெறுவீர்களா?”

புரியவில்லை. ஆனால் அதுதான் இன்றைய இளைஞர் பலருக்கு இலக்காக இருக்கிறது. பன்னிரண்டாண்டுகள் அடைகாத்துப் பொரியும் முட்டைக் குஞ்சுகள், பொறியியல், மருத்துவமென்று, சாளரங்களில் நெருங்கி, நசுங்கி, உள் நுழைந்து,

For more ebooks visit: https://getmyebook.in/

சிறகுபெற, பெற்றவரைக் கடன் பெறச் செய்து, கவலைகளைச் சுமக்கச் செய்து, வெளியே படித்து வர வேண்டும். அவை ஒரு உருப்படியாக சமுதாயத்தை, மண்ணை வாழ வைக்குமோ?

இல்லையேல் மண்ணை உதறிப் பறந்து செல்லுமோ? அற்ப உணர்வுகளில் அழியுமோ? தெரியவில்லை.

அண்மையில் ஆசியக் கோப்பைக்காக இலங்கையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டபோது, நான் முதலில் குறிப்பிட்ட நண்பர், அதை ஆர்வத்துடன் பார்த்தார். ஐந்து நிமிடங்களுக்கொரு முறை அவருக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. யார் ஆடுகிறார்கள்? இந்திய ஆட்டக்காரர்கள் எப்படி ஆடுகிறார்கள்? என்ற தகவல்களை அப்போதைக்கப்போது இவர் சொல்ல வேண்டும். இந்த விவரங்களை அவரே தொலைக்காட்சியில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாமே?

நம் ஆட்டக்காரர்கள் அவர்கள் ஆடும்போது காட்சி பிடிக்கவில்லை என்றாலும், இவர்கள் ஆடும்போது, ஆட்டமிழந்து விட்டாலும், அவரால் அதைத் தாங்க முடியாது. அதனால் நண்பரின் வாயிலாக அதைத் தெரிந்து கொள்கிறார். அதே உணர்வுகளில் இவருக்கும் பாதிப்பு நேரும். முதல்நாள் தோல்வியில் இருந்து மிகக் குறுகிய பரபரப்புக் கட்டத்தில் வெற்றியை இந்தியா தேடியபோது, இரவு முழுதும் மகிழ்ச்சியில் திளைத்தார்கள். ஆனால், இறுதி ஆட்டத்தில் தோல்வியுற்றபோது, நண்பரின் நண்பர்

For more ebooks visit: https://getmyebook.in/

மிகவும் உணர்ச்சிவசப்பட்டு, வன்முறைக்குத் துணிந்து விட்டார். ‘ஒ, பொருட்களை உடைக்கிறான்’ என்று குடும்பத்தார் இந்த நண்பரிடம் சமாதானம் செய்யச் செய்தி விடுத்தனர். இவரையும் அந்தத் தோல்வி பாதிக்காமல் இல்லை. இரண்டு மூன்று நாட்கள் அசீரண உபாதைகளினால் துன்பப்பட்டார். இது, தேசப்பற்றா? அல்லது சிந்திக்கும் திறனில்லாத வெறியா?

இன்றைய இளைய சமுதாயம் ஒருபுறம் தொழில் நுட்பங்களில், நிர்வாகத் திறனில், இந்திய நாட்டின் பெருமைக்குரியவர்களாக, எதிர்கால வல்லரசை நிர்ணயிப்பவர்களாக விளங்குவதாக நம்பிக்கை காட்டப்படுகிறது. நடப்பியலில், புதிய தொழில்நுட்பங்கள், அறிவியல் சாதனைகள், மனிதப்பண்புகளைக் குதறி எறியும் வாணிபங்களாக அசுர வளாச்சி பெற்றிருப்பதுதான் அன்றாட வாழ்வு உணர்த்துகின்றது.

மனிதம் உய்வதற்கான சேவைத் தொழில்கள் அனைத்தும் ‘ஆன்மிகம்’ உள்பட வாணிபமயமாகி விட்டன.

இந்நாள் கண்களை மூடிக் கொண்டு போட்டிப் பந்தய விறுவிறுப்புடன் பணம், பணம் என்று பயணித்து வந்த சமுதாயம், சிந்திக்கத் தொடங்கும் என்று நம்பிக்கை தோன்றுகிறது. ஏனெனில், இந்த இலக்கில்லாப் பயணத்தின் வெறுமை புரிகிறது, இன்று.

ஒரு வள்ளியம்மை, மகத்தான சக்திக்கான ஆற்றல் தந்தாள். அந்த நிலையில் இருந்து, நாட்டு

For more ebooks visit: https://getmyebook.in/

விடுதலையோடு, இந்தியப் பொருளாதாரம், பண்பாடு, மனித வளம் என்ற இலக்கில் ஆயிரங்களில் ஒருவராக அந்நாளைய துர்காபாய் ஒரு முன்னுதாரணமானார். ஆனால், இந்திய ஜன நாயகத்தில் பிறகு சூழ்ந்த தவறான முன்னுதாரணங்கள், கல்விக்கூடங்கள், உடல் கவர்ச்சி, பாலியல் உணர்வுகளைக் கட்டவிழ்த்து, வாணிபம் செய்யும் கூடங்கள் என்ற கருத்தைப் பதிக்கும் சினிமா சின்னத்திரைகளின் நச்சு வளையங்களை அழிக்க இந்தப் புதிய இளைஞர் சமுதாயம் புறப்பட வேண்டும்.

நமது எதிர்கால நம்பிக்கைகள் காப்பாற்றப்பட வேண்டும். வெறி உணர்வுகளைத் துண்டிவிடும் கவர்ச்சிகளைத் தாண்டிச் சிந்திக்கச் செய்ய வேண்டும். இது நடக்குமா என்பது வினாவாக இருக்கலாகாது. நடக்க வேண்டும். மானுடம் சிந்திக்கும் ஆற்றல் பெற்றது. இதுவே மானுடச் சிறப்பு.

**அமுதசுரபி, செப்டம்பர் - 2004**

For more ebooks visit: https://getmyebook.in/

# 6. பெண் மொழி

பெண் எழுத்து, அல்லது மொழி, அக்கினிப் பிரவேச கட்டத்துக்கு வந்திருக்கிறது. பெண் மொழி, உடல் சார்ந்த உடல் மொழியாகவே இருப்பதால் ஆபாசம் என்ற கூக்குரலும், எங்கள் உடல், எங்கள் உணர்வுகள், எங்கள் எழுத்துரிமை என்ற எதிர்க்குரலும் செக்குமாட்டு வாழ்வில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. “சமுதாயம் பாழ்பட்டுப் போகும். உங்கள் உரிமைகளுக்கும் எழுத்துகளுக்கும் எல்லைகள் உண்டு. அடங்கு அல்லது அடக்குவோம். வெட்டு, குத்து, எரியூட்டு” என்பன போன்ற ஆத்திரவெடிகளும் “ஆண்டாள் எழுதவில்லையா அல்லது மீரா எழுதவில்லையா” என்ற அடங்கிய எதிர்க் குரல்களுமாக அரங்குகள் கலகலத்தன.

இந்தப் பெண் மொழி என்பதோ உடல் மொழி என்பதோ இத்தனை நாட்களில் புரிந்திருக்கவில்லை. பெண் எழுத்து என்பதும் கற்பு மீறிய எல்லைகளைத் தொடலாகாது என்ற நடப்பியல் இப்போது புரிகிறது. இந்த உடல் மொழி (அல்லது பெண் மொழியை ஆராய்ந்து பார்த்தால், அது பெண்ணுடல் சார்ந்த போகம் தொடர்பான சொற்களை வைத்துக் கட்டிய இலக்கியம் என்பதாக இருக்கிறது). ஆண் இத்தகைய படைப்பை உருவாக்கினால், அது ‘அற்புதப் படைப்பா’கிறது. பெண் இப்படி ஒரு படைப்பை உருவாக்கினால் அது ‘ஆபாச’மாகிறது.

நாயக நாயகி பாவம் என்ற அலங்காரங்களில், பெண் போகமே செய்தியாகும். இங்கே பெண்,

For more ebooks visit: https://getmyebook.in/

போகத்துக்கான உடற்கூற்றினால் மேன்மை பெறுகிறாள். காலம் காலமாகப் பெண், ஆணுக்கு அனுபவிப்பதற்குரிய சாதனமாகவும், வமிசம் தழைக்க ஓர் ஆண், அல்லது பல ஆண் மக்களைப் பெற்றுத்தரும் கருவியாகவும் மட்டுமே நெறிப்படுத்தப்பட்டு வந்திருக்கிறாள். இவளுடைய அறிவுக்கண்ணும் சிந்தனைத் திறனும் இந்த உடல் கருத்தியலால் குருடாக்கப்பட்டு, பொது மகள், குலமகள் என்ற கற்பு வட்டத்தில் சுழலும் செக்கு மாடாக்கி இருக்கின்றன. பழங்காலத்தில் எண்ணெய்ச் செக்கை இழுக்கச் சூழலும் மாடுகள், எள் நெய்ப் பிண்ணாக்கு மணம் வாசம் மூக்கிலேற, வட்டம் விட்டு மிரள முற்படும். சுளீரென்று சாட்டையடி விழும். மாடு தலைகுனிந்து தன் வட்டத்தைத் தொடரும். இதுவே பெண்ணின் நிலைமை.

இந்த உடல் மொழியை, தாயின் வடிவ ஆராதனைத் துதிப்பாடல்களிலும் காணலாம். துறவியரின் ஆக்கமாக, தாய் வடிவ ஆராதனையானாலும் பெண்ணுடல் அங்கே பவித்திரமாகிறது. இன்னொரு வகையில், பெண்ணுடலின் போகங்கள் அணுஅணுவாக விரிந்து, காமச் சேற்றில் ஓர் ஆணை அழுத்தும் நரகாகவும், அந்தக் குழியில் இருந்து இவரை மேலேற்றிவிட்டு குமரனின் பெருங்கருணையில் முடிவு பெறும். அந்தப் பெருங்கருணையை விளக்க, அத்துணை இழிவுகளைப் பெண்ணுடலம் சுமக்கும்.

இதுபோல் தம் கவித்திறனைக் காட்ட எந்தப் பெண்ணும் துணிந்ததில்லை. மாறாக, தம்மை அழுத்தி இழிமைப்படுத்தும் கருத்தியலை மனமுவந்து

For more ebooks visit: https://getmyebook.in/

ஏற்றவர்களாக, அதே பாடல்களை இவர்களும் பாடிப் பரவசமெய்தினார்கள்.

ஆண்டாளும், மீராவும் அக்கமாதேவியும் துணிச்சலானவர்கள் என்று ஒப்புக் கொள்ளப்பட்டாலும், ஒரு சிலர், தமிழில், ஆண்டாளின் புனிதத்துவத்தைக் காக்க, அந்தப் பாடல்களைப் பாடியவர், பெரியாழ்வார் தாம் என்றும் கருத்துரைத்தார்கள்.

தஞ்சை மன்னர், புலவரவையை அலங்கரித்த முத்துப் பழனியம்மை, இந்தப் பெண் மொழியைக் கையாண்டு பாடல் புனைந்தார். அப்போதைய அவைப்புலவர்கள் அதை ஏற்று, அவருடைய கவித்திறனையும் புலமையையும் பாராட்டி மகிழ்ந்தார்களாம். ஆனால் ஒரு நூறு ஆண்டுகளில் நிலைமை மாறிவிட்டது. ஆங்கிலேய அரசில், சமூக தருமங்களின் பாதுகாவலர்களாக விளங்கியவர்கள், முத்துப்பழனியம்மையின் பாடல்களுக்குத் தடை விதித்தனர். ஆனால், அதே தேவதாசி மரபில் பின்னர் வந்த நாகரத்தினம் அம்மாள், முத்துப்பழனியம்மையின் பிரச்சினைக்குரிய பாடல்களைத் தேடி அச்சிட்டபோது, கைம்பெண் மறுமணத்துக்காகவும், பெண்கள் முன்னேற்றத்துக்காகவும் அரும்பாடுபட்ட சமூக சீர்திருத்தவாதியான வீரேசலிங்கம் பந்துலு தீவிரமாக எதிர்த்தார். அப்பாடல்களுக்குத் தடை கோரினார். ஏன்? என் உடல், என் உரிமை, என் வாழ்வு என்ற கோட்டில் போராட்டக்காரியாக விளங்கிய நாகரத்தினம் அம்மாள், தேவதாசி ஒழிப்புச் சட்டத்தையே எதிர்த்தார்.

இந்த முரண்பாடு ஏன்?

For more ebooks visit: https://getmyebook.in/

ஒரு பெண்ணின் ஆற்றலை, அவள் இயக்கத்தை, உடல் உடலே என்ற கருத்தியலில் முடக்கலாகாது என்ற இலட்சியத்தை எட்டுவதற்குரிய, போராட்டத்துக்குரிய வழிகளே அவை. இரண்டு தடங்களிலும் அவள் பத்திரமாக முன்னேறவில்லை. தேவதாசி என்ற படியில் கல்வி கேள்விகளுக்கான வாய்ப்பு இருந்தது. ஆனாலும் அந்தக் கலைத்திறன் அவள் உடல் கருத்துடன் முடிந்தது. குலமகளுக்கோ எந்த வாய்ப்பும் இல்லை. பால்யமணம், கைம்பெண், இம்சைகளுக்காளாதல், புறக்கணிப்புகள் என்றெல்லாம் சுமந்த சமூகத் தீமைகளுக்கு ஒவ்வோர் அடியாகவே போராட வேண்டியிருந்தது. ஆனால் ஆதிக்க வர்க்கமோ, இவர்கள் அந்தக் காலத்திலும் ஒன்று சேர்ந்துவிடாத தற்சார்பு அற்ற நிலையிலேயே வைக்கக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

‘உடலுக்கப்பால், நீ உயர்ந்தவள், சக்தி வாய்ந்தவள். உன் ஆற்றலினால் நீ உலகையே வசப்படுத்த முடியும் என்று மொழிந்தவர் காந்தியடிகள்தாம். கற்பு நியாயத்தை இரு பாலாருக்கும் உரியதாக்கி மனித மேன்மைகள் அவளுக்கும் அளிப்போம் என்று குரல் கொடுத்தவர், பாரதி.

இலட்சிய அப்பத்தை முழுமையாகப் பெறும் நோக்குடன் டாக்டர் முத்துலட்சுமி அம்மையும் சிஸ்டர் சுப்புலட்சுமி அம்மையும் மாற்றங்களுக்கான போராட்டங்களில் தம்மை உட்படுத்திக் கொண்டார்கள். வெற்றியும் ஓரளவு கண்டார்கள்.

For more ebooks visit: https://getmyebook.in/

ஆனால் அந்த ஓரளவுக்குக் கீழேயே ஆண் ஆதிக்கக் கோட்டைக்கு அடி நிலையான பெண் உடல் கருத்தியல் குழி பறித்திருந்தது. அப்போது தெரியவில்லை. இந்நாட்களில் வெட்ட வெளிச்சமாயிருக்கிறது. தேவதாசி முறை ஒழிப்பினால், இசை நாட்டியக் கலைகள் முடங்கி விடவில்லை. இயல்- இசை-நாடகம் ஒரே திரைத்துறையாகப் பரிணாமம் பெற்றிருந்த காலத்தில் அபூர்வமாகவே பெண்கள் நடிக்க வந்தார்கள். கைக்குழந்தைக்குப் பால் வாங்கிக் கொடுக்கக் காசில்லாமல் குடும்ப வறுமையைப் போக்க வழி தெரியாமல் இந்த நிழலுக்கு வந்தார்கள். படத்தில் நடிக்க ஒப்பந்தம் என்று கையொப்பமிடும்போது உடைக்குறைவு, அத்துமீறல்களைப் பற்றிய முன்னுணர்வுகளே இல்லை. கூண்டில் பிடிபட்ட பிறகுதான் சிறகுகள் வெட்டப்பட்டது தெரியவரும். வயதாகிச் சக்கையாக வெளியேறும்போதும் அவளிடம் தவறு செய்த குற்றஉணர்வு இருக்கும். சாகும் வரை வாட்டி வதைக்கும். ஆனால் அறுபதாண்டு காலத்தில் எவ்வளவோ மாற்றங்கள் வந்துவிட்டன. சினிமா, தொலைக்காட்சிப் பரிமாணங்களுடன் மிகப் பெரிய வாணிபச் சந்தையைக் கடை விரிக்கிறது. பழைய குற்றஉணர்வுகளுக்கு இடமே இல்லை. இப்போதைய தொழில் நுட்ப ஜகஜ்ஜாலப் புரட்டுக் கலாசாரக் கவர்ச்சிக்கு மூலதனமே பெண் உடல்தான். விளம்பர முகவரிகளோடும் இல்லாமலும் கவர்ச்சிகள் பஞ்சமில்லாமல் காத்திருக்கும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கின்றனர். பெண்கள் எழுதப் படிக்கத் தெரியாமல் பிழைக்க வழியில்லாமல்

For more ebooks visit: https://getmyebook.in/

வறுமை துடைக்கத் தொழிலுக்கு வரவேண்டிய கட்டாயம் இருப்பதாக இன்று சொல்வதில்லை. ஏனெனில் பொறியியல் பட்டதாரி, கணினி மென்பொருள் நுட்பக்காரி எல்லோருமே இந்த நாபி கலாசாரத்தை ஏற்று நடிக்க வருகிறார்கள். வந்து மின்னி உயர்ந்த வேகத்தில் காணாமலும் போகிறார்கள். இன்றைய மக்கள் தொடர்புச் சாதனங்களில் பழமை வாய்ந்த நாளேடுகள், வார மாத இதழ்கள் முக்காலும் சினிமா, தொலைக்காட்சி நடிகர், நடிகையர், சீரழிந்த அரசியல் சமாசாரங்களை வைத்துப் பிழைப்பு நடத்த வேண்டிய கட்டாயத்திலும் மக்களுக்குத் தரமான தேவையான செய்திகளையும் தருகிறார்கள் என்பதுதான் ஆறுதல்.

சில நாட்களுக்கு முன் இப்படி ஒரு செய்தி வெளியாயிற்று. விபசாரத் தடைச் சட்டத்தில் ஒரு சினிமா நடிகையும் அவள் தாயும் (ஆண் கூட்டாளி அல்ல) கைது செய்யப்பட்டதையும் பிறகு விடுதலை பெற்றதையும் (தலை போகிற, போன) செய்தியாக வெளியிட்டிருந்தார்கள்.

இப்போதெல்லாம் காவல்துறையில் உயர் அதிகாரிகளிடம் இருந்து எல்லா நிலைகளிலும் பெண்கள் இருக்கின்றனர். சட்ட நுணுக்கங்களில் பழம் தின்று கொட்டை போட்ட மகளிரும் இருக்கின்றனர். விபசாரம் செய்பவர் யார் என்று எவரும் ஏன் கேட்கவில்லை? பெண்ணுடலையும், அது தொடர்பான விரசங்களையும் பாடல்கள், ஆடல்கள் என்று குஞ்சு குளுவான் முதல், கிழவர், கிழவிகள் வரை ரசிக்கும்படி முதல் வாணிபம் செய்பவர்கள்

For more ebooks visit: https://getmyebook.in/

பெருமைக்குரியவர்களா? இந்த வாணிபம் கலை விளம்பரப் போர்வையில் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் அளவுக்குக் கனம் பெற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் மெய்யோ?

இத்துடன் பெண்களுக்கு ஆட்சி உரிமையில் ஒதுக்கீடு, முப்பது, முப்பத்து மூன்று என்ற இலக்கங்களும், ஒதுக்கீட்டுக்குள் ஒதுக்கீடுகள் என்ற மையிடும் உபசாரங்களும் அரங்கேறுகின்றன. எல்லா அரசியல் கட்சிகளும், பெண்களைப் பொருளாதாரம் சார்ந்து, சக்தி பெற்றவர்களாக்குவோம் என்று முழங்குகின்றன. தங்கள் தங்கள் கட்சிகளில் பெண்களின் இலட்சிய அப்பத்தைத் துண்டாடி ஆதாயம் தேடிக் கொள்கின்றன.

ஒதுக்கப்பட்ட கிராமப் பெண்கள் சைக்கிள்களில் பள்ளிகளுக்குச் செல்கின்றனர். கறுப்புப் பூனைகளாகச் சாகசம் செய்கின்றனர். சுயஉதவிக் குழுக்கள், மகளிர் பஞ்சாயத்துப் பொறுப்புகள், எழுதப் படிக்கத் தெரியாத மகளிரையும் நேர் அநுபவக் குளங்களில் தள்ளி விட்டிருக்கின்றன. முங்கி முழுகித் திணறி நீச்சல் போட்டுக் கரையேற அநுபவங்கள் பெறுகிறார்கள். உயிர்களைப் பணயம் வைக்கும் போராட்டங்களும் நடக்கின்றன. ஒரு ‘சின்னப் பிள்ளை’யின் கால்களைத் தொட்டுப் பாரதப் பிரதமர் வணங்கிக் கவுரவிக்கிறார்.

ஒவ்வோர் ஆண்டிலும், பள்ளி இறுதித் தேர்வுகளில் ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிக விழுக்காடு வெற்றி பெறுகின்றனர். என்றாலும் பெண் உடல்

For more ebooks visit: https://getmyebook.in/

கருத்தியல் தகர்ந்துவிடாதபடி, வினாடிக்கு விநாடி கொட்டப்படுகிறாள்.

மழை பொழிந்தால் மண்ணுக்குத்தான், பெண் சமைந்தால் ஆணுக்குத்தான் என்று சர்வ வல்லமைக் கவிஞர் திரை இசைக்காகத் தீர்ப்பளித்திருக்கிறார்!

இப்போதெல்லாம் மழை பொழிவதில்லை. வேளாண் மக்களுக்குச் சங்கடந்தான். ஆனால் பெண் காயரும்பாக இருந்தாலும் தடையில்லை, பள்ளியில், வீட்டில்,வெளியில், எங்கும் ஆணின் வெறித்தனம் கட்டவிழலாம்.

அன்றாடம் கொலை, கொள்ளை, விபத்துகள் இளைய சமுதாயத்தினரைப் பலி கொள்ளும் விதமாக நிகழ்கின்றன. இவற்றில், பெண்சாவுகள், தற்கொலை, கொலைகள், பெண் மருத்துவர்களால் நிறைவேற்றப்படும் பெண் கருக் கொலைகள். (எழுதவே கூசுகிறது) மிக அதிகமானவை. இப்போது இலட்சிய அப்பத்தின் வடிவோ, இலக்கணமோ புரியவில்லை. ஆனாலும், படைபடையாக ஒளிக்கதிர்களை நோக்கிப் பறந்து வரும் வண்ணத்துப்பூச்சிகளைப் போல், எதிர்காலத்தை நோக்கி இளம்பெண்கள் கவடற்று வருகிறார்கள். சாதனை செய்வோம், வலிமை மிக்க பாரதத்தை மெய்ப்பிப்போம் என்று வருகின்றார்கள். வன்முறை வெறிகொண்ட தீக்குழிகளை இவர்கள் தாண்ட வேண்டும். உடல் கருத்தியலில் பெண் மொழிகள் முழுகிப் பொசுங்காமல் உன்னதங்களைத் தடுக்கும் பொய்ம்மைகளைத் தகர்க்க வேண்டும். இது நிகழ வேண்டும்.

For more ebooks visit: https://getmyebook.in/

**அமுதசுரபி, ஆகஸ்ட் - 2004**

For more ebooks visit: https://getmyebook.in/

# 7. இன்றைய பாரத குமாரி

இன்னுமொரு இளம்பெண் காட்சி ஊடகத்துறையில் கால் வைத்துப் புகழ்பெறும் தருணத்தில் தற்கொலை செய்து கொண்டாள்.

இன்றைய சமுதாயத்தில் ஓசைப்படாமல் நிகழும் பெண் கருவழிப்புகள், பெண் சிசுக் கொலைகளில் இருந்து, இத்தகைய தற்கொலைகள் வரை கணக்கிட்டால், பெண் வாழும் நம்பிக்கையையே இழந்து கொண்டிருக்கிறாள் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

காட்சி ஊடகங்களில் தொழில் உண்மைகளுமே வெளித் தெரிவதில்லை. 'சமுதாயப் பய' உணர்வு அவர்களுடைய வாழ்க்கையின் நிதர்சனங்களை இரும்புத்திரையாய் மறைக்கின்றன. அவ்வப்போது வெளித் தெரியும் தற்கொலை முயற்சிகள், தற்கொலைகள் - காதல் தோல்வி என்று ஊடுருவ முடியாத மஞ்சுத்திரையால் மூடப்பட்டு விடுகின்றன.

ஆனால் காட்சி ஊடகங்களின் மையமான வணிகப் பொருளே 'பெண்'தான். உடல்ரீதியான விளம்பரப் பொருளாக மட்டும் அவள் மதிப்பிடப்படவில்லை. பல்வேறு தலைப்புகளில் பல்வேறு சின்னத்திரை - சானல்களில் காட்டப்படும் மெகா தொடர்களில் பெண்கள் வழக்குரைஞர்களாக, காவல்துறை அதிகாரிகளாக, மருத்துவர்களாக, பத்திரிகையாளராக பல்வேறு வேடங்களில் கவர்ச்சி காட்டுகிறார்கள். ஆனால் அந்தப் பாத்திரங்களின் செயல்பாடு, எந்தப்

For more ebooks visit: https://getmyebook.in/

பெண்ணையும் மரபாசாரங்களை மீறி விழிப்புணர்வு கொள்ள ஓர் இழைகூட இடம் கொடுக்காது. பெண்களே, நீங்கள் எத்துணை மேம்பாடடைந்தாலும் இம்சைகளை வலிந்து ஏற்றுக் கொண்டு, குடும்பம் என்ற கூட்டுக்குள் ஆண் மக்களை வாழவைத்து அவனுக்கு ஆண்வாரிசு அளிப்பதே கடமை என்று மிக அதிகமாக வலியுறுத்துவார்கள்.

இந்தக் குடும்பத் தொடர்களில் பெண்களே பெண்களுக்கு எதிரிகளாகக் கொடுமை இழைக்கிறார்கள். இந்த வன்முறைகளில், உட்காரும் நாற்காலிகளில் குண்டு வைப்பதுவரை இடம் பெறுகின்றன. பச்சிளங்குழந்தையைத் துப்பாக்கி முனையில் வைத்து அச்சுறுத்தும் போக்கிரி, மாமியாரின் கையாளாக இருப்பான். மதுவருந்துதலும் புகை பிடித்தலும் வெட்டுவதும் குத்துவதும் காண்போர் ரத்தம் உறைய வண்டியால் மோதித் தள்ளிக் கொலை செய்வதும், கல்லைத் துக்கிப் போட்டு முகம் தெரியாமல் நசுக்குவதும் கதறக் கதறப் பெண்ணின் மானம் குலைப்பதும் எந்தத் தணிக்கைக்கும் உட்பட்டிருக்கவில்லை. தர்மங்களை விட அதர்மங்கள் வெல்வதே சித்திரிக்கப்படுகிறது.

ஒரு கொடுமைக்காரன் என்றால் அவனுடைய கொடுமைகளுக்கு வரம்பே கிடையாது. வன்முறைகளுக்குப் புதிய புதிய வடிவங்களும் காட்சிகளும் விரியும்போது, மனசாட்சி உள்ளவர்களுக்கு ரத்தம் கொதிக்கும். காவல்துறைக்குக் கற்றைக் கற்றையாக லஞ்சம் அளிப்பதும், சொல்ல முடியாத இம்சைகளுக்குக் காவல் நிலையத்தில்

For more ebooks visit: https://getmyebook.in/

நிரபராதியை ஆளாக்குவதும், இத்தொடர்களை மேலும் பார்க்க வைக்கும் போதை ஊக்கிகள்.

இத்தகைய வன்முறைகளைத் தொலைக்காட்சியில் பார்க்கும்போது, காந்தி, புத்தர், இயேசு என்று அஹிம்சைப் போதனைகள் பரவிய மண்ணிலா நாம் வாழ்கிறோம்? அவர்கள் பெயரைச் சொல்லும் தகுதி நமக்கு இருக்கிறதா என்று தோன்றுகிறது.

இடைநிலை, மேல்தட்டுக் குடும்பங்களில் மகனோ, மகளோ சிறகு முளைத்துப் பறந்து சென்றபின், குடும்பத்தலைவி, தலைவர்களுக்கு இந்தத் தொடர்கள் பொழுது போக்காக இருக்கலாம். அவர்கள் வாழ்ந்து ஓய்ந்த காலத்தில் இந்தத் தொடர்களால் ஏற்படக்கூடிய பாதிப்பு அதிகமில்லை. ஆனால், வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆதாரங்களான உணவு, உறையுள், தண்ணீர், எரிபொருள் ஆகியவற்றுக்கும் கழிப்பறை வசதி போன்ற மானம் காக்கும் தேவைகளுக்குமே அலைபாயும் அடித்தட்டு, குடிசை வாழ் பெண்கள், குழந்தைகளின் வாழ்க்கையை இந்த டிவி பூதம் மிச்ச சொச்சம் வைக்காமல் விழுங்கிக் கொண்டிருக்கிறதென்றால் மிகையில்லை.

இவர்களின் சிறார்களுக்கு அளிக்கும் இலவசக் கல்வியில், பேருந்துப் பயண அட்டையும், ஒரு நேர இலவசச் சோறும்தான் உருப்படியானவை. எனவே பன்னிரண்டு வயதைத் தாண்டுமுன் பள்ளி உதிர்த்த பிஞ்சுகளாக மாற, பருவம் எய்தும் நேரமே போதுமானதாக இருக்கிறது. தாமரை இலைகள் போன்ற பள்ளித்தலங்களில் தங்கிய நேரத்தில் எந்த எழுத்தறிவும், இவர்களுக்கு ஒட்டியிருக்காது.

For more ebooks visit: https://getmyebook.in/

பருவமெய்தியதும் அதை விளம்பரப்படுத்தும் மஞ்சள் நீர் மரபாசாரங்களில், செலவு கடன் - மொய் என்ற வணிக லாபக்கணக்கில் குடிசைச் சமுதாயம் மகிழ்கின்றது. பூப்படைந்த பெண் பெற்றோருக்கு பாரம். அவளை வீட்டில் விட்டுவிட்டுப் பெற்றோர் வேலைக்குச் செல்ல முடியாது. இவளை வேலைக்கு அனுப்பும் இடங்களிலோ, கீசகர்களும், கவந்தர்களும் தருணம் பார்த்துக் குதறி- விடுவார்கள். எனவே எவன் வந்து முதலில் கேட்கிறானோ அல்லது தொட்டு விடுகிறானோ அவனுக்கு இருப்பதை இல்லாதவற்றை விற்று, வாழ்க்கையையே அடகுவைத்து வரதட்சிணை, மினுக்குச் சேலை, நகை, விருந்துச் சாப்பாடு என்று மின்னல் மகிழ்ச்சியில் பெண்ணைக் கைகழுவி விடுகிறார்கள். 16,17 வயசில் கர்ப்பம், வயிற்றுக்கில்லா வறுமை, வேலையில்லாக் கணவனின் சாராய போதை; அடி உதை; நோஞ்சான் குழந்தைகள்; இலவச மருத்துவமனைகளின் அத்தியாவசிய அசுரப்பிடுங்கல்கள்...

இந்த இல்லற வாழ்க்கையில் இவர்களுக்குக் களிப்பூட்டும் சாதனம், தொலைக்காட்சி மட்டுமே. தாம் அண்டி உழைக்கும் உயர்குடி மக்களின் வீடுகளில் அவ்வப்போது பார்க்கும் இந்த சொர்க்க சுகம், இந்தப் பெண்களை, சொந்தமாக ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி வைத்துக் கொள்ளும் கனவையே பெரிதும் வளர்த்திருக்கிறது. அதில் வரும் பெண்ணின் துன்பங்கள், நெருக்கடிகள் எல்லாவற்றிலும் அவள் தன்னையே காண்கிறாள். மேலும், தொலைக்காட்சித் தொடர்களில் மறந்தும் அடித்தட்டு யதார்த்தங்கள்

For more ebooks visit: https://getmyebook.in/

விரிவதில்லை; பங்களாக்கள், சொகுசுக்கள், விதவிதமான ஆடைகள், எப்போதும் கசங்காத முகம், கூந்தலில் தொங்கும் மலர்ச் சரம் இதெல்லாம் காண்பதில் ஒர் ஆறுதல் கொள்கிறாள். கணவன் ஏற்கனவே ஒருத்தியை மணந்து குடும்பம் நடத்துபவன் என்றறிந்ததும் அவனுக்காக இரண்டு பிள்ளைகளைப் பெற்றிருக்கிறாள் குடிசைப் பெண். உழைத்துப் பிழைக்கும் நிர்ப்பந்தம் குழந்தைகள் இரண்டும் பள்ளியில் படிக்கின்றன. டி.வி. வாங்கும் கனவில் மிதக்கிறாள். குழந்தைகளை ஏதேனும் தரும ஆஸ்டலில் சேர்த்துவிட்டு, டிவி வாங்கி ஆசை தீரக் காண வேண்டும் என்று கனவைச் சொல்கிறாள், இவளே இன்றைய பாரதத் தாய் பாரத குமாரி!

**'தினமணி',**
**8.5.2002**

For more ebooks visit: https://getmyebook.in/

# 8. பெண்களின் பலவீனம் எது?

தாவர இனங்கள் பருவங்களில் பூத்துக் காய்த்துக் கனிகின்றன. கனி என்ற இலக்கின்றியே ரோஜா, மல்லிகை, முல்லை போன்ற மலர்கள் தம் பிறவிப் பயனை வண்ண வாசனைகளுடன் முடித்துக் கொள்கின்றன. பறவை இனங்கள் பார்க்கவும், கேட்கவும் மகிழ்ச்சியையும் பரவசத்தையும் அளிக்கின்றன. விலங்குகளிடமும்கூட, ஒளிவு மறைவோ கபடமோ இல்லை. ஏனெனில் ஐந்தறிவுடன் நிற்கும் உயிரினங்கள் இயல்பூக்க நெறிப்படி வளர்ச்சி பெற்று இனப்பெருக்கம் செய்து மடிகின்றன. இந்த இயற்கை உயிர் வளையத்தில் மனிதர் சுயநல - பேராசை அறிவுகள் புகுந்துவிட்டன. வாழும் காலத்திலேயே ஒரு நரகத்தைப் படைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், பல்லி பூச்சியைப் பிடிக்க வருகிறது. பூச்சி அங்கேயே நிற்கும். அதுவே சுவர்க்கமென்று கருதுமோ?

எல்லோருக்கும் பொதுவானதாக இயக்கை, நீர், மண், காற்று என்று கொடைகளை வழங்கி இருக்கிறது. ஆனால் இந்த வாழ்வாதாரங்கள் குறிப்பிட்ட மேல் வர்க்கத்தினர் தங்குதடையின்றி அனுபவிப்பதற்காக எஞ்சியுள்ள அடித்தட்டு வர்க்கம் செயல்படுகிறது. இந்தப் போராட்டத்தில் அடிபட்டுப் போகிறவள் பெண்தான். மார்ச் 8, மகளிர் தினம் என்று சொல்கிறார்கள். சுமார் பதினைந்தாண்டுகளுக்கு முன் ஒரு மாநாட்டில் உரையாற்ற சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்தேன். மாநாடு, முக்கடல்

For more ebooks visit: https://getmyebook.in/

சங்கமிக்கும் கன்னியாகுமரியில் நடந்தது. என் வசதிக்காக ஒரு பெரிய ஒட்டல் அறையை ஏற்பாடு செய்திருந்தார்கள். நான் அதை மறுத்து, மாநாட்டுக்குக் குழந்தை குட்டிகளுடன் அண்டை அயல் ஊர்களிலிருந்து வந்திருந்த பெண்கள் தங்கிய விடுதியில் இருந்தேன். விடுதி வாயிலில் ஓர் அடி பம்பு இருந்தது. அது ஒய்வு ஒழிவு இல்லாமல் ஆஸ்துமாக்காரரின் இதயம் போல் சிரமப்பட்டு இயங்கிக் கொண்டிருந்தது. முக்கடலும் சங்கமிக்கும் நீர்ப்பிரளயம் இருந்தும் பயனில்லை. பெண்கள் இடைவிடாமல் இயக்கிக் கொண்டிருந்தார்கள். அன்றிரவு முழுவதும் எனக்கு உறக்கம் வரவில்லை. முக்கடலின் அலையோசையினால் அல்ல; மாநாட்டில் வீட்டுக் கடமை மறந்து பங்கு பெறவந்திருந்த பெண்களின் பேச்சொலியோ, குறட்டையொலியோ, குழந்தைகளின் அழுகையொலியோ காரணமில்லை. மரணாவஸ்தையில் போராடும் பம்பு அடியோசையும் கூடக் காரணமில்லை. அந்தத் தண்ணீர்ப் போராட்டத்தில் ஓர் ஆண் குஞ்சுகூடப் பங்கு பெற வரவில்லை. அடுத்தநாள் பேச்சில் இதைக் குறிப்பிட்டேன்.

ஆத்திரத்துடன் பேசினேன். மார்ச் 8 மகளிர் தினங்கள் எத்தனையோ வந்து போகின்றன. கிளாரா ஜெட்கின் அம்மை, உலக மகளிரெல்லாம் உழைப்பு மதிப்பையும் மனித உரிமையையும் பெற வேண்டுமென்று அந்த நாளை ஒதுக்கி, ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளாகின்றன. நம் தாய் நாட்டில் வீட்டுக்குத் தண்ணீர் கொண்டு வரும் பொறுப்பு,

For more ebooks visit: https://getmyebook.in/

இல்லத்தை ஆளவந்திருக்கும் மகராசியின் தலையில்தான் கிரீடமாக வைக்கப்பட்டிருக்கிறது. நீலகிரிப் பழங்குடி மக்கள் திருமணங்களில் முன்பு மணமகள் அருவிக்குச் சென்று குடத்தில் நீரெடுத்து வருவதோடு சடங்கு நிறைவேறும். கோவையைச் சார்ந்த கிராமங்களில் கூட மணமகள் சீர்த் தண்ணீர் கொண்டுவரும் சடங்கு உண்டு. கிணற்றில் இருந்து நீர் எடுத்துக் கொண்டு வருவாள். இந்த மரபுகள் இன்றும் கட்டாயமாகப் பெண்களின் கடமையாகவே விடிந்திருக்கிறது.

ஆனால் ஒர் ஆண் தன் உழைப்பால் குடும்பப் பொருளாதாரச் சுமையை ஏற்று, அவர்களை வாழவைக்க வேண்டும் என்ற கடமை மட்டும், அவன் வசதிப்படி காற்றோடு விட்டுவிடலாம். சம்பாதித்ததைக் குடித்து அழிக்கலாம்; பெண் சுகம் தேடி பெண்ணின் மானம் அழிக்கலாம். அப்படி ஒரு தொழிலை ஆதரித்து, அவளை இழிகுழியில் தள்ளலாம். கட்டிய மனைவியை உதைத்து இம்சை செய்யலாம். பெற்ற குழந்தைகளைப் பிச்சையெடுக்க வைக்கலாம்; அல்லது விலைக்கு விற்கலாம்...

பெண், இந்நாள் பொருளாதரத் தற்காப்புக்காகவும் உழைக்கிறாள். பிள்ளைகள் படிப்புக்கும் அவளே உத்தரவாதம் ஏற்க வேண்டியதாகிறது. அவள் ஈட்டும் பொருளில், நுகர்பொருள் வாணிப அசுரன் மடிபிடித்துக் கொள்ளை அடிக்கிறான்.

அவள் உடலும் உள்ளமும் சோர்ந்து நொந்து நூலாகத் துவண்டாலும் நியாயங்கள் அவன் பக்கமே பேசபடுகின்றன.

For more ebooks visit: https://getmyebook.in/

“அவெ என்ன செய்யிவா, பாவம். வேல சரியாகக் கெடக்கல. புருச வாரப்ப முகம் காட்டாம சோறு போடுறாளா? சதா குடிக்கப் போறா குடிக்காத ஆம்புள எவ இருக்கா?..” என்று மூத்த தலைமுறைகள், வித்தாரம் பேசும். மனசுக்குள் இவள் புருசன் குடித்துவிட்டு வந்து உதைத்த நினைவு முட்டும். ‘அவளும் படட்டுமே?’ என்றுதான் நினைக்கிறாள்.

பெண் சமுதாயத்தின் பலவீனமே இவ்வாறு ஒருவரையொருவர் குதறிக் கொள்வதில்தான் நாளொரு வண்ணமும், பொழுதொரு வசைச் சொல்லுமாக நிலைபெற்றிருக்கிறது. அடித்தளத்திலிருந்து உயர்மாடி வரையிலும் இதில் வேற்றுமை இல்லை. எனவே ஆள்பவனின் மிருகபலம் அகிம்சையை நோக்கிப் பரிணாமம் பெறும் பேச்சுக்கே இடமில்லாமல் போகிறது. பாலியல் வன்முறைகளும் வரதட்சணைக் கொலைகளும் உயர்கல்விக்கும், வண்மைக்கும் எந்த ஒரு சமுதாயப் பரிணாம உயர்வும் வந்துவிடவில்லை என்றே காட்டுகின்றன. கல்விச்சாலைகளில் அதிகார உயர்பீடங்களில் நாம் நம்பிக்கை இழந்து கொண்டிருக்கிறோம். அதுவும் சமுதாய ஒழுங்கைக் காக்கும் காவல்துறை ஆள் வன்முறைக்கு எடுத்துக்காட்டான பிம்பமாகப் படிந்து போயிருக்கிறான், இருக்கிறாள் என்றும் சொல்லாம். இதற்குக் காரணம், தொலைக்காட்சிகளில் அன்றாடம் விவரிக்கப்படும் காட்சிகளாகவும் இருக்கலாம். முந்நாட்களில் தாயார், “அதோ போலீசுக்காரன் வரான், அடம் புடிக்காம சாப்பிடு” என்று பயம் காட்டுவார்கள். அந்தத் தாயே போலீசை அறிந்திருக்கமாட்டாள்.

For more ebooks visit: https://getmyebook.in/

‘பூச்சாண்டி’ என்ற சொல்லைப் போல் அச்சுறுத்தும் சொல்தான் அது. ஆனால் பூச்சாண்டி பயம் விலகி பூச்சாண்டிகளை நேர் கொள்ளும் நிலைக்கு இந்நாளைய மக்கள் தள்ளிவிடப் பட்டிருக்கிறார்கள். இந்த ஜனநாயகத்தில், அவர்கள் காவலர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. ‘குண்டாந்தடி அடக்கு’க் காவலர்களாகவே திகழ்கிறார்கள்.

தண்ணீரிலிருந்து எங்கோ திசை மாறிவிட்டேனா?

இல்லை.

இந்நாட்களில் சென்னை மாநகர வீதிகளில் சாலைகளில் குடிநீர் லாரிகள் ஒருவகை யமதூதர்களாகத் தங்களை மெய்ப்படுத்திக் கொண்டாலும் பெண்களுக்கு உயிர்நாடிகள், உயிர் காக்கும் தெய்வங்கள். இந்த நெடுநகரில் பூக்கட்டியும் பலபல சிறு தொழில்கள் செய்து பெரிய வீடுகளில் சீமாட்டிகளுக்குத் துணி துவைத்து, அழுக்கு மலங்கள் துடைத்து, ஏவல்கள் செய்தும், வயிறு பிழைக்க வரும் குடும்பக் கொத்துகள் பதுங்க, எலி வளைகள் போன்ற பொந்துகள் உண்டு. இவர்களுக்கெல்லாம் குடித்துவிட்டு வரும் கணவன்மார்களுக்கும், பிற ஆண்களுக்கும் சோறு வடித்துக் கொட்ட தண்ணீர் சுமந்து வீடுகளுக்குக் கொடுக்கும் தொழில் பொருளாதாரம் தருகிறது. இவர்கள் குடியிருந்து புழங்கும் தெருக்களில் சில சமயங்களில் ஈர்க்கு நுழைய இடமில்லாமல் பளபளக்கும் கார்களும் ஏனைய வண்டி வாகனங்களும் அணிதிரண்டு நிற்கும். பெரிய சாலையில் ஆட்சி முதல்வரோ வேறு ஆட்சி

For more ebooks visit: https://getmyebook.in/

பீடப் பெருமகனோ முன்னும் பின்னும் ஊளையிடும் எச்சரிக்கைகளுடன் செல்வார்கள். முன்பெல்லாமானால் யார் யாரோ போராட்டக்காரர்கள் போக்குவரத்தை மூச்சைப்பிடித்து நிறுத்துவார்கள். இப்போதெல்லாம் அந்தப் பேச்சுக் கிடையாது. சட்டம் ஒழுங்கு நிலை நிறுத்தப் பெறுகிறது.

குடிநீர் யமன்கள் தம் நீண்ட சரீரங்களுடன் நிற்க முடியாமல் அவதிப்படும் இப்படி ஒரு சந்தி மூச்சுத் திணறலில் ஆகாசக் கருப்பு, நாகாத்தம்மன், யேசுநாதர், மாஷா அல்லா என்ற மதநல்லிணக்கம் பேசிக் கொண்டு முடங்கும் பாரவண்டிகள், இடைஇடையே எங்களுக்கில்லாத சாலையா என்று பளபளக்கும் புத்தம் புது வண்டிகளின் சொகுசுகள் முகம் சுளிக்க, தேர்தல் பிரசாரத்துக்கு சமத்துவ வாக்குகளை அள்ளி வீசும் பரபரப்பில் துடிக்கும் வெள்ளைகள் என்று நிற்க, சமத்துவப் புழுதி தன் மதச்சார்பற்ற இந்தியத் தன்மையால் எல்லா வாகனங்களையும் போர்த்தி கவுரவிக்க ஒருபுறம் இடுப்பில் ஏறிய ஆரஞ்சு வண்ண நிறைகுடநீருடன் ஒரு பெண் உள்ளே புகுந்து மறுபுறம் வரலாமா என்று கண்ணோட்டமிடுகையில் எதிர்பாராதது நிகழ்கிறது. எதிர்ப்புறப்பொந்து வாயிலில் நின்ற ஒரு மூன்று வயதுப் பிஞ்சின் கையில் இருந்த மிட்டாய் வழுக்கி எட்டி நின்ற ஏதோ ஒரு சக்கரத்தடிக்குப் போகிறது. பிஞ்சு இடுக்குகளில் புகுந்து, கையால் துழாவுகையில் ஏக உறுமல்களுடன் தடைப்பட்ட சுவாசங்கள் அசைந்து நகர, “யம்மா, யம்மா, புள்ள புள்ள!” என்று கூக்குரல்களில் குடத்தோடு இடையே புகுந்த பெண்ணின் குடம் சரிந்து நீர்

For more ebooks visit: https://getmyebook.in/

அனைத்தும் புழுதியைக் குளிப்பாட்ட, ஒரே கூச்சல். ஒரு காக்கிச் சட்டைப் போலீசு, பிஞ்சுக் குழந்தையை அலக்காக மீட்க, இரத்தக்களேவரம். கேசு எல்லாம் தடுக்கப்பட, சுபம், சுபம்

ஆனால், போலீசுக்கு வந்த வேட்டை போயிற்றே?

“என்னம்மா நீ? புள்ளய அங்கிட்டிருந்து கூப்புடுற? இப்ப நா எடுக்கலன்னா இன்னாவுது? நசுங்கிச் செத்திருக்குமே?” இவளோ, குடத்து நீர் சரிந்த இழப்பில் கப்பல் கவிழ்ந்த பிரலாபத்தைத் தொடங்குகிறாள்.

“சரி, சரி, புள்ளய பத்திரமாகக் குடுத்திட்டேன். எதுனாச்சும் குடுத்தனுப்பு. இந்நேரம் சட்டினியாயிருக்கும் அது.”

புள்ளையோ மிட்டாயை இழந்த துக்கத்தில் பெருங்குரலெடுத்து அழுகிறது.

தாயார்க்காரி, அதன் முதுகில் இன்னும் நாலு சாத்துகிறாள். “யோவ் நீயாரய்யா புள்ளயக் காப்பாத்துறது? இது பொட்டக் கயித. எவனையாயினும் இட்டுகினு போகும். அவ குடிச்சிட்டு வந்து ஒதிப்பா. இது செத்திருந்தா ஒயிஞ்சிதின்னிருப்பே. எதாலும் கேசு போட்டு காசு வாங்கலாம். உன்ன யாரு இங்க வரச்சொன்னது! அங்க தண்ணிடாங்கு கிட்ட முடியப் புடிச்சுக்கிட்டு சண்ட வலிச்சி இந்நேரம் பண்ணிட்டாளுவ அதுவும் பாயாப் போச்சி. உனுக்கு அங்க நின்னு இவ்வளுவுவ கொட்டத்த அடக்க பவுசில்ல. இங்க வந்து புள்ளியக் காப்பாத்திட்டன்னு துட்டு வேற கேக்குற அங்க போயி நில்லு!”

For more ebooks visit: https://getmyebook.in/

குடம் நசுங்கி இனி உபயோகமில்லை என்று செப்புகிறது. மீண்டும் பொட்டக்கயிதக்கு அடிகள் விழுகின்றன. ‘காவல்’ அங்கிருந்து நகருகிறது.

மகளிர் தினம் வாழ்க !

**‘தினமலர்’ பெண்கள் மலர்**
**மார்ச் 27, 2004**

For more ebooks visit: https://getmyebook.in/

# 9. மாதா-பிதா-குரு

இன்று குழந்தைகளாக இருப்பவர்களே, நாட்டின் நாளைய எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றனர். இவர்களுடைய உடல் ஆரோக்கியம், கல்வியறிவு, செயலாற்றும் திறன் ஆகிய செல்வங்களை ஒருங்கே பேணி வளர்ப்பதில்தான், நாட்டின் மனித வள ஆற்றலுக்கான அடிநிலை அமைகிறது. இதைக் கருத்தில் கொண்டுதான் அன்றைய பாரதப் பிரதமர் நேருவிலிருந்து இன்றைய குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் வரை, பல்வேறு தளங்களில் குழந்தைகளுக்கு ஊக்கம் அளித்து செயல்பட்டு வருகின்றனர்.

குழந்தை, தாயின் கருவில் இருக்கும்போதே அறிவு பெறத் தொடங்கிவிடுகிறது என்று உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

தாயின் உயிர்நாடியுடன் பிணைந்து கருவாக வளர்ச்சி பெறும்போது, தாயின் மன, உடல் நலங்களை அது சார்ந்து உள்வாங்கிக் கொள்கிறது. இதனாலேயே கருவுற்ற பெண்கள் அமைதியுடனும் மனநிறைவுடனும் இருக்க வேண்டும் என்பதற்கான சடங்குகள் மரபு வழிப்படுத்தப்பட்டன. தாயின் கருவறையில் இருந்து வெளி உலகுக்கு வந்து தொப்புள்கொடி துண்டிக்கப்பட்ட பின்னும் இப்பந்தம் வேறாகிவிடுவதில்லை. மார்பகம் சுரக்க, சேய்க்கு அமுதூட்டுகிறாள் தாய்.

For more ebooks visit: https://getmyebook.in/

வெகுநாட்களுக்கு முன் ஒர் உளவியல் மருத்துவர் எழுதிய கட்டுரைத் தொகுப்பொன்றைப் படித்தேன். ஒரு சேய் பிறந்து பத்து நாட்களுக்குள் மனிதக் குணஇயல் படிந்துவிடுமாம். சேயின் முதல் உணர்வு பசிதான். உடன் உணவுத் தேடல். சரியான பசி நேரத்தில் அதற்கு அமுது கிடைக்க வேண்டும். சில நொடிகள் தாமதமாகி, பசியுணர்வு விஞ்சிவிட்டால், சேயின் குடலில் இருந்து மலம் இயல்பாக வெளியேறாதாம். பசி உணர்வே தெரியாமல் அடிக்கடி அமுதூட்டுவதும், சீரணத்துக்கு உகந்ததன்று என்பது மட்டுமின்றி, அந்தக் குழந்தை பொறுப்பற்ற ஊதாரியாக உருவாகக் காரணமாகுமாம். ஒரு மனிதனின் முழு குண இயல்பும், ஐந்து வயதுக்குள் அமைந்து விடுவதாக விளக்கியிருந்தார். உணவுக்கான பசி, தேடல், உடனே கிடைத்துவிடுதல் என்ற மூன்று அம்சங்களும் தேவை. திறன், நம்பிக்கை என்று வாழ்வை நிர்ணயிக்கின்றன. எனவே இந்தப் பருவமே மனிதவள ஆற்றல் என்ற நோக்கில் மிக முக்கியமாகிறது.

நாடு சுதந்தரம் பெற்ற இந்த 57 ஆண்டுகாலத்தில் தாய், சேய்நலம் சார்ந்த சிறப்புத் திட்டங்கள் நெறிப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த பாரத சமுதாயம் வேறு. மிகப் பெரும்பான்மை மக்களுக்கு அறிவுக்கண் மலர்ச்சியே மறுக்கப்பட்டிருந்த காலம் அது. இன்றைய அறிவியல் சாதனைகள், அந்நாளைய அறிஞர் பெருமக்கள் கனவுகளாகக்கூடக் கண்டிராதவை. மூன்று வயதில் கணினி - தொழில்நுட்ப

For more ebooks visit: https://getmyebook.in/

அறிஞர்களாகவும், இசை மேதைகளாகவும், இலக்கிய வித்தகர்களாகவும், பொது அறிவுக் கருவூலங்களாகவும், நீச்சல் போன்ற விளையாட்டில் சூரர்களாகவும் திகழ்வதை இன்று நாம் அன்றாடம் செய்திகள் வாயிலாகவும் நேரிலும் கண்டும் கேட்டும் வியக்கிறோம்.

மனிதவள ஆற்றல் என்பது எல்லாக் குழந்தைகளிடமும் சாம்பலுள் பொறி போல் உயிர்த்திருக்கிறது. அதை ஊதி, ஒளிவிளக்காக்கி, சமுதாயத்தில் மீண்டும் இருளைப் போக்கி மனிதப் பண்புகளை மலரச் செய்கிறோமா அல்லது வேறு வகையில் அப்பொறிகள் ஊக்கப்படுத்தப்படச் சூழல்கள் அமைகின்றனவா என்பதுதான் முக்கியம். இன்றைய வணிகச் சூழல் பணத்தையே இலக்காக்கியிருக்கிறது.

இன்றைய தாய்... அவளுக்கே அவள் தொலைந்து போனவளாக, பெரும்பாலும் 'மம்மி' என்ற குரலுக்கு விடையளிக்க வேண்டியவளாக இருக்கிறாள். காலத்தின் கட்டாயத்தில் பொருளாதாரம் சார்ந்த வசதித் தேவைகளுக்காக அன்றையத் தாய் தொலைந்து போனாள்.

அந்நாட்களிலும் உழைப்பாளித் தாயார் இருந்தனர். முற்றத்தில் சாணம் தெளித்துத் தூய்மை செய்தபின் பழங்கஞ்சியைக் குடித்து விட்டுப் பால் குடிக்கும் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வயலுக்குப் போவாள். பிள்ளை மரக்கிளையில் பழைய சீலைத் தொட்டிலில் கிடக்கும். அதற்குப் பசி எடுக்கும் நேரம் அறிந்து வந்து அமுதூட்டுவாள். பிள்ளைகளோ,

For more ebooks visit: https://getmyebook.in/

பெண்களோ, திறந்தவெளிகளில் மண்ணில் இஷ்டம் போல் விளையாடி மகிழ்ந்தார்கள். ஆடு மாடு மேய்த்த காலங்களில் கண்ட கனவுகளில்கூட தாய் அருகில் இல்லை என்ற வெற்றிட உணர்வுக்கு இடமிருந்திருக்கவில்லை. திருவிழாக் காலங்களில் வறுமையில் மலர்ந்த பொட்டுக்கடலை மிட்டாயும், ரோஸ்ரிப்பனும் ஊதாங்குழலும் பெருநிதியம் கிடைத்த மகிழ்ச்சிச் சிறகுகளாய் விரியும்.

இந்நாட்களில் அந்தக் குழந்தைப் பருவங்கள் எங்கொழிந்தன? அம்மாவின் வயிற்றில் கரு உருவாகும் போதே போராட்டம் தொடங்கிவிடுகிறது. இது, பெண்ணா, பிள்ளையா? தாய் வெளிக்குத் தெரியாமல் உருகி அலைபாய்கிறாள். பொருளாதார வாய்ப்புகளையும் வசதிகளையும் முன்னிறுத்தி, முதல் பேற்றையே தள்ளிப்போட கருக்கலைப்பு இந்நாட்களில் அசாதாரணமன்று. மக்கள் பெருக்கக் கட்டுப்பாடு இன்றியமையாத ஒன்றுதான். ஆனால், அது முதல் பலியாக வாங்கியவை தாய்மைக்குரிய அகப்பண்புகள்தாம். திட்டமிட்டு ஒன்றோ, இரண்டோ பெற்றாலும், பாலூட்டிச் சீராட்டி வளர்க்க நேரம் எங்கே? பிள்ளைகளோ காப்பகக் கூண்டுகளிலும் பின் மழலைப் பள்ளிகளிலும் தாயின் நெருக்கமான உயிர்சூட்டைக் கனவு காண்கிறார்கள். தாய்மொழி பழகாத சூழலில் அன்னியப்படும் ‘பிஞ்சு, மம்மி எனக்கு ஒருநாள் லஞ்சு எடுத்திட்டு வரியா?’ என்று கேட்டுத் தாயை வேதனைப்படுத்தும். இந்த வளர்ப்பில், பொறுப்பை அநேகமாக ‘பிதா’ கண்டு கொள்வதே இல்லை.

For more ebooks visit: https://getmyebook.in/

அநேகமாக மழலைப் பள்ளிகளில் ஆசிரியைகளே கற்பிப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்கள், பிள்ளைகளின் உள்ளங்களில் எத்தகைய பண்புகளை - பண்புகள் சார்ந்த பிம்பங்களைப் பதிக்கின்றனர்? சலுகைகள், ஒருபக்க நீதிகள் எல்லாம் பிள்ளைகளுக்குள் போட்டி, பொறாமை உணர்வுகளை உசுப்பிவிடுவதும் நடப்பியல் உண்மைகள். இந்த 'மிஸ்'கள் நூற்றுக்கு நூறு ஆசிரியைகளா? இருக்க முடியாது. திருமணமாகு முன் கிடைக்கும் வேலையைப் பற்றிக் கொள்வது என்ற கோணத்தில் பார்க்கலாம். அதிகம் அலைச்சல் இல்லாமல் கிடைத்த பள்ளி வேலை. முதிர்கன்னி நிலை திணிக்கப்பட்டதால் வேறு வழியில்லாமல் இப்படி ஒரு பணி. திருமணமான பின் ஆசிரியப் பொறுப்பை நிரந்தரமாக்கிக் கொண்ட பெண்களிடமும் இந்தப் பிள்ளைகளை உருவாக்கும் மாதிரிப் படிமங்களைப் பெரும்பாலும் காண முடியாது. அவள் சொந்த வீட்டை, தாய்மைப் பொறுப்பை குடி தண்ணீர், தோசைமா, காய்கறி, போன்ற சில்லறைக் கடன்கள் சுமத்தும் அழுத்தங்களை நினைத்துக் கொண்டே பணியாற்ற வேண்டும். இதில் அரசுப் பள்ளிகளானால் அதிகாரிகளின் கெடுபிடிகள், மாற்றல் உத்தரவுகள் போன்ற கிடுக்கிப் பிடிகளும் உண்டு. தனியார் பள்ளிகளில் வணிகச் சூழல்; எல்லா வசதிகளும் குறைவு. மழலை தாண்டிய பருவப் பிள்ளைகளுக்குத்தான் ஆண் ஆசிரியர்கள் கற்பிக்க வருகிறார்கள். இந்த வளர் பருவ மாணவர்களுக்கு பள்ளிக்கு வெளியே கவர்ச்சிகள் அதிகம். ஒன்பதாம் வகுப்பு மாணவன் மதுவருந்திவிட்டு, வகுப்புக்கு

For more ebooks visit: https://getmyebook.in/

வந்தால் ஆசிரியர் என்ன செய்வார்? அது அவனுக்கு ஜனநாயக உரிமை!

வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்வாதாரத் தேவைகளுக்காக நெருங்கி மிதிபடும் குடும்பக் குழந்தைகளுக்குத் தான் ‘பிதா’ என்ற மொத்தையான பிம்பம் மனத்தில் பதிகிறது. இவன் அன்றாடம் குடித்துவிட்டு வந்து, உழைத்துப் போடும் தாயை அடிக்கிறான். ஆண் குழந்தைக்கு அவனுடைய ‘பவர்’ மனத்தில் பதிகிறது. அவனும் குடிக்கலாம்; அடிக்கலாம்; திட்டலாம். பெண் குழந்தை ஆணின் எந்த ஆதிக்கத்துக்கும் புழுவாக மிதிபட வேண்டும் என்று உணர்ந்து கொள்கிறது. கேள்வி கேட்கத் தெம்பில்லாதவளாக உழைக்க வேண்டும்.

இத்தகைய சூழல்களில் இருந்தே பல்வேறு களங்களில் தங்கள் மனிதவள ஆற்றலை நல்க, நல்ல சமூகத்துக்கு அன்னியப்படும் வன்முறைகள் பழக, ஒடுக்கல்களுக்கு உட்பட குழந்தைகள் மலர்ச்சி பெறுகிறார்கள்.

**‘தினமணி’**

**13.11.2003**

For more ebooks visit: https://getmyebook.in/

## 10. பெண்களும் குழந்தைகளும்

(நுகர்வுக் கலாச்சாரத்துக்கு தீனி போடும் இலக்குடன் இன்றைய பெண்கள் தங்கள் மகத்தான இல்லப் பங்களிப்பை அலட்சியமாகக் கருதுவது சரிதானா என்ற ஒரு மறுபரிசீலனை மேற்கொள்வது எனக்கு இச்சமயம் அவசியமாகப்படுகிறது. இந்த நோக்கில் காந்தியடிகளின் கருத்தும் அறிவுரையும் தீர்க்கதரிசனங்கள். இதைக் கருத்தில் கொண்டு இதை எழுதுகிறேன்)

காலை ஏழு மணி, இளங்குழந்தைகள் இருக்கும் குடும்பங்களுக்கு நெருக்கடி நேரம் கூட்டுக் குடும்பங்கள் உடைந்து தனித்தனியாக அடுக்குமாடிப் பொந்துகளிலும், கூடம், தாழ்வரை ஒன்றாங்கட்டு, இரண்டாங்கட்டு என்று இன்னமும் புறநகர்ப்பகுதிகளிலும் எஞ்சியிருக்கும் புராதன வீடுகளிலும் சிதறிப் போன பிறகு, நெருக்கடிகளுக்கும் இரைச்சல்களுக்கும் மோதல்களுக்கும் எல்லோரும் பழகிப் போயிருக்கிறார்கள். ஒற்றைக் குடும்பங்களில், தந்தையும் தாயும் பொருள் தேடப் போகிறார்கள். இருவரும் இல்லம் விடுவதானால், கைக்குழந்தையில் இருந்து, மழலைப் பள்ளிக்குப் போகும் பிஞ்சுகளையும் தயார் செய்தாக வேண்டும். தண்ணீர் பிரச்னை, குளியலறை பிரச்னை, உணவு தயாரிக்கும் சங்கடங்கள் எல்லாவற்றுக்கும் மேல், மழலைப் பள்ளிகளுக்குச் செல்லும் இரண்டுங் கெட்டான்களுடன் போராடும் குரல்கள் அக்கம் பக்கங்களில் வந்து மோதும்.

For more ebooks visit: https://getmyebook.in/

‘சனியனே? பாலைக் குடி! மணி எட்டுடா? வேன் வந்துட்டுப் போயிடும். அன்னாடம், ஆட்டோவுக்கு அழ முடியாது...!’

அழும்பு, அடம்!...

‘டேய், குடிடா, நேரமாயிடுச்சில்ல...?’

சாமதான பேதங்களுக்கு மசியாத பிஞ்சின் முதுகில் அடிவிழும். வலுக்கட்டாயமாகப் பாலைக் கொடுக்க, துப்பியோ வாந்தி எடுத்தோ ரகளை கிளம்பும். மேலும் அடிகளுடன் சொற்களையும் கடித்துத் துப்பிக் காயப்படுத்துவார் அன்னை ஒருவழியாகப் புத்தகமூட்டை, பகலுணவுக்கான டப்பி, தண்ணீர்க் குப்பி இவற்றுடன் தரதரவென்று சாலையில் வந்து நிற்கும் வண்டிக்குள் திணிக்க இழுத்துச் செல்வார்கள். இடையில் சனி-ஞாயிறு விடுப்புகள் வந்துவிட்டால், குழந்தை அந்த சுகத்தை அநுபவித்துவிடும். திங்கட்கிழமை மனசிக்கலில், பிரளயமே வெடிக்கும்.

குழந்தையின் வளர்ச்சி, இயல்புக்கேற்ற ஆரோக்கியத்துடன் நிகழ இன்றைய சூழல் அநுமதிப்பதில்லை. தாய்ப்பால், தாய்மடி, தாய்மொழி இவை பல குழந்தைகளுக்கும் வலுகட்டாயமாக அந்நியமாக்கப்படுகின்றன. தன் பணிச் சுமையிலிருந்து விடுபட இயலாத பெரும்பாலான தாய்மார், உள்ளே குற்ற உணர்வுகளாலும் பாதிக்கப்படுகிறார்கள். காலையில் இருந்து இரவு பத்து பத்தரை மணி வரையிலும் இல்லம்விட்டு வெளியே தொழில் செய்யும் ஒரு மருத்துவர் தம்பதியின் குழந்தைகள், ஆயா, சமையற்காரி போன்ற ஊதியத்துக்குப் பொறுப்பேற்கும் பெண்களிடமே

For more ebooks visit: https://getmyebook.in/

வளருகின்றன. இந்தக் குற்ற உணர்வை மாற்றிக் கொள்ள அன்றாடம் இரவு வீடு திரும்புகையில் குழந்தையின் உடல்நலத்துக்குத் தீமை பயக்கும் என்று உணர்ந்தும், அவன் விரும்பி உண்ணும் ஐஸ்கிரீம், சாக்லேட் போன்ற பண்டங்களை வாங்கி வந்து, உறங்கினாலும் எழுப்பிக் கொடுத்து, முத்தமிட்டு ஆறுதல் பெறுகிறாள் தாய்.

காலையில் சாலையில் மோதும் வாகன நெருக்கடிகளில், நூற்றுக்கணக்கில் நம் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய மழலைகள் அடைப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

தாயும் தந்தையும், தங்கள் வாழ்க்கையையே பணயம் வைத்துப் பொருளீட்டி, இந்தப் பிஞ்சுகளின் இளம் பருவ இனிமைகளைக் கொள்ளையடிக்கும் குரூரமே மழலைக் கல்வி, சிறார் கல்வி என்ற பெயரில் நாற்பது ஐம்பது ஆண்டுகளாக இங்கே நடைபெற்று வருகிறது. ஒற்றையடித் தடங்களுக்கப்பால் ஒளிந்திருக்கும் கிராமங்களைத் தேடிச் சென்று பேருந்துத் தடமமைத்து அதிகாலையில் பிஞ்சு நெஞ்சங்களை அதிர வைக்கும் குழலொலியுடன் வந்து, பிஞ்சுகளை அள்ளிச் செல்லும் தீப்பெட்டித் தொழிற்சாலை வண்டிகளுக்கும் இவற்றுக்கும் அதிக வித்தியாசமிருப்பதாகத் தெரியவில்லை.

அங்கே பிள்ளைகள் கையில் தூக்குப் பாத்திரத்துடனும், பதிவுச் சிட்டையுடனும் திரும்பி வரும்போது தகப்பன், அதில் எத்தனை பதிவாகி இருக்கிறதென்று பார்ப்பான்.

For more ebooks visit: https://getmyebook.in/

இங்கே தாய், முன்னிரவில் பிள்ளையின் நோட்டைத் திறந்து பார்க்கிறாள். ஹோம்வொர்க் பூதம், பிள்ளையின் அறிவுத்திறனைத் தெரிவிக்கும் ‘மார்க்’குகள் என்று கண்காணிக்கிறாள். பெரும்பாலும் ‘டியூசன்’ என்று இன்னும் ஒரு மணி நேரம் சிறைச்சாலைக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

குழந்தைக்கு மலச்சிக்கல், மனச்சிக்கல் இருக்கிறதா, உணவு கொண்டு மகிழ்ச்சியுடன் விளையாடுகிறதா என்ற கவனம், பிள்ளை மற்றவர்களைவிட ‘மார்க்குகள்’ எடுத்து சாதனையாளனாக வளர வேண்டுமே என்ற ஒரே இலக்கில் அடிபட்டுப் போகிறது. மீறும்போது, பிள்ளைக்கு உடம்பு சுடும்; தலைவலி, வாந்தி, கவனக்கோளாறு எல்லாம் சேரும். அப்போது அலறிப் புடைத்து மருத்துவரிடம் கொண்டு செல்வார்கள். பரிசோதனைகள், மருந்துகள், ஃபீஸ் என அது தனிக் கொள்ளை.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வளரும் பிள்ளைகளைப் பற்றிச் சொல்ல வேண்டாம். அரசுப் பள்ளிகள் தனி ரகம். இந்தக் குடும்பங்களில் பிஞ்சுகள் விளைந்து பலன் கொடுப்பது அபூர்வம். இப்போதெல்லாம் இந்த இடங்களில் இருந்து, ஐ.ஏ.எஸ், கைவினையாளர் என்று பத்திரிகைகளில் பிரபலமாகுமளவுக்கு வருகிறார்கள். என்றாலும், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள், அரைகுறை வளர்ச்சியை எட்டு முன்பே ‘டிராப் அவுட்’ என்ற கணக்கைப் பெருக்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

பொன்விழாக் கண்டுவிட்ட இந்தக் குடியாட்சியின் குழந்தைகளையும் நடப்பியலையும் பார்க்கும்போது,

For more ebooks visit: https://getmyebook.in/

முந்நாள் சோவியத் நாட்டில் நான் கண்ட குழந்தைக் காப்பகங்கள், மழலைப் பள்ளிகளைப் பற்றிய நினைவு வருகிறது. 1976, 1979, 1983 என்று மூன்று முறைகள் நான் சென்றபோது, ‘குழந்தைகளே நாட்டின் எதிர்காலம்’ என்ற வாசகம் எங்கு திரும்பினாலும் கவர்ந்தது. குழந்தைகள் ஆண்டில் இந்த வாசகம், மிக அதிகமாக ஒடும் ஊர்திகளிலும்கூட இருந்தன. இங்கேயும் இத்தகைய வாசகங்களுக்குப் பஞ்சமில்லை. “பெண்ணுக்குத் திருமண வயது 21” என்று எழுதப்பட்ட ஆட்டோ வாகனத்தை ஒட்டுபவனுக்கு 20 வயது இருக்காது. அவன் ஒரு 15 வயதுப் பெண்ணை மணந்து ஒரு மகவுக்குத் தாயாக்கியும் இருப்பான். இங்கு நடப்பியல் வேறு; எழுத்து வாசகங்கள் வேறு. நான் சென்ற ஒவ்வொரு தடவையும் அங்கே, பல இடங்களில் பல குழந்தைப் பள்ளிகள், அவற்றோடு இணைந்த சேய் காப்பகங்களையும் கண்டேன். அநேகமாகத் தாய்மார் எல்லோருமே வேலைக்குச் சென்றார்கள். வேலைக்குச் செல்வதனால் குழந்தைகளைக் கவனிக்க முடியவில்லையே என்ற குறை இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் குழந்தைகள் நாட்டின் செல்வமாகக் கருதப்பட்டார்கள். தாயும் தகப்பனும் பிள்ளையைத் தூக்கிச் சென்று அருகாமையில் இருந்த காப்பகப் பள்ளியில் விட்டுவிட்டுச் செல்லும் காட்சி மிக இயல்பாக இருந்தது. கூடுவண்டி, தள்ளுமுள்ளு எதுவுமே இல்லை.

இந்தப் பள்ளிகளுக்குள் நுழைந்தால், அற்புதக் காட்சிகளே விரியும். ஏழை, பணக்காரர் என்ற

For more ebooks visit: https://getmyebook.in/

நிலையோ, சீருடைச் சமாசாரங்களோ இல்லாத சுதந்தரங்கள். விரிந்து பரந்த பூங்காவாக, மண்ணில் விளையாட ஆசையுடன் நடப்பதற்கு உகந்ததாக, நீரில் விளையாடக்கூடிய சிறு நீச்சல் குளங்களுடன் இருந்தன. இங்கே பணிபுரிந்த அன்னையர், செவிலியர், மருத்துவம் பயின்றவர், மழலைக் கான ஆடல்பாடல்களில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் ஆகியோர். ‘விருந்தினர் வருவதாக’ முன்கூட்டி அறிவிப்பு எதுவும் செய்திராத நிலையில்தான் நானும், மற்ற இரு பெண்களும் சென்றோம். சிரிப்பும், பாட்டும், களிப்பும், நாணமும் தயக்கமும் தவிர எந்தக் கடுமையையும், எங்கும் பார்க்கவில்லை. ஒரு காப்பகப் பள்ளியில் கட்டிடத்துக்குள் சென்று, பல்வேறு விளையாட்டுச் சாதனங்களுடன் ஆடிக் கொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்தோம். அப்போது, இன்னொரு கட்டிடத்துக்குள் இருந்து அழுகுரல்களும், பாட்டொலியும் தாள ஒலிகளும் மென்மையாகச் செவிகளில் விழுந்தன. நான் அந்த வாயிலுக்குள் நுழைந்தேன். எட்டிப் பார்த்தேன்.

என் முகத்தைப் பார்த்ததும் ஒரு செவிலி விரைந்து வந்தாள். அவள் கையில் நம் சிப்ளாக்கட்டை மாதிரி, ஒரு தாளக்கருவி, மென்மையாக ஒலிக்கக்கூடியது இருந்தது. இன்னொரு செவிலி மென்மையான குரலில் பாடிக் கொண்டிருந்தாள். ஏழெட்டுக் குழந்தைகள் மலம் கழிக்கும் பீங்கான்களில் அமர வைக்கப்பட்டிருந்தன. நான் தடையானேன். இரண்டொரு குழந்தைகள் புதிதாகக் குரலெழுப்பின.

For more ebooks visit: https://getmyebook.in/

நான் இந்த இடையூறுக்கு மன்னிப்புக் கோரி வெளி வந்தேன்.

இத்தகைய சிறார் பள்ளிகளை மறக்க முடியவில்லை. இப்போது அந்தக் கட்டமைப்பு துண்டுதுண்டுகளாகி விட்டது. பெண்கள், தாய்மார், குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள் என்று தெரியாது. சாலைச் சந்திகளில் பிச்சையெடுக்கும் பிஞ்சுகளோ, காலணிகள் மெருகிடக் காத்திருக்கும் சிறாரோ தோன்றியிருக்கலாம்.

பல ஆண்டுகள் திட்டமிட்டு உருவாக்கிய அந்தக் குழந்தைகள் எத்தகைய எதிர்காலத்தைச் சாதித்து விட்டார்கள்; நம் நாட்டுக் குழந்தைகள் - இந்தியப் பிரஜைகள் எதைச் சாதிக்கவில்லை என்ற கேள்வி எழலாம். ஆனால் இங்கே உருவாகும் ஓர் ஒட்டு மந்தை அந்நாட்டில் உருவாவது சாத்தியமில்லை என்று தோன்றுகிறது.

**பாரதமணி**
**டிசம்பர், 2003**

For more ebooks visit: https://getmyebook.in/

# 11. வெறும் சாதனமா?

(நவம்பர் 25-லிருந்து டிசம்பர் 10 வரை பெண்களையும் சிறார்களையும் இலக்காக்கும் வன்முறை எதிர்ப்பாக ஐக்கிய அனைத்துலக நாடுகளின் ‘மகளிர் பட்சம்’, என்பதை நினைவுபடுத்தும் கட்டுரை)

“ஏதோ ஒரு சாதனம் கொடுக்கல் வாங்கல் என்று பரிவர்த்தனை செய்யப்படுவதுபோல் திருமணம் என்ற கேலிக்கூத்து, இளைஞர் (ஆண்கள்) பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டு முடிக்கப்படுகிறது. நவநாகரிகத்தில் பெண், அறிவு பெறும் வாய்ப்பு இருக்கிறது. முந்நாளைய மனைவி, அறியாமையும், பலவீனமான மென்மையுமாக ஏதோ ஒரு பிடிப்பில் இயங்கி வந்தாள். இந்நாட்களில் விழிப்புணர்வு, இதய அழகைப் பலி கொண்டுவிட்டது. திறந்த கண்களுடன் இருளில் நடக்கும் இரக்கத்துக்குரிய வெள்ளாட்டியாக (பணி மகள்) இருக்கிறாள். இது விநோதத் தலைமுறை. உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட தலைமுறை. பழைய மண்ணையும் புதிய வித்துக்களையும் ஏந்திய தலைமுறை. அறிவோடு விழிப் புணர்வும் மெல்லியலில் உறுதியும், செம்மை நெறியும் கூடிய ஆற்றலின் வடிவாகப் பெண் திகழ்வது எந்நாள்?” - மேற்கண்ட வாசகங்களுக்கு உரியவர் யார் என்று ஊகிக்க முடிகிறதா?

ஏறக்குறைய அமரகவி பாரதி, அண்ணல் காந்தி, ஆகியோரின் காலத்தில் வாழ்ந்த அராபிய தத்துவ வாதியும் கவிஞருமான கலில் கிப்ரானின் (1885 - 1931) வாசகங்கள் அவை.

For more ebooks visit: https://getmyebook.in/

பாரதி தம் கனவின் வடிவைக் கண்முன் காட்டி விட்டார். மூடக்கட்டுகளையும் மூத்த பொய்ம்மைகளையும் தகர்த்து, நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையுடன் திமிர்ந்த ஞானச் செருக்குடன் செம்மை நெறியில் புதுமைப் பெண் புத்தொளி பாய்ச்சுகிறாள். மனிதகுலத்துக்கான வாழ்வுப் பாதை, புதிய தெளிவும், நம்பிக்கையுமாக நிர்ணயிக்கப்படுகிறது. இந்தக் கவிக்கனவு மெய்ப்படவில்லை. மனித குலத்தைத் தோற்றுவித்து உருவாக்கி இயக்கும் மூலசக்தியே அவள்தான்.

அவள் அஹிம்சைத் தத்துவத்தின் மூலகாரணி என்று அண்ணல் காந்தி போற்றுகிறார். ஆணின் மிருக இச்சைகளுக்கு அவள் ஆட்படத் தன்னைப் பலவீனப்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று எடுத்துரைக்கிறார்.

தன்னை வீழ்த்த குரூரமிழைக்கும் கயவனின் வித்தையும் அவள் கருப்பைச் சுமக்கிறது. வெறிச் செயல்களை மேற்கொள்ளும் கயவர் இதை எப்போதேனும் எண்ணிப் பார்ப்பார்களா? தன் இயலாமையின் உச்சத்தில் பழி தீர்த்துக் கொள்ள, பெண்ணினத்தை நாடிக் குரூரங்களை அவிழ்த்துவிடும் பதர்கள், இந்த மண்ணில் நடமாடுவதற்கே உரியவர் அல்லர்.

காலம் காலமாக ஆண்வருக்கம் பெண்கள்மீது இக்கொடுமையை ஏவுகிறது; அழிக்க முற்படுகிறது.

தருமன் சூதில் தோற்றதும், துரியோதனன் பாஞ்சாலியைச் சபைக்கு இழுத்து வந்து மானம் பறிக்கச் செய்கிறான். அவள் அவைக்கு வரும்

For more ebooks visit: https://getmyebook.in/

நிலையில் இல்லை என்றுரைத்தபோதும், முடியைப் பற்றி துச்சாதனன் இழுத்துச் செல்கிறான். இது என்ன நீதி? தம்மை வைத்துச் சூதில் இழந்தபின் தாரமுடமை ஏது? என்று அவள் எழுப்பிய குரல் பெண்வருக்கம் அன்றும் இன்றும் என்றும் நம்பிக்கை கொள்ளும் துணிவுக் குரல்.

அவள் சேலை உரியப் பெற்றபோது, ஐந்து நாயகர்களும் கைவிட்ட நிலையில், கண்ணன் உற்ற தோழனாக வந்து உதவினான். பொருள் சார்ந்த பேராசைகளில் ஒருவரை மற்றவர் தாக்க, போர் அல்லது சாதி-மத சமூகக் கலவரங்கள் நிகழும்போது, அப்பாவிகளான பெண்களுக்கு குரூரங்கள் இழைக்கப்படுகின்றன. அதுவும், காக்கிச் சட்டையணிந்து காவலராகக் காக்க வேண்டிய கடமையில் இருப்பவரே கயவர்களாகி, குற்றங்களுக்குச் சம்பந்தமே இல்லாத பெண்களை வன்முறைகளுக்கு உட்படுத்துகின்றனர்.

நாடு துண்டாடப்பட்டபோது, மதத்தின் பெயரால் இந்தியத் திருநாட்டில் பெண்களுக்கிழைக்கப்பட்ட குரூரங்கள், வன்முறைகள், நினைக்கவே இரத்தம் சுண்ட வைப்பனவாக இருந்தன. காந்தியடிகள் மனம்நொந்து, அந்த இடங்களில் எல்லாம் தம் மலர்ப்பாதம் பதிய நடந்தார். அவருடைய உள்மனதில் பதிந்த அந்த இரணங்கள் இறுதிவரை ஆறவேயில்லை. “பெண்ணே உன் மானத்துக்கு ஊறு வரும்போது, நீ இம்சைச் செயலில் ஈடுபட்டு உன்னைத் தற்காத்துக் கொள்ளலாம்” என்று உரைத்தார்.

For more ebooks visit: https://getmyebook.in/

நேருக்கு நேர் திறமையால் மேநிலை எய்திய பெண்களுடன் வாதுகள் செய்யலாம்; வாளேந்திப்போரும் புரியலாம். ஆனால் இந்நாள் அவளுடைய மேம்பாட்டையும் மேநிலையையும் ஒப்புக் கொள்ளாத ஆதிக்கங்கள், குன்றேறி நிற்கும் கருவங்கள், மூர்க்கத்தனமான செயல்களில் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன.

உலகெங்கும் இந்தப் பாதகங்கள் நடைபெறுகின்றன. வளமையும் செல்வமும் மிகுந்த நாடுகளானாலும், போர்வெறி மூண்டுவிட்டால் அங்கே பலியாக்கப்படுபவர் குற்றமற்ற பெண்களும் குழந்தைகளும்தாம்.

இந்தியத் துணைக்கண்டத்தில், சுதந்திரம் பெற்று ஐம்பத்தாறாண்டுகளான பின்னரும், பொருளாதார, சமூக, சமத்துவம் என்பது அன்றைய நிலையில் இருந்து கிடுகிடுவென்று இறங்குமுகமாகி இருக்கிறது. காந்தியடிகள் ஏழு வகை அறங்களைக் குறிப்பிட்டார். இந்நாள் ஓர் இலக்கிலும் அறம் இல்லாத அதர்ம பரிபாலனங்கள் மக்களை வறுமையிலும் இயலாமையிலும், மிதமிஞ்சிய பொருள் குவிப்பு அதிகாரங்களிலும் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கின்றன. வன்முறை அட்டூழியங்கள் ஆண்டுக்காண்டு குறையவில்லை.

எட்டு ஆண்டுகளுக்கு முன் இந்த நிலையை, வருந்தத்தக்க உண்மை என்று ஒரு கட்டுரையில் விவரித்திருந்தேன்.

1. ஒவ்வொரு நாற்பத்தேழு நிமிடத்துக்கும் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறாள்.

For more ebooks visit: https://getmyebook.in/

2. ஒவ்வொரு நாற்பத்து நான்கு நிமிடத்துக்குமிடையே ஒரு பெண் கடத்தப்படுகிறாள்.

3. ஒரு நாளைக்குப் பதினேழு வரதட்சணைக் கொலைகள் நிகழ்கின்றன.

என்றெல்லாம் பட்டியலிட்டிருந்தேன். இந்த இடைப்பட்ட ஆண்டுகளில், பெண்களுக்கு விழிப்புணர்வும் தைரியமும் கொண்டு வர சட்டங்கள் நெறிப்படுத்தப் பட்டிருக்கின்றன. பெண் கிண்டல், வரதட்சணை ஆகிய குற்றங்களுக்கு எதிரான சட்டங்களும் மகளிர் காவல் நிலையங்களும் இவற்றில் குறிப்பிடத்தகுந்தவை.

சட்டங்களும், நெறிமுறைகளும், நீதிகளும் மகளிருக்கு உண்மையில் பயன்பட வேண்டும்; பயன்பட்டிருக்க வேண்டும்; மகளிர் மேம்பாட்டுக்காக நிறுவப்பட்ட பள்ளிகள், உயர் கல்லூரிகள், தொழிற் பயிற்சி மையங்கள் எல்லாம் சமுதாயத்தில் மகளிர் நிலையை உயர்த்தாமல் இல்லை. ஆனால் வன்முறைகளும், தற்கொலைகளும் கொலைகளும் அன்றாடம் நிகழும் அவலங்களாக விரிவது ஏன்?

பழைய மண்ணில் புதிய வித்துக்கள் என்பதுதான் முரண்பாடா?

இல்லையேல் புதிய வித்துக்கள், ஒளி வெள்ளத்தின் கவர்ச்சியில் இருள் திரளுக்குள் நுழையும் முரண்பாடா?

பெண்ணறிவு, மாந்தரின் பேராசைகளைத் துண்டுமா?

For more ebooks visit: https://getmyebook.in/

பொதுவாகவே எல்லாச் சமயங்களிலும், ஆணுக்கிருக்கும் பல உரிமைகள் பெண்ணுக்கு இல்லாமல் இருப்பது இயல்பாக இருக்கிறது.

காலம் காலமாக வளைந்து போன ஒரு கூனலை நிமிர்த்துவது சிரமம்தான். பெண்ணுக்குப் பெண் எதிரி என்ற கருத்து, மாமியார் - மருமகள் - நாத்தி - அண்ணி - இளைய தாரம் மூத்தவள் மக்கள் என்ற உறவுகளை, விரோதமாகவே நெறிப்படுத்தி வந்திருக்கிறது. கொடுமைகளுக்கு எதிரான சட்ட உரிமை, வழக்கு, தண்டனை என்ற பரிகாரங்கள், தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டால், நிலைமை இன்னமும் மோசமாகும்.

பழங்காலத்தில், வீட்டுக்குள் கொடுமை என்பது, கணவன் தாசி வீட்டுக்குச் செல்வதும், மாமியார் சொல்லாலும் செயலாலும் மருமகளை நோகச் செய்வதுமாக இருந்தன. அவளைத் தள்ளி வைப்பார்கள், பிள்ளைக்கு மறுமணம் செய்ய முயல்வார்கள். பணம், நகை கேட்பார்கள். ஆனால், காலக்கிரமத்தில், அதிகபட்சமானாலும் மாற்றங்கள் வரும். மனம் திருந்தவும், விட்டுக் கொடுக்கவும், சந்தர்ப்பங்கள் இருந்தன. மூத்தாள் இளையாள் மகளைக் கொலை செய்தாள், விபசாரத்துக்கு விற்றாள், மாமியாரும் நாத்தியும் எரிவாயுவைத் திறந்து விட்டுக் கொலை செய்தார்கள் என்ற கொடுமைகள் இவ்வாறு இறைபடவில்லை. சமுதாயத்தின் வறிய மட்டங்களில் உழைப்பாளியான புருசன் குடித்துவிட்டு, குடிவெறியில் மனைவியை அடிப்பான். ஆனால், இன்று கல்லூரியில் தங்கப் பதக்கங்கள் பெற்று உயர்தொழில் செய்யும்

For more ebooks visit: https://getmyebook.in/

கணவன், மனைவியைக் கொல்கிறான்; குழந்தையைக் கொல்கிறான்; சிகரெட் துண்டால் அவள் மேனியைச் சுடுகிறான்.

வீட்டுக்குள் நிகழும் கொடுமைகளுக்குச் சட்டங்கள் பயனளிக்குமா? எப்படியும் மாமியார் மீது அந்தப் பழி விழுந்து அவளைச் சிறைக்குள் தள்ளுவது பெண்ணுக்கு வெற்றியாகுமா?

பொய்க் குற்றங்களும் இலஞ்சங்களும் அநீதிகளும் மலிந்து போன (சாராய) சமூக நடவடிக்கைகளில் மீண்டும் மீண்டும் பெண்மீதே குற்றங்களும் தண்டனைகளும் விடியாதென்பது என்ன நிச்சயம்? பெண்ணுக்கு எதிரி பெண்ணே என்ற திசை திருப்பல் தவிர்க்கப்பட வேண்டும். கொடுமைகளின் மூலம் எங்கே என்பது கண்டறியப்பட வேண்டும்.

இன்றைய விபரீதங்கள், வணிக ரீதியாக, ‘பெண்’ணுடல் சந்தைப்படுத்துப்படுவதில்தான் வேர் கொண்டிருக்கின்றன. கலை, இலக்கியம், கல்வி, தொழில், அரசியல் எல்லா கூறுகளிலும் இந்த அபசுர நிழல், நம்மையறியாமலேயே படர்ந்து வந்திருக்கிறது. காட்சி ஊடகங்கள், மக்கள் தொடர்பு சாதனங்களாகிய பத்திரிகை, வானொலி ஆகிய எல்லாவற்றிலும், வாணிகப் பொருளாகப் பெண் அவளையறியாமலேயே மாற்றப்பட்டிருக்கிறாள்.

பொருள், வாழும் வசதி என்று நுகர்பொருள் சந்தையில் அவளே சந்தைப்பொருளாக, மாடலிங், கவர்ச்சி என்ற இருளுக்கு இழுத்துச் செல்லப்படுகிறாள்.

For more ebooks visit: https://getmyebook.in/

உருகி உருகி தெய்வத் தமிழைப் பாடவல்ல பெண்ணும், மறுபக்கம் வெறியூட்டும் உடற்கவர்ச்சிப் பாடல்களைப் பாடுவதை, புகழ் பெறுவதை வெற்றியாக நினைக்கிறாள். மழலைப் பள்ளிப் பெண்ணும், ‘ஐ லவ் யூ’ என்று ஆங்கிலத்தில் எழுதி இன்னொரு ஆண் மழலைக்குக் கொடுக்கிறாள். பள்ளிக் காவலனாகப் பணி செய்பவன் சமயம் கிடைக்கும்போது அந்த மழலையைத் தூக்கிச் சென்று தன் வெறிக்கு வடிகால் தேடுகிறான். இதெல்லாம் நடப்பியல் உண்மைகள் கதையுமல்ல, கருத்துமல்ல.

மரியமக்தவேனா விபசாரி என்று இழித்துரைக்கப்பட்டு வெறிக்கூட்டத்தின் கற்கள் விழுந்தபோது, “ஓ மனிதர்களே, உங்களில் பாவம் செய்யாத ஒருவர் மட்டுமே கல் வீசலாம்!” என்று குரல் கேட்டதாம்; வெறிக் கூட்டம் திகைத்ததாம்.

மனிதகுல பரிணாம வளர்ச்சியில் எங்கிருந்தோ குரூரங்களில் அறிவு துலங்கியிராத இயல்பு வேகத்தில் தட்டுத் தடுமாறி முட்டி முரண்டு தொடர்ந்து ஒருவனுக்கு ஒருத்தி என்ற நெறி கண்டோம்.

இந்த இடத்தில் மேன்மையை எட்ட ஏழு நெறிகளை காந்தியடிகள் குறிப்பிட்டார். 1. கொள்கையை நழுவவிடும் அரசியல், 2. பக்தியை இலட்சியமாக்காத இறைவழிபாடு, 3. ஒழுக்கம் அடிநாதமாக இல்லாத கல்வி, 4. நாணயம் இல்லாத வாணிபம், 5. மனிதநேயமற்ற அறிவியல் வளர்ச்சி, 6. உடலுழைப்பை விழுங்கும் செல்வம், 7. மனச்சான்றுக்கு ஒப்புதலில்லாத இன்பம்.

For more ebooks visit: https://getmyebook.in/

இத்துணை அறங்களும் தொலைந்துவிட்டன. வாழ்வாதாரங்களான நீரும், காற்றும், சூழலும் உலகெங்கும் மாசுபட்டிருக்கின்றன. உயிர்களை வாழ வைத்த இயற்கையின் அஹிம்சைத் தத்துவத்தைப் பேராசைகளாலும், வெடிகுண்டு கலாசாரத்தாலும் முறியடிக்க முற்பட்டிருக்கிறோம். எங்கிருந்து தொடங்கி எப்படி இந்த மாசுகளைக்களையும் முயற்சியில் ஈடுபடுவோம் என்ற குழப்பம் மேலிடுகிறது. என்றாலும், சஞ்சலங்களை ஒதுக்கி அவரவருக்கே உரிய வகையில் துணிவுடனும் நம்பிக்கையுடனும் புதிய வித்துக்கள் செழிக்க அக, புறத் துய்மைக்கு வழிவகுப்போம்.

**‘பாரதமணி’,**
**ஜனவரி, 2004**

For more ebooks visit: https://getmyebook.in/

## 12. வெறும் செய்தியா?

மனைவிக்கு எழுபத்தைந்து வயது. கணவருக்கு எண்பது வயது. மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்ட கணவர், அவளைக் கொலை செய்தார். அவள் வீட்டருகே வசித்த ஒரு பழ வியாபாரியுடன் தொடர்பு கொண்டிருந்தாளாம். இது அவர்களுக்குள் அடிக்கடி தகராறு வரக் காரணமாக இருந்ததாம். நள்ளிரவில் அவள் தூங்கும்போது முதியவர் அரிவாளால் வெட்டிக் கொன்றார். இது செய்தி (தினமணி 2010.2003).

இந்தச் செய்தி தரும் அதிர்ச்சி இதுதான்.

இந்த வயதில் மனைவியின் நடத்தையில் சந்தேகம் வந்து அவளைப் படுகொலை புரியும் வரை அவரை விரட்டியிருக்கிறது. ‘தொடர்பு’, ‘சந்தேகம்’ என்ற இரு சொற்களும், எழுபத்தைந்துக்கும் எண்பதுக்கும் உரியவையாகச் சொல்லப்பட்டிருப்பதுதான் அதிர்வலைகளை ஏற்படுத்துகின்றன. எழுபதும் எண்பதும் பழுத்த முதுமை.

‘தொடர்பு’ என்ற சொல்லின் முழுப் பொருள் யாது? அந்த மூன்றாம் மனிதர் இளைஞரா? கிழவி பாசத்துடன் பழகினாளா? இருக்கலாம். கிழவருக்குத் தம் முதுமைக் காலத்தில் மனைவி தமக்கே உரியவள் என்ற உடமையுணர்வு அழுத்தமாக இருந்திருக்கலாம். முதுமையின் விரக்தியும் தன்னிரக்கமும் அவரை இந்த எல்லைக்குக் கொண்டுசென்றிருக்கலாம். எந்த நிலையிலும், ஒரு மனைவி என்ற நிலையில் ஓர் ஆணின் உரிமைக்குட்பட்ட சடப்பொருளாகவே பெண்

For more ebooks visit: https://getmyebook.in/

பார்க்கப்படுகிறாள். இதுதான் விபரீதமாக விளைந்திருக்கிறது.

ஆனால், முதுமைக் காலத்துக்கே உரிய தனிப்பட்ட மனச்சிக்கல்களைத் துருவி, ஒரு பத்திரிகைச் செய்தியை வெளியிட வேண்டியது அவசியம் இல்லை. ஏனெனில், பயன்படுத்தப்பட்ட நடத்தை, சந்தேகம், தொடர்பு ஆகிய சொற்கள், வயதில் இளைய குடும்பம் சார்ந்த ஆண்-பெண் பாலரோடு தொடர்பு கொண்டவை.

உண்மையாகவே கிழவர் அத்தகைய பொருளுக்குரிய மனவிகாரத்துடன் செயல்பட்டிருந்தாலும், அவர் ஏதோ ஒரு மனக்கோளாறுக்குட்பட்டவராகிறார். எனவே இத்தகைய கற்பிதங்கள், பொதுவாகவே, சமூகத்தின் இருபாலருடைய மன, உடல் ஆரோக்கியங்களை மாசுபடுத்துகின்றன.

அண்மைக்காலங்களில் இளைஞர் உலகை நோக்கிக் கட்டவிழ்த்துவிடப்படும் வணிகநோக்குக் ‘காதல்’, புனிதமான பாலியல் உணர்வுகளை, இல்லறம் என்ற மேன்மையான எல்லைகளுக்குள் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டிய உயரிய உணர்வுகளை, எப்படியெல்லாமோ கொச்சைப்படுத்தி வருகிறது. எல்லாத் தளங்களிலும், இளைய சமுதாயத்தினர், இந்த மனவிகாரங்களில் சிதறடிக்கப்படுகிறார்கள். சினிமா, தொலைக்காட்சி விளம்பரங்கள், வானொலி (பண்பலை)யின் இடைவிடாத உருவேற்றல்கள் எல்லாம், படித்தவர், படிக்காதவர், எல்லோரையும் உடல், உடல், உடல் என்ற தன்னுணர்வு களில்

For more ebooks visit: https://getmyebook.in/

சிறைப்படுத்துகின்றன. 'இலக்கணம் மீறிய சுவாரசியங்கள்' என்று ஒழுக்க ரேகைகளை உடைக்கும் காட்சிகள் நியாயங்களாகும் 'தொடர்கள்' என்ற விளம்பரக் கொக்கிகள், ஈர்ப்பு இல்லாதவர்களையும் பிடித்து இழுக்கின்றன.

'காதல்' என்ற பதத்தில் எழும் பல்வேறு பரிமாணங் களும் பெண்ணின் உடலை மட்டுமே பாதிப்புக்குள்ளாக்குகின்றன. 'உடல்' என்று வரும்போது, இருபாலருக்கும் பொதுவென்றாலும், பெண் ஒர் அற்பக் கீறலைக் கூட மறைக்க இயலாத கண்ணாடி போன்றவளாகப் பார்க்கப்பட்டு வருகிறாள்.

இந்தக் கருத்தியலில் மாற்றமே இல்லை. இதைத்தான் எழுபத்தைந்து வயது மூதாட்டியின் கொலை தெளிவாக்குகிறது. அன்றாடம் பத்திரிகைச் செய்திகளில் கொலைகள் முந்நாட்களைப் போல் எந்தப் பரபரப்பையும் மக்களிடம் தோற்றுவிப்பதில்லை. என்றாலும் ஆண்-பெண் என்று பிறவியெடுப்பதன் நோக்கமே, இந்த உடல் சார்ந்த உணர்வுகளைத் தூக்கிப் பிடித்து அனுபவிப்பதுதான் என்பது சரிதானா?

நம் பழைய கதை-புராணங்களில் இறுதிக் காலங்களில் அரசர்கள், இல்லறம் துறந்த சான்றோர், வனங்களை நாடிச் சென்றனர் என்றறிந்திருக்கிறோம். சொத்து - சுகங்கள், பிள்ளை குட்டி, பாசங்கள் எல்லாம் துறந்து அமைதியில் இறுதி காணச் சென்றதாகவே கொள்ள வேண்டும். ஆனால் இந்நாட்களில் முதியோருக்கான இல்லங்கள் குறித்துத் தரப்படும் விளம்பரங்களில் , போகங்கள், சுகங்கள், (அமெரிக்கா

For more ebooks visit: https://getmyebook.in/

சென்று வருவது உட்பட) வசதிகள், தன்னல மருத்துவங்கள் என்ற வண்ண வண்ணக் கவர்ச்சிகள் இறைக்கப்படுகின்றன.

ஒரு சொகுசு வண்டிக்கான விளம்பரம், மூன்று தலைமுறை மக்கள் சுகமாக உறங்கும் வசதியுடன் பயணம் செய்வதைக் காட்டுகிறது. ஓராணும் பெண்ணுமாக நடுத்தர வயது கடந்த முதிய தம்பதி, மிக நெருக்கமாக ஒரு வரை ஒருவர் சார்ந்து, அனுபவிக்கும் காட்சியில், “சீ! பின்னே பிள்ளைங்க..” என்ற சிணுங்கல் எழும்புகிறது. “அவங்க தூங்கி இருப்பாங்க!” என்ற விடைக்கு எதிரொலியாகப் பின்னிருந்து “நாங்க பாக்கல...” என்று இளவட்டங்கள் சிரிக்கின்றன.

வசதியான வண்டி விளம்பரம் இது. இத்தகைய உருவேற்றல்கள் சமுதாயத்தை எங்கே கொண்டு செல்கின்றது? அந்தந்தப் பருவத்துக்குரிய ஈர்ப்புகள், ஆசைகள். இயல்புதான். ஆனால், வயது முதிர முதிர, உலகியல் அனுபவங்களில் உணர்வுகள் புடம்போட்ட சொக்கத் தங்கமாக மாற வேண்டும்.

இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு, உயிர் வாழ இன்றியமையாததான நீர், காற்று, நல்ல மண் போன்ற இயற்கையின் கொடைகளைக்கூட உத்தரவாதப்படுத்த இயலாத நிலையில் முதிய சமுதாயம் இருப்பதைத் தம் குற்றமாக உணர வேண்டும். மனிதநேயங்கள் தேய்ந்து விட்டன என்ற புலம்பல்களை விடுத்து, தன்னலமற்ற தியாகம் இன்னா செய்தாரையும் மன்னித்தருளும் தகைமை, அன்பு என்று முதிய தலைமுறை வழிகாட்ட வேண்டும். இந்த நோக்கில் அபகரங்களாக ஒலிக்கும்

For more ebooks visit: https://getmyebook.in/

விளம்பரங்களும் செய்திகளும் செல்லாக்காசுகளாக மதிப்பிழக்க வேண்டும்.

**'தினமணி'**

**28.10.2003**

For more ebooks visit: https://getmyebook.in/

# 13. நச்சுக்கனிகளை அகற்றுவது எப்படி?

பெண் கருக்கொலையை ஒழிக்க சமய பீடங்கள் ஒருங்கிணைந்து இயக்கம் காண விழைவதாகச் செய்தி வந்துள்ளது.

பெண்ணாகப் பிறந்தவள்', 'பொம்மனாட்டி என்று பெண் குறிக்கப்படுவதுபோல், ஆணாய்ப் பிறந்தவன்' என்று ஆண் சொல்லப்படுவதில்லை. அவனை யாரும் ஆளப்படுவதற்குரியவனாகக் கருதுவதும் இல்லை.

மனித மதிப்பையும் உழைப்பு மதிப்பையும் கல்வி மதிப்பையும் அறிவாற்றலுக்குரிய மதிப்பையும் இழந்து பொன்னும் பொருளும் நுகர்பொருள்களின் குவிப்பும் இணையக்கூடிய வெறும் உயிர்க்கூடாகப் பெண் மாறி விட்டதற்கு சமயங்களே காரணம் என்றால் அதுதான் மெய்.

மேல் வருணத்தின் பிடிகளுக்குள், பட்டுத்துணிப் புழுதிக்குள் பொதிந்திருந்த வேத-தரும-சாத்திரங்கள் இந்நாட்களில் அறிவியல் தகவல் தொழில்நுட்பக் கட்ட விழ்ப்பில் எங்கே, என்ன, ஏன், எப்படி என்ற ஆராய்ச்சிக் கண்களைத் திறக்கச் செய்திருக்கின்றன. அறிவியல் தொழில்நுட்பக் கலைகளில் ஆண்களை விடப் பல மடங்குகள் தம் திறமையை மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றனர் பெண்கள்.

எந்த மேலாண்மைக்கும் ஆண்கள் நியாயம் காண முடியாது. என்றாலும், திருமணம் என்று வரும்போது "நீ

For more ebooks visit: https://getmyebook.in/

ஒரு மனைவியாக உன் கடமையைச் செய்ய முடியாது. என் உணவு, சுகவாழ்வுத் தேவைகளைக் கவனிக்க உன் ஆற்றல் தடையாக இருக்கும்” என்று தவிர்க்கிறான். காரணம், ஆதிக்க சமயமரபுதான்.

தொழில்துறையில் வெற்றி கண்ட ஓர் ஆண், அதே திறமையுடைய பெண்ணின் ஆளுமையை ஒத்துக் கொள்வதில்லை. இவன் அமெரிக்காவில் இருந்தாலும் ஆஸ்திரேலியாவில் இருந்தாலும் ஆதிக்க மரபு ஓடிக் கொண்டிருக்கிறது. அவன் எல்லாச் சடங்குகளையும் விட்டாலும் இந்த மரபு மாயாமல் இருக்க ‘உயிர்த்தண்ணி’ வார்ப்பவர்கள் சமயபிடங்களே.

“பத்மாவதித் தாயாரின் தாலி வீழ்ந்ததாம்; போய் தாலியைப் பத்திரமாகப் புதிப்பித்துக் கட்டிக் கொள்ளுங்கள்” என்று எவரேனும் ஒரு வதந்‘தீ’யைப் பரப்பினால் இந்தியப் பெண் டிம்பக்டுவில் இருந்தாலும் தாலி காக்க ஒடுவது ஏன்?

பெண் ‘சம உரிமை’ என்ற ஒன்றை நினைக்கவும் ஆகாது; மலையில் வளர்ந்தாலும் உரலில் மசிய வேண்டும். ஒருவனின் தாலியைக் காலா காலத்தில் சுமந்து அவனுக்கும் அவனைச் சார்ந்தோருக்கும் ஊழியம் செய்து, குலம் விளங்க ஆண் மக்களைப் பெற்றுத் தந்து அவன் மரிக்கு முன் இவள் பூவும்பொட்டுமாக வானுலகமேகி அவனை வரவேற்றுப் பணிபுரிய வேண்டும்.

இந்த நியதிகளில் ஒன்று முரணானாலும் அவள் வாழ்க்கை பதர். கன்னியாக இருக்கலாகாது; வாழை மரத்தை வரித்து, தாலியணிந்து அதை வெட்டி, தாலியெடுத்து தரிசு மண்ணாகக் காலம் கழிக்க

For more ebooks visit: https://getmyebook.in/

வேண்டும். பெற்ற மக்களை நடுத்தெருவில் விட்டாலும் அவன் தந்தை, ஆதிக்கம் செலுத்துவான்.

குமரப்பருவத்தில் துரோகமிழைத்து தாலியை உருவிக் கொண்டு குரூரங்கள் இழைத்தாலும் அவன் கணவன், அவனுக்கு உட்பட வேண்டியது தருமம். இவளுக்கு வரும் ஓய்வூதியமோ எதுவோ பெற, மகன் கள்ளக் கையெழுத்துப்போட்டு வஞ்சித்தாலும் அவனை அரவணைக்க வேண்டும். அவன் மகன்!

“புருசன் அடிச்சுக் கொல்லுறான்மா” என்று காவல் துறைப் பெண் அலுவலரிடம் குற்றம் சொல்ல வந்தால், “புருசன்தானேம்மா அடிச்சான்; இது புகாரா?” என்று அலுத்துக் கொள்வார் அவர். அவரே புருசனிடம் ‘மரியாதை’ பெற்று வந்திருக்கலாம்.

குடிசையில் இருக்கும் குமரியில் இருந்து கோமகள் வரையிலும் பெண்ணுக்குரிய பருவத்தில் திருமணம் நிகழவில்லை என்றால், அவளுக்கு உணர்வுரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் பாதுகாப்பு இல்லை.

பெண் சிசுக் கொலைக்குப் பேர் போன ஓர் ஊரில் ஒரு பெண்மணி, பொட்டபுள்ள பத்துவயசில சமஞ்சு நிக்கும். பொண்ணு சமஞ்சா ஆணுக்குத்தான்னு பாடி வச்சிருக்காங்களே! எவனேனும் தொட்டுத்தொலச்சா என்ன செய்ய? அது அப்புறம் நஞ்சரைச்சிக் குடிக்கும். இப்பவே அது கண்ணு மூக்கக் காட்டு முன்ன, ஒரு நெல்லயோ துளி பாலயோ ஊத்திக் கதய முடிச்சிடனும்’ என்று கூறினாள்.

For more ebooks visit: https://getmyebook.in/

இந்தத் தொட்டுக்குலைக்கும் சமாசாரம் ஆண்களுக்கு விளையாட்டு. தொலைக்காட்சித் தொடர்களின் வண்ண விசித்திரமாய் தந்திரங்களில் இது களிப்பூட்டும் அம்சம். பெண்...?

அந்த நாசகாரன், சாதி, மதம், நிபந்தனைகள் பூதங்களாய் நிற்கும். உட்பட்டாலும் அந்தப் பெண் நெடுநாள் வாழாது.

அடுத்து, அன்றாடம் உணவுக்கு நெருப்பு மூட்டும் பெண், அந்திமத்தில் தாய்க்கோ தந்தைக்கோ எரியூட்டத்தகுதியில்லாதவள் என்று சமயசாத்திரம் கற்பிக்கும் அநியாயம்!

கணவனின் உயிரற்ற உடலை வைத்துக் கொண்டு ஆண்மகவைப் பெறாத மனைவியைச் சமயக் குருக் கொழுந்துகள் நடத்தும் அநாகரிகங்கள் சொல்லுக் கடங்காதவை. துயரச் சூழலில் அந்தத் தாய், ஊமையாகிப் போவாள்; செயலற்றுப் போவாள்.

எனவே, வயிற்றுக் கரு பெண் எனத் தெரிந்தவுடன் கலைத்துவிடத் துணியும் தாய்மாரின் மனநிலையை, சமயபீடத்தில் இருந்து அருளுரையும் ஆசி அறிவுரையும் நல்குபவர்களால் புரிந்து கொள்ள முடியுமா?

'பெண் சமஉரிமை பேசலாகாது' என்பது ஆதார சுருதி என்று முழங்கும் சமய மரபு, அவன்மீது என்றும் குற்றம் காண்பதில்லை. 'ஆடவன் தொடுவான்; குலைப்பான். இவளே அடங்கி இருக்க வேண்டும்.'

'வேலைக்குச் செல்லும் பெண்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேரும் ஒழுக்கம் காக்காதவர்கள்' என்று

For more ebooks visit: https://getmyebook.in/

(அ)யோக்கிய சிகாமணிக்களுக்குச் சான்றிதழ் வழங்கும் குருபீடங்கள், இவர்கள் ஊன்றி வளர்த்த வேரில் இருந்தே கிளைத்துச் செழித்திருக்கும் பெண் சிசுக்கொலை, கருஒழிப்பு போன்ற நச்சுக்கனிகளை எப்படி அகற்றப் போகின்றன?

பெண்ணின் நல்வாழ்வுக்கான வாயில்களை, பல்வேறு தடைகளால் அடைத்த பின், சுற்றிக் கிளைத்தெழும் பூண்டுகளை எப்படி அகற்றப் போகின்றனர்?

**'தினமணி'**

**28-5-2001**

For more ebooks visit: https://getmyebook.in/

# 14. பற்றிப் படரும் ‘பற்றுதல்’

‘மனத்தை அலையவிடும் மாந்தர் பற்றுதலுக்கு இடம் கொடுக்கின்றனர்; அந்தப் பற்றுதல் ஆசைக்கு இடமளிக்கிறது. ஆசையினால் சினம்; சினம் குழப்பத்துக்குக் காரணமாகிறது. குழப்பத்தின் விளைவு தெளிவின்மை. அத்துடன் அறிவு தொலைகிறது. பிறகு அழிவுதான்’ என்பது கீதை உரை.

‘பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு’ என்ற வள்ளுவர் வாக்கும் இதையே சுருக்கமாக உரைக்கிறது.

‘பற்றுதல்’ என்ற சொல், மனிதருக்குரிய ஒழுக்க நெறி அனுமதிக்காத ‘பற்றுதல்’ என்ற பொருளில் இந்த இடங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது. இயற்கை வகுத்த தடத்தோடு வாழ்க்கையில் புலனின்பங்கள் எல்லாவற்றையும் மனிதர் துறந்துவிட வேண்டும் என்று இவ்வுரைகள் குறிப்பிடவில்லை. ஏனெனில் துறவறத்தைக் காட்டிலும் இல்லறமே மேலானது; அது இன்றியமையாத சமுதாய ஒழுக்கம் என்பதை வள்ளுவர் வாக்கே, ‘துறந்தார்க்கும் துவ்வாதவருக்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான்துணை’ என்று அறிவுறுத்துகிறது. எனவே, ‘பற்றுதல்’ என்பது, ஒருவரின் மனச்சான்றை மழுங்கடிக்கும் வகையில் உள்ளே நுழைந்து வலிமை பெறக்கூடிய தீமை அதற்கு இடம் கொடுத்தால் பேராசை என்ற பெருங்காற்று வீச, அது விரைவில் மனிதத் தத்துவத்தையே சுட்டுப் பொசுக்கிவிடும் என்று எச்சரிக்கையாகக் குறிப்பிடப்படுகிறது.

For more ebooks visit: https://getmyebook.in/

தன்னலமற்ற அன்பு பாராட்டி அனைவருடனும் பகை இல்லாமல் வாழ வேண்டும் என்று அக்காலத்தில் கதைகள் வாயிலாக இந்த நெறி சிறுபிராயத்திலிருந்தே அறிவுறுத்தப்பட்டது. நாம் இப்போது புத்தாயிரம் என்ற நுழை வாயிலுக்கு வந்துள்ளோம். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில், மனித நாகரிகம் பல்வேறு வகைகளில் மாற்றமடைந்து வந்திருந்தும், வாழ்க்கைச் சாதனங்களும் தேவைகளும் பெருமளவுக்கு மனித சமுதாயத்தைப் பாதித்திருந்தும் தன்னலமற்ற அன்பு பாராட்டுவதுதான் மனிதர் வாழ்வியல் நெறியாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் எந்த வகையான மாற்றமும் வந்துவிடவில்லை.

அதுவும், உலக மக்கள் அனைவரும் துன்பமின்றி வாழ வேண்டும் என்ற இலட்சியத்தைக் கைக்கொண்டு வாழ்ந்த ஆன்றோர், எக்காலத்தும் 'பற்றுதல்' என்ற சிறு பொறி உள்ளே நுழைய ஊசி முனையளவு இடமும் கொடுக்கலாகாது என்று தங்கள் வாழ்வின் வாயிலாக எடுத்துக்காட்டியுள்ளனர்.

நம் காலத்தில் வாழ்ந்து மறைந்த காந்தியடிகள், நமது வாழ்வில், ஒரு மகத்தான திருப்பத்தைக் கொண்டு வந்திருக்கிறார். அதுதான் நம் அரசியல் விடுதலை இது காறும் உலக வரலாற்றில் இல்லாத வகையில் போரும் பகைமையும் இல்லாமலேயே அஹிம்சை, அன்பு என்ற பாதையில் நம்மை ஈடுபடுத்தி, அந்த வெற்றியை நமக்களித்தார்.

தென்னாப்பிரிக்காவில் இருந்து அவர் விடை பெற்றபோது அங்கிருந்த இந்தியச் சமூகத்துக்கு அவர்

For more ebooks visit: https://getmyebook.in/

ஆற்றிய பணிக்காக விலையுயர்ந்த பரிசுகள் காந்தி தம்பதிக்கு அளிக்கப் பெற்றன. அதுவரை அவர்களிடம் தங்கம், வெள்ளி, வைரம் போன்ற விலை உயர்ந்த அணிமணிகள் இருந்ததில்லை. காந்தியடிகள் இரவு முழுவதும் உறங்கவில்லை. பின்னர், அந்த விலை உயர்ந்த பரிசுகளைக் கொண்டு, தென்னாப்பிரிக்க இந்திய சமூக மேம்பாட்டுக்கு ஒரு நிதியமைக்க முடிவு செய்தார். ஆனால் அன்னை கஸ்தூரிபாவுக்கோ அந்தப் பரிசுகளில் இருந்த ஒரே ஒரு வைரமாலையையேனும் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்தது. அண்ணலோ அது, சமுதாயப்பணிக்காக அளிக்கப்பட்ட கொடை என்று பிடிவாதமாக மறுத்தார். ‘நமக்கு இல்லாவிட்டாலும், நாளை மகன்கள் திருமணத்துக்கு அது உதவும் அல்லவா!’ என்றார் அந்தப் பேதை, ஆனால் காந்தியடிகள் அந்த ஊசிமுனை இடத்தையும் அழுத்தமாக அடைத்துவிட்டார்.

ஆனால், எந்தப் பற்றுதலுக்கு இடம்கொடுக்கலாகாது என்று நூற்றாண்டுகளாக ஆன்றோரும் சான்றோரும் எச்சரித்திருந்தார்களோ, அந்தப் பற்றுதல் இந்நாள், குஞ்சு குழந்தையிலிருந்து, ஆண்,பெண், முதியோர், ஏழை, பணக்காரர் எல்லோரும் மனமுழுதும் ஆக்கிரமிக்க இடம் கொடுத்திருக்கின்றனர்.

‘லட்சம், கோடி, தங்கம், போக சாதனங்கள்’ என்று புலனின் பங்கள் கட்டவிழ வெறிபிடிக்கும் நிலையில் சமுதாயம் பரபரத்து அலை பாய்கிறது. இந்த நோக்கில்தான் மூளை, அறிவு, ஆராய்ச்சி, அறிவியல் தொழில்நுட்பம், கலை, இலக்கியம், கொலை,

For more ebooks visit: https://getmyebook.in/

கொள்ளை எல்லாம் வளருகின்றன. இடை இடையே சிறிது ஊறுகாய் போல், சத்தியங்கள், காந்தி, வள்ளுவர், புத்தர், இயேசு, பாரதி, ஸத்குரு தியாக ப்ரும்மம்... என்ற வழிபாடுகள்!

காந்தியுகத்தில் அரிச்சந்திர நாடகமோ, கிராமிய நீதிக்கதைகளோ நாடோடிப் பாடல்களோ, மக்களின் கலைவடிவங்களாகவும் தொடர்புச் சாதனங்களாகவும் திகழ்ந்தன. அந்நாள் அச்சாதனங்களுள் சாம்பலுக்குள் நெருப்புப் பொறி போல் போற்றிக் காத்த சத்தியத்தை இன்றைய மேலாம் தொழில் நுட்பங்கள் விழுங்கிவிட்டன. இந்த நூற்றாண்டில் நம்பிக்கையுடன் தலைகாட்டும் அரும்புகளும் பிஞ்சுகளும், இந்தச் சூழலில் எத்தகைய ஊட்டத்தைப் பெறுகின்றனர் என்பதைச் சிந்தித்தால், நம்பிக்கை இருண்டு போகும் அபாயமே தென்படுகிறது.

பழனிமலை முருகனைச் சிரமமின்றித் தரிசிக்க, ஓர் ஏறு தொட்டில் சாதனம் அமைக்கப்பட்டபோது, எனக்குத் தெரிந்த ஓர் அம்மையார், ‘இது தப்பு.’ என்றார். அதற்கு அவர் சுட்டிக்காட்டிய காரணம், இன்று சிந்திக்கக்கூடிய தாக இருக்கிறது. முருகனும், ஐயப்பனும், இன்னும் பல தெய்வங்களும் காடுகளிலும் மலையுச்சிகளிலும் ஏன் இடம் பெற்றிருக்கிறார்கள்? தமக்குத் துன்பங்கள் வரும்போது இப்பிறவியிலோ, முற்பிறவியிலோ செய்த பாவங்களின் பயனாகவே அவை வந்தன என்று மாந்தர் நம்பினர். அப்பாவத்துக்குக் கழுவாய் தேடி தெய்வங்களைச் சரணடைந்தனர். நேர்த்திக்கடன் செலுத்த, தம் அகம் கரைய, மனம் ஒரே நிலையில் தெய்வ சந்நிதியில் ஒன்றுபட, உடல் நோக

For more ebooks visit: https://getmyebook.in/

அத்தெய்வங்களின் சந்நிதிக்குச் சென்று வழிபட்டு வந்தனர். மலை மீது ஏறும்போது உடல் மெலிந்து, நோவு தெரியாத வகையில் உள்ளம் இறையுணர்வில் ஒன்றுபடும். அவ்வாறு இறை சந்நிதியை எட்டாமல் சரணடைந்தாலோ, முக்தி என்று ஆறுதல் கொண்டனர். ஆனால், இந்நாளைய வசதிகள், இந்தத் தல யாத்திரைகளை 'உல்லாசப் பயண'மாக்கிவிட்டன. தெய்வ உணர்வு என்ற துண்டிலில் மக்களை மாட்டி, தங்கள் வருவாய்த் துறைக்குப் பணம் சேர்ப்பதில் மாநிலத்துக்கு மாநிலம் போட்டி நிலவுகின்றது. இதில், மக்களின் அறியாமை, வறுமை இரண்டும் என்றும் எந்நாளும் காப்பாற்றப்படும் சூக்குமமும் இருக்கிறது. காடுகள் நிறைந்த இயற்கைச் சூழல்களின் அழிவு ஆறுகளில் சேரும் அழுக்குகள்; மண் சீரணிக்க இயலாத குப்பைகள்; இடைவிடாத வண்டி வாகனங்கள் உமிழும் நச்சுப் புகைகள், புனித யாத்திரைத் தலங்களில், தன்னலமற்றவராக யாத்திரைக்கு வந்தவர்களுக்கு உதவும் தொண்டுப் பணிகள் எல்லாம் சொகுசு விடுதிகள் அமைத்துப் பொருள் கறக்கும் தொழில்களாக மாறிய அவலங்கள். அரசுக் கட்டிலில் அமர்ந்தவர்கள் தெய்வ தரிசனத்துக்கு வரும்போது, தெய்வங்களே திரைக்குப்பின் தள்ளப்பட்டு, அரசுத் தலைகளே வணக்கத்துக்குரிய இடங்களைப் பற்றிக் கொள்ளும் நடப்பியல் தரிசனங்கள். இப்படியெல்லாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

‘மக்கள் தொகையோ' அரசியல் கட்சிகளுக்கு வாக்கு வங்கிகள்! அந்த வங்கிகளில் தங்கள் செல்வாக்கைப் பதிக்க ஒவ்வொரு அரசியல்வாதியும், சார்ந்த கட்சியும்,

For more ebooks visit: https://getmyebook.in/

ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பல்வேறு விதங்களில் செயல்படுகிறார்கள். அரசியல் கட்சிகளுக்கென்று இருந்த இலட்சியங்களும் கொள்கைகளும் தொலைந்து வெகுநாட்களாயின. ஆட்சியில் இருப்பவர், அதைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் இல்லாதவர், அதைக் கவிழ்த்துத் தாம் அந்தப் பீடத்தில் அமரவேண்டும் என்பதுதான் இப்போது முக்கிய இலட்சியக் கொள்கை!

விழாக்கள் இந்த முயற்சிகளில் முதன்மை இடம் வகிக்கின்றன. அரசு சார்ந்த கட்சி எதையும் விழாவாக்கி ஆதாயம் தேடமுடியும். ஆனால், ஏனைய கட்சியினர், கட்சிக்கு அப்பாற்பட்டு பொதுமக்களிடம் தீவிரமான ஈடுபாடும் அக்கறையும் தங்களுக்கு உண்டு என்று தெரிவித்துக் கொள்ள, புகழ்வாய்ந்த ஓய்வுபெற்ற அரசுத் துறை அல்லது வேறு தொழில் வல்லுநரைத் தங்களுக்குச் சாதகமாக அழைத்துக் கௌரவிப்பார்கள். இந்த எல்லா விழாக்களிலும் முக்கியமாக பொன்னாடை போர்த்துவதும் நினைவுப் பரிசென்று வழங்குவதும் சடங்கா சாரங்கள்! இந்த விழாக்களில், கட்சித் தலைவர் கடவுளைப் போல் புகழப்படுவார்; விருந்தினருக்கும் புகழ் மாலைகளுண்டு.

இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியில், கட்சி சார்ந்த தலைவர், துணைகள், பெருந்தலை, சிறிசு என்ற வரிசைக்கிரமப்படி பளபள பொன்னாடை, பட்டாடை, பருத்தியாடை, துவாலை என்று போர்த்தப்பட்டன. விருந்தினர் தமக்கும் ஒரு சால்வையேனும் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தார். ஆனால் அவருக்கு, கண்ணாடியோ, பிளாஸ்டிக்கோ - பேழைக்குள் ஓர்

For more ebooks visit: https://getmyebook.in/

உருண்டை என்னும் நினைவுச்சின்னமே வழங்கப் பெற்றது. அந்தப் பெரியவர், உலகப் புகழ்பெற்ற தொழில் வல்லுநர், செல்வத்துக்கும் செல்வாக்குக்கும் குறைவில்லாதவர்; தாம் உரையாற்றுகையில், “வயதான எனக்கும் இந்தக் குளிருக்கு இதமாகப் போர்த்திக்கொள்ள சால்வை ஏதேனும் கிடைக்கும் என்றிருந்தேன்; நினைவுப் பரிசுடன் நிறுத்திவிட்டனர்” என்று மறைமுகமாக, ஏமாற்றத்தைக் கேலி போல் குறிப்பிட்டார். 'பற்றுதல்’ யாரை விட்டது?

ஸத்குரு தியாகப்ரும்மத்தைத் தஞ்சை மன்னர், அவைக்கு அழைத்து வர ஆள் அனுப்பியபோது, அரச போகங்களில் திளைத்து மமதைகூடிய நரஸ்துதி செய்வது சுகமா? எனது இஷ்ட தெய்வமான ராமநாமத்தை பஜனை செய்து இன்புறுவது நலமா என்ற பொருளில் பாடிய ‘நிதிசால சுகமா' கீர்த்தனையை அறிந்திராத கர்னாடக இசைக் கலைஞர் எவருமில்லை எனலாம். ஆனால் அந்த நாதப்ரும்மத்தின் ஆராதனை விழாவில், வரவேற்பாளராகிய அருங்கலைஞர், ஒவ்வோர் அரசியல் பெருந்தலைகளையும், மகாவிஷ்ணுவாகவும், இராமச்சந்திர மூர்த்தியாகவும், கணபதியாகவும், பரமசிவமாகவும், சரஸ்வதி தேவியாகவும், இலட்சுமியாகவும் மாற்றிப் புகழ்ந்ததை என்னவென்று சொல்வது? பொன்னாடை பட்டாடை நினைவுப்பரிசில்களின் தரப்பட்டியல் பற்றிச் சொல்ல வேண்டுமா?

'பற்றுதல்' பற்றிய கீதை உரையும், வள்ளுவர் வாக்கும் ஓடி ஒளிந்து கொண்டன!

For more ebooks visit: https://getmyebook.in/

**‘தினமணி’**

**31.1.2001**

For more ebooks visit: https://getmyebook.in/

# 15. ஆயிரம் காலத்து பயிர் அரக்கன்

சமகால இந்தியப் பெண்ணின் சமூக வரலாற்றில், அண்மைக் காலங்களில் நம்பிக்கையின்மை என்ற இருள் படர்ந்து விடாதவண்ணம் ஒளிப்புள்ளிகள் தோன்றி இருக்கின்றன. அறிவியலிலும், ஆற்றலிலும் உள்வலியிலும் ஆனுக்குச் சளைத்தவள் அல்ல என்று பல துறைகளிலும் சாதனை படைத்த நாயகியரே இந்த ஒளிப்புள்ளிகள். வடநாட்டில் ஒரு நிஷா சர்மா, தென்னாட்டில் ஒரு வித்யா இவர்கள் முன்னுரை எழுதிவிட்டார்கள்.

மக்களவைப் பிரதிநித்துவத்துக்கான முப்பத்து மூன்று சதவிகிதமானாலும், விவசாயத்தில் இருந்து வீட்டு வேலை, பராமரிப்பு, நிர்வாகம் என்ற பொறுப்புகளுக்கான நியாயமான (பொருள்) மதிப்பும் மரியாதையுமானாலும், போராட்டங்கள் பலனற்றவையாகவே தொடருகின்றன.

இந்தப் பின்னணியில் பெண் கருவழிப்பு, பெண் சிசுக்கொலை, துளிர்க்கும்போதே பாலியல் வன்முறையில் நசுக்குதல், மொட்டாகவே நாரில் தொடுத்து இறுக்கி வாணிபம் செய்தல், மலர்ந்தபின் கைப்பிடிக்குள் அடக்க திருமண நாண் பூட்டி ஒடுக்குதல். இத்தனை கொடுமைகளுக்கும் காரணமாக இருப்பது வரதட்சணை அரக்கனே என்றால் தவறில்லை. அதுதான் நிச்சயமான உண்மை! இந்த அரக்கன் எப்படித் தோன்றினான்?

இந்தியத் திருநாட்டில், வரனுக்கு தட்சிணை கொடுத்து பெண்களை

For more ebooks visit: https://getmyebook.in/

கரையேற்றிவிடவேண்டுமென்ற ஒரு கட்டாய வழக்கம், மேல் வருண சமுதாயத்திலிருந்துதான் தோன்றியது எனலாம். சநாதன வேதம் 'பெண் பூப்படையும் முன் தாலியைக் கட்ட ஒருவனைப் பிடி' என்று மொழிந்ததாக இல்லை. திருமணம் என்பதே, ஓர் ஆணும், பெண்ணும் இணைந்து சமுதாய மறு உற்பத்திக்கான மக்கள் பேற்றை அடையும் ஒரு சமுதாய ஒழுக்க அடையாளம்தான். பெண் முழு வளர்ச்சி பெற்று, ஆரோக்கியமான மகவைப் பெற்றெடுக்கும் தகுதி யுடையவளாக இருக்க வேண்டும். 'திருமண அவையில் இந்த வது (முழு வளர்ச்சி பெற்ற) சுமங்கலியாக இருக்கிறாள் பாருங்கள். இவள் கணவன் வீடு செல்கிறாள். வந்து வாழ்த்திச் செல்லுங்கள்' என்று பொருள்படும் ருக்வேத மந்திரம் இன்று வரையிலும் சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது (நான் கூறும்) இந்தப் பொருளில் அது சொல்லப்படுவதில்லை. இந்த வெற்றுரை, 'சுமங்கலி' என்ற சொல்லுக்கு, பூ, பொட்டு, மஞ்சள், குங்குமம், தாலி, மெட்டி, பட்டு என்றெல்லாம் ஜிகினா வைத்து, இவள் கணவனை உடையவள் என்றும், இதற்கு எதிர்ப்பதமாக 'அமங்கலி' என்ற ஒருசொல்லை உருவாக்கி அவள் இனிய பிறப்பு நலங்களை உருவிப் போடுவதற்கும் இந்த மேல் வருண சமுதாயம் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறது.

பெண்ணுக்கு மணநாயகனைத் தேடும் உரிமை, கல்வி உரிமை எல்லாவற்றையும் மறுக்க, அறியாப்பருவத்தில் அவளை மணமகளாக்குவதையும் கட்டாயப்படுத்தும் வழக்கைக் கொண்டு

For more ebooks visit: https://getmyebook.in/

வந்திருக்கிறது. மணமாகும் முன் பெண் பூப்படைந்துவிட்டால், அந்தக் குடும்பத்தை, தகப்பனை சமுதாயத்திலிருந்து விலக்கப்படுவாள் என்ற அச்சத்தளை பூட்டப்பட்டிருந்தது. அமரகவி பாரதி, அந்தக் காலத்தில் புதுச்சேரியில், இந்த வழக்கை மீறி, துணிவாக, மகள் தங்கம்மாள் பூப்படைந்த மங்கல நாளைக் கொண்டாடி மகிழ்ந்தார். ஆனால், இந்தச் சமுதாயத்தில் அறுபது ஆண்டுகளுக்கு முன்புவரை, திருமணமாகுமுன் பூப்படையும் பெண்கள் குடும்பங்களில் மன உளைச்சலுக்கும் அழுத்தங்களுக்கும் ஆளாகும் கொடுமைகளே நிகழ்ந்தன.

கறுப்பாகவோ, அழகற்றோ, ஒருபெண் பிறந்து விட்டால், செல்வ வளம் மிக்கவள், அதிகப் பணம், தங்கம், வெள்ளி வரிசைகள் செய்து அறியாப் பருவத்திலேயே அவளை ஒரு வீட்டுக்கு உரியவளாக்கிவிடுவார்கள். அந்த மாப்பிள்ளை கருப்பாக இருந்தாலும், நகரத்திலோ வெளி நாட்டிலோ கல்வி கற்று வரும்போது, இவள் அவன் மனதுக்கு உகப்பாக இருக்கமாட்டாள். தள்ளி வைப்பது, ஜீவனாம்சம் கொடுப்பது, நிராகரித்துவிட்டு வேறு தொடர்புகள் கொள்வது எல்லாமே சகஜம். இளம் விதவைகள் பெருகுவதற்கும் இதுவே காரணமாக இருந்தது.

‘சாரதா' சட்டம் வந்த பின்னரும், சட்டத்தை மதிக்காமல், துணிந்து பன்னிரண்டு வயசில் மகளுக்குத் திருமணம் செய்தவர்கள் பலர். இந்தச் சாதிகளில், மாப்பிள்ளை வீட்டார் இன்றுவரை, தாலிக்

For more ebooks visit: https://getmyebook.in/

கூறை கூடப் பெண்ணுக்குத் தங்கள் பங்காகக் கொடுப்பதில்லை. பெண் வீட்டாரிடமிருந்தோ சகல பொருட்கள், வண்மை வரிசைகளைக் கறந்துவிடுவது ஏற்புடைய வழக்கமாகி இருந்து வருகிறது. பெண்ணைப் பெற்றவர்கள் பாவிகள்.

ஆனால், மற்ற சாதிச் சமுதாயங்களில், மாப்பிள்ளை வீட்டாரே பெண்ணைத் தேடி வருவது வழக்கமாக இருந்திருக்கிறது. பெண் பூப்படைதல், மங்கல நீராட்டல் எல்லாம், பெண்ணின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் மகிழ்ச்சி விழாவாகவே அமைந்தன. பரிசம் போடுதல், மாப்பிள்ளை வீட்டிலே திருமணம் போன்ற வழக்கங்கள் பெண்ணையும் பெண் வீட்டாரையும் கௌரவிக்கும் நடைமுறைகள். ஒரு திருமணம் என்பது இரு சாராரும் ஒத்து இசைந்து, சரிபாதி செலவு வரும்படி கௌரவம் செய்யும் நிகழ்ச்சியாகவே அமைந்திருந்தது. இன்று வரையிலும் தொடர்கிறது.

தாலி, சம்பிரதாயச் சடங்குகள் ஏதுமில்லாமல், "பொன்னைக் கொண்டு வந்து தருகிறோம். பெண்ணைக் கொடுங்கள்" என்று விழையும் தொல்குடி சமுதாயத்திலும், ஒத்துப்போகவில்லையென்றால் வைக்கோல் துரும்பைக் கிள்ளிப் போட்டுப் பிரிந்து செல்வதும், பெண் மறுமணம் புரிந்து கொள்வதும், 'விதவை' என்ற சொல்லுக்கே அவள் மீண்டும் மணவாட்டியாவதும் வழக்கமாக இருந்த சமுதாயங்களிலெல்லாம் இந்த அரக்கன் தடம் பதித்துவிட்டான். தந்தையின் சமுதாயமாக இந்திய சமுதாயம் மாற்றம் பெற்றபோது, பிறந்த வீட்டை விட்டுப் புதிய வீட்டுக்குச் செல்லும்

For more ebooks visit: https://getmyebook.in/

அருமை மகளுக்குப் பரிசுகள் அன்புடன் வழங்குவது இயல்புதான். அது சீதனம்.

ஆனால் அந்த ‘சீதனம்’ கட்டாயப்படுத்தப்பட்டு, பெண்ணின் வாழ்வைக் கேள்விக் குறியாக்கும்போது, அது அந்த அரக்கனின் தடம் பதித்த திருவிளையாடல்தான்.

எழுபத்தைந்தாம் ஆண்டில், உலக மகளிர் ஆண்டென்று கொண்டாடினோம். பிறகு பத்தாண்டுகள் சென்று எண்பத்தைந்தில், ஏற்ற இறக்கங்களைக் கணக்கெடுத்தோம். அப்போது ஒரு கூட்டத்தில் பங்கெடுத்த மருத்துவக் கல்லூரிப் பேராசிரியையான ஓர் அம்மையார், ‘ஸ்டவ்' வெடித்து வரும் இளம் பெண்களின் கருகிய கோலங்களை வர்ணித்தார் கல்லும் கரையும் வண்ணம். திருமணமாகிப் பத்தாண்டுகளுக்குள் இப்படி மரணங்கள் நடந்தால் விசாரணை செய்யச் சட்டம் வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

நமக்குத்தான் எத்தனை சட்டங்கள் இருக்கின்றன? வரதட்சணை கொடுக்கவோ, வாங்கவோ கூடாதுதான். ஆனாலும் பகிரங்கமாகச் சட்டமீறல்கள் நிகழ்கின்றன. ஏன்? திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர். பெண்ணின் கழுத்தில் தாலி கிடக்க வேண்டும். அது வேலி, கற்புக்கு ஆதாரம். அவளுடைய படிப்போ, ஆற்றலோ ஏனைய தகுதிகளோ பொருளாதாரச் சுயச்சார்போ அந்தத் ‘தாலியை’ ஈடு செய்ய முடியாது.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன், முதல் வகுப்பு அதிகார பதவியில் இருந்த தன் மகளுக்கு ஒரு நண்பர் ஒரு லட்சம் செலவழித்துத் திருமணம் செய்தார். “இது

For more ebooks visit: https://getmyebook.in/

கேவலமில்லையா? இப்படி ஒரு திருமணம் செய்யலாமா?” என்று கேட்டேன்.

“என்னம்மா செய்ய? இன்னொருவர் வந்து மேலும் பணம் கொடுத்து, இதே மாப்பிள்ளையைத் தட்டிச் செல்வார். என் பெண்ணுக்கு ‘எமோஷனல் செக்யூரிட்டி’ (ஊணர்வுப் பாதுகாப்பு) வேண்டுமே” என்றார்.

கல்லூரிகளிலும், வரதட்சணை எதிர்ப்பு அரங்குகளிலும், வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று சூளுரை செய்த பெண்கள் படித்து முடித்து கஷ்டப்பட்டு கையூட்டுக் கொடுத்தேனும் ஒரு வேலை தேடி சுயசார்பு பெற்றதும், சூளுரை மடிந்து போகிறது. தன் திருமணத்துக்குப் பொருள் சேர்ப்பதில் குறியாக இருக்கிறாள்.

தாலி வேலி என்று வரதட்சணை அரக்கன் இவள் ஆளுமையை ‘துவம்சம்’ செய்கிறான். உழைப்பும், சுயசார்பும் இல்லற வர்க்கங்களில் பெண்ணுக்குக் கல்வியும் பொருளாதாரத் தன்னாற்றலும் இருந்தும் பரம்பரைப்பண்பாட்டில் ஆளுமையைத் தொலைக்கிறான். ஆனால், அவனுக்கும் மேலாக உடலுழைத்துக் கஞ்சி குடிக்கும் குடும்பப் பெண்களின் தற்சார்பையும் வரதட்சணைப் பேய் கபளீகரம் செய்கிறது. இந்த அவலத்திற்கு சுதந்திர அரசால் கொண்டு வரப்பட்டதவறான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும் காரணமாகின்றன. கலைநயம் மிகுந்த, கண்களையும் கருத்தையும் கவரும் அற்புதச் சேலைகளை உருவாக்கும் எளிய குடும்பத்தில் ஒரு பெண்ணும் அத்தகைய திருமணச்

For more ebooks visit: https://getmyebook.in/

சேலையை உடுத்த முடியாது. விவசாய உழைப்புப் பெண், உயர் சன்ன ரக அரிசியை வாங்கி உண்ண முடியாது. அவள் கஞ்சிக்குத் தட்டேந்தும் அவலத்தில்தான் நிற்கிறாள் இன்னும்.

தங்கம் விலை கிடுகிடுவென்று உச்ச விலையில் உட்கார்ந்தாலும் வணிக நிறுவனங்கள் - தொலைக்காட்சி ஊடகங்களில் மாடல் பெண்கள் மேனிகளில் கடை விரிக்கும் பொன்னணிகள் பெண்ணின் கனவில் ஆசை வலை விரிக்கின்றன.

காதல் - கற்பு என்ற சொற்களைக் குறிப்பாக்கிக் கொண்டு, பெண் வாணிபத்துக்குத் தோதாகக் கதைகள் பின்னி - திரை ஊடகங்களில் விரசமான பாடல்கள், ஆட்டங்கள் என்று மனித அழகுகளைக் கொன்று பெண்களை விட்டில் பூச்சிகளாக்குகின்றன.

காலம் காலமாக உழவோட்டுவதும், நாற்று நடுவதும், பசுமை காண்பதுமாக இயற்கையோடிணைந்து தாமும் வாழ்ந்து உலகையும் வாழ வைத்த கிராம மக்கள் சமுதாயத்தில், பெண்கள் பல்வேறு கிடுக்கிப் பிடிகளில் வதைக்கப்படுகிறார்கள்.

மக்களுக்கு அவசியமில்லாத பல்வேறு பொருட்களைக் குவித்து சந்தைப் பொருளாதாரத்தில் வாழ்வாதாரங்கள் வற்றிய குடும்பங்களைச் சந்திக்கு இழுக்கும் பொருட்களாக வரதட்சணைப் பட்டியல் விரிகிறது. நாற்பதாயிரம் ரூபாய் வண்டி, கட்டில் - பீரோ, மாப்பிள்ளைக்குச் சங்கிலி, மோதிரங்கள், வாட்ச், தங்கப் பட்டை, பெண்ணுக்கு ஆபரண சவரன்கள், வெள்ளிச் சாமான்கள், அடுப்பு, குக்கர்... இன்னும் என்னென்னமோ..!

For more ebooks visit: https://getmyebook.in/

இத்தகைய பின்னணியில், வரதட்சணை என்ற பேயைத் தோற்றுவித்து, எந்தச் சட்டத்துக்கும், பெண்ணின் மேன்மைகளுக்கும் சாகாத சிரஞ்சீவிபோல் சமுதாயத்தில் வளர்த்துவிட்ட குடும்பங்களின் பிரதிநிதிபோல் பெண், ஓர் ஒளிப்புள்ளியைக் குத்தி, 'திருமணம்' என்ற அலங்கார பலூனை வெடிக்கச் செய்து இருக்கிறாள். இது அழுத்தங்களின் உச்சக்கட்டத்தில் சிதறிய ஒளிப்புள்ளியானாலும் இத்தகைய புள்ளிகளைச் சமூகம் பொழுது போக்குக்காகக் கிடைத்த அவல் போல் மெல்லுவதுடன் நிற்காமல், வரதட்சணைப் பேயை வீழ்த்தப் பல முனைகளிலும் ஆண் பெண் அணிதிரண்டு புதிய வாழ்வுக்கான போராட்டத்தைத் தொடங்குவதற்கான உந்து சக்தி என்று அடையாளம் காண வேண்டும்.

(ஏற்கனவே, நிஷா சர்மாவைக் குறித்து 'அரக்கன்' விடுத்த ஏவுகணைச் செய்தி ஒன்று பத்திரிகையில் வந்துவிட்டது. அரக்கர்கள் மாயாவிகள் என்பது புராண மரபு)

எனவே பெண்ணே, நீ உறுதியாயிரு. முன் வைத்த அடியைப் பின்னிழுக்காமல் அணிதிரண்டு போராடலாம்.

**‘பெண்ணே நீ’,**
**ஆகஸ்ட், 2003**

For more ebooks visit: https://getmyebook.in/

# 16. செல்லாக் காசாகும் சட்டங்கள்

குடும்பங்களில் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைக்கு எதிராக வன்முறைத் தடுப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளைப் பெண்கள் அமைப்புகள் தீவிரமாக மேற்கொண்டிருக்கின்றன. குடும்பம் சார்ந்து பெண்களுக்கு வன்முறைகள் இழைக்கப்படுவது காலம் காலமாகவே நிகழ்ந்து வருகிறது.

பெற்றோர்கள், புகுந்தவீடு, பிள்ளைகள் ஆகிய அனைத்துச் சார்பும் ஆணாதிக்கக் குடைகள் தாம். பெற்றோர் மகளைக் கை கழுவிய பின் அவள் புகுந்த வீட்டுக்கு அடிமையாகிறாள். பின்னர் மகனைச் சார்ந்து அவள் வாழ வேண்டும். ஒரு கணவனுக்கு மனைவி, அசையும் சொத்து போன்றவளே. அவளை அவன் அடிக்கலாம். துன்புறுத்தலாம். ஆணாதிக்கச் சமுதாயத்தில், குடும்ப வன்முறைகள் நியாயப்படுத்தப்பட்டிருக்கிறது. பெண்ணை மேன்மைப்படுத்த சமுதாயத்தில் உரிமையுள்ளவளாக அவளை வாழச் செய்ய இதுவரையில் பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. தேவதாசி ஒழிப்பு, விபசாரத் தடைச் சட்டம், வரதட்சணை ஒழிப்பு, இளம் பருவத்திருமணம் எல்லாமே சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டாலும், பெண்ணின் நிலை முழுவதும் சீரடைந்து விடவில்லை. மணவிலக்கு தொடர்பான சட்டம் ஒன்று மட்டுமே இடைநிலைக் குடும்பங்களில் ஓரளவு பயன்பட்டிருக்கிறது.

For more ebooks visit: https://getmyebook.in/

வரதட்சணைச்சாவுகள் சட்டபூர்வமாக வழக்கு மன்றத்துக்கு வரும்போது, மாமியார், நாத்திமார் போன்ற பெண்களே குற்றவாளிகளாக முதன்மைப்படுத்தப்படுகின்றனர். குடும்ப வன்முறைக்கு எதிரான சட்டம் பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்ற கருத்தாக்கத்தையே மேலும் தீவிரமாக்கும் அபாயம் இருக்கிறது. ஓர் ஆணைச் சார்ந்து நிற்பதே பெண்ணுக்குச் சமுதாய மதிப்பை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. மகனைச் சார்ந்து பாசம்பொழியும் தாய். அவனுக்கு நல்ல மனைவியைக் கட்டி வைப்பதில் ஆர்வமாக இருந்தாலும், அவள் தன் மகனின் பாசத்தைக் கூறுபோடும் நடப்பைத் தாங்க இயலாத விரோதியாகிறாள். புதிய மனைவியும் அவ்வாறே அவனை முழுவதுமாகச் சார்ந்து மாமியாரை விரோதக் கண் கொண்டு பார்க்கிறாள். இதேபோல் நாத்தி - அண்ணி - மூத்த தாரம் - இளையதாரம் மக்கள் என்று பெண்களுக்குள் ஒற்றுமை கண்டு வலிமை பெற வேண்டிய உறவுகள்- பெண் எத்துணை சுயச்சார்பும் அறிவும் ஆற்றலும் பெற்று மேலோங்கினாலும், பிளவுப்பட்டு, ஆணாதிக்க சாம்ராச்சியத்தை மேலும் வலிமைப்படுத்தவே பயன்பட்டிருக்கின்றன.

மேலும், பல தார மணத் தடைச்சட்டம் இருக்கிறது. விபச்சாரத் தடைச்சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டங்கள் வெறும் செல்லாக் காசுகளாக எங்கெல்லாம் போயிருக்கின்றன என்பதை ஆராய்ந்தால் ரிஷி மூலம் நதி மூலம் கதையாகத்தான் முடியும். ஒரு பெண் கைம் பெண்ணாகும்போது கைம்பெண் வன்முறைகளை,

For more ebooks visit: https://getmyebook.in/

ஒரு பெண்ணே இழைக்கிறாள். 'நீ விதவை விதவை' என்று குத்தும் கொடுமையைப் பெண்வர்க்கமே செய்வதாக, இன்றும் தொலைக்காட்சித் தொடர்கள் மேலும் மேலும் - மறந்து மேடிட்டுப் போன குழிகளைத் தோண்டி வலியுறுத்துகின்றன.

பாலியல் வன்முறை போன்ற கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பெண், அந்தக் குற்றத்தைச் செய்தவனையே மணந்து வாழ்நாளெல்லாம் கற்பைப் பேணுவதாகவே கருத்தாக்கம் நிலைப்படுத்தப்படுகிறது. விபச்சாரத் தடைச் சட்டம் எந்த ஆணையேனும் குறிப்பாக்கித் தண்டனை தந்திருக்கிறதா? எது நிகழ்ந்தாலும் பெண்ணின் தூய்மையில் தான் கரும்புள்ளி குத்தப்பட்டு ஒதுக்கப்படுகிறாள். இன்றைய ஆணாதிக்கம் எல்லாச் சட்டங்களையும் செல்லாக்காசுகளாக்கிவிட்டு, பெண்ணுக்கு உயிர் வாழும் நம்பிக்கையையே மாய்த்துக் கொண்டிருக்கிறது.

இந்தச் சட்டங்கள் பெரும்பான்மை அடித்தள சமுதாயத்துக்கு எந்த வகையிலும் பயன்படப் போவதில்லை. வறுமையிலும், உழைப்புச் சுரண்டலிலும் அடிப்படைத் தேவைகளை விழுங்கும் மாயக் கவர்ச்சிகளிலும் அலைபாயும் சராசரி, அடிமட்டப்பெண்கள் உய்ய வேண்டுமானால் அறியாமை நீக்கும் கல்வி, பொருளாதார சுயச்சார்பு, தன்மான விழிப்புணர்வு பெறும் நோக்கில் பெண்கள் அமைப்புகள் செயல்பட வேண்டும்.

இலவசக் கல்வி போதிக்கும் அரசு நிறுவனங்கள், ஒருவேளை உணவும், பஸ்ஸில் பயணம் செய்யும்

For more ebooks visit: https://getmyebook.in/

சலுகையும் அளிக்கின்றன. ஆனால் கல்விக்கூடங்கள் எழுத்தறிவின்மைகூட நீங்காத வகையில்தான் இயங்குகின்றன. பெரும்பான்மைப் பிஞ்சுகள் ஆறேழு வகுப்புகளிலேயே உதிர்ந்து குழந்தைத் தொழிலாளியாகின்றனர். பெண் வயதுக்கு வந்ததும், இங்கு அவளுக்கு ஒரே பாதுகாப்பு திருமணம் மட்டுமே! எனவே சட்டங்களில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் பள்ளிக் கல்வியைப் பயனுடையதாக்க, கற்பித்தலை மேலும் தீவிரமாகவும் கூர்மையாகவும் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதற்கு நிதி ஒதுக்குவதோடு கடமை, முடிந்துவிடவில்லை. கற்பிப்பவர்களின் உண்மையான ஈடுபாடு வருங்கால சமுதாயத்தினருக்கு ஒரு புதிய அடித்தளத்தை நிறுவுவதாக அமைய வேண்டும். இவற்றுக்கும் மேல் பெண்கள் ஆணாதிக்கக் கூறுகளை இனங்கண்டு விழிப்புணர்வு பெறச் செயல்பட வேண்டும்.

**‘பெண்ணே நீ,**
**ஜூன், 2002**

For more ebooks visit: https://getmyebook.in/

# 17. சட்டம் யாருக்கு?

அண்மையில் ஒரு திரைப்படநடிகையும் அவள் தாயும், விபசாரத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதாகவும், அதற்காகத் தொடரப்பட்ட வழக்கில், விடுதலை பெற்றதாகவும் நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியாயிற்று. எனக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. அப்படி ஒரு சட்டம், பெண்களை மட்டுமே குற்றவாளியாக்கித் தண்டிக்கும் சட்டம் இன்னமும் உயிரோடு இருக்கிறதா என்று மலைத்தேன்.

விபசாரம் என்று சொல்லப்படுவதற்கு என்ன பொருள்? ஒரு பெண் தன் உடலை வாணிபப் பொருளாக்கி உரிமையில்லாத ஆண் அனுபவிக்க உடன்படுவதை அச்சொல் குறிப்பாக்குகிறது. ஓர் ஆண் தொடர்பில்லாமல் அவள் இந்த ஒழுக்கக் கேட்டுக்குக் காரணமாக முடியாது. ஆனால் விபசாரத் தடைச்சட்டம் வீட்டிலோ, விடுதியிலோ இருக்கும் பெண்ணை மட்டுமே தண்டனைக்குரியவளாக்குகிறது. சமூக ஒழுக்கம் என்பது பெண் சார்ந்த கலாசாரம்தானா? அந்நாள் 'தேவதாசி' என்ற முறை கடவுளைத் தொடர்பாக்கி இந்த வாணிபத்தை அநுமதித்தது. ஒரு குடும்பத்துப் பெண்ணுக்குக் கிடைக்காத சிறப்புகள் அவளுக்கு உண்டு. அறியாமை இருட்டில், உழைப்புச் சாதனமாக, குடும்ப வாரிசைப் பெற்றுத்தரும் கருவியாக மட்டுமே அவள் வாழ்ந்தாள். ஆனால், தாசிக்கு அவருக்கே இயல்பான தாய்மையும், குடும்ப கவுரவமும் மறுக்கப்பட்டது. இந்த அநியாயத்துக்கெதிராக டாக்டர் முத்துலட்சுமி அம்மை

For more ebooks visit: https://getmyebook.in/

போராடி, சட்டபூர்வமாக இந்த மரபை ஒழித்தார். அன்றைய சட்ட சபையில், நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த தலைவர்கள் என்ற கௌரவத்துக்குரியவர்கள்கூட, இதை எதிர்த்தார்கள். இந்த மரபை ஒழித்தால் சமூக ஒழுக்கம் குலைந்து போகும் என்றே காரணம் காட்டினார்கள். ஆண்களின் ஆதிக்கத்தில் உள்ள சமூகத்துக்கு அவர்கள் அத்துமீறலுக்கு வடிகால்கள் தேவை என்ற வாதம் ஏற்புடையதாக இல்லை. 'ஒரு பெண்ணை போகத்துக்குரிய சாதனம்' என்ற கருத்தில் வாழ்வதையே காந்தியடிகள் மறுத்துள்ளார். அவர்தம் வாழ்வையே சத்தியசோதனை என்ற திறந்த புத்தகமாக மக்களுக்கு வழங்கி இருக்கிறார். அவருடைய வழிகாட்டலில், அரசியல் சுதந்தரம் பெற்றோர், அந்நாளைய தேசத்தொண்டர்கள், மிகப்பலர் இல்லாவிட்டாலும், ஒரு சிலரேனும் அக்கால வழக்குக் கொப்ப, இளம்பருவத் திருமணம் செய்து கொண்டிருந்தாலும், பிரும்மசரியம் என்ற ஒழுக்கத்தை மிக மேலாக மதித்தார்கள். ஒரு தொண்டரின் இளம் மனைவி காந்தியடிகளை நேரில் சந்தித்து, எனக்கு ஒரே ஒரு குழந்தை மட்டும் வேண்டும். அதற்காக என் கணவரிடம் தாங்கள் பரிந்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ஒரே ஒரு குழந்தை பெற்றார். அப் பெண் குழந்தைக்கு காந்தியடிகளே, சீதா என்று பெயரும் வைத்தாராம்! இத்தகைய ஒழுக்க நெறியில் மக்களைக் கொண்டு செல்லும் தலைவர்கள் இன்று இல்லவே இல்லை. சுவடுகள் அழிந்தே போயின. அன்றைய அரிச்சந்திர நாடகம், ஒரு மகாத்மாவைத் தோற்றுவித்த பெருமை பெற்றது. அத்தகைய

For more ebooks visit: https://getmyebook.in/

காட்சிக்கலை, பெண் சோரத்துக்குரிய ஒரு தொழிலாகவே பின்னாளைய சமூகத்தில் பார்க்கப்பட்டது. இதே காட்சிக்கலை 'திரை' என்ற பரிணாமம் பெற்ற பிறகு, தாசி மரபுக்குரிய நெறிகளையும் தூக்கியெறிந்து பெண் வாணிபமாக வளர்ந்துவிட்டது. காட்சி ஊடகங்கள், உலகமயமாக்கலின் சந்தைப் பொருளாகவே பெண்ணுடலை, அவள் இளமையை, திறனை குத்தகை எடுத்துள்ளன.

புத்தாயிரத்தை ஒட்டிய ஒரு பெண்கள் சந்திப்பு நிகழ்வில் அந்நாள் முன்னணி நடிகையாகத் திகழ்ந்த ஒரு பெண்மணி, “தரக்குறைவாக மேனியைக் காட்டி நடிக்கப் பெண்கள் முன் வருவதால்தானே சீர்கேடுகள் நிகழ்கின்றன, நீங்கள் ஏன் மறுக்கக்கூடாது?" என்று தொடுக்கப்பட்ட கேள்விக்குக் கூறிய விடை குறிப்பிடத்தக்கது : “ஒருத்தி ஒத்துக் கொள்ளவில்லை என்றால், இந்தத் தொழிலில் களமிறங்க, புகழ்பெற, பலரும் முன் வருகிறார்கள். இந்தக் கலைத்துறையில் பெண்ணின் விருப்பத்துக்கோ கருத்துக்கோ எந்த மதிப்பும் கிடையாது...” அதிர்ச்சியாக இருந்தது!! இன்று வரையிலும் எந்தப் பெண்கள் அமைப்பும், திரைத்துறைப் பெண்களுக்காகப் போராடக் குரல் கொடுத்தாகத் தெரியவில்லை. பல கொலைகள், தற்கொலைகள் ஓசைப்படாமல் நிகழ்கின்றன. சிலபல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு நடிகையின் தற்கொலை - கொலைதான் என்று இத்துறைப் பிரமுகர் ஒருவரை சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டி வழக்குப் பதிவு செய்தது. ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. இந்தக்

For more ebooks visit: https://getmyebook.in/

கலை உலகில் அவர் தம் திறமைக்காக வெற்றிப் படங்களுக்காகப் பாராட்டு விருதுகளும் பெற்றிருக்கிறார்.

இந்நாட்களில் ஒவ்வொரு புதுப்படத்திலும் பாடல் ஆடல் காட்சிகளில் இளம் பெண்களைத் தரக்குறைவாக ஆட வைக்கிறார்களே? இது விபசாரமல்லவா? இந்த அழகிப் போட்டிகளுக்கு உட்கருத்து வாணிபமல்லாமல் வேறென்ன? போட்டியில் கலந்து கொள்பவள் திருமணம் செய்து கொண்டிருக்கலாகாது என்ற விதி - புதிய தேவதாசி முறையா? பொய்யை மெய்யாக்கி, மெய்யைப் பொய் யாக்கும் தொழில் நுட்பங்களின் கவர்ச்சி வலையில், மனிதகுல மேம்பாட்டுக்காக அரிய பெரிய சாதனைகளை இலக்கு வைக்க வேண்டிய இளமை வேகங்கள் சிக்கிப் பலியாகின்றன. திரைக் காட்சி அத்துமீறல் அராஜகங்களுக்கு எந்த வகையிலேனும் முடிவு கட்ட வேண்டியது இன்று அவசியமாக இருக்கிறது. கலைத்துறை நல் ஒழுக்கங்களை வளர்க்காவிட்டாலும் போகிறது; அது கொலைத் துறையாகப் பரிணமிக்கலாகாது.

**‘பாரதமணி'**
**மே - ஜூன், 2004**

For more ebooks visit: https://getmyebook.in/

# 18. புள்ளி ராஜா என்ன சொல்கிறார்?

புள்ளி ராஜா புதிர் அவிழ்ந்திருக்கிறது.

புள்ளி ராஜா யார், திடுமென்று இவருக்கு ‘அது’ வருமா என்று ஏன் தொலைக்காட்சி வாயிலாகக் கேட்கிறார்கள்? இது விரைவில் வரப் போகும் 'சீரியல்’ விளம்பரம் என்று பல பெண்கள் ஆரூடம் சொன்னார்கள். கடைசியில் ‘என் அப்பாகுதிருக்குள் இல்லை’ என்ற மாதிரி புதிர் தெளிவாகிவிட்டது.

'எய்ட்ஸ்’ என்ற ஆட்கொல்லித் தேய்வு நோயைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வாசம் இது யாருக்கு விழிப்புணர்வு கொடுக்கப்படுகிறது? தொலைக்காட்சிப் பெட்டியின் முன் இருக்கும் கூன், கிழடு, அஞ்சும்பிஞ்சுமான குஞ்சுகள், 'இரண்டுங்கெட்டான்கள்’ எல்லாருக்கும் வெறும் கேள்வியாகக் கொக்கிப் போட்ட சுவாரசியம் விளக்கமான பின்னும் பிடிபடவில்லை.

முப்பது ஆண்டுகளுக்கு முன் ஏறக்குறைய இதே பாணியில்தான்அரசு குடும்பக்கட்டுப்பாடு பிரச்சாரத்தை மேற்கொண்டது.

கருக்கலைப்பு, கருத்தரிக்காமலிருக்கும் வழிமுறைகள், பெண்ணுக்கான சாதனங்கள், அறுவைச் சிகிச்சை, ‘மாலாடி' போன்ற மாத்திரைகள் என்ற சொற்கள் மிகப் பரவலாக விளம்பரங்களில் வீசப்பட்டன. அந்தக் காலத்தில் வடநாட்டில் நான் ஒரு பேருந்தில் பயணம் செய்தபோது இடையில் தேநீருக்காகப் பேருந்து

For more ebooks visit: https://getmyebook.in/

நின்றது. அங்கே மிகப் பெரிய விளம்பரத் தட்டி ஒன்று எல்லோருடைய கவனங்களையும் தடுத்து நிறுத்தியது.

ஓர் ஆண், ஒரு பெண் சிவப்பு முக்கோணம் (லூப் ரகியே! தாம்பத்ய ஸாக்கோ ஹானி நஹிஹை!) 'லூப் வைத்துக் கொள்ளுங்கள்! தாம்பத்திய சுகம் குறையாது' என்பதுதான் வாசகம். ஒரு சிறு கிராமக் குழந்தை அதைப் பார்த்துவிட்டு (அரைகுறைப் படிப்பு) லூப் வேண்டும் என்று கேட்டான்! பிடிவாதம் பிடித்து அழுதான்!

மூடி வைத்திருக்கும் வரையிலும்தான் இரகசியம். 'ஒழுக்கம்' என்ற ஒரு கோட்டைப் பரிபாலிக்க, அந்த இரகசியங்கள் தேவைப்பட்டன. ஆண்-பெண் பாலியல் உணர்வுகள், ஒவ்வொரு இன மக்கள் வகுத்துக் கொண்ட கலாச்சார மரபுகள் சார்ந்து ஒழுக்கக் கட்டுப்பாடுகளால் பாதுகாக்கப்பட்டன. மேலைநாடுகளில் திருமண வயதில் ஒரு பெண் இருந்தால் அவள் பல இளைஞர்களுடன் பழக வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. வயது வந்த பெண் தன்னோடொத்த இளைஞருடன் பழகாமல் இருந்தால் பெற்றோரே விருந்து, கேளிக்கை என்று ஏற்பாடு செய்வார்கள், கவலைப்படுவார்கள்.

ஆனால், நம் நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் மதுவும், ஆண்-பெண் வயது வந்தபின் தனியாகப் பழகுவதும், முத்தமிடுவதும் தகாத செயல்கள். காதல், களவு, திமணம், கற்பு ஆகிய அனைத்துத் தனிமனித ஒழுக்கங்களும் சமுதாய ஒழுங்கோடு, நாகரிகத்தோடு தொடர்பு கொண்டவையாகப் பார்க்கப்படுகிறது; பார்க்கப்பட்டு வருகின்றன (இந்த மரபுகள்தாம் நேர்மை

For more ebooks visit: https://getmyebook.in/

தவறும் மனிதர்களின் கட்டப்பஞ்சாயத்துக் கொடுமைகளாகப் பரிணமித்திருக்கின்றன எனலாம்.)

இப்போது 'புள்ளிராஜா' என்ன சொல்கிறார்? இந்த விளக்கக் காட்சி தொலைக்காட்சிகளில், பிள்ளைகள் பார்க்கக்கூடிய எல்லா நேரங்களிலும் ஒளிபரப்பாகின்றன. ‘புள்ளிராஜா' சாராயக்கடையில் குடிக்கிறார். 'குடிச்ச மப்பில். அதாவது மது அருந்திய வெறியில் பொம்பளக் கிட்டப் போனா'. என்று முடிச்சு அவிழ்க்கப்படுகிறது.

‘மது' இந்தக் கேட்டுக்குப் பிள்ளையார் சுழி.

‘பெண்' அடுத்தப் படி

இப்போது முதல் செய்தியாகிய மதுவைப் பற்றி யோசிக்கலாம்.

‘மதுப்' பழக்கம் ஒரு மனிதரை மெல்ல மெல்ல நலமழித்து, உற்றார், உறவினர், பெண்டு பிள்ளை எல்லோரும் வெறுக்க, வாழ்வையே சிதைத்து அழிக்கும் என்ற உண்மையை எல்லோரும் அறிவார்கள். மதுவின் தீமைகள் ஒன்றல்ல; இரண்டல்ல. ஒரு சமுதாயத்தின் பொருளாதார வளமையை ஆன்மீக வலிமையை, இந்தத் தீமை உறிஞ்சி விடுகிறது. எல்லாச் சமயங்களிலும் சான்றோரும், ஆன்றோரும் ‘மதுவருந்துதலைத் தீமை' என்றே மனித குலத்துக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். ஆனால் இந்தத் தீமை சினிமா, தொலைக்காட்சிகளில் குடிப்பதற்கான பிரச்சாரம்போல் மனித உழைப்பு, குடும்பம், பெண் பிள்ளைகள் என்று வாழ வைக்கவில்லை. சாராயமாகக் குடும்பத் தலைவரின்

For more ebooks visit: https://getmyebook.in/

உழைப்பாளியின் உடலை அரித்து நடுத்தெருவில் புரள வைக்கிறது. இது இன்றைய நடப்பியல் உண்மை. ஆனால் இதெல்லாம் பார்ப்பவர் மனதில் படிவதில்லை.

சுதந்திரப் போராட்டத்தின் முதல் கட்டமாக, தலைவர்கள் மதுவிலக்கையே நெறிப்படுத்த முயன்றார்கள். 1937-ல் முதல் காங்கிரஸ் சட்டசபை ஆட்சிக்கு வந்தபோது இராஜாஜி சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கைக் கொண்டு வந்தார். அந்நாட்களில் பேராசிரியர் கல்கியின் விமோசனக்கதைகளும், இராஜாஜி அவர்களின் முனைப்பான பிரச்சாரங்களும் மதுவிலக்கையே மக்களின் பொருளாதார சுயச்சார்புக்கு முதல்படியாக வழிகாட்டின. அக்காலத்தில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள், குடும்பம் என்ற எல்லைக்கோடுகளைத் தாண்டி மதுவிலக்குப் பிரச்சாரத்துக்கே முன் வந்தார்கள். கள்ளுக்கடை மறியல், அந்நியத் துணி எரிப்பு என்பவையே பெண்கள் பங்கெடுத்த 'அத்துமீறல்'கள். வீராங்கனையாகத் திகழ்ந்த மணலூர் மணியம்மா, ஒடுக்கப்பட்ட மக்களின் சிறுவர்-சிறுமியருக்கு ஆரஞ்சு மிட்டாய் வாங்கிக் கொடுத்து தென்னை மரங்களில் கட்டிய கலயங்களைக் கூரிய கல் கொண்டு குறி தப்பாமல் அடித்து உடைக்கும் விளையாட்டில் ஈடுபடுத் தினார். ருக்மணி அம்மாளும் இன்னும் சில சகோதரிகளும் மரங்களில் யாரும் கள் கலயங்கள் கட்டக்கூடாதென்று இரவு பகலாகக் காவல் இருந்தார்களாம். ஓரிரவில் நாலைந்துபேர் கலயங்கள் கொண்டு வருவதைக் கண்ணுற்று எழுந்து தடுக்க

For more ebooks visit: https://getmyebook.in/

முன்வந்தபோது மலசலங்கள் நிறைந்த சட்டியை அவர்கள் மீது கவிழ்த்துவிட்டு ஓடினார்களாம்.

மனிதர்கள் அனைவரிடமும் உள்ளுணர்வு என்ற மனசாட்சி இருக்கிறது. அது எப்போதும் அவர்களைத் தீயவழியில் செல்லாமல் விழிப்புணர்வுடன் பாதுகாக்கிறது. ஆனால், மது அறிவை மறைத்து மனசாட்சியைக் குருடாக்குகிறது. எனவேதான் தீய வழிகளில் துணியுமுன், மதுவை அருந்துகிறார்கள்.

சுதந்தரம் பெற்று, இருபத்தைந்தாண்டுகளுக்கு மது தீமை என்ற உணர்வு பாதுகாக்கப்பட்டிருந்தது. பள்ளி, கல்லூரி மாணவர்கள், ஆசிரியர், நடுத்தர வர்க்கம் ஆகியோருக்கு ‘மது' ஆகாது என்ற அக்கினி வளையம் இருந்தது. கதை எழுதுபவர்கள் நாயகனின் அறையில் ஒரு காலி மதுப்புட்டியை வைத்தாலே, அவன் ‘வில்லன்' என்ற குணச்சித்திரமாகி விடுவான். சினிமாக்களிலும் இந்த நெறி இருந்தது.

இப்போதோ தண்ணியடிப்பது என்ற சொற்றொடரின் நேர்ப்பொருள் பெண்ணுக்கு உரியதாக அவள் நாள்தோறும் 'பம்ப்' அடிக்கிறாள். ஆண் சம்பாதித்தாலும் சம்பாதிக்காவிட்டாலும் தண்ணியடிக்க எத்துணை அக்கிரமங்களும் செய்யலாம்.

இதையே 'புள்ளிராஜா' தெரிவிக்கிறார்.இந்நாட்களில் பள்ளி மாணவர்கள் தண்ணியடித்துவிட்டு வகுப்புகளுக்கு வருவது சாதாரண நடப்பாக இருக்கிறது. அண்மையில் ஓர் ஆசிரியர் இதைக் கண்டித்து காவல்துறையினரை அழைத்தது கண்டனம் செய்யப்பட்டது. இது பத்திரிகைச் செய்தி. பாலியல்

For more ebooks visit: https://getmyebook.in/

வன்முறைகளுக்கும் தெருவோர பெண் சீண்டல்களுக்கும் மூலகாரணம் இதுவே.

ஆக புள்ளிராஜா, தண்ணியடிப்பதும், பொம்பள தேடிச் செல்வதும் தடுக்கப்படலாகாது. ஆனால் அவர் தம்மைக் காத்துக்கொள்ள ஒரு கவசம் அணிந்து கொள்ள வேண்டும். ஆம்; ஒவ்வொரு முறையும். இது (அ)நியாயம்!

இதிலிருந்து இந்த ஆட்கொல்லி நோய்க்கான வைரஸ் கிருமிகளைப் பெண்களே உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பெண்கள் பலிகடாவாக்கப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் தொண்ணுறு சதவிகிதம் இந்த ஆட்கொல்லி நோய்க்கான கிருமிகள் பெண்களிடத்தி லிருந்துதான் பரப்பப்படுவதாக புள்ளிராஜா அறிவிக் கிறாரா? தேசிய அளவில் இது எண்பது சதவிகிதம் என்றும், எழுபத்தெட்டு சதவிகிதம் பெண் வாணிபப் பாலுறவினால் தொற்றுகிறது என்றும் ஒரு கணக்கு தெரிவிக்கிறது.

ஆனால், பெண் வானுலகில் இருந்து வரம் வேண்டி எச்.ஐ.வி. கிருமிகளைப் பெற்றாளா? மஹாராஷ்டிர மாநிலத்தில், இத்தகைய வாணிபத்துக்குத் தள்ளி விடப்பட்ட பெண்களுக்குத் தன்னார்வக் குழுக்கள் அவனிடம் இருந்து இவளுக்கும், இவனிடம் இருந்து அவளுக்கும் கிருமிகள் பரவாமல் இருக்க ஆணுக்கான கவசங்கள் வழங்கிய செய்தியும் வெளியாயிற்று.

ஆனால், தண்ணியடித்த 'மப்'பில் இவன் 'கவசம்' அணிய மறுக்கிறான். பாதுகாப்பில்லாத மூர்க்கவெறியை அவள் மீது செலுத்துகிறான். காசு

For more ebooks visit: https://getmyebook.in/

அதிகம் தருவதாக ஆசை காட்டுவதாலும் பாதுகாப்பு பறி போகிறது. பெண்கள் இத்தொழிலுக்குத் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் கட்டாயத்துக்கே 'மது'தான் காரணம். இது இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்களின் கண்ணிர்க் கதை.

குடும்பக்கட்டுப்பாட்டைக் காரணம் காட்டி, அவள் உடலுக்குள் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும்.அனைத்து மருந்து, மாத்திரை, தடுப்பு சாதனங்கள் எல்லாவற்றையும் பிரயோகிக்க, மூன்றாம் உலக நாடுகளின் பெண்கள் சோதனைச்சாலை எலிகளானார்கள்; முயல்களானார்கள்.

இப்போதோ அதே பாணியில் பெண்களின் மீதே பழி சுமத்தப்படுகிறது. இந்தப் 'புள்ளிராஜா' பிரச்சாரம், பெண்களின் இருத்தல் உரிமையிலேயே பாய்ச்சப்படும் அம்பு. ஆணுக்கு மேலும் மேலும் ஆதிக்க வெறியை நியாயப்படுத்தும் தந்திரம். ஆனால் பெண் இயற்கையின் பிரதிநிதி. அவளைப் பலிகடாவாக்குவது விபரீதமாக முடியும். எல்லா ஒழுக்க வரைகளையும் ஆண்தான் மீறுகிறான். ஆனால் பெண் பழி சுமக்கிறாள். இந்தக் கொடுமைக்கு விரைந்து முடிவு கட்ட வேண்டும்.

**‘பெண்ணே நீ', நவம்பர் - 2003**

For more ebooks visit: https://getmyebook.in/

# 19. அவல் இடிக்கும் ஆயுதம்

தமிழக ஆட்சி அரசியலில், மக்கள் அடியோடு மறக்கப்படும் அளவுக்கு, தலைபோகும் பிரச்சினைகள் அலையலையாக எழும்பிக் கொண்டிருக்கின்றன. கருவூலம் - கஜானா காலி என்று பானையைக் கவிழ்த்துக்காட்டும் நிலையில் அரசாட்சி சொல்லியும் சொல்லாமலும் கை கழுவி விட்டது. ஒரே ஓர் ஆறுதல். வயிற்றை ஈரத் துவாலையால் அழுத்திக் கட்டிக் கொள்ள, வான் கொடையால் நீர் வீழ்ந்திருக்கிறது. ஆனால், நம் தமிழக மக்களுக்கு அந்த ஈரமும் இல்லை என்றாலும், நாம் வஞ்சிக்கப்படுகிறோம் என்ற சூடு - சுரணை உறைத் திருக்குமா என்பது ஐயம்தான். ஏனெனில், ஆட்சி பீடங்களைத் தேர்தலில் உறுதி செய்யும் திருமிகு வாக்காளப் பெருமக்கள் தாங்கள் ஒரு பெரிய குடியரசு நாட்டின் தன்மான உணர்வுடைய உறுப்பினர்கள் என்ற உணர்வுடன் செயல்படுவதில்லை. குறிப்பிட்ட அரசியல் கட்சித் தலைவர்களின் ஆட்சி பீடத்துக்கான தேர்தல் - போட்டி ஆட்டங்களில் வெற்றி தேடித்தரும் கட்சித் தொண்டர் மந்தைகளாகவே தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். தங்கள் தலைவர்களுக்குக் கொசுக்கடி, புழுக்கடி, இருமல் என்ற துன்பங்கள் நேர்ந்தால்கூட ஊரைக் கொளுத்தவோ, ஏழைப் பெண்ணுக்கு அடுப்பெரிக்கக் கிடைத்த மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு தீக்குளித்துத் தியாகம் செய்யவோ தயங்குவதில்லை.

For more ebooks visit: https://getmyebook.in/

இந்த ‘சுதந்திரச் சூழ்'லில் பெண்கள், தங்கள் எல்லைகளை நிர்ணயிக்கும் இலட்சுமண ரேகைகளைத் தாண்டி, கல்வி, பொருளாதார சுயச்சார்பு என்ற பயன்களைப் பெறப் பல்வேறு முண்டுமுடிச்சு நெருக்கடிகளில் இடைப்பட்டு, மீண்டும் பெண்ணாகப் பிறந்ததன் இலக்கில் நிற்கின்றனர். திருமணம் என்பதும் சுரண்டல் வாணிபம்தான். எல்லாப் பண்பாடுகளும் அந்த வாணிபப் பூதத்துள் அடக்கமாகின்றன. மண்ணையும், பொன்னையும் போல் ஆணுக்கு, பெண்ணும் அனுபவிப்பதற்கான ஒரு சாதனம்தான். வாணிபப்பேரங்களில் வெற்றி பெற்று வீட்டுழைப்பு, வெளி உழைப்பு, மனம், உடல் இரண்டையும் பாதிக்கும் குடும்பக் கட்டுப்பாட்டுப் பாதிப்புச்சுமை என்ற வாழ்க்கையில் அழுந்துகிறாள். ஆணின் தேவை, வசதிகளுக்கேற்ப எல்லைக்கோடுகளை அழித்தாலும் என்றும் அழியாத கற்பு நெறி, பெண்களை அந்தரத்துக் கம்பி ஆதாரத்தில் ஊசலாடவே வைக்கிறது.

இதிகாச துரௌபதை தன்மானம் குலைக்க முற்பட்ட கும்பல் அழியச் சூளுரைத்தாள். அவளுடைய சபதம் நிறைவேற கொடியவர் குருதி கொண்டு கூந்தல் முடிக்க, நாயகர்கள் பொறுப்பேற்றனர். ஆனால் கண்ணகிக்கு அத்தகைய ஊறுகள் நேரவில்லை. அவளுக்குத் துரோகமிழைத்த கணவன், செல்வங்களைப் பறி கொடுத்துத் திரும்பி வந்தபோது, தன் வணிகக் குலமானம் காக்க, இடம் பெயர்ந்து கல்லிலும் முள்ளிலும் நடக்கச் செய்தான். உளம் கரைந்த கண்ணகி நம்பிக்கையே கணவன்

For more ebooks visit: https://getmyebook.in/

உயிரென்று, காற்சிலம்பைக் கொடுத்தாள். மீண்டும் உயிரைப் பற்றிக் கொண்டு தியாகத் தீயில் குளிக்க, உயிராகிய நாயகன் இல்லை. நாயகன் இல்லாத, சந்ததி இல்லாத கொடுமைகள், இவளைச் சந்தியில் நிறுத்தும். இந்தக் கொடுமைகளுக்கு அவளை ஆளாக்கிய மன்னனிடம் நீதி கேட்கச் சென்றாள். செங்கோல் வளைந்ததைப் பொறுக்காத மன்னன் உடனே மாண்டான். மன்னனின் தேவியோ, உடன்கட்டை ஏறும் அச்சத்தை நினைத்த மாத்திரத்தில் உயிர் துறந்தாள். இனியும் பழி தீர்க்க ஒன்றுமில்லை. அவர்களுடைய உயிர்த்தியாகமே இவள் ஆற்றாமை அனலைக் கிளர்த்தியது. எனினும் இவள் ‘கற்பரசி' என்ற முத்திரை பெற, பண்பாட்டைநிலைநாட்ட, இந்தக் காப்பியத்தைப் படைத்த ஆசிரியர், அக்கினியைக் கூவி அழைத்து, நினைவாக, 'பார்ப்போர், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர்’ ஆகியோரைத் தவிர்த்து, பிற வாயில்லாப் பூச்சி சமுதாயத்தைத் தீக்கொள்ளச் செய்கிறார். இந்த நாயகி, தமிழ்ப்பண்பாட்டைக் காக்கும் காப்பிய நாயகியாகப் போற்றப்படுகிறாள். கடந்த 33 ஆண்டுகளாக இந்த நாயகி, விரித்த கூந்தலும், கையில் ஒற்றைச் சிலம்புமாக, சென்னை மாநகரின் முக்கியமான, உலகின் இரண்டாவது மிகச் சிறந்த கடற்கரைச் சாலையில் உலகப் பயணிகள் அதிசயிக்கக் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தாள்- தமிழ்ப் பண்பாட்டுச் சின்னமாக!

இத்தனை ஆண்டுகளில், இதே சாலையிலும் மாநகரிலும் அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருந்த நிகழ்ந்து கொண்டிருக்கும், அநீதச் சாவுகள்,

For more ebooks visit: https://getmyebook.in/

வன்கொலை, விபத்துகள், பெண் கொடுமைகள், வன்புணர்தல்கள், வேலிகளே பயிர் மேய்ந்து அசைபோடும் அக்கிரமங்கள் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்தாள். சென்னை மாநகரம் பாரத நாட்டின் அமைதியான நகரம் என்ற நிலையைவிட்டு, பாரதநாட்டின் அநீதமான சாலை விபத்துச் சாவுகளுக்கும் பெண் தொடர்பான அத்து மீறல்கள், தீக்குளிக்கச் செய்யும் கற்பு கலாசாரங்கள், பாலியல் கொடுமைகள், கொலைமோசடிகளுக்கும் பெயர் பெற்ற முதன்மை நகரங்களின் பட்டியலில் முதல் இரண்டு இடங்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இதே கடற்கரைச் சாலையில் ‘நெஞ்சு பொறுக்கு தில்லையே’ என்று கொதித்த பாரதி, சில ஆண்டுகளுக்கு முன் பீடத்திலிருந்து வீழ்ந்ததும், ஓசைப்படாமல் மீண்டும் பீடத்தில் ஏற்றப்பட்டதும் நிகழ்ந்தன. ஆனால் ‘கண்ணகி’ இன்றைய அரசியல் கட்சிகளின் நெருக்கடிக்கு மிகத் தேவையான 'அவல் இடிக்கும் ஆயுதமாக’க் களத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறாள். இந்தத் தமிழ்ப் பண்பாட்டுச் சின்னக் கலக்கல்கள், பொதுமக்களின் அன்றாடத் தலைவிதிகளை எந்த வகையிலும் புதிதாகப் பாதிக்கப் போவதில்லை. ஆனால் பெண் வர்க்கத்துக்கு ஒன்றை மட்டும் நினைக்க அச்சமாக இருக்கிறது.

இப்போது தமிழகமெங்கும்,தெருவுக்குத் தெரு, விரித்த குழலும் கையில் ஒற்றைச் சிலம்புமாக தமிழ்ப் பண்பாட்டுச் சின்னமான கண்ணகி எழுந்தருளி இருக்க, நம் பெரும்குடி, சிறுகுடி, காவல் திருமகன்கள்,

For more ebooks visit: https://getmyebook.in/

உயர் - இடை - மலிவுரகங்களின் போதையுடன் திக்குத்தெரியாமல் வந்துவிட்ட அபலைப் பெண்களை, ‘என்னடி பத்தினித்தனம் காட்டுற?' என்ற முகவுரையுடன் முடி பிடிக்கும், துரத்தித் துகிலுரியும், கத்தி உருவும் காட்சியே அது! சின்னத்திரைகளிலிருந்து தெருச்சந்துகள் வரை அது உயிர் பெறுவதை நினைத்தால். நெஞ்சு சில்லிட்டுப் போகிறது. மதுராக்கள், பத்மினிகள், சுமதிகள், ரீட்டாமேரிகள் என்ற வரிசையில் ஓய்ந்து போகிறோம்.

**‘தினமணி’,**
**4.1.2002**

For more ebooks visit: https://getmyebook.in/

# 20.அவலங்களுக்கு அடிப்படை

இன்று நாட்டில் நாள்தோறும் நிகழும் பஸ், கார், லாரி மோதல் விபத்துகள், கொலைகள், தற்கொலைகள் ஆகியவற்றுக்கான மூலகாரணம் பெரும்பாலும் 'குடி'தான். மக்கள் வாழும் தெருக்கள், கோயில்கள், பள்ளிகள் என்ற விதிவிலக்கில்லாமல் மதுக்கடைகளும் வியாபாரமும் சமுதாய நலனைச் சூறையாடி வருகின்றன. நம்நாட்டு விடுதலைப் போராட்ட இயக்கத்தின் உயிர்நாடியாகச் செயல்பட்ட மதுவிலக்குக்கான மறியல் போராட்டங்களில் ஆண்கள் மட்டுமின்றி அடுக்களைகளில் இருந்த பெண்களும் இடுப்புக் குழந்தை, வயிற்றுக் குழந்தையுடன் ஓடிவந்து மறியல் போராட்டங்களில் பங்கேற்று, காவல்துறையினரின் இம்சைகளை ஏற்றுச் சிறை புகுந்தனர். அந்தப் பரம்பரை இன்று இல்லவே இல்லை.

உலகில் மனித சமுதாயம் நாகரிக மலர்ச்சியில் அடி வைக்கத் தொடங்கியிலிருந்து இன்று வரையிலும் தோன்றியுள்ள பல்வேறு சமயச் சான்றோரும் ‘மது’ விலக்கத்தக்கதென்றே உரைத்திருக்கின்றனர். அறிவை மயக்கி மனிதனை இழிவுக்குக் கொண்டுசெல்லும் என்பதை எல்லோருமே உணர்ந்திருக்கின்றனர்.

உடல் உழைப்பு, உழைப்பின் பயன் கண்டு மகிழ்ந்து பகிர்ந்துண்ணல், களித்தல் என்ற சீர்மையுடன் வாழ்ந்த மண்ணின் மைந்தர்களை, உலகெங்கும் கால் வைத்த

For more ebooks visit: https://getmyebook.in/

(வெள்ளைக்) காலனியாதிக்கம் அடிமைகளாக மாற்றியது. வெள்ளையர்களுக்காகக் காடு மேடு திருத்தி, தேயிலைத் தோட்டங்களாகவும் காபித் தோட்டங்களாகவும் பயன் காண உழைக்க, கபடமில்லா மக்களின் தன்மானங்களைக் கொல்ல மதுவே கை கொடுத்தது.

நீலகிரி வாழ் தொல் குடிமக்களிடையே மதுப்பழக்கம் பரவலாக உண்டு. நான் இதைப் பற்றி நீலகிரியில் சில பெரியோரிடம் கேட்டதுண்டு. அதற்கு அவர்கள் 'எங்கள் மலையில்,தென்னை, பனை இல்லை. கரும்பும் இல்லை. கள், சாராயம் எல்லாம் கீழிருந்து வந்தவை. வெள்ளைக்காரர் வந்த பின்னரே, சாராயம், குடி எல்லாம் வந்தது' என்றார்கள்.

கோவா சுதந்தரப் போராட்டத்தைப் பற்றிய ஒரு நூலில் உலகிலேயே மிக அதிகமாகக் குடிப்பழகம் உடையது கோவா பிரதேசம் என்ற கருத்துக்கு, நமது ராஜாஜியின் உரைகளிலிருந்து சான்று காட்டப்பட்டிருந்தது. உலகில் மிக அதிகமாக உல்லாசம்,கேளிக்கை என்று மதுபானம் ஓடும் ஃபிரான்ஸ் நாட்டின் சராசரி மூன்று லிட்டர் குடிக்கிறார்கள். கோவாவிலோ ஐந்து லிட்டர் என்று புள்ளி விவரம் தரப்பட்டிருந்தது. மக்களை எழுச்சியற்றவர்களாகச் செய்ய, அடிமைகளாகவே வைத்திருப்பதற்கு 'குடி'யே சிறந்த சாதனமாகப் பயன்படுத்தப்படுகிறது.

மதுவினால் பெருமளவுக்குப் பாதிக்கப்படும் சமுதாயம், அடித்தட்டு உழைப்பாளர் சமுதாயமே. பெரும்பாலான உழைப்பாளர் வேண்டுமென்று

For more ebooks visit: https://getmyebook.in/

குடிப்பதில்லை. சுமை தூக்கும் பார வேலை செய்பவர், துப்புரவுத் தொழிலாளர், சலவை -இஸ்திரித் தொழில் செய்பவர், மீன் பிடித் தொழிலாளர், கட்டடத் தொழிலாளர், பழைய கட்டடங்களை இடிப்பவர்கள் ஆகியோரின் உடல் உழைப்பு சாதாரண மக்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதது. அடித்தள சமுதாயத்தில் உழைப்புக்கேற்ற அதிகக் கலோரிகள் உள்ள ஊட்ட உணவு கிடைக்காத நிலையில் உழைப்பு மட்டும் கூடுதலாகி இருக்கிறது.

நகர்ப்புறங்களில் இந்நாள் இன்றியமையாததாகிவிட்ட சலவை இஸ்திரித்தொழில் ஓர் எடுத்துக்காட்டு. காலை ஏழரை அல்லது எட்டு மணிக்கு நின்று கொண்டு தேய்க்கத் தொடங்கினால் இரவு எட்டு மணி வரையிலும் இவர் வேலை செய்கிறார். இவர் மனைவியோ, சகோதரியோ, மகளோ துணிகளை வாங்கிக் கொண்டு கொடுத்து ஊழியம் செய்ய வேண்டும். இந்தத் தேய்ப்புத் தொழிலுக்கு ஒரு நாளைக்கு நூறு ரூபாய் பெற்றால் அதிகம். அதில் முப்பது விழுக்காட்டை 'கரி'யே சாப்பிட்டுவிடும். துணியைப் பொறுத்து வேலை என்பதால், மதிய உணவு நேரம், இடைவேளை என்பதெல்லாம் கிடையாது. அநேகமாக இரவில் மட்டும் தான் செலவு சாமான் வாங்கிச் சமையல் நடக்கும். முப்பது விழுக்காடு போனபின் எஞ்சிய வருமானத்தில்தான் அன்றாட உணவு, உறையுள், வாடகை, குடும்பச் செலவு, நல்லது, பொல்லாதது, திடீர் விருந்து, கல்யாணம், கருமாதி எல்லாம் அடங்க வேண்டும். வார வட்டிக்காரர் எதற்கு இருக்கிறார்? இருக்கும் காசுக்கேற்ப சாமான்

For more ebooks visit: https://getmyebook.in/

வாங்கி இரவில் சமைக்கும் மனைவி, பகலுக்கு தெருவோரக் கடைகளில் இருந்து லெமன் சோறு அல்லது இட்லி வாங்கி வந்து உணவை ஒப்பேற்றி விடுவார். மாலையில் உணவுக்கு முன் தொழிலாளி நிச்சயமாகக் குடிக்க வேண்டும். வயிற்றுப் புண் ஆளை நிற்கவே வலுவில்லாமல் செய்வதுமட்டுமல்ல; வலியால் துடிதுடிக்க வைக்கும். வட்டிக் கடைக்கு மனைவியின் தாலி முதலில் போகும்.மருந்து மாத்திரை என்று இரண்டு மூன்று நாட்கள் தள்ளுவார்கள். பிறகு பழைய குருடிதான்.

இத்தகைய உழைப்பாளர்கள் குடும்பங்களில் நம்பிக்கைத் துரோகங்கள், அடிதடி, மோதல்கள், கொலைகள், தற்கொலைகள், குழந்தைத் தொழிலாளர் அவலங்கள் ஆகிய அனைத்துப் பரிதாபங்களுக்கும் அடிப்படை வறுமை, வறுமை, வறுமையே. இவர்களுடைய வருமானத்துக்கும், அடிப்படை வாழ்வாதாரங்களுக்கான விலைக்கும் சம்பந்தமே இல்லை. வறுமை குழிபறித்திருக்கும் இந்தப் பள்ளத்தைப் பல்வேறு நுகர்பொருள் ஆசைகள் வேறு மேலும் அகழ்ந்து மக்களைச் சின்ன பின்ன மாக்குகின்றன. இந்த இயலாத நிராசை நனவுலகை மறக்க, விஷச்சாராயத்தையும் அருந்துகிறார்கள். திருமணம், சாவு, கோயில் விழா போன்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் அழிவுக் கான சாராயக் கலாசாரம் தீவிரமாகப் பரவி வந்திருக்கிறது.

சின்னத்திரை, சினிமாக்களில், காக்கிச்சட்டை காவல் துறையே மதுவருந்துவதும், கற்பழிப்பதுமான செயல்களில் ஈடுபடுவது காட்டப்படுகிறது. குடிக்கும்

For more ebooks visit: https://getmyebook.in/

காட்சிகள் இல்லாத தொடரோ கதையோ இல்லை. மக்களுக்குச் சேவை புரியும் தொழில் துறையினரை மோசமாகச் சித்திரிக்கும் காட்சிகள் எப்படி அனுமதிக்கப்படுகிறதோ தெரியவில்லை.

உழைப்பாளர் சமுதாயத்தை மதுக்கொடுமையில் இருந்து மீட்பதில்தான் நாளைய இந்தியாவின் நம்பிக்கையான எதிர்காலம் இருக்கிறது. மதுக்கொடுமையில் இருந்து அவர்களை மீட்க வேண்டுமானால் அவர்களுக்கேற்ற ஊட்டஉணவும் அடிப்படை வாழ்வாதாரங்களும் முதலில் கிடைப்பதற்கு உத்தரவாதம் வேண்டும். உடலுழைப்பு, உண்மையாக மதிப்புப் பெற வேண்டும்.

ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்கு முன் மறைந்த டாக்டர் ரங்காச்சாரியிடம் ஓர் ஏழை ரிக்ஷா ஓட்டி தாங்காத வயிற்றுவலியுடன் வந்தான். குடித்துவிட்டு ரிக்ஷா இழுப்பதாலும் ஏற்ற உணவு இல்லாததாலும் குடல் புண்ணாகி இருந்தது கண்டு, அவர் சிகிச்சை செய்தார். புண் ஆறி வீடு செல்லுமுன் அவனிடம் அவர், “இனி மேல் குடிக்கக்கூடாது; மூன்று மாதங்கள் ரிக்ஷா இழுக்கவும் கூடாது" என்றாராம். “அதெப்படி? ரிக்ஷா இழுக்காமல் பிழைப்பு எப்படி நடக்கும்?” என்று அவன் புலம்பினானாம். டாக்டர் அவன் மனைவியை அழைத்து அவனுக்கு என்ன உணவு, எப்படிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னதுடன் அவன் ரிக்ஷா இழுக்காமல் இருக்கப் பொருளுதவியும் செய்தாராம்.

இதை ஒருநாள் தற்செயலாகக் கண்ணுற்ற அந்நாளைய பிரபல வழக்கறிஞர் கே.எஸ்.ராமசுவாமி சாஸ்திரி "யமன் உயிரைத்தான் கவருவான். நீயோ

For more ebooks visit: https://getmyebook.in/

உயிருடன் பொருளையும் கவர்ந்து செல்கிறாய்” என்று சுலோகத்தைச் சொல்லி, “நீர் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்து, பொருளையும் கொடுக்கிறீரே” என்று உருகினாராம்.

சேவைத் தொழில்கள் இந்நாளில் வெறும் வணிகத் தொழில்கள்!

**‘தினமணி’,**
**3.8.2002**

For more ebooks visit: https://getmyebook.in/

# 21. மெய்ப்படாத முப்பது சதவிகிதம்!

ஐந்து மாநிலங்களில் பெண்ணரசு ஏற்பட்டதைக் குறிப்பாக்கி, வியத்தகு முன்னேற்றம் என்று, எல்லாப் பத்திரிகைகளும் கருத்துரைத்திருக்கின்றன. ஆனால் ஜனநாயக ஆட்சியில் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்று முப்பது சதவிகிதம் ஒதுக்கீடு கேட்டுப் போராடிய இலட்சியத்துக்கு இது ஒருவகை வெற்றியா? உண்மையாகவே பெண்குலம் பெருமைப்படக்கூடிய முன்னேற்றம்தானா? எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஒரு நிறை. எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று மும்முறை அடித்து முழங்கிய அமரகவியின் வாக்கு மெய்ப்பட்டிருக்கிறதா? பெண்களும் ஆண்களும், வயது வந்தோர் அனைவரும் வாக்குரிமை பெற்று, தங்கள் அரசைத் தாமே தீர்மானித்துக் கொள்ளும் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பதன் விளக்கமா, ஐந்து மாநிலப் பெண்ணரசுகள்?

இந்திய ஜனநாயகத்தின் முதல் பெண் பிரதமராக, இந்திரா காந்தி பதவியேற்றபோது, உலகமே வியந்தது. நாமும் மகத்தான சாதனை என்று பெருமை அடைகிறோம்.

அவர் பதவிக்கு வருவதற்கு நேரு குடும்பம், பிரதமராக இருந்தவரின் மகள் என்ற பின்னணியே பெரிதும் வலுவாக இருந்தது. இதை மறுக்க முடியாது. இந்தியாவின் வாக்குரிமை பெற்ற மக்கள் அனைவரும்

For more ebooks visit: https://getmyebook.in/

ஏறக்குறைய வேனும் ஒரே தரத்தில், அரசியலுணர்வு பெற்றவர்களாகச் செயல்படும்போதுதான் ஜனநாயகப் பிரதிநிதித்துவம் உண்மையாக மலரமுடியும். ஆனால், சுதந்திரம் பெற்று, நாம் குடியாட்சி உரிமையைப் பெற்றபோது, எழுத்தறியாமையும், வறுமையும் மூடநம்பிக்கைகளும் மிகுந்த மக்களை, சிறந்த வாக்காளராக முன்னேற்றுவதற்கான எந்த ஒரு திட்டமும் கூர்மையாகச் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த ஐம்பத்தாறு ஆண்டுகளில், பல தேர்தல்களையும் கட்சி அரசியல்களையும் கண்டிருக்கும் மூன்று தலைமுறை வாக்காளர்கள், இன்னமும் ஜனநாயக ஆட்சி பற்றியோ, உரிமை பற்றியோ, பொறுப்பு பற்றியோ உணராதவர்களாகவே இருக்கின்றனர்.

மக்கள் தொகையில் சரிபாதி பெண்களாக இருந்தபோதும், சட்டசபைகளில் நாடாளுமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் பத்து சதவிகிதம்கூட இல்லாத நிலைதான். எனவே ஒதுக்கீடு தேவை என்று எல்லாக் கட்சிகளிலும் பெண்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில், பெண்கள் தங்களுக்குரிய மனித மதிப்புகளைக் கோருவதே ஆண்களுக்கு எதிரான கோஷம் என்று கருதப்படுகிறது. இலக்கியம் போன்ற தளங்களில் பெண்ணினம் என்று ஒதுக்கப்படுகிறது.

'ஜனநாயகம்' என்ற இலக்கை வைத்து நாம் ஆய்வு செய்யும்போது, இந்தியாவின் முதல் பெண் பிரதமர், அப்படிப் பதவிக்கு வரவில்லை. செல்வாக்குப் பெற்ற அரசியல் கட்சி, அக்கட்சித் தலைமையின் செல்வாக்கு

For more ebooks visit: https://getmyebook.in/

இரண்டுமே தலைமைப்பதவியை நிர்ணயிக்கின்றன. இந்திரா காந்தியைப் போல் அல்லது அவரிலும் சிறந்த அனுபவம் பெற்ற பெண்மணிகள் அப்போது இல்லாமல் இல்லை. அவர்கள் சார்ந்த கட்சி, பின்னணி இரண்டும் மட்டுமே பெண்களின் பதவிகளைத் தீர்மானிக்கின்றன. இந்த ஐம்பத்தாறு ஆண்டுகளில் ஜனநாயகத்தின் மிகச் சிறந்த பண்புகளையும் பொறுப்புகளையும் உணர, சாதாரண மக்களுக்கு வாய்ப்புகள் இல்லை. எனினும் மக்கள் தலைமையைத் தேர்ந்தெடுப்பதிலோ நிராகரிப்பதிலோ அந்நாளைவிட, இப்போது அதிக அனுபவம் பெற்றிருக்கிறார்கள். ஜனநாயகம் என்ற அமைப்பை அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள கொள்கைகள், சட்டவிதிகள், ஆட்சியியல் நுணுக்கங்கள் எல்லாவற்றிலும் புகுந்து விளையாடுகிறார்கள்.

முதன்முதலில், நேரு ஆட்சிக்காலத்தில் ஜனநாயக முறையில் கேரளத்தில் இடதுசாரிக் கட்சி ஆட்சியைப் பிடித்தது. ஜனநாயகவாதி என்று உலகம் புகழ்ந்த நேரு, அந்த ஆட்சியைக் கலைக்க, மகளைக் காங்கிரஸ் தலைமைப் பதவியை ஏற்கச் செய்தார். அந்த ஆட்சி கலைக்கப்பட்டது.

பின்னாளில் மகளும் தன் பதவிக்கு இடையூறு வந்ததும், நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தார். தடங்கல்களாக இருந்த சான்றோரைச் சிறைக்குள் தள்ளவும் அவர் தயங்கவில்லை. நீதி நிர்வாகத்துறையே வளைந்தது. ஜனநாயகத் தூரண்கள் வளைந்து கொடுக்க, அவர் பதவி நீடிப்புக் கறுப்புத்

For more ebooks visit: https://getmyebook.in/

துணியைக் கட்டிக் கொண்டார். அந்தப் பேராயக் கட்சியே அவர் காலத்தில் தான் உடைந்தது. தனிப்பட்ட முறையில் மிகுந்த திறமையும் வீரமும் செயலாற்றலும் கொண்ட பெண்மணியாக இருந்தும், ஜனநாயக நோக்கில் அவர் மிகச் சிறந்த ஆட்சி தந்தவராக விளங்கவில்லை.

நேர்மைப் பின்புலத்தில் எந்த ஆண் அரசியல்வாதியுமே உறுதியாக நிற்க முடியாமல் குடியாட்சிக்களம் புரையோடிவிட்டநிலையில் காலம் காலமாகப் பின்தள்ளப்பட்ட பெண் எப்படி வேறுபடுவாள்?

எல்லா அரசியல் கட்சிகளிலும் பெண்கள் அணிகள் இயங்குகின்றன. பதவியைப் பிடிப்பதைத் தவிர வேறு எந்தக் கொள்கையுமே இல்லாத அரசியல் கட்சிகளின் பெண்கள் அணிகள், அவர்கள் சார்ந்த கட்சித்தலைவர் வெற்றி பெற வாக்காளரை வாக்குப்படுத்துவதற்காகவே இயங்குகின்றன. பெண்களுக்கே உரிய, பெண் கல்வி, வேலைவாய்ப்பு சம வேலை, சம கூலி போன்ற கோரிக்கைகளும், பிற்பட்ட வர்களுக்கான ஒதுக்கீட்டுக் கோரிக்கைகளும் எல்லா அரசியல் கட்சிகளும் தூக்கிப்பிடிக்கும் அட்டைகள். இங்கே சம்பந்தப்பட்ட வாக்காளருக்குத் தனிப்பட்ட சிந்தனையோ, அரசியல் அறிவோ தேவையில்லை! ஒரு வகையில் அந்த முதிர்ச்சி வழிதவறிப்போகும் அபாயங்களாகலாம்!

தகுதி பெற்று, அவர்கள் அரசியல் பதவிகளுக்கு வருவதென்பதோ அலை ஓய்ந்து கடல் நீராட்டுக்குக் காத்திருக்கும் கதைதான். எனவே, தள்ளிவிட்டால்

For more ebooks visit: https://getmyebook.in/

நீச்சல் அடிக்க முக்குளித்துப் போராடுவார்கள்: அல்லது முழுகிப் போகலாம். இப்படித்தான், பஞ்சாயத்து ஆட்சிகளில் பெண்கள் வந்திருக்கிறார்கள். கையெழுத்துப் போடத் தெரியாத பெண்களும்கூடச் சிலுவை சுமந்து போராடும் கதைகள் வருகின்றன. இதனால் பெண்களின் திறமைகளும் போராட்டங்களும் அம்பலத்துக்கு வருகின்றன. இது ஒருவகை முன்னேற்றமே.

கணவன் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டால், மனைவியே அந்த அரசை ஏற்று நடத்தும் 'ஜனநாயகமாக'த் திகழச் செய்கின்றனர். எந்தச் சவாலையும் சமாளிக்க, குடியாட்சி உரிமைகளிலும் புகுந்து விளையாட முடியும் என்ற திறமைகளில் ஆணுக்குப் பெண் நிகர் மட்டுமில்லை; மேலாகவும் திகழ முடியும் என்று நிரூபித்து வருகின்றனர். எல்லா மாநிலப் பெண் முதலமைச்சர்களும் இந்த வகையில் வெற்றி பெற்று இருக்கின்றனர். இப்படியும் இந்தியக்குடியாட்சி இயங்கி ஏதோ ஒருவகையில் முன்னேறி வருகிறது.

ஆனால், உண்மையான ஜனநாயகத்தில் முப்பது சதவிகிதம் பெண்களுக்கான ஒதுக்கீடு என்ற இலட்சியம் மெய்ப்படவில்லை. சொல்லப் போனால், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த பெண்களுக்கிடையே கூட, அந்த ஒதுக்கீடு பற்றிய தெளிந்த ஒருமித்த சிந்தனை இல்லை என்பதே வெளிப்படை

**'தினமணி',**

For more ebooks visit: https://getmyebook.in/

**15.01.2004**

For more ebooks visit: https://getmyebook.in/

# 22. நிறைவேறுமா ஒதுக்கீட்டு உத்தரவாதம்?

மகளிருக்கு ஆட்சி உரிமை வேண்டும்; நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒரு பங்கு பிரதிநிதித்துவம் பெற ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை, ஒவ்வோர் ஆட்சி மலரும் போதும் ஒலிக்கிறது. உண்மையான ஜனநாயகம் என்பது, மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஆட்சி அமைப்பிலே ஏற்படுவதாகும். இதையே அமரகவி பாரதி, 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற குறிப்பில் உணர்த்தியிருக்கிறார். ‘அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும்' என்ற அடிப்படை உண்மையை, ஆன்மிகவாதிகளும், இன்றைய அறிவியலாரும் ஒப்புகின்றனர். மக்களுக்காக, மக்களே ஆட்சி நடத்துவதாகிய ஜனநாயகமும் இக்கருத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இச்சமுதாயக் கட்டமைப்பு, தேசிய நோக்கில், பல்வேறு இன, மத, மொழி, சாதி வேறுபாடுகளைக் கொண்டதாகும். இத்துணை வேறுபாடுகளையும் கடந்த இந்தியத்தன்மை என்ற உணர்வுதான் ஒவ்வொரு மனிதரையும் பிணைத்திருக்கிறது. கூர்ந்து நோக்கினால், ஒவ்வொரு தனி மனிதரும், ஊடும்பாவும் போல் இணைக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் இந்திய தேசிய மக்கள் குரோஷே என்ற கொக்கி

For more ebooks visit: https://getmyebook.in/

ஊசியினால் சங்கிலிப் பின்னல்களால் இணைக்கப்பட்ட அற்புத மாதிரிகள் போல் இந்திய சமுதாயக் கட்டமைப்பு அமைகிறது. ஒவ்வொரு சங்கிலிப்பின்னலும் ஒரு குடும்பம் எனலாம்.

ஜனநாயக ஆட்சியின் ஒரு சின்னஞ்சிறு உயிர்க் கருவாகவே குடும்ப அமைப்பு திகழவேண்டும். எந்தச் சாதி, சமயம், ஆதிவாசி ஆனாலும் எல்லாச் சமுதாயங்களிலும் குடும்பமாகிய உயிர்க் கருவே சமுதாய மேன்மையை அல்லது இழிவை நிர்ணயிக்கிறது. குடும்ப அமைப்பில் இரு சக்திகள் இயங்குகின்றன. இந்தச் சக்திகளே, ஆண், பெண் என்ற இரு பாலருக்குரியதாக, ஒன்றுக்கொன்று ஏற்றவையாக இணைந்து, உடல்-மன ரீதியாக முழுமையில் மலருகின்றன. இந்த அமைப்பில் தோன்றும் சந்ததி, சமுதாயத்தின், நாட்டின், உலகின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் நாற்றுகளாகின்றன. இந்தக் குடும்ப சக்தியே சமுதாய மாற்றத்துக்கு உந்து சக்தி எனலாம். குடும்ப அமைப்பில் ஆண்-பெண் இரு உறுப்பினரும் முழு உரிமைபெற்றவர்களாய், விட்டுக் கொடுத்தல், அன்பு செலுத்தல், அவரவர் இயல்புக்கேற்ப சுயநலமின்றி தங்கள் உழைப்பை ஈந்து, சந்ததியின் மேன்மைக்காக வாழ்தலே இலட்சியமாக வேண்டும். ஆனால், மனிதகுல வரலாற்றை ஆய்ந்து பார்க்கும்போது, பெண்ணின் ஆற்றல் உடல்பரமாக, போகப் பொருளாக மட்டும் முடக்கப்பட்டு, ஆணின் உடமையாகவே இயங்குவது தெளிவாகத் துலங்குகிறது. சோதிடக்காரனின் சிறகொடிக்கப்பட்ட கிளியாய், அவனுக்குச் சீட்டு எடுத்துக் கொடுத்து விட்டு,

For more ebooks visit: https://getmyebook.in/

நெல்மணியை வாங்கிக் கொண்டு கூண்டுக்குள் செல்லும் மனப்பாங்கிலேயே குடும்பத்தில் பெண் இயங்குகிறாள். ஆணும் பெண்ணும் ஒரு முழுமையின் சரிபாதியல்ல. சில கூறுகளில் அவனும் சில கூறுகளில் அவளும் முனைப்பாகச் செயல்பட இயற்கை உடற்கூறியலை அமைத்திருக்கிறது. எனினும் இயற்கையில் ஓர் ஆணைவிடப் பெண்ணே ஆற்றல் மிக்கவளாக இருக்கிறாள். இந்த உண்மை, இந்நாள் எல்லாத் துறைகளிலும் பெண்கள் தங்கள் ஆற்றலை நிரூபித்திருப்பதில் துலங்குகிறது.

இதனாலேயே, பெண்ணை உடல்பரமான நுகர் பொருள் கலாசாரத்தில் அழுத்துவதற்கான முயற்சிகள் ஒருபுறம் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் தொடர்பு சாதனங்கள் அவளை முதலாக்கியே வாணிபம் செய்கின்றன. இந்தியத்துவம், பண்பாடு என்ற பெயரில், அவள் சிந்தனைகளை முடமாக்கும் புறவயமான மங்கல அணிகளை அவள்மீது பதிக்கின்றன. உண்மையில் பண்பாடு என்பதற்கும் ஆணின் ஒழுக்கத்துக்கும் தொடர்பில்லையா? ஒரு குடும்ப அமைப்பில் முதல்வியாகிய பெண்ணின் நிலை யாது? ஆணின் ஒட்டுமொத்த ஆதிக்க சிந்தனைகளிலிருந்து சமூகம் விடுதலை பெற்றிருக்கிறதா? ஓர் ஆண் வீட்டு வேலையைப் பகிர்ந்து கொள்வது, மனைவியின் சேலையைத் துவைப்பது பத்திரிகைத் துறைகளுக்கு நகைச்சுவை!

இன்றைய குடும்ப அமைப்புகளில், பொருளாதார உற்பத்தியில் பெண் பெரும் பங்கேற்றிருக்கிறாள்.தாயாகும் தன்மை இயற்கை

For more ebooks visit: https://getmyebook.in/

கொடுத்ததாகும். ஆனால் அதைத் தீர்மானிக்கும் குறைந்தபட்ச உரிமையும்கூட அவளுக்கு இல்லை; அவனுக்கு இருக்கிறது. எந்தப் பெண்ணையும் எவனும் குலைக்கலாம். கருவழிப்புகள், தொட்டில் குழந்தைகள், அங்கும் இங்கும் தாய்மாரால் விடப்படும் சிசுக்கள், தற்கொலைகள், கொலைகள் எல்லாம், ஆணாதிக்க சமுதாய அவலங்களை அன்றாடம் பிரதிபலிக்கின்றன. இன்றைய லட்சுமிகளையும், சரஸ்வதி களையும் மனமார ஏற்று நேசித்துத் துணைகளாக ஏற்றுக் கொள்ளும் இளைஞர் இல்லாதது, வருந்தத்தக்க உண்மை. ‘நீ மலையில் வளர்ந்தாலும் உரலில் மசிய வேண்டும்’ என்பதுதான் ஆணின், அல்லது அவளை வளர்த்த அடிமைத் தாயின் சித்தாந்தம். சட்டியில் இல்லாத உரிமை, அகப்பையில் எங்கிருந்து வரும்?

சகல உரிமைகளும் உண்டு என்று ஜனநாயகத் தன்மையைப் பறையடிக்கும் அமெரிக்கநாட்டிலும்கூட, கருக்கலைப்பு உரிமைக்குப் பெண் போராடுகிறாள்.இங்கே எந்த ஒரு குடும்பத்திலும் இந்நாள் ஜனநாயகத்துக்கான கரு இல்லை. வறுமைக்கோட்டுக்குக் கீழ் உரிமை என்றால் என்னவென்று தெரியாத உழைப்பாளிப் பெண் ஆணின் மேலாதிக்கத்தால் அன்றாடம் செத்துப் பிழைக்கிறாள். தாலி, வேலி போன்ற ஓராயிரம் பண்பாட்டுப் பாரங்களை, உயிரைக் கொடுத்துக் காப்பாற்றி ஆண் அக்கிரமங்களை மேலும் வலிமைப்படுத்துகிறாள்; மடிகிறாள். இங்கே நிகழும் பெண் கொலைகளை, சாவுகளை மாற்ற எந்த

For more ebooks visit: https://getmyebook.in/

அரசியல் கட்சியேனும் முயற்சி செய்திருக்கிறதா? அன்றைய காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் மதுவிலக்கை நெறிப்படுத்தி இருந்தது.ஆனாலும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் என்று வகுக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களின் ஆதாயங்கள், செல்வம் படைத்தவர் மேலும் நிதியைச் சேர்த்துக் கொள்ளவே ஒழுகிப் போயின. வெற்றி என்று 'புள்ளி விவரங்கள்' காட்டப்படலாம். அந்த வெற்றி, சமுதாயத்தில் கானும் மேம்பாட்டில் பிரதிபலிக்க வேண்டும். மேம்பாடு பொருளியல் சார்ந்தது மட்டுமில்லை.

ஐந்தாண்டுத் திட்ட காலங்களில், கிராமங்களில் இருந்து பெருவாரியாக மக்கள் நகரங்களை நோக்கிப் பெயர்ந்தார்கள். பெண், நகரத்து நடைபாதைகளில், ஒதுங்க இடமில்லாமல் சீரழிந்தாள்; சீரழிக்கப்பட்டாள். மதுபானம் தங்குதடையின்றி திறந்துவிடப்பட்டது. ஆண் போதையில் அழிய, அழிக்க, பெண்ணே கருவியானாள். இந்த மாயக் கொள்ளையின் பலனாக இன்று வளர்ச்சி பெற்ற, அறிவுபெற்ற லட்சுமி - சரசுவதிகளால் சுயநலங்கள் மட்டுமே வளர்க்கப்படுகின்றன. தங்கள் சொந்த இனம், சகோதரிகள் அழிவதைத் தடுக்க முடியவில்லை. ஏனெனில் இவர்களே ஆணாதிக்க ஒழுக்க விலங்குகளைப் பூண்டிருக்கிறார்கள். இணங்க மறுத்தால், மணவிலக்குப் பெற்றவள், ஒழுங்கீனமானவள், திருமணமாகாதவள் என்ற பட்டங்களோடு சொந்த இனத்தாராலேயே அன்னியப் படுத்தப்படுகிறாள்.

For more ebooks visit: https://getmyebook.in/

‘பாரத மாதாவின் கைவிலங்கை ஒடிப்போம், வாருங்கள்!” என்று அறைகூவி வெகுண்டெழுந்த வீரர்களும் வீராங்கனைகளும் இன்று இல்லை.

இன்று பாரதமாதாவின் அருமைச் செல்வியர் பலர், சுயநலம் கோரும் லஞ்ச வஞ்சகப் புதல்வர்களைப் பெற்று வளர்த்த, வளர்க்கும் தாய்மாராக மாறிப் போயிருக்கிறார்கள்.

உண்மையான மக்களரசின் பிரதிநிதிகளாக, மகளிரை ஏற்க ஒதுக்கீட்டு உத்தரவாதம் நிறைவேறுமா?

**‘தினமணி’, 4.6.2004**

For more ebooks visit: https://getmyebook.in/

# 23. மிகப் பெரிய கேள்வி?

அண்மைக் காலங்களில் நம் நாட்டில் அரசு மதநல்லிணக்கம் என்ற பொதுப் போர்வையைப் போர்த்திக் கொண்டாலும், மதவாதப் பிரிவுகள் பொருளாதார நோக்கில் ஏற்கனவே நலிவுற்று அழுந்திக் கிடக்கும் மக்களை மேலும் எழும்பவே முடியாத அவநம்பிக்கையில் பிணிக்கும் வகையில் செயல்படுகின்றன. மதமாற்றத் தடைச்சட்டம் இந்து மதவாதச் செயல்பாடுகளின் ஒர் உச்சகட்ட விளைவாகப் பரிணமித்திருக்கிறது.

மதப்பிரசாரம் எங்கள் உரிமை என்று சொல்பவர்களும், ஆசைகாட்டி, வலிய இழுக்கிறார்கள் என்று, இந்நாட்டில் பெரும்பான்மையாக இருக்கும் சமயத்தினரும், தங்கள்தங்கள் தரப்பில் நியாயங்கள் பேசுகிறார்கள். இந்தப் பெரும்பான்மைச் சமயத்தினரான இந்துக்கள் கூற்று, உலகிலேயே தங்கள் மதம்தான் சகிப்புத்தன்மையுடையது என்றும் பெருமை பேசிக் கொள்கிறார்கள். ஒருபுறம் ‘இந்து' என்றால் இந்தியர் இந்தியர் எல்லோரும் இந்து என்று குறிப்பிடப்படுகிறார்கள் என்ற வாதமும் வைக்கப்படுகிறது. 'இந்து’ என்று ஒரு தனிமதமே கிடையாது, பிரிட்டிஷ்காரரர் வேறுபடுத்திக் குறிப்பிடக் கையாண்ட சொல்லே இந்துமதம் என்பதாகும் என்றும் விளக்கம் கொடுக்கப்படுகிறது. அன்றாடம், மதத் தலைவர்கள், குருபீடங்கள், அரசியல்வாதிகள் எல்லோரும் பல்வேறு கருத்துக்களை ஆய்வுகளைச்

For more ebooks visit: https://getmyebook.in/

சொல்லி மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். வாழ்வின் ஜீவாதாரமான உணவுக்கான விவசாயத் தொழிலுக்கு இன்றியமையாத நீர் - காலம் காலமாகத் தமிழகத்தை வாழ வைத்து உணவூட்டும், அன்னை காவிரி தமிழகத்தில் பஞ்சப்பராரியாக வற்றிக்கிடக்கிறாள். அரசியல் தேரோட்டி ஆட்சிப் பசியைத் தீர்த்துக் கொள்ளும் மோதல்களை உருவாக்கி, மக்களின் முக்கியப் பிரச்னைகளைத் திருப்பும் உத்தியாக இதை நினைக்கச் செய்கிறது.

எந்த ஒருசமயமும், உலகில், பிறப்பால் ஒரு மனிதனின் தலைவிதியை நிர்ணயித்து ஆதிக்கம் செலுத்துவதாகத் தெரியவில்லை. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நிர்ணயிக்கும் தொழில்கள் எல்லாச் சமுதாயங்களிலும், நாடுகளிலும் இருக்கின்றன. இந்த இந்தியத் திருநாட்டில் மட்டுமே, காலம் காலமாகப் பிறப்பால் ஒரு தனி மனிதனின் தலைவிதியை நிர்ணயித்து, தொழில்களை, வாழ்வை, வரையறுத்து, ஆதிக்க உரிமைகளை, ஒடுக்குதல் நியாயங்களை கருத்தியல் ரீதியாக சமுதாயத்தை நெறிப்படுத்தும் வருணதருமம் தழைத்தோங்கிக் கொண்டிருக்கிறது. கருத்தியல் சார்ந்தும், செயல்பாடுகள் சார்ந்தும் வருணதர்மங்கள் ஆழப்பதிந்த ஒரு சமுதாயமே, இந்துமதம் என்று கொள்ளப்படும் இந்நாட்டின் பெரும்பான்மை சமுதாயமாகும்.

இந்த வருண நியாயத்தை, மதம் சார்ந்த புராணங்கள், வலியுறுத்திய பக்திக் கதைகள் பல்வேறு

For more ebooks visit: https://getmyebook.in/

சமயங்களில் மக்கள் மனங்களை நெறிப்படுத்தி வந்திருக்கின்றன.

இந்திய கலாசாரத்தின் ஆணி வேரே, 'இந்த வருணபேத மானிட தர்மங்கள்' என்றால் தவறில்லை.

அந்நாளில் அருச்சுனனுக்குப் போர்க்களத்தில் கண்ணன் உபதேசம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தப் போர்க்கள உரை, இன்றளவும் இந்துக்களின் தெய்வீக வேதநூலாக, சத்தியப் பிரமாணமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்திய ஆன்மீகதத்துவம் என்றால் உடனே கீதையைப் புரட்டும் அறிவாளரும் சான்றோரும் தாம் நினைவில் வருகின்றனர். இந்தப் போர்க்கள உபதேசத்துக்குக் காலம் காலமாகப் பல வேத விற்பன்னர்கள், தத்துவவாதிகள், புதிய சித்தாந்தங்களை வகுத்தவர்கள் தத்தம் நோக்கில் உரைகள் எழுதியுள்ளனர். இந்த நூலில், கண்ணனின் உரைக்குத் தோற்றுவாய் என்று கருதும் முதல் அத்தியாயத்தைப் படிக்கையில் ஒரு பெரிய உண்மை புலப்படுகிறது.

அருச்சுனன் எதிர்த் தரப்பில் தன் சுற்றத்தாரையும் வணங்குவதற்குரிய சான்றோரையும் காண்கிறான். பலவீனமடைகிறான். அதனால் மட்டுமே அவனுக்குத் துணிவூட்ட, கண்ணன் உரை செய்ததாக, கீதை நூலைப் பற்றிய கருத்து மக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஆனால், அவன் கூறும் காரணம், வருணதருமத்தைக் காப்பாற்ற முடியாத ஒரு விளைவு வரும் என்பதுதான். 'பேராசையின் உந்துதலால் திருதராஷ்டிரனின் மக்கள் குலநாசம் விளைவிக்கும்

For more ebooks visit: https://getmyebook.in/

பாவத்தைச் செய்ய முன் வந்துள்ளனர். ஏனெனில், போரில் கொல்லப்படும் மாவீரனின் மனைவியர் மாற்றானை, வேறு குலத்தவரைச் சாரும் அதர்மம் விளையும். (அக்காலத்தில், கைம்பெண் கொடுரங்கள், சதிக்கொடுமை இருந்திருக்கவில்லை என்று கொள்ளலாம்) பெண்களின் துஷ்டத்தனத்தினால் வருணக்குழப்பம் நேரிடும். சாதி தருமங்கள் கெடும். அதனால் வருணதருமங்களை அழிப்போரும் அழிப்புக்கு உள்ளாகும் மக்களும்/பித்ருக்களுக்கு நீத்தார்க்கடனாற்றும் கடமையில்லாதவர்களாவார்கள். இதனால் முன்னோர், நீர்க்கடனாற்றுதலால் ஏற்படும் குலதருமத்தைக் காப்பாற்ற இயலாமல் கொடிய நரகத்தில் வீழ்வர். இந்தக் கொடிய பாவத்தை நான் செய்யமாட்டேன்' என்றே சொல்கிறான். பகவத்கீதையில் நம் கருத்தைக் கவர்ந்து பிணிக்கும் இன்னும் சில செய்திகளையும் காணலாம்.

கண்ணன், சத்வம், ராஜசம், தாமசம் ஆகிய முக்குணங்களின் அடிப்படையில் நான்கு வருணங்களைப் படைத்ததாகக் கூறுகிறான். (அத்-4) இந்த முக்குன இயல்புகளின் அடிப்படையில், வருணங்களைப் பிரிப்பதாகக் கூறப்படுகிறது.

சாந்தம், மென்மை, தூய்மை, தியாகம் இவற்றின் பிறப்பிடம் சத்வகுணம். இவன் மேலாம் ஞான ஒளியையே உண்மையெனக் கொள்வான். சாத்துவீகமான, ரசம் பொருந்திய நல்லுணவை மிதமாக உண்பவன். இவனே மேலாம்-முதல் (பிராமணன்) வருணத்தினன்.ராஜஸகுணம், ஆசை, கோபம், வீரம், தோள்வலி, உடலால் திளைக்கக் கூடிய

For more ebooks visit: https://getmyebook.in/

இன்பங்களை வேட்டல், காரம், உப்பு, உவர்ப்பென்ற உஷ்ண உணவுகளை விரும்பி உண்பான். இவனே இரண்டாம் வருணமாகிய rத்திரிய தர்மத்துக் குரியவன். அருச்சுனன் கூடித்திரியன் என்று வலியுறுத்தப்படுகிறது.

தாமசகுணம், மந்தபுத்தி, சோம்பல், செயலின்மைக்கு இருப்பிடம் வைசியர்' என்ற மூன்றாவது வருணம் பற்றிக் குறிப்பாக இல்லை என்றாலும், உழவர், பெருமக்களும், பசுக்களை - கால்நடைகளை வளர்ப்பவர்களும், இடைப் பட்டவர்களாகின்றனர். சூத்திரர் என்ற வருணம், கடை வருணம். கடை வருணத்துக்குத் தொழில் வரையறுக்கப் படவில்லை என்றாலும் ஆண்டைகளாகிய உயர் வருணத்தவருக்கு ஊழியம் செய்வதே இவர்கள் தொழில் இதில் உழுவதும், கன்றுகாலிகளைப் பேணும் அடிமைப் பணியும் அடக்கம். இவர்கள் எழுச்சியற்றவர்கள். ஏவல் பணி செய்து அவர்கள் கொடுக்கும் மிச்சம், மீதி, பழையது, அழுகியது போன்ற உணவை உண்பதே இவன் தருமம். இப்படி வரையறுக்கப்படுகிறது. ஸத்வகுணம் ஓங்கியிருக்கும்போது மரணமடைவானாயின் ஞானவான்களின் நல்லுலகை அடைகிறான். ரஜோகுணத்தில் காலமாகிறவன் செயலூக்கம் உடையவர்களிடையே பிறக்கிறான். தாமசகுணத்தில் ஊன்றி விழிப்பெய்தாமலே மரணம் எய்துபவன் அறிவிலிகளின் கர்ப்பத்தில் பிறக்கிறான்.

இதெல்லாம் நியாயம், தர்மம் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால், ஒரு மனிதன் எங்கே பிறப்பெடுக்கிறானோ, அங்கேயே தான் வருணதர்மம்

For more ebooks visit: https://getmyebook.in/

காப்பாற்றப்பட வேண்டும் என்ற வகையில், ஒருவன் தன் 'ஸ்வதர்மத்தை'யே கடைப்பிடிக்க வேண்டும். ‘பரதர்மம்' கைக் கொண்டு ஒழுகலாகாது. (அத்-3)

அவரவர் அவரவருக்குரிய தருமத்தை, கருமத்தைச் செய்தலே நியாயம். அந்தந்தக் கருத்துக்குரிய குணங்களிலேயே ஊன்றும் வகையில் தொழிலும் உணவும் உரியன என்று அறிவித்துவிட்டு, மூடயோனிகளில் தாமச குணமுடையவர் பிறக்கின்றனர் என்றால் என்ன பொருள்? அடிமை, ஏவல் பணி செய்து கொண்டு அவர்கள் வழங்கும் எஞ்சிய உணவைப் புசிக்கவே, ஜீவமரணப் போராட்டம் நிகழ்த்துபவர், விழிப்புணர்வே எய்தக்கூடாது என்றுதானே ஆகிறது?

இந்த அனைத்துப் பாகுபாடுகளும் ‘மனிதன்’ என்று பொதுத் தத்துவத்துடன் நிறுத்திப் பேசப்படுகிறதா? இல்லை.

இதில் பெண் அடக்கம் இல்லை. இவள் ஏற்கனவே அடிமையாகித் தீர்ந்தவள். இது மீண்டும் ஒன்பதாம் அத்தியாயத்தில் தெளிவாகிறது.

“பார்த்தா! கீழான பிறவிகளாக இருக்கும் பெண்கள் (பாவ யோனிகளில் ஜனித்தவர்களாகிய ஸ்திரீகள்) மற்றும் வைசியர், சூத்திரர் ஆகியோரும் என்னைச் சார்ந்தபின் பரகதி அடைவர்” என்று கூறுகிறான் கண்ணன்.

அவனுடைய பெருங்கருணை மகிமைப்படுத்தப்படும் இந்த சுலோகத்தில்

For more ebooks visit: https://getmyebook.in/

பெண்ணின் நிலையும் கடைசி வருணத்தாரின் நிலையும் துல்லியமாகக் குறிக்கப்படுகிறது.

இந்த வருணக்கலப்பு நிகழாமலிருக்கவே, பெண்ணின் சுதந்தரச் சிறகுகள் வெட்டப்பட்டன. சிறகுகள் வெட்டப்பட்ட கிளிக்குஞ்சு, முதிர்ந்து, தன் எசமானனின் சமிக்ஞைக்கேற்ப, கூட்டைத் திறந்து விட்டதும் வெளிவந்து அடுக்கு அட்டைகளில் ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டிவிட்டு அவன் தரும் நெல்மணிக் கூலியை வாங்கிக் கொண்டு கூட்டுக்குள் அடைந்துவிடும் கிளியாக, ஆணாதிக்கக் கூட்டுக்குள் பெண். தங்கள் கஞ்சிக் குடிப்பதற்கிலாத விதி எதனால் என்ற விழிர்ப்புணர்வே இல்லாத மக்களின் நிலையை அந்த அட்டைகளாகிய பொய்ம்மைகளில் தெரிந்துகொள்ள வரும் எளியர் சோதிடக்காரனாகக் கூண்டையும், பொய்ம்மை வாக்குறுதிகளையும் ஏந்தித் திரியும் ஆட்சி அரசியல் ஆதிக்கங்கள்.

உயர் வருணப்பெண் வினாத் தெரியாத பருவத்திலேயே கட்டி வைக்கப்பட்டாள். மாற்றானை நாடாமலிருக்க சதிக்கொலை, கைம்பெண் குரூரங்கள். இத்தனை கடுமைகளையும் மீறி ஆண் பெண் வருணக் கலப்புகள் நிகழ்ந்தன.

இந்தக் கலப்பு மண ஒழுக்க மீறல்கள் இரு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றன.

தந்தை உயர்குலத்தவனாகவும், தாய் பிற வருணங்களுக்குரியவளாகவும் இருந்தால் பாதகமில்லை. அந்தச் சமுதாயத்திலிருந்து பெண்தான் விலக்கப்படுவாளே ஒழிய, தந்தைக்கு எந்த இழுக்கும் இல்லை. அவன் ஆண். சில

For more ebooks visit: https://getmyebook.in/

தலைமுறைகளில், அவர்களின் கிளை உயர் வருணத்துக்கே ஏற்றம் பெற முடியும். ஆனால், தாய் உயர் வருணமாக இருந்து தந்தை மிகவும் தாழ்ந்த சூத்திரவருணத்தவனாக இருந்துவிட்டால், அவர்கள் சந்ததி, இந்த நால்வருணங்களிலும் சேராத, தீண்டத்தகாத, ‘பஞ்சமர்’ என்ற இழிகுலத்தவராகக் கருதப்பட்டனர். தச்சுவேலை செய்பவர், மிருகங்களைக் கொன்று புசிப்பவர் என்றெல்லாம் சாதிகள் பலவும் இந்தக் கலப்பு சந்ததியின் விளைவாகவே தோன்றின என்று கருதலாம்.

சமுதாயவிலக்கு என்றாலே, நெருப்புக் கொடுக்க மாட்டார்கள். நீர்நிலைகளைத் தீண்டலாகாது. ஆயுதங்கள், தொழிற்கருவிகள் ஏந்த உரிமையில்லை. செத்து வீழ்ந்த மிருகங்களை அப்புறப்படுத்துதல், இழிவான மலங்களை அப்புறப்படுத்த வேண்டும்; ஆனால் உயர்சாதியினரின் முகங்களிலும் விழிக்கலாகாது.

இத்தகைய (அ)தருமபரிபாலனம் செய்த சநாதன மதம், பாரதநாட்டுக்கே உரியதாக ஆதிக்கம் செலுத்தியது; செலுத்துகிறது; இப்போது இது சட்டரீதியான ஒடுக்குதல் என்ற அம்புடன் புதிய அவதாரம் மேற்கொண்டிருக்கிறது. மனிதருக்கு மனிதர் ஒடுக்குதல் குரூரங்களை இன்றும் நிகழ்கின்றன.

‘மதம்' என்ற ஓர் அடிப்படையே ஒரு சாரார் மற்றவர் மீது செலுத்தும் ஆதிக்க அமைப்புக்கானதுதான். ஏனெனில் உண்மையாகவே ஒரு மனிதனை ஆன்மிக நோக்கில், ஒருமைப்படுத்துவதென்பது, வாழ்வியலின் அடித்தளத்திலிருந்து பிரிப்பதால் சாத்தியமாகாத

For more ebooks visit: https://getmyebook.in/

பொய் என்றே கூறலாம். ஆதி மனிதர், தம் அநுபவங்களின் வாயிலாகவே, இயற்கையின் தன்மைகளை உணர்ந்து, அந்த இயற்கை யோடிணைந்து வாழ்வியலின் மேன்மைகளைக் கற்று வந்திருக்கின்றனர். இயற்கையை வெல்ல வேண்டும் என்றோ, ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்றோ, அந்த வாழ்வியல் அவர்களுக்குக் கற்பித்திருக்கவில்லை. இன்றும் காடுகளில் வாழும் ஆதிக்குடியினரோ, மலைகளில் வாழும் பழங்குடி இனத்தவரோ, காடுகளை அழிக்கவோ, மரங்களை வெட்டவோ, அருவிகளைத் தடுத்துத் தேக்குவதையோ விரும்புவதில்லை.

மதத்தலைவர்கள், ஆட்சி அதிகார பீடங்களைக் கைப்பற்றி மக்களைத் தங்கள் ஆதிக்கங்களில் கொண்டு வரும் நோக்கில்தான் போர்களும் பூசல்களும் உலகெங்கும் நிகழ்ந்திருக்கின்றன. மக்கள் தொகுதிகளை, மத ஆதிக்கங்கள் வெல்லுகின்றன. நாகரிகம் என்ற பெயரில், இயற்கையோடிணைந்த வாழ்வுமுறைகள் அடியோடு மாற்றம் பெற, இந்த ஆதிக்கங்களே தலைமுறை தலைமுறையாக, மக்களைத் தன்னுணர்வு பெறா வண்ணம் நெறிப்படுத்தி வந்திருக்கின்றன.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, இந்துமதம் என்று இன்று அறியப்படும் ஒரு சமயத்துக்கு, வேதங்களே மூலாதாரம் என்று சொல்லப்படுகிறது. கீதை, வேத உபநிடதநூல்களின் சாராம்சம் என்று போற்றப்படுகிறது. ஆனால் மனித சமுதாயம் உய்வதற்கான சமத்துவநோக்கை முன் வைத்து, ஓர் உன்னத அடிப்படையைத் தோற்றுவித்திருக்கவில்லை.

For more ebooks visit: https://getmyebook.in/

அப்படி இருந்திருந்தால், இதே மதத்தலைவர்கள், வேதம் தெய்வம் என்ற போதனை போதிப்பவர்கள், மதமாற்றம் ஏன் நிகழ்கிறது என்று சிந்தித்திருப்பார்கள். மீனாட்சிபுரத்துக்கோ, மண்டைக்காட்டுக்கோ சென்று, மனித சமுதாயத்தின் புரையோடிய புண்களுக்குத் தாங்களே காரணம் என்று கழுவாய் தேடிக் கொண்டிருப்பார்கள்.

இந்திய நாட்டில் இவர்கள் அடிவைத்து முதலில் ஆதிக்குடிகளை வென்று, அல்லது அழித்து, தங்கள் செல்வாக்கைப் பதிக்க வருண பேதத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நெறிப்படுத்தியிருக்கிறார்கள். தாயாண் மரபுகளும், இயற்கையோடிணைந்து வாழும் பழக்கங்களும் அறிவியல் வெளிச்சங்களால் காப்பாற்றப்பட்டிருக்கவில்லை. அவைகளைத் தொலைத்த அடிமைகளாகவே மாற்றப்பட்டிருக்கின்றனர்.

வியாபாரம் என்ற பெயரில் நாடுபிடிக்க வந்த வெளிநாட்டார் தங்கள் சமயக் குடைக்குக் கீழ், எளிய மக்களைக் கொண்டு வருவது மிக எளிதாக இருந்தது. மனித உரிமையே மறுக்கப்பட்டு வெறும் மேற்குலத்தோரின் ஊழிய அடிமைகளாக இயங்கிய மக்களுக்கு இந்தச் சமயக் குடை, வாழ்வு தரும் புகலிடமாக விளங்கியது. அதேபோல், மேற்குலத்து சநாதன விதவைக் கொடுமைகளில் சிக்குண்ட பெண்களுக்கும், இந்த மதமாற்றம் ஏற்புடையதாக இருந்தது. அந்நிய ஆட்சியினரே, மனம் வருந்தி, சதி, விதவைக் கொடுமைகளை எதிர்த்துச் சட்டமியற்ற வேண்டிவந்தது. பெண் கொடுமைகளையும்

For more ebooks visit: https://getmyebook.in/

மனிதருக்கு மனிதர் என்றில்லாத சாதி-குலக் கொடுமைகளையும் இன்றுவரை எந்தச் சட்டமும் ஒழித்திருக்கவில்லை. ஏனெனில், மேல்குல, ஆணாதிக்க நிலைபாடுகள் அந்த அளவுக்கு மக்கள் சமுதாயத்தில் வேரூன்றி நூற்றாண்டுகளாக அவர்களைப் பதப்படுத்தி இருக்கின்றன. ஆட்சி பிடிப்பதற்கான அரசியல் சக்திகள், இந்த ஐம்பத்தைந்தாண்டுகளின் சுதந்தர ஜனநாயகத்தையும் மிகப்பெரிய கேள்விக்குறிகளாக்கியிருக்கின்றன.

சுதந்தரப் போராட்டம் தோன்றுவதற்கு மூலகாரணங்களாக, இந்திய சமுதாயத்தில் நிலவிய இந்தக் கேடுகளே தலைவர்களுக்கு உந்துசக்தியாக இருந்திருக்கின்றன. பெண் கொடுமைகளும் தீண்டாமை இழிவுகளும் சாதிப் பிளவுகளும் இந்நாட்டில் சமுதாயச் சீர்திருத்தத்தின் பால் பெரியவர்களின் கவனங்களைத் திருப்பியிருக்கின்றன. காந்தியடிகள், தம் வாழ்நாள் முழுவதுமே, கடைநிலை மக்களின் பால் கருணைகொண்டு, தம்மை அவர்களில் ஒருவராகவே கருதிக் கொண்டார். அரிசனங்கள், கடவுளின் குழந்தைகள் என்று அவர்களை மேன்மைப்படுத்தினார். என்றாலும் தம் சார்ந்திருந்த இந்து மதம், அல்லது வருணாசிரமத்தை அடிப்படையாகக் கொண்ட சமயத்தை மறுத்துவிடவில்லை. வேறுமதம் சிறந்ததென்று மறையவில்லை. ஓர் உண்மை இங்கே நமக்குப் புலனாகிறது.

For more ebooks visit: https://getmyebook.in/

இந்திய சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் ஒவ்வொருவரும், தத்தமக்கு ஏற்பட்ட அநுபவங்களின் வாயிலாகவே தங்கள் இலட்சியங்களையும், கொள்கைகளையும் வகுத்துக் கொண்டனர் எனலாம்.

அமரகவி பாரதி சநாதனத்தைச் சாடினார். அதனால் தமக்கேற்பட்ட இன்னல்களைப் பொருட்டாக்கவில்லை. விலக்கப்பட்ட மனிதராகவே இறுதிவரையிலும் தீரராக வாழ்ந்தார். என்றாலும், சிறையில் நோய்வாய்ப்பட்டு, கிறிஸ்தவப் பாதிரிகளின் ஆதரவை ஏற்று மதம் மாறி வந்த ஆர்யாவைக் கண்டதும் மதம் மாறியதற்காகச் சங்கடப்பட்டார். முழு மனதோடு மதமாற்றத்தை அவரால் ஏற்க முடியவில்லை.

அம்பேத்கர் மட்டுமே ஒடுக்குதல்களின் நேர் அநுபவங்களை உணர்ந்தவர். அவருடைய போராட்டம், முனைப்புடன் தாழ்த்தப்பட்ட மக்களைப் பெரிதும் விழிப்புணர்வுக்குக் கொண்டு செல்ல தூண்டுதலாக இருந்தது. சாதீய மேலாதிக்கமும் ஒடுக்குதல்களும் அவர் உயர் கல்வி பெற்றுத் தம் மேன்மையை நிலைநாட்டிய பின்னரும், தொடர்ந்தது. எனவேதான், தாம் கண் விழித்த மதத்தையே மாற்றிக் கொண்டார். அவரோடு பலரும் பவுத்தம் தழுவினர்.

பவுத்த சமயமே, சனாதனத்துக்கு மாற்றாகத் தோன்றியதுதான்.'கடவுளே இல்லை, மதமே தேவையில்லை' என்ற நிலைப்பாடும் இங்கே செயல்ரீதியாக மக்களிடையே செல்வாக்குப் பெறவில்லை. பெரியார் ஈ.வே.ரா. கண்ட பகுத்தறிவு

For more ebooks visit: https://getmyebook.in/

இயக்கம் இந்நாள் எப்படி எப்படியோ சின்னபின்னமாகிவிட்ட நிலையைக் காண்கிறோம்.

'மதம் மனித சமுதாய முன்னேற்றத்துக்குத் தடையானதே தவிர தேவையில்லை' என்ற கொள்கையை முன் வைத்த சமத்துவ நெறியாட்சி, சோவியத் ருசியாவில், எழுபதாண்டுகளுக்குப் பின் வீழ்ச்சியடைந்ததைப் பார்க்கிறோம்.

எழுபதுகளில் நான் சோவியத் நாட்டுக்குச் சென்றிருந்தபோது ஒரு பெண்மணியிடம் கேட்டேன்.

பெண் இயல்பில் உணர்ச்சிமயமானவள். அவள் தாயாவதற்கே இயற்கை படைத்திருக்கிறது. குடும்ப வாழ்வில் அவள் பொருந்தி, மக்களைப் பெற்று ஓர் ஒழுக்க நெறியில் வளர்த்தெடுக்கும்போது அவளுக்குப் பல பிரச்னைகள் ஏற்படுகின்றன. சங்கடங்கள் நேருகின்றன. குறிப்பாக, தன் மகவுக்கு நோவென்றால்கூடதுடி துடித்துப் போகிறாள். அப்போதெல்லாம் பற்றிக் கொள்ள அவளுக்கு ஓர் ஆதரவு, கண்ணுக்கெட்டாத சக்தியின்மீது ஒரு நம்பிக்கை வேண்டியிருக்கிறது. இதைக் கடவுள் வழிபாடு, நம்பிக்கை என்று சார்ந்திருக்க மதம் தேவையாகிறது. "உங்களுக்கு அந்த நம்பிக்கை இல்லை என்றால், துன்பமயமான காலங்களை எப்படி எதிர்கொள்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

இந்த எதிர்பாராக் கேள்வியைக் கேட்டு அந்தப் பெண்மணி சிறிது திகைத்தாள். பிறகு எப்படியோ சமாளித்து, "எங்களுக்கு அப்படி ஒரு பற்றுக்கோல் தேவையில்லை; எங்கள் குழந்தைகளைப்

For more ebooks visit: https://getmyebook.in/

பெரியவர்கள் தாய்நாட்டை நேசிக்கும் ஒழுக்கமுடையவர்களாக வளர்க்கிறோம்” என்றாள்.

ஆனால், சமத்துவநெறி ஆட்சி வீழ்ச்சியுற்றபிறகு, இதே பெண்கள் குடும்பம், வீடு, கோயில், எல்லாம் எங்கள் உரிமைகள் என்றார்கள். சமத்துவநெறி மலை மேலிருக்கும் தீபம்போல் நமக்குப் பாதை காட்டலாம்; அதை அடைய முடியாது என்றார் ஒரு பெண்மணி.

இன்றும், சமயப் பூசாரிகளும் குருமார்களும், பெண்களையும் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களையுமே அதிகமாகத் தங்கள் ஆதிக்கத்துள் கொண்டுவரப் பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றனர். வருணப்பிரிவுகளுக்கேற்ப, இந்திய சநாதனம், தெய்வங்களிலும்கூட மேல், கீழ் நடை முறைகளை வகுத்திருக்கின்றன. இந்த வழிபாடுகளிலும், மெல்ல மெல்ல மேல் நிலையாதிக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆங்கிலேயர் நம்மை ஆட்சி செய்ய வந்தபோது, மதமாற்றம் நிகழ்ந்தாலும், இந்து வருணத்தின் சாதிய அடுக்குகளை அவர்கள் தொடவே இல்லை. ஆட்சியாளருக்கு, இத்தகைய சமுதாய சாதிப்பிரிவுகள், ஆள்வதற்குரிய வலிமையையே உறுதிப்படுத்தின.

சுதந்தரம் வந்தபின், தாழ்த்தப்பட்டவர் முன்னேற வசதியான சலுகைகளும் ஒதுக்கீடுகளும் அரசாட்சிகளில் காணப்பட்டாலும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினர் பொருளாதார மேம்பாடடைந்தாலும், சமுதாயம் சார்ந்து, முழுமையான முன்னேற்ற விடுதலைகளை எய்தவில்லை. வருண தருமங்களை ஒழிக்க வேண்டும் என்ற இலட்சியத்துக்கு மாறாக,

For more ebooks visit: https://getmyebook.in/

மேல் வருண நடைமுறைகளை மறைமுகமாக ஏற்பதில் மட்டுமே முடிகிறது. அடிப்படை வருணதருமங்கள், சாதி அடுக்குகளை மேலும் மேலும் மரபு வழிப்படுத்திக் கொண்டு, பகுத்தறிவு பெற்ற, ஜனநாயக மதச்சார்பற்ற சமுதாயத்தையும் மனித உரிமைகள் என்ற அடிப்படையையும் கேலிக்குரியதாக்குகின்றன.

தொலைக்காட்சி போன்ற மக்கள் செல்வாக்கு ஊடகங்கள், தீண்டாமைக்கு எதிரான போராட்டக் கருத்துக்களை முன் வைப்பதைக் காட்டிலும், நுகர் பொருள் வாணிப சாதனமாக, பெண்களை சோகப் பொருளாகவும் போகப் பொருளாகவும் கடை விரிப்பதில் தான் கவனம் செலுத்துகின்றன. மேலும் பாதிக்கப்பட்டவரின் நிலை கண்டு பொங்கி எழும் மக்கள் கூட்டம் இன்று இல்லை. மலம்தின்னச் சொல்லும் வன்முறையையும், தாலியறுத்துப் பொட்டழித்து நடுவீதியில் தள்ளும் கொடுமையையும், ஊடகங்கள் வெறும் பொழுதுபோக்கு - களிப்பூட்டும் நேரம் போக்கும் அம்சங்களாக மாற்றி விட்டன. சகமனிதர் என்ற உணர்வே மரத்துப் போய்விட்ட நிலையில் அவரவர், பணம், பதவி, போகம், பொருட்கள் என்ற இலக்குகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே, மதமாற்றப் பிரச்னையும் தலித் ஒடுக்குதல்களும், ஆட்சியாளருக்கு மக்களைத் திசை திருப்பும் கருவிகளாகக் கை கொடுத்திருக்கின்றன. சமயச் சார்பை முன்வைத்த அரசியல் அரங்கத்தில், ஆதாயம் தேடும் துறவிகளும் குட்டைகளைக் கலக்கித்

For more ebooks visit: https://getmyebook.in/

தங்கள் செல்வாக்கை நிலைப்படுத்திக் கொள்கின்றனர். இதனால் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை மாறப் போகிறதா? நூற்றாண்டுகளின் தழும்புகள், ஆறாப்புண்களாக மாறாமலிருக்க வேண்டும். தொழுநோய், புற்றுநோய்க்கும்கூட மருந்துகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தச் சாதிய ஒடுக்குதல் நோய்க்கு யார் அதிரடி சிகிச்சைகளை, எப்படிச் செய்யப் போகிறார்கள்? இளைய சமுதாயத்தினர் முன் எழுந்துள்ள கேள்வி இது.

**‘இளைஞர் முழக்கம்'**
**DYF1 டிசம்பர், 2002**

For more ebooks visit: https://getmyebook.in/

# 24. பெண்ணைப் பீடத்தில் வைத்த மாமனிதர்

இந்திய மண்ணில் பாரதி என்ற கவியொளி உதயமாகும் வேளையில் இந்தியத் துணைக் கண்டத்தில் எல்லாத் திசைகளிலும் இருள் சூழ்ந்திருந்ததென்றால் தவறில்லை.

1882ஆம் ஆண்டில் கார்த்திகை மூலத்தில் உதித்த பாரதி, ஐந்தாவது வயதிலேயே தமது தாயை இழந்தார். அவரது தாயாரின் இளைய சகோதரி - 'சின்னம்மா சித்தி' இந்தச் சேயைப் பேணி வளர்க்கப் பரிவுக் கரங்கள் நீட்டி அனைத்தார். பாலகனைச் சுவீகரித்த அவள் கட்டியவனைப் பறி கொடுத்ததால், சநாதனக் கொடுமரபு, அவள் மங்கலச் சின்னங்களான பூ, பொட்டு அணிமணிகள் மட்டுமின்றி, கார்குழலையும் களையச் செய்து, வெள்ளை முக்காட்டுக்குள் முடக்கி வைத்திருந்தது.

இந்த வெறுமை வடிவில்தான் பாரதி இந்தியத்தாயின் அன்னை முகம் கண்டார்.

அக்காலத்தில் பெண்டிர்க்கு மட்டுமின்றி ஆண் பிள்ளைகளுக்கும் இளவயதில் திருமணம் செய்வதனால் குடும்பப் பொறுப்புணர்வைப் பெறுவார்கள் என்ற கருத்து இருந்தது. பன்னிரண்டு வயது பாரதிக்கும், ஒன்பது வயது செல்லம்மாளுக்கும் திருமணம் நிகழ்ந்தது. பாரதியின் மாற்றாந்தாய் மகள் மூன்றுவயது லட்சுமிக்கும் அத்தை மகனான சிறுவன்

For more ebooks visit: https://getmyebook.in/

கேதாரத்துக்கும் அதே நாளில் மணமுடித்து வைத்தார்கள்.

இக்கொடுமையை இழைப்போர் இன்னுமோராயிரம் ஆண்டுகள் அடிமைப்பட்டு அழியட்டும் என்ற தீச்சொல்லைப் பின்னாளில் உமிழ்கிறார் அவர்.

இந்தக் கவிக்குயிலுக்கு, ஆன்மானுபவ உபதேசத்தை முறையாக அளித்த குருமணி வழக்கமான காவியுடுத்த ஆசாரியனோ, சடாமுடிச் சந்நியாசியோ அல்ல. இதுவும் ஒரு முரண்பாடுதான். இந்தியத்திருநாட்டில் சமண - பௌத்த நெறிகளுக்குச் சவாலாகத் தோன்றிய சங்கரர் வழித்துறவிகளால் மாயை என்று பழிக்கப்பட்ட பெண் இனம்; வெள்ளைத் தோலுக்குரியவள் புரட்சித் துறவியாகிய விவேகானந்தரின் வழியில் இந்திய நாட்டுக்குத் தொண்டாற்ற வந்த பெண் துறவி; எழுச்சிப் பெண்.

“சரிபாதி சமுதாயமான பெண் முடங்கிக் கிடக்கையில் சாத்தியமோ விடுதலை? உன் கவித்திறன் முழுதும் மகத்தான விடுதலை ஒளியை இலக்காக்கி மலரட்டும்” என்று உள்ளுணர்வை உசுப்பிவிட்ட மகாசக்தி, “அருச்சுனனுக்குக் கண்ணன் ஆன்மாறுபவ தரிசனம் காட்டினாற்போல அநுபூதி அளித்த குருமணி" என்று அந்தக் கணங்களை எண்ணி எண்ணிப் பரவசமடையச் செய்த புரட்சிக் குருமணி, சகோதரி நிவேதிதா. அப்போதே பாரதியின் கவித்திறமை புதிய மலர்ச்சி பெற்றது.

பாரதியின் பாடல்களிலும், புனைகதைகளிலும் கட்டுரைகளிலும், மிடிமைகளில் இருந்து வெளிப்பட்டு இலட்சிய ஒளியாக எழுப்பும் சக்தியாகவே திகழ்கிறாள்

For more ebooks visit: https://getmyebook.in/

பெண். இந்த மாசக்தி, இந்நாட்டு மூலாதாரக் கருத்தியலுக்கும் பண்பாட்டுக்கும் அந்நியமானவள் அல்ல. அவள் கல்விக்கு அதிபதி, செல்வத்துக்கு உரிய தெய்வம்; வீரம், கருணை ஆகிய பண்புகளுக்கும் இருப்பிடமானவள்.

ஆனால் நடப்பியலில், தாயைப் போற்றும் பண்பாடு வெறும் சடங்காசாரமாக உயிரற்றுப் போயிருந்தது. மூடக்கட்டுகளிலும், மூத்த பொய்ம்மைகளிலும் அறிவுக்கண் குருடாக்கப் பெற்ற அபாக்கியவதிகளாக அடுக்களைப் பொந்தில் உழைப்பவர்களாக, காமவெறி பிடித்த ஆடவர்களின் கைப்பாவைகளாக, அடிமைச் சேற்றில் பெண்கள் உழன்ற நிலை கண்டு அவர் நொந்தார்; கொதித்தார். அந்த இலட்சிய வேகமே, அவரைச் சக்தி தாசனாக மாற்றியது. தேசியமென்ற பார்வையில், முப்பது கோடி மக்களை ஈன்ற தாயாக, செப்பு மொழி பதினெட்டுடையாளாக இருந்தும் சிந்தனை ஒன்றுடையாளாக பாரத மாதாவாக அவள் திகழ்ந்தாள். அந்த அன்னையின் துயில் நீங்கத் திருப்பள்ளியெழுச்சி பாடினார் அவர்.

அவளே தாய்; அவள் இயக்கம்; அவள் சூக்குமமான ஆற்றல். அவள் தெளிவு பரிதியின் வெப்பக் கதிர்; மேகத்திரள்; சொரியும் அமுதத்தாரை; பல்லுயிர்க்கு அமுதாம் ஆறு நீர் கடல் அவள் கவிதைத் தேவி, மனைத் தலைவி.

எழுச்சியூட்டும் கும்மிப் பாடலிலும், கோலக் கவிதையிலும், அவருடைய பெண், ‘கற்புநிலை என்று எங்களை மட்டும் முடக்கினிரே, அதை இரு கட்சிக்கும் பொதுவாக்கி வைப்போம்' என்று நியாயம் தீர்ப்பவள்.

For more ebooks visit: https://getmyebook.in/

பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் வந்தவர் நாம்! எங்களுக்கு மேலாம் அறிவு உண்டு என்று எழும்பிவந்தவள்.

நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டும்! சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச் சுருள் தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டும் என்ற வரிகளில் கவியின் ஆத்திரம் கொப்பளிக்கிறது.

இந்தப் புதுமைப் பெண், கல்வி கற்பதும், அறிவாற்றல் பெறுவதும் எதற்கு? கணவனுக்குப் புதுப்பொலிவுடன் பணி செய்து மகிழ்வூட்டி, அவன் சுமையைக் குறைப்பதற்கில்லை. உலக வாழ்க்கையின் நுட்பங்கள் அறிந்து தேர்ந்து, நாற்றிசை நாடுகள் யாவுஞ்சென்று புதுமை கொணர்ந்து, பாரததேசமோங்க உழைப்பதே இவள் இலட்சியம்; வையகம் புதுமையுறச் செய்து மனிதரை அமரர்களாக்கப் புறப்பட்டவள் இவள்.

பாஞ்சாலி சபதம், ஆங்கில ஆதிக்கத்தில் சிக்குண்ட பாரதநாட்டின் விடுதலை எழுச்சிக்காக எழுதப் பெற்ற தென்று கருத்துரைக்கப்படுகிறது. அது முற்றிலும் சரியன்று.

அக்காலத்தில் பாரதக் கதை, சுபநிகழ்ச்சிகளில் பாடுவதற்கும் உரைப்பதற்கும் உகந்த காப்பியமாகக் கருதப்பட்டிருக்கவில்லை. என்றாலும், பாரதக் கதையில் இடம்பெற்றிருக்கும். துரோபதை துகிலுரியப்படும் சருக்கம் தவறாமல் நாடகமாக நடிக்கப்பட்டது. துரோபதையாக நடிப்பவர் ஆணாக இருந்தாலும், ஒரு பெண்ணின் மானமழிப்பது,

For more ebooks visit: https://getmyebook.in/

கீழ்மக்கள் கண்டுகளிக்க ரசனை மிகுந்த காட்சியாக இருந்தது.

பாரதி அந்த அவலக் காட்சியை மாற்றி வைத்தார். ‘வஸ்திராபஹரணமா?... இது பாஞ்சாலியின் சபதமடா, சபதம்?’ என்று கனல் பறக்கும் பாஞ்சாலியைத் தம் எழுச்சிச் சொற்களால் எழுப்பினார்.

‘நாயகர் தம்மைத் தோற்றபின் தாரமுடைமை அவர்க்குண்டோ?’ என்று அவையில் நீதி கேட்கிறாள் பாரதியின் பாஞ்சாலி.

அவலம் உச்சக்கட்டத்தை எட்டுகையில், உடுக்கை இழப்பவளின் இடுக்கண் நீக்கக் கண்ணன் திருவருள் பாலிக்கிறான்.

இறுதியில் பாஞ்சாலியின் பொங்கெழுச்சி, சபதமாக ஒலிக்கிறது.

பெண்குலத்தின் எழுச்சி; சிறுமைகளையும் அநீதிகளையும் அக்கிரமங்களையும் பொசுக்கிக் கொண்டு எழும்பும் எழுச்சிதான் பாஞ்சாலி சபதம்.

பாரதியின் பாட்டு, கவிதை, கட்டுரை, எல்லாவற்றிற்கும் உயிர்த்துடிப்பாக ஒலிக்கிறாள், புத்தொளிப் பெண். குயில் பாட்டுக்கு வேதாந்த விளக்கம் சொல்லப்படுகிறது.

பெண் குயில் குரல் கொடுப்பதில்லை. ஆண் குயிலே கூவியழைக்கும். இங்கு பாரதி, ஊமைப் பெண்குயிலைக் கூவியழைக்கச் செய்கிறார்.

பெண்மை நலம் உணராத, காதலின் அருமையும் மேன்மையும் இன்பமும் சற்றும் அறிந்திராத விலங்கனைய மக்களுக்கு, அவள் பெருமையை,

For more ebooks visit: https://getmyebook.in/

"ஆசைக்கடலின் அமுதமடா, பெண்மைதான் தெய்வீக மாநகராட்சியடா!..." என்று உயர்த்தும் வரிகளில் காதலின் புகழும் பெண்மையின் பெருமையும் விளங்குகின்றன.

'பெண் செக்குமாடுமில்லை; பஞ்சுத் தலையணையுமில்லை' என்ற கட்டுரை வரிகளின் விளக்கமே 'குயில்' என்ற கற்பனைக் கதை சொல்லும் அற்புதக் கவிதை.

'பெண் உணர்ச்சிமயமானவள். அதனாலேயே அவள் அடக்கப்பட வேண்டும். பெண் எப்போதும் ஓர் ஆணை உடல்பரமான போகத்துக்கே இழுப்பாள். அவளால்தான் சமுதாயத்தில் அத்துமீறல்கள் ஏற்பட்டு, சமுதாய ஒழுக்கம் கெடுகிறது. வருணா-சாதி சமயக் கட்டுப்பாடுகள் அவளால் குலைந்து போகும். எனவே கற்பொழுக்கம் அவளுக்கு இன்றியமையாததாகும். இந்தக் கற்பொழுக்கம், அவள் பிறவியெடுத்து வளரும்போதே அக ஒழுக்கமாக வளர்க்கப்பட வேண்டும். இவ்வொழுக்கம் பெண்மைக்கு மட்டுமே வற்புறுத்தப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு, அவள், ஆளுமையைக் காலம் காலமாக சிறை வைத்திருக்கிறது. இந்த வேரோடிப்போன கருத்தைத் தகர்த்தெறிவதே பாரதியின் முதல் இலட்சியமாக இருந்திருக்கிறது என்றால் தவறில்லை.

கற்பொழுக்கம் ஆணுக்கும் இன்றியமையாதது என்பதை இவரே முதன் முதலாக வலியுறுத்துகிறார்.

'பேணுமொரு காதலினை வேண்டியன்றோ பெண்மையும் கற்பு நிலை பிறழுகின்றாள்?'

For more ebooks visit: https://getmyebook.in/

‘பெண்ணுக்கு விடுதலை நீரில்லை என்றால் பின்னிந்த உலகினில் வாழ்க்கை இல்லை.'

பெண்விடுதலை என்ற குறியீடே யாருக்கும் யாரும் அடிமையில்லை என்ற சமத்துவ நெறியைப் பிரகடனப் படுத்துவதாக ஒலிக்கிறது. “பெண்மையடிமையுற்றால், மக்களெலாமடிமையுற்றால் வியப்பொன்றாமோ?” கண்களில் இரண்டிலொன்றைக் குத்திக் கெடுத்த ஆண் ஆதிக்க குலமே, அந்தத் தவறை உணர்ந்து செயல்பட வேண்டும் என்ற நோக்கில் குறியாக இருக்கும் பாரதி, ஒருபோதும் பெண்ணிடம் குற்றம் குறை காணவில்லை.

“நாம் நம் பெண்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கிறோம் எதற்கு? சங்கீதம் கற்றுக் கொடுக்கிறோம் எது வரை?”

“கற்புக் கதைகளையும், புளுகுப் புராணங்களையும் படித்து மூத்த பொய்மைகளை மேலும் விடாமல் பற்றிக் கொள்வதற்கும், ஆர்மோனியத்தில் அரைகுறையாக ஒன்றிரண்டு சுரங்களை வாசிப்பதற்கு மட்டுமேதான்!

“அவள் எந்தக் கலையிலும் கல்வியிலும் உன்னதமாகத் தேர்ச்சி பெற்றுவிடலாகாது என்பதே உள் நோக்கம்!” என்று இடித்துரைப்பவர் அவ்வை மூதாட்டியைப் பெரிதும் புகழ்ந்துரைக்கிறார்.

அவருடைய மனைத்தலைவி, கல்வி கற்றவளில்லை. மூத்த பொய்மை, மூடக்கட்டுகள் எல்லாவற்றிலும் தோய்ந்த சராசரி இல்லத்துப் பெண். அவள் வீட்டுப் பணிகள் செய்யும்போது, அலுப்புத் தெரியாமலிருக்க அக்கம் பக்கம் பழகுகிறாள்;

For more ebooks visit: https://getmyebook.in/

செவிவழிப் பல செய்திகள் வருகின்றன; பேசுகிறாள்; வீட்டுக்குள்ளிருக்கும் அவள், வெளியே சென்று வரும் கணவனிடம் எத்தனை செய்திகள் கூறுகிறாள்!

மூலப்பொருள்களைப் பக்குவமாக்கிப் படைப்பது போல, கேட்கும் எந்தச் செய்தியையும் சுவைபட உயிரூட்டி, ஒரு தேர்ந்த பத்திரிகை ஆசிரியரும் வியந்து போற்றும்படி, உலக வாழ்க்கையைப் பொருள் பொதிந்ததாகச் செய்யும் இந்த மனைத்தலைவி, பேதை, கபடற்ற குழந்தை போன்றவள்; மாசக்தியின் மகள்!

பெண் அறிவிலி, கணவனின் ஆன்ம நோக்கினையும் உயரிய இலக்கினையும் புரிந்து கொள்ளாமல் கீழ்முகமாக இழுப்பவள் வம்பு பேசுபவள், பொறாமைக்காரி: நஞ்சூட்டுபவள்; கொலையும் செய்யத் துணிவாள். என்றெல்லாம் இலக்கிய ஆசிரியர்களால் முத்திரை குத்தப்பட்டவள் பெண்.

அத்தகைய பெண்ணை உயர்பீடத்தில் ஏற்றி வைத்த மாமனிதர் பாரதி; அவள் மீது படிந்த சிறுமைகளைத் துடைத்து, சக்தியின் ஒரு துளியே நம்மிடையே இயங்கி, நம்மையும் இயக்குகிறது என்று உலகுக்கு உணர்த்திய பெருந்தகை அவர். “உயிர்களனைத்திலும் தாய்ச் சக்தியாக விளங்கும் தேவியே உன்னைப் போற்றுகிறோம்” என்ற ஆதித்தாய் வழிபாட்டை அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்த இந்தப் பாரத திருநாட்டின் சமுதாயத்தை உய்விக்க வந்த அந்தப் பேரோளி, இன்றும் என்றும் நம்மை அச்சுறுத்தும் புன்மை இருளைக் கரைக்கும் என்று நம்புவோம். நம்மை வருத்தும் இன்னல்கள் மாய, அந்த

For more ebooks visit: https://getmyebook.in/

அமுதத்தாரை நமக்கு சக்தி அளிக்கும்; இது உண்மை. பாரதப் பெண்கள் பாரதியின் பெண்களாய்த் திகழ்வார்கள்.

**(சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் 2001, ஏப்-5ம் நாள் நிகழ்த்திய பாரதி அறக்கட்டளைச் சொற்பொழிவு).**

For more ebooks visit: https://getmyebook.in/

# 25. கத்தி விளிம்பில் பயணம்

நான் எழுத்துலகில் தடம் பதித்த புதிதில், புதிய பெண் எழுத்தாளர் பெயரில் ஏதேனும் படைப்புகள் காணப்பட்டால் உடனே அவர்களையும் படைப்பையும் இணைத்து ஒரு கற்பனை செய்து கொள்வேன். இது ஐம்பதுகளின் காலகட்டத்தில் நிகழ்ந்தவை என்று சொல்லலாம்.

அந்தக் காலத்தில் பெண்கள் பெயரில் ஆண்கள் எழுதுவார்கள் என்று நான் கருதியிருக்கவில்லை. ஏன்? கற்பனைக்கூட செய்திருக்கவில்லை. அந்நாள், கலைமகளில், ஒரு இஸ்லாமியப் பெண் எழுதும் கதைகள் வெளியாயின. இஸ்லாமிய சமூகம் பற்றிய படைப்புகளை, பிற சமயம் சார்ந்த எழுத்தாளர் எழுதியிருக்கின்றனர். ஏன்? அந்த சமூகத்து ஆண்கள் பெயரிலும் அமைந்திருக்கலாம். ஆனால் ஒரு பெண் எழுத்தாளர் என்ற வகையில் என் ஆர்வம் மிக அதிகமாக இருந்தது. கோவையைச் சேர்ந்த கிராமப்பகுதிகளில், 'கோசாப்பழம்' என்ற பெயரில் 'தர்பூசணி' பழத்தைக் குறிப்பிடுவார்கள். 'கோசாப்பழம்' என்று கூவிக் கொண்டு தெருவில் விற்பனையாளர் செல்கையில், அது என்ன பழம் என்று ஓடி வந்து பார்த்தேன். தர்பூசணிக்கு இந்தப் பெயரா..? தடித்த கரும் பச்சைத் தோலை விலக்கினால், வெண்மையும் சிவப்பும், கருவிழிகளைப் போல் விதையுமாய், அழகிய இஸ்லாமிய சமூகப் பெண் படிமம் மனதில் பதிகிறது. இந்தப் பெயரை ஒப்பிடும்படி, ஓர் அழகிய பெண்

For more ebooks visit: https://getmyebook.in/

எழுத்தாளரை நான் கற்பனை செய்து கொண்டிருந்தேன். கலைமகளுக்கு வெள்ளிவிழா ஆண்டு (1957), வெள்ளிவிழாவைக் கொண்டாடும் முகமாகப் போட்டிகள் அறிவிக்கப்பட்டன. சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை என்ற போட்டிகள். அந்தப் போட்டியில் ஆர். சூடாமணி சிறுகதைக்குரிய பரிசையும், ரஸவாதி நாவல் பரிசையும், நாடகத்துக்கான பரிசை நானும்பெற்றோம். பாரதியாரின் கவிதைகள் பற்றிய கட்டுரை ஒன்றை எச்.ஆர்.கிருஷ்ணன் என்பவர் வழங்கி, கட்டுரைக்கானப் பரிசைப் பெற்றார். அன்று மாலை, வெள்ளி விழாவை ஒட்டி, 'கலைமகள்' அதிபர் 'வுட்லண்ட்'ஸில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்து இருந்தார். ஆசிரியர் நானும் கலந்துகொள்ள வேண்டும் என்று கட்டாயமாக வற்புறுத்தினார். நான் விருந்துகளில் கலந்து கொண்டு சற்றும் பழக்கமில்லாதவள். அப்போது நாங்கள் வெளியூரில் இருந்ததனால், மயிலாப்பூரில் என் சிறிய தந்தை வீட்டில் தங்கி இருந்தேன்.

ஒரு பொது விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டது அதுவே முதல் தடவை. எழுத்தில் மட்டுமே பார்த்திருந்த சரோஜா ராமமூர்த்தி, தங்கம்மாள் பாரதி, கி.சாவித்திரி அம்மாள், சரஸ்வதி அம்மாள் ஆகியோர் பெண்கள். எனக்கு ஒருபுறம் சாவித்திரி அம்மாளும் (கலைமகள் குடும்பம்) மறுபுறம் சரோஜா ராமமூர்த்தியும் அமர்ந்திருந்தனர். அடுத்து தங்கம்மாள் பாரதி. ஆண் எழுத்தாளர் அநேகமாக அன்றையப் பிரபல ஆசிரியர்கள் எல்லோரும் இருந்தார்கள். அவர்களில் கி.வா.ஜ., எல்லோரையும் வரவேற்று

For more ebooks visit: https://getmyebook.in/

இன்முகத்துடன் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக நலம் விசாரித்து, நகைச்சுவையுடன் உரையாடினர். நான் அப்பொழுது ஓர் அறியாச் சிறுமியின் நிலையில்தான் இந்த எழுத்துலகச் சான்றோரின் இடையில் இருந்தேன். அமரர் கி.வா.ஜ., அவர்கள் முதல் சந்திப்பிலிருந்தே என்னிடம் பழகிய விதம், ஒரு தந்தை பேதைச் சிறுமி என்று பாராட்டாமல், மகிழ்ச்சியுடன் இறங்கி வந்து சம மதிப்பை வழங்குவது போலிருந்தது. இதெல்லாம், நான் பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அமரரைப் பற்றி நினைக்கும் போதுதான் புரிகிறது. அவரைப் பார்த்த உடனே, அந்த இஸ்லாமியப் பெண் எழுத்தாளரைப் பற்றிக் குறிப்பிட்டு, “அவர் வந்திருக்கிறாரா?” என்று ஆவலுடன் கேட்டேன்.

“ஓ! வந்திருக்கிறார்.” என்று கூறிவிட்டு மற்ற விருந்தினரை விசாரிக்கச் சென்றார். நான் தனியாக என்னுடன் நின்றிருந்த மேலே குறிப்பிட்ட பெண்களையே பார்த்துக் குழம்பினேன். தங்கம்மா பாரதியை முன்பு கண்டதில்லை. என்றாலும் பர்தாவுக்குள் தெரியும் வெண்ணையும் ரோஜா நிறமும் கலந்த முகத்தில் கருவண்டுக் கண்களுக்குச் சொந்தமான வடிவப் பெண் எழுத்தாளர் யாரும் தென்படவில்லை. நான் குழம்பி நிற்கையில், நேர் எதிர்மாறான வடிவத்தில் ஓர் ஆண்மகனை, ஆசிரியர் என் முன் அழைத்து வந்தார். “நீங்கள் கேட்டீர்களே. இவர்தாம் அந்தப் படைப்பாளி” என்று நகைத்துவிட்டுச் சென்றார். நான் திருதிருவென்று விழித்துவிட்டு, எப்படியோ என் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு சமாளித்தேன்.

For more ebooks visit: https://getmyebook.in/

அக்காலத்தில் என் போன்ற படைப்பாளருக்குச் சில எல்லைக் கோடுகள் கற்பிக்கப்பட்டிருந்தன. ஆண் எழுத்தாளர் எதையும் எழுதலாம். பால்வினை நோய்கள், தாசிகுலம், முறையற்ற உறவு எல்லாமே அவர்களுக்கு எல்லைக்கோடுகள் அல்ல. அது அவர்களுக்கு பெண்ணைப் பொறுப்பாக்கிய வாழ்க்கை. ஆனால், பெண் படைப்பாளர்? நாங்கள் எழுதத் துணிந்தால் அது ‘ஆபாசம்’ என்று தள்ளப்படும். அச்சம், என் அடி மனசில் இருந்தது. ஆனால் இது ஏன் பொதுவானதாக இல்லை? அந்தக் காலத்தில் கேட்கப்படாத கேள்விகள் பல எழும்பி எழும்பி எனக்குள்ளே எதிரொலி இல்லாமல் மாயும்.

அந்த விழாவில், விருந்தில் தி.ஜா.முக்கியமான படைப்பாளர். எனவே, அவர்தாம் முதலில் தம் படைப்புகளைப்பற்றிப் பேசினார். எடுத்த எடுப்பிலேயே, ‘நான் 'மடி'க்கதைகள் எழுதுவதில்லை. 'விழுப்பு'க்கதைகள் தான் எழுதுவேன்’ என்று தொடங்கினார். என் அருகில் இருந்த கி.சாவித்திரி அம்மாள், அவருடைய மிகுதிப் பேச்சை நான் கேட்பதற்கே இல்லாமல் என்னிடம் புருபுருத்து தம் ஆற்றாமையைக் கொட்டினார். நான் திடுக்கிட்டேன். “விழுப்புக் கதைகள்! இவர் என்ன எழுதறார் பார்த்தியாம்மா? நீ யது நாத்தின் குருபக்தி படிச்சியோ? கதையா இது? ஏன் சாக்கடையைப் பாக்கனும்? சாக்கடையிலும் சூரியக்கதிர் விழுந்து சுட்டுப் பொசுக்குதே அதைப் பாக்கட்டுமே?”

என் நினைவில் இன்றும் உயர்ந்து நிற்கும் சொற்கள் இவை. ஆம்! யதார்த்தம் - நடப்பியல் சமுதாயத்தில்

For more ebooks visit: https://getmyebook.in/

சாக்கடை இருக்கிறது. அதை விலக்க முடியாது. ஆனால் அதுதான் சரி என்று காட்டுவதா? இலக்கியம் மனித மனங்களை, மேல்நோக்கிக் கொண்டு சொல்ல வேண்டும். அமைதி அளிக்க வேண்டும். குழப்பங்களுக்குத் தெளிவு கானும் அழகியல் உணர்வு கொடுக்க வேண்டும். ஏன், சாக்கடையில் துழாவி இதுதான் என்று காட்டவேண்டும்?

இதுதான் சாவித்திரி அம்மாளின் ஆற்றாமை, அவர் குறிப்பிட்ட 'யதுநாத்தின் குருப்க்தி' கலைமகளில் வந்த சிறுகதைதான். 'யதுநாத்' என்பவர் ஒர் அரசர். அவருக்கு ஒரு சாமியார் குரு. அரசர் அந்தப்புரத்தையே மறந்து, குருவுக்குப் பணிவிடை செய்கிறார்; வழிபடுகிறார். அல்லும் பகலும் அவர் தங்கியிருக்குமிடத்திலேயே இருக்கை அவர் உறங்கும்போதும் அரசர் அவர் வசதிகளையே எண்ணிக் காத்து நிற்கிறார். ஒருநாள் இரவு, நல்ல நிலவு. குரு தம் விடுதியை விட்டு வெளிப்பட்டு மாளிகைக்கு வெளியே நிலவில் தனியாக நடந்து செல்கிறார். அவரறியாமல் அவருடைய பாதுகாவலன் போல் பின்னே அரசரும் செல்கிறார்.குருநேராகத் தாழ்ந்த குலப்பெண் வசிக்கும் ஒரு குடிசைக்குள் நுழைகிறார். அரசரும் எட்டிப் பார்க்கிறார். அந்தப் பெண்ணை நிர்வாண கோலத்தில் குரு மடியில் போட்டுக் கொள்கிறார். அரசர் பின்வாங்கி, நேராக அந்தப்புரத்துக்குள் நுழைகிறார்.

பல நாட்களுக்கு முன் படித்த கதை, சாவித்திரி அம்மாளின் ஆற்றாமை, என் போன்ற இளம் பெண் படைப்பாளிகளுக்குப் படைப்புலகின் பொறுப்பை உணர்த்தியது எனலாம்.

For more ebooks visit: https://getmyebook.in/

ஆசிரியர் கி.வா.ஜ.அடுத்து உடனே என் பக்கம் திரும்பி வந்தார்.

"இப்ப, நீங்க பேசனும், ராஜம்மா" என்றார்.

நான் திடுக்கிட்டுப் போனேன். அருகில் சாவித்திரி அம்மாள் என்னைக் குடைந்து, “பேசு. பேசம்மா? பதிலடி கொடு.” என்று தூண்டினார். எனக்குத் துணிவு வரவில்லை. நான் ஒரே வாக்காக மறுத்துவிட்டேன். எனக்கு அப்போதே இந்தப் படைப்புலகத்தில் எங்களுக்கு எல்லைகள் போடும் 'மதில்' இத்தகைய முரண்பாடுகள் என்று உணர்த்தப் பட்டது. சாவித்திரி அம்மாளே பேசியிருக்கலாமே? அவர்கள் கலைமகள் குடும்பத்தில் புலமை வாய்ந்த எழுத்தாளர். அவர் ஏன் நேராகப் பேசவில்லை? சரோஜா ராமமூர்த்தி இதில் சம்பந்தமில்லாதவர்போல் அமர்ந்திருந்தாரே...ஏன்? கடைசியில் கி.வா.ஜ., தங்கம்மாள் பாரதியை நோக்கி அறிமுகத்துடன், “நீங்கள் பேசுங்கள்.” என்றார். அவர் தாம் தங்கம்மாள் பாரதி என்றறிந்ததும் பரவசமாக இருந்தது. அவர் என்ன பேசினாரென்று புரியவில்லை. அவர் எங்களைப் போன்ற இளம் படைப்பாளரை, ‘எந்தையார் கனவு கண்ட புதுமைப் பெண்கள்’ என்று வாழ்த்தியது மட்டும் நெஞ்சில் நீங்காத ஆசியாகத் துணிவு கொடுத்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, என்னுடைய பெண் எழுத்தாளர் தேடல் மிகக் கூர்மையாயிற்று. ஆனால் பெண் பெயரில் ஆணே எழுதுகிறார் என்ற கருத்து மட்டும் ஒப்புக் கொள்ளும்படியாக இல்லை. அந்த எழுத்துக்களில் ‘மத்தியப் பிரதேச ஆக்கிரமிப்பு' போன்ற இரட்டைத் தொனிகள் ஒலித்தபோதும்

For more ebooks visit: https://getmyebook.in/

எனக்குத் தெளிவு வராமல், அந்த எழுத்தாளப் பெண்மணிகளை, நேரே சந்திக்க நான் முயன்று, வேறே யார் யாரோ பெண்களைத் தேடிச் சந்தித்தது மிகுந்த சுவாரஸ்யமான விஷயம்.

இன்று, இந்த ஐம்பது வருஷங்களில், பெண்கள் மீறி எழுதலாமா, மடிக்கதைகளிலேயே நிற்க வேண்டுமா, இல்லை, அவர்களும் போட்டி போட்டுக் கொண்டு ‘வன்முறைப் பாலியல், தொகுப்புகளைக் கட்ட விழ்க்கலாமா?’ என்பது இன்னமும் கேட்க வேண்டிய கேள்வியாகிறது. நாங்கள் கத்திமேல் நடக்க வேண்டும்.

**‘பெண்ணே நீ’,**

**ஜனவரி - 2004**

For more ebooks visit: https://getmyebook.in/

# 26. பெண்கள் படைப்பில் பெண்கள்

பெண்களே படைப்பாளிகள். தாயாக அமுதூட்டி ஒரு மகவை உருவாக்குகிறாள். உணவு படைத்து, சமுதாயத்தையே உருவாக்குகிறாள். மொழியை அவளே கற்பிக்கிறாள். அவள் மகிழ்ச்சியும் சோகமும் பாடல்களாக உருவாகி ஒவ்வொரு மொழியிலும் எழுதா இலக்கியமாகி இருக்கின்றன. பெண் உணர்ச்சிமயமானவள். படைப்புக்கு வேண்டிய மூலதனம் அதுதான். எழுத்தறிவும் கல்வியும் அவளுக்கு மறுக்கப்பட்டிருந்த நாட்களிலும் அவள் உணர்வுகள் அத்தகைய பாடல்களால் எழுதா இலக்கியங்களாக உருவாயின. தமிழில் இருபத்தாறாண்டுகள் பத்திரிகை நடத்தி - 116 நாவல்கள் எழுதிய முன்னோடி, வை.மு.கோதைநாயகி, எழுதப்படிக்கத் தெரியாதவர். பக்கத்து வீட்டுக்காரி எழுதத் தெரிந்தவள். அவளிடம் கதைசொல்லி எழுதச் சொன்னாராம். இளம் பருவ மணம் ஒத்த கணவர் எழுத்தாற்றல் வளர்ந்தது. இசையும் கேட்டே பயின்று இசைக்கச்சேரிகள் செய்தார். தேச விடுதலைப் போராட்டத்தில் முழுவதுமாக ஈடுபட்டார். இந்தப் பெண்மணிக்கு சமூக எதிர்ப்புகள் நிறையவே இருந்தது. பாரதியாரின் எதிர்வீட்டில் புகுந்த இடம். “உள்ளே யார் சுவாமி பாடுகிறார்கள்? இதோ நான் ஒரு பாட்டு எழுதியுள்ளேன், கூப்பிடுங்கள்!” என்று அந்த மாக் கவிஞர் அழைத்தும் மருமகளை வெளியே அழைக்கத் துணியாத காலம். கவிஞர் திண்ணையிலேயே பாடிக் காட்டி, துண்டுக் கடிதாசிப்

For more ebooks visit: https://getmyebook.in/

பாடலைக் கொடுத்தால் வாங்கிச் சென்று உள்ளே கொடுப்பாராம். அந்தப் பாடல் கணீரென்ற குரலில் அப்படியே கேட்குமாம். பத்திரிகைகளைச் சநாதனம் எரித்துத் தன் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டதாம். அவரைப் பற்றி எழுத வேண்டும் என்று நான் அறுபதுகளின் கடைசியிலோ, அதற்குப் பின்னோ, அவர் வீட்டுக்குச் சென்றேன். வை.மு.கோ.வின் கணவர், பாரிச வாயுவினால் பீடிக்கப் பட்டுப் படுக்கையில் இருந்தார். அப்போது அவர் கண்களில் நீர் வழிய, இந்த விவரங்களைக் கூறினார். எனக்கு எழுத வேண்டும் என்ற ஆர்வம் மிகுதியாயிற்று. ஏற்கனவே டாக்டர் ரங்காச்சாரி, அமுதமாகி வருக, கையெழுத்துப் பிரதிகளுடன் சிரமப்பட்ட அநுபவத்தில், இதை வெளியிட யாரேனும் முன்வருவார்களா என்று ஆராய்ந்தேன். ஆனால், ஒட்டுமொத்தமாக எனக்குக் கிடைத்த பதில் மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. “அட என்னம்மா நீங்க? அவர்களெல்லாம் இலக்கியமா படைத்தாங்க? அவரைப் போய் எழுதிக்கிட்டு?” இதுமட்டுமில்லை. அவர் நடத்தையில் மாசு கற்பித்தவர்களும் உண்டு. நான் ஒடிந்து போனேன். தமிழ் நாவல் நூற்றாண்டில் நாவல் வரலாறு எழுதியவர்கள், கோதைநாயகியை விட்டுவிட்டார்கள். அதுகூடத் தமிழ்நாட்டின் பெண்கள் தலைவிதி என்று கருதலாம். ஆனால் ஸீஸதாரு லலிதா தொகுத்த “பெண்கள் எழுத்து - இந்தியாவில்” என்ற இரு பகுதிகளிலும் கோதைநாயகியின் வெறும் பெயர் போகிற போக்கில் குறிக்கப்படுகிறதே ஒழியே ஒரு நாலு வரி விவரம்கூட இல்லை. அவர்கள் பொதுக்குழுவில், தமிழ்நாட்டுப் பெண்மணி இடம்

For more ebooks visit: https://getmyebook.in/

பெறாமல் இல்லை. கோதைநாயகியை வேண்டுமென்றே தவிர்த்திருக்கிறார்கள். இன்று பெண்கள் படைப்பில், பெண் எவ்வாறு படைக்கப்பட்டிருக்கிறாள் என்பதை ஆராயலாம். பெண்ணியமா, சமத்துவமா, மார்க்சியவாதப்பாதையில் படைக்கப்பட்டவளா என்று வண்ணம் பூசலாம். ஆனால், பல்வேறு அரங்குகளில் பல பரிமாணங்களுடன் முன்னோடியாகத் திகழ்ந்த பெண்மணி எந்த அரங்கிலும் ஒத்துக் கொள்ளப்படவில்லை. அகவயப்பட்டு, புறவயமாகவும், ஒரு பெண் இன்னும் சுயம் காண இயலாத நிலையில்தான் போராடுகிறாள். அந்தப் போராட்ட பிரதிபலிப்பைத்தான் 'பெண்கள் படைப்பில் பெண்கள்' என்ற தலைப்பில் அடையாளம் காண முயலுவதாக நான் கருதுகிறேன். முதலில் பெண்ணுக்கு எழுதும் உந்துதல் எப்படி வருகிறது? கோதைநாயகிக்குக் கற்பனைத்திறன், அந்த உந்துதலை அளித்திருக்கலாம். பெரியார் பாசறையில் உருவான பெண் எழுத்தாளரின், சமூக அநியாயங்கள் - பெண்ணைப் பாதித்ததால் அவற்றை எதிர்த்து எழுதும் உந்துதல் ஏற்பட்டது. மூவலூர் இராமாமிர்தத்தம்மாளின் 'தாசிகள் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்' என்ற நாவலைப் படித்து நான் பரவசப்பட்டேன் எனலாம். பிற பெண் சமுதாயத்தால் சபிக்கப்படும் அளவுக்கு, ஒரு சாராரை, தெய்வ சம்மதம் என்று காலம் காலமாக இறுக்கப்பட்டு வந்த சமூகக் கோட்பாடுகளை அவர் எதிர்த்தது மட்டுமின்றி, விடுபட்டு, விடுதலை உணர்வைப் பரப்ப, பொட்டறுப்பு சங்கங்கள் நிறுவுவதாகத் தீர்வும் காட்டி இருந்தார். இந்தப்

For more ebooks visit: https://getmyebook.in/

படைப்பை, சமகால ஆண் எழுத்தாளர் ஒருவர் குப்பை என்று விமர்சித்தார். எனவே, பெண்ணை ஒரு நுகர்பொருள் கோணத்தில் காதலி, மனைவி, கைம்பெண் என்ற பல்லாயிரம் ஆண்கள் பிம்பப்படுத்தும் நெறி இங்கே காலம் காலமாக பெண்களின் சுதந்தர சிந்தையையே மதிலாய் மறைத்திருக்கிறது. நாம் மதில்களுக்குள் இருக்கிறோம் என்ற உணர்வு, வெகுகாலம் தலைதூக்கவில்லை. குடும்பம்,பெண் உழைப்பு, கற்புநெறி, மக்களைப் பெறும் திறன், குடும்பத்துக்காக, மக்களுக்காக, கணவனுக்காக உயிரையும் கொடுக்கும் தியாக சிந்தை இவையே அவளை எந்த நிலையிலும் அடையாளப்படுத்தும் நெறிகளாக இருந்தன. கோதைநாயகியின் கணவரும், மற்றவரும் அவருடைய ஆற்றல் பரிமளிக்க உடன்பட்டிருக்கவில்லையெனின், நாவலாசிரியை, பத்திரிகையாசிரியை, இசையரசி, பேச்சாளர், தேசபக்தப் பெண்மணி என்ற மலர்ச்சிகளே வாய்த்திருக்காது. பாரதியாரின் விடுதலைப் பாடல்களைப் பாடிக் கொண்டு தெருவில் ஊர்வலம் செல்லவும், அந்நியத் துணி விலக்கும், மதுவிலக்குப் போராட்டங்களில் ஏனைய பெண்களுக்கும் துணிவு தரவும் ஒரு சக்தி கண்டறியப்பட்டிருக்காது. விடுதலைக்கு முன்னும் பின்னும், பெண்கள் பத்திரிகை எழுத்துகளால் ஊக்கம் பெற்றார்கள். புறவயமான சிறுமைகள், தடைகள், வெளிப்படையாக அகற்றப்பட்டன. பட்டங்கள் ஆளலாம்; சட்டங்கள் செய்யலாம். எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை என்று நிரூபிக்கலாம்.

For more ebooks visit: https://getmyebook.in/

அப்படி, நிருபிக்கும் வாய்ப்புகளுடன் பேனாவைப் பற்றியவர் டாக்டர் திருபுரசுந்தரி - 'லக்ஷ்மி' என்ற பெண்மணி. அவருடைய அனுபவ ஆற்றலின் நீள அகலம்நம்மைப் பிரமிக்க வைக்கக்கூடியது. அவர் நிறைய எழுதினார். தமிழர்கள் எங்கெல்லாம் பத்திரிகை படித்தார்களோ அங்கெல்லாம் அவர்கள் வீட்டுப் பெண்மணியாக வாசகர் மனங்களில் இடம் பிடித்தார். என்னைவிட நாலைந்து ஆண்டுகள் அவர் முதியவராக இருந்தாலும், இளமையில் நான் படித்த ஆண்கள் பள்ளியில் நாங்கள் இருவர் மட்டுமே பெண்கள். 34,35-கால கட்டம். நெருங்கிய தோழிகள். அவர்தாம் நாடறிந்த எழுத்தாளர் என்பதோ, நான்தான் ராஜம் கிருஷ்ணனாக எழுத்துலகப்ரவேசம் செய்திருக்கிறேன் என்றோ தெரியாத நிலையில் கலைமகள் நாவல்பரிசை நான் பெற்றபோது, அந்தக் காலத்தில் விழாவுக்கு வந்த என் தந்தையால் அடையாளம் கண்டு மகிழ்ச்சியில் பூரித்தார். ‘லக்ஷ்மி' நம் ‘திருபுரம்’ என்று எனக்கு ஏற்கனவே பத்திரிகை மூலமாகத் தெரிந்திருந்த போதிலும், அன்றைய விழாவில் ஏற்பட்ட மகிழ்ச்சி, நான் எத்தனை பரிசுகளைப் பெற்றபோதும் அடையாதது. என் நாவல் 'பெண்குரல்' தேர்வுக்குழுவில் அவரும் இருந்தார் என்று கூறி, நானாக அது இருந்தது கண்டு கட்டித் தழுவி மகிழ்ந்தார். அது பெண்குரல். இன்றும் என் எழுத்துக்களை ஆய்வு செய்பவர்கள், அது பெண்ணியக்குரல் என்று அடையாளப்படுத்துகிறார்கள். பதினைந்து வயதில் திருமணமாகி, ஒரு பெரிய குடும்பத்து இளைய மருமகளாக, அடி வைக்கும் பெண்ணின் வாழ்வில்

For more ebooks visit: https://getmyebook.in/

அகம், புறம் இரண்டு தளங்களிலும் ஏற்படும் அழுத்தங்களே, அந்தக் குரலாக வெளிப்பட்டது எனலாம். குடும்பத்தில், ஒரு பெண் பகலெல்லாம் உழைக்கவும், இளம் தம்பதியினருக்கென்ற ஒரு தனி, அந்தரங்கத்துக்குக்கூட இடமில்லாமல், திருடரைப் போல் அணுக வரும் கணவனை ஏற்று மகிழ்விக்கவும் வேண்டுமா? அவளைப் பார்க்க வரும் ஓர் உறவினனான இளைஞனை வரவேற்று ஒரு தம்ளர் காபி கொடுக்க உரிமை இல்லையா? மாமி, நாத்தி, ஓரகத்தி என்ற உறவுப் பெண்கள் ஏன் அவளைக் குறை கூறும் நோக்கில் பார்க்கிறார்கள்? அவள் தாயையும்கூட, அத்தை பாட்டி இப்படித்தானே குறை கூறினார்கள்? அவள் திருடனைப்போல் வந்த கணவனைத் தள்ளிவிட்டுத் தன்னை வெளியிட்டுக் கொள்கிறாள். ‘பெண்ணியம்’ என்ற பதம் கூடப் பரிசயமில்லாத நாயகி. அந்த அத்தியாயத்தை ‘நான்’ என்ற எனக்குப் பரிசயமில்லாத குரல் எழுதியது. நான் அறிமுகப்படுத்திய அந்த மென்மையான, அடக்கமான, பணிவுள்ள, மரியாதை தெரிந்த இளம்பெண், வளைந்து கொடுக்கவில்லை. மாமி, நாத்தி பற்றிய குற்றங்களை அவனிடம் வடித்து ஆறுதல் தேட முயலவில்லை. இது ஏன்? ஏன் இப்படி நிகழ்கிறது? இந்தக் கேள்வியே அன்று ஒலித்த பெண்குரல். என்னுடைய உரிமை. அடிப்படை உரிமை. நான் பெண் என்பதால், எனக்கு மறுக்கப்படும் உரிமைகள். ஒரு பெண் ஆணைச் சார்ந்துதான் வாழ வேண்டும். அந்தச் சார்பின் அழுத்தமே, குடும்ப உறவுகளில் பெண்களை விரோதிகளாக்குகின்றன. குடும்பம் என்பது குறுகிய வட்டம்தான். பெண்களுடைய வட்டமும்

For more ebooks visit: https://getmyebook.in/

குறுகியதுதான். ஆனால், அந்தக் குடும்பத்தின் சக்தியாக இயங்கும் பெண், கூட்டிலடைப்பட்ட, சிறகுகளை இழந்த கிளியைப் போல் ஆணாதிக்க நெறிகளால் பதப்படுத்தப்பட்டிருக்கிறாள். நமக்குச் சிறகுகள் வந்திருக்கின்றன. கூடுகளும் அன்றுபோல் இல்லை. பறக்க முடியும். பிழைக்க முடியும். எங்கோ ஒன்றல்ல. பெரும்பான்மைப் பலமும் இருக்கிறது. இந்த ஜனநாயக சமுதாயக் கட்டமைப்பில் ஆண்களும் பெண்களும் ஒருவர் உரிமையை மற்றவர் பாதிக்காமல், சுதந்தரமாக வாழ்ந்து உயர முடியும். ஆனால் அது நடக்கவில்லை. ஆணின் நோக்கில் அவள் இன்னமும் நுகர்பொருள்தான். பெண்ணின் படைப்புகள் ஒன்று, குடும்ப நெறியைக் கட்டிக்காக்கும் பழைய அச்சுகளில் இயங்குகின்றன. அல்லது, ஆண்கள் 'சுதந்தரம், பெண் உரிமை பேசல்’ என்ற வண்ணக் கொடிகளை ஏந்தித் தலைமை தாங்குவதுபோல் காட்டும் நோக்கில், பெண்களை அடையாளப்படுத்துவது சமத்துவம் என்ற கருத்தை வைக்கிறார்கள். ஒரு வயது முதிர்ந்த ஆண், ‘பக்கத்து வீட்டுத் திருமணமான பெண் கூந்தலை ஆற்றிக் கொண்டு நிற்கிறாள். அவள் அழகை என்னென்று சொல்வேன்? அழகை ரசிப்பவன் நான்?' என்று எழுதிப் பேராசிரியன் ஆகலாம். ஆனால் ஒரு பெண் அப்படி ஓர் ஆணை எழுதினால், அவளுக்கு ஓராயிரம் கண்டனங்கள் வரும். இதேபோல் ஓராண், 'பெண் பாலியல் ரீதியாக எத்தகைய அறிவாளி ஆணையும் முதுகெலும்பற்றவனாகச் செய்வாள். அவள் முட்டாளாக, அழகற்றவளாக இருந்தாலும் இந்த ஆற்றலால் ஆண்வர்க்கத்தையே செயலிழக்கச்

For more ebooks visit: https://getmyebook.in/

செய்து தன் பசியைத் தீர்த்துக் கொள்வாள்’ என்று அப்பட்டமாக எழுத முடியும். பாராட்டுகளும் பெறுவான்.இந்தப் போக்கைப் பெண்மக்களும் பாராட்டிப் புகழும்போதுநெஞ்சில் எங்கோ இடிக்கிறது. உண்மை இதுவா? இது ஒன்றுதான் பெண்மையா? பசி யாருக்கு? உணவுக்கா, அதை அழிப்பவருக்கா? காலம் காலமாக இந்தப் பெண் விரோதக் கருத்தியலில் அவள் பதப்படுத்தப்பட்டு, நானே குற்றவாளி என்று தலைகுனிகிறாள். நான் பெண்.பெண். பாதுகாக்கப்பட வேண்டிய பிண்டம். என்னைப் பாதுகாக்க ஓராண் அவசியம் தேவை என்ற நிர்ப்பந்தமே, வரதட்சணைக் கொலைகளில் இருந்து, பெண் கருவழிப்பு வரை, வளர்ந்து கொண்டிருக்கிறது. எனவே, பெண் எழுத்தில், மிக மிக அருமையாகவே கேள்வி கேட்கும் உட்குரல் பதிவாகிறது.

பல ஆண்டுகளுக்கு முன், ‘அம்மா ஒரு கொலை செய்துவிட்டாள் என்ற சிறுகதை ஒரு சிறுமியின் குரலாகப் பதிவாயிற்று. (அம்பை) ஏனெனில், உயர்சாதிக் குடும்பங்களில் திருமணமானபின் பூப்பெய்துதலே மங்களம். அதற்குமுன் அவள் பூப்பெய்துதல் களங்கம். என்னுடைய இளமைப்பருவ அனுபவங்கள், எங்கள் வளர்ச்சியைப் பிறர் கண்டு அச்சுறுத்தும்போது ஏற்படும் குற்ற உணர்வுகள், ஒரு பெண் குழந்தை சபிக்கப்பட்டவள் என்ற நிலைக்குத் தள்ளக்கூடியவள். ஒருபத்து வயசுப் பெண் - பன்னிரண்டு வயசுப் பெண், காவேரிக்குச் சென்று குளிக்கும் ஆனந்தம் கண்காணிக்கப்படும். இதனாலேயே இளம் பருவத் திருமணங்கள்

For more ebooks visit: https://getmyebook.in/

கட்டாயமாயின.ஆனால், ஒரு கால் நூற்றாண்டு கழிந்தபின், பெண்ணுக்குச் சகல சுதந்தரங்களும் வந்துவிட்டதாகத் தீர்மானமானபின், ஒரு பெண் பருவமாகும் முதல் அனுபவத்தால் மருண்டுபோன நிலையில், தாயின் அரவணைப்பு ஆதரவுக்கு ஏங்கும்போது, “இதுக்கு என்ன இப்ப அவசரம்?” என்ற சுடுசொல்லை உதிர்த்து சுட்டுப் பொசுக்கிய தாயின் உணர்வுகள், அந்தக் கொலைக்கதையில் வெளிப்பட்டன. இவள் நுகர்பொருள். எழுத்தாளரும், அவர் படைப்பும் வெவ்வேறல்ல. இது குறித்து, சில மாதங்களுக்குமுன் விவாதம் ஒன்று நிகழ்ந்தது. என்னைப் பொறுத்தவரையில், ஒரு பெண் படைப்பாளர், தம் படைப்பில் தம் உட்குரலாகவே இயங்கும்போதுதான் அவர் பெண் படைப்பாளராகிறார். காலம் காலமாக ஆணின் நோக்கில் நெறிப்படுத்தப்பட்டிருக்கும் கோடுகளில் தம்பாத்திரங்களை இயங்கச் செய்பவர்.உண்மையில் பெண் எழுத்தாளரல்ல. எழுத்தாளர். அவ்வளவே இந்த மலர்ச்சி எப்போதும், எல்லாப் படைப்புகளிலும் உட்குரலாகப் பதிவாவதில்லை எனலாம்.

என்றாலும், ஒருபெண், தன்னையே தான் யார் என்று தேடிக் கொள்ளும் அநுபவமாகவே பல்வேறு பாத்திரங்களில் அடையாளப்படுத்த முடியும்.

சுதந்தரப் போராட்டத்துக்குப்பின் வாசகர்கள் பெருகிப் பத்திரிகைச் செல்வாக்கு, பல எழுத்தாளர்களைத் தோற்றுவித்தன. பேனாவை எடுப்பதே குடும்பப் பெண்ணுக்குப் புரட்சி. அதுவும் பத்திரிகைகளில் வெளி வந்தாலே தன்னம்பிக்கை

For more ebooks visit: https://getmyebook.in/

கூடும். பத்திரிகைகள் வெகுஜன ஆமோதிப்புடன்தான் எந்தப் பெண் எழுத்தாளரையும் ஆமோதிக்கும். கதாநாயகிகள், லட்சுமியின் கதைகளில், படித்தவர்களாக ஆசிரியர்களாக, மருத்துவர்களாக இயங்குவார்கள். ஆனால், நல்ல குடும்பப் பெண்களாக, சேவை செய்யும் விதவைகளாக, மாமியார், கணவர்களை மகிழ்விப்பவர்களாக, விதிக்கப்பட்ட 'நற்'பெண்டிர் மரபைக் காப்பாற்றுவார்கள். இல்லாதவர்கள், கொடுமைக்காரிகள் என்ற அச்சில் இயங்குவார்கள். 22 ஆண்டுகள், கணவனோடும், கணவர் மறைந்த பின்னரும், பிரச்னைக் குரிய கறுப்பர் சமுதாய, நிறவெறி வெள்ளையர் ஆட்சியில், ஓர் இந்திய மருத்துவராக, அரசு பணியாற்றியவராக வாழ்ந்தவர். மீண்டு வந்து, அதே குடும்பத் தொடர்களைத் தொடர்ந்தார்.உடைந்த கண்ணாடித் துண்டுகள் போல் சில அநுபவச் சிதறல்கள் மட்டுமே அவ்வப்போது தீபாவளி மலரில் வெளியாயின. அவருடைய சில அநுபவங்களை அவர் வாய்மொழியாகவே நெருங்கிய தோழி என்ற அடிப்படையில் அறிந்து கொண்டிருக்கிறேன். ‘இதெல்லாம் எழுதுங்கள், இந்தத் தொடர்கதைகள் வேண்டாம். அரிய அநுபவங்கள். தமிழ் இலக்கிய உலகுக்குக் கிடைக்கும் கொடைகளாக இருக்கும்’ என்று கூறியதுண்டு. ஆனால் தம் இறுதிக்காலம் வரை அவர் எழுதியும், தம் உட்குரல்களை அவர் பதிவு செய்ததாகத் தெரியவில்லை.

பெண்கள் அவ்வாறு பதிவு செய்ய இயலாமைக்குப் பல காரணங்கள் உண்டு. அது அவருடைய தனிப்பட்ட

For more ebooks visit: https://getmyebook.in/

இயல்புக்குப் பொருந்தாமல் போகலாம். ஏனெனில் மற்றவர் மனங்களை நோகச் செய்யக்கூடாது என்ற காரணமாகவும் இருக்கலாம்.

அறுபதுகளின் முற்பகுதிகளில் 'ராஜலட்சுமி' என்ற மலையாளக் கவிஞர், தம் வளர்ந்து வரும் 'மகோன்னத கவிஞர்' என்று உயர்ந்த காலத்தில் தற்கொலை செய்து கொண்டார். தாம் எழுதிய கவிதை மற்றவரைத் தாக்கி விட்டது என்ற காரணத்துக்காகவே வாழ்வை முடித்துக் கொள்வதாக எழுதிவைத்த நினைவு. அவர் எழுதிய நாவல் ஒன்றுகூட உடனே மாத்ருபூமியில் வெளியாயிற்று.

இது சமுதாயம் குறித்த அச்சமோ, குற்ற உணர்வோ என்பதை வரையறுக்க முடியாது.

பிரச்னைகளில் சிக்கும் பெண்களின் மெல்லிய உணர்வுகளை இப்போதெல்லாம் பல பெண் எழுத்தாளர் அருமையாகப் பதிவு செய்கின்றனர். பெண்களும் மனிதர்கள். ஆனால் அவர்கள் ‘பாலியல் சார்ந்த தாய்மை உணர்வு சார்ந்த பெண்ணுக்குப் பெண் ஒத்துக்கொள்ளாத’ என்ற அச்சுகளில் இயங்கும்போது அந்த அச்சுக்களை ஏனென்று இனம்காட்டும் வகையில் உயர்தர எழுத்துக்கள் வெளி வந்திருக்கின்றன.

வாஸந்தியின் 'தாகம்' ஓர் அருமையான படைப்பு. நூற்றாண்டு முன் இந்தியாவில் இருந்து ஃபிஜித்தீவுகளுக்கு அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட இந்திய சமுதாயத்தின் வளர்ச்சி, மேன்மைகள், சொந்த சமுதாய இந்திய இனவேர்களைக் கண்டு கொள்ள முயலும்போது

For more ebooks visit: https://getmyebook.in/

ஏற்படும் அரசியல் - சமுதாயம் சார்ந்த முரண்பாடுகள், அனைத்திலும் சம்பந்தப்பட்ட நாகலட்சுமி, மோகினி என்ற இரு பெண்களின் வாழ்க்கை நிகழ்வுகள் அது முன் வைக்கிறது. நாகலட்சுமி, அந்நிய நாட்டில் இளமையில் கணவனை இழந்து மக்களை ஒரு பிடிவாதத்துடன் படிக்க வைத்து முன்னேற்றுபவர், தன் பிடியில் இருந்து மக்கள் கழன்று சுதந்தரமாக இயங்கப் போவதால் ஆயாசமடைகிறாள். தன் கடைக்குட்டி மகனுக்கு இந்தியாவில் இருந்து, பசையில்லாத குடும்பத்தில் இருந்து பெண் தேடிக் கொண்டு வருகிறார்.

மோகினி தன் கணவனைத் தாயின் பிடியில் இருந்து பிரித்துக் கொண்டு விடக்கூடாதென்று வியூகம் வளைக்கிறாள். அவள் நோய்க் கண்டு இறக்கிறாள். இறந்த பின்னரும் மகனை விடவில்லை. மோகினியை அச்சுறுத்து-கிறாள் - கனவுகள்-கற்பனைகளில் ஆவிபோல். அதேபோல் கணவன் இரத்தப்புற்று கண்டு இறந்து போகிறான். மேலெழுந்த வாரியாகப் பார்க்கையில், குருட்டு நம்பிக்கைகளை நிசமாக்குவதுபோல் தோன்றும். ஆனால், நாகலட்சுமி என்ற மாமியாரைக் காரணியாக வைத்து, இருவர் உளவியலையும், மோகினியின் பிரச்னைகள் நிறைந்த வாழ்க்கையையும், போராட்டங்கள்சார்ந்த மனச்சிக்கல்களையும் அற்புதமாக ஆராய்கிறது. ஃபிஜித்தீவில் இந்திய வம்சாவளியினர் ஆதிக்குடிகள், அரசியல் அரங்குகள் ஆகிய பல கூறுகளையும் இந்த நவீனம் காட்டுகிறது. நாகலட்சுமி, ஒரு பெண் - கதையில் வரும் நாயக்கர். அவள் காலத்திய ஆண்.

For more ebooks visit: https://getmyebook.in/

இருவரும் உழைத்து முன்னேறி, தலைமுறைகளை ஏற்றம் காணச் செய்தவர்கள். ஆனால் அவள் பெண். பெண்ணுக்கே உரிய அடையாளங்களில் சிக்குண்டு, தன் மகன், மருமகள் மக்கள் ஆகியவரிடம் ஏற்படக்கூடிய இயல்பான, நேசம், பாசங்களைத் தொலைத்துக் கொள்கிறாள். இந்தப் பீதியே, அசாதாரணமான உண்மைபோல், மோகினிக்குக் கணவனை அவன் அழைத்துக் கொண்டாற்போல் தோன்றுகிறது. இந்த அறியாமைகளில் இருந்து விடுபட்டு, சுதந்தரமனுசியாக இயங்க, இளைஞன் பிரசாத் வாயிலாக அவள் உணர்வு பெறுவதாகக் கதை நிறைவடைகிறது.

அடிமைகளாகப் புலம் பெயர்ந்து, சாதி மொழி இனச்சிக்கல்களில் காயம்பட்டும் ஆறியும் தங்கள் வேர்களை இழந்தாலும் பொருளாதார வண்மையிலும் சுயஉரிமைகளிலும் மகளிர் ஆண்களுக்குச் சமமாக முன்னேறும்போது, 'வேர்கள்' என்ற பண்பாட்டை மகளிடம் மட்டும் எதிர்பார்க்கும் ஆண் 'இயல்பு' குறிப்பிடத்தக்கது. இத்தகைய நவீனங்கள், சமூக வரலாற்றுப் பதிவேடுகளாகவும் விளங்குகின்றன. எனவே, பெண்ணியம் என்று அடையாளம் காட்டுவது, குடும்ப உடைப்பிலோ, விவாகரத்துப் பெறுவதிலோ, மறுமணம் செய்வதிலோ மட்டுமில்லை. தான் வெறும் உடல் என்ற முழுமையில் இருந்து அப்பால் தானும் அனைத்து உரிமைகளையும் கொண்டு மேன்மையுடன் வாழக்கூடிய மனுசி -மனிதா என்று உணர வேண்டும். 'உடல்' என்ற பிம்பத்துக்கப்பால் அறிவு, சிந்தனை ஆகியவற்றால் முழுதுமாகத் தன்னை இனம்காண

For more ebooks visit: https://getmyebook.in/

வேண்டும் என்ற தேடலில்தான் பெண்ணியக் குரல்கள் ஓங்குகின்றன. கையறு நிலையும் கண்ணீரும் இந்தத் தேடலுக்குப் பொருந்தாதவை. மனித நேயங்களை உடைப்பதும் ஆக்கபூர்வமான தேடல் விளைவுகளல்ல. ஏனெனில் பெண் தாய். ஆக்குபவள். சமுதாயத்தையும் உருவாக்குபவள்.

இன்றையச் சூழல் முழுதும் வணிகமயமாகி இருக்கிறது. அறிவியல் தொழில்நுட்பம், சமத்துவம் என்ற அந்நாளைய இலட்சியங்களைப் பொய்யாக்கி, அதிக வசதிகள், தேவைக்குமேல் செல்வங்கள் என்ற வண்மையாகவும், அடிப்படை வாழ்வாதாரங்களே இல்லாமல் அண்டிப் பிழைக்கப் போராடும் வறுமையாகவும் விடிந்திருக்கிறது,

அந்நாள் சாதிகள் சமுதாயத்தைக் கூறுபோட்டன. இந்நாள், சாதிகளுடன் பொருளாதார மலைமடு வேறுபாடுகளுடன் பல்வேறு அரசியல் கட்சிகளும் மனித நேயங்களைச் சூறையாடி இருக்கின்றன. பெண் இந்தச் சிக்கல்களில் தன்னை முழுதுமாக இழந்து கொண்டிருக்கிறாள். எனவே இன்றைய இலக்கியப் படைப்புகள், பொழுதுபோக்கவோ, ரசிக்கவோ, சுவாரசியமான களிப்பூட்டும் உணர்வுக்காகவோ, அல்லது பணத்துக்காகவோ மட்டும் உருவாக்கப்படுவதில் பயனில்லை. விழிப்புணர்வூட்டவும் பிரச்னைகளை இனங்கண்டு எழுச்சியுடன் எதிர்நோக்கிப் போராடி வெல்லவும் பயன்பட வேண்டும். போராட்டத்துக்கான கருவியாக வேண்டும்.

For more ebooks visit: https://getmyebook.in/

**(அன்னை தெரசா மகளிர்ப் பல்கலைக்கழகக் கருத்தரங்க நிறைவுரை - 1997)**

For more ebooks visit: https://getmyebook.in/

# 27. புதியதோர் உலகு செய்வோம்

## 1

சுதந்தரம் பெற்று ஐம்பதாவது ஆண்டை நாம் ஆறாண்டுகட்கு முன் சிறப்பாகக் கொண்டாடினோம். ஐம்பது ஆண்டுகள் என்பது இரண்டு தலைமுறைக்காலம். 1947-க்கு முன்பு நாம் எப்படி இருந்தோம், அன்று நாம் முன்னேற்றமே காணமுடியாமல் இருந்த தடைகள் இன்று போயிருக்கின்றனவா? என்று பார்க்கலாம். நாம் அரசியல் சுதந்தரம் பெற வேண்டும்; பாரத நாட்டை பிரிட்டிஷார் ஆங்கிலேயர் ஆள்கின்றார்கள் என்ற நிலைமை மாற வேண்டும் என்று அந்நாளில் காந்தியடிகள் அறப்போரைத் துவங்கினார். இந்தியாவில் உள்ள கிராமங்களின் உயிர் நாடியை உணர்ந்தவர் காந்தியடிகள். அந்நாளைய ஏழைமையை இப்போது நினைத்துப் பார்க்கலாம். ஒரு குடிலில் இரண்டு பெண்கள் வாழ்கிறார்கள். அண்ணலைப் பார்க்க, ஒரு பெண்மணி மட்டுமே பழைய சேலை ஒன்றினால் உடலை மறைத்துக் கொண்டு, தலையில் போட்ட மரியாதை முக்காட்டுடன் வந்து கும்பிடுகிறாள். இவள் உள்ளே சென்றபின், மகள் அதே சேலையை அணிந்து அண்ணலைப் பார்க்க வருகிறாள். இப்படி ஒரு வறுமை.

அடிகள் உடனே புரிந்து கொண்டு மனமுருகினார். நகரங்களில் விதேசித்துணிகளும் பட்டுப் பட்டாடைகளுமாக, குதிரை வண்டிகளில் போகலாம். அங்கே ஆங்கிலேயருக்குச் சமமாக உணவருந்துபவர்

For more ebooks visit: https://getmyebook.in/

இருக்கலாம். ஆனால் அந்த நகரத்து முன்னேற்றங்கள் இந்த நாட்டை முன்னே கொண்டு செல்லுமா?

அரசியல் விடுதலை என்பது, இந்தக் கோடானு கோடிக் கிராமங்களுக்கு வந்துவிட்ட விடுதலையாக இருக்க வேண்டும். இந்தக் கிராமங்களின் வறுமை தொலைய வேண்டும் என்ற இலட்சியத்தையே அவர் பற்றினார். நமது அமரகவி பாரதி இதை எவ்வளவு தெளிவாகத் தன் பாட்டிலே கொண்டுவருகிறார்? 1908-ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ந் தேதி வாக்கில் அந்நாளைய தீவிரப் போராட்ட வீரர் விபினசந்திரபாலர் சிறை வாசம் முடித்து வெளிவருகிறார். அவர் வெளிவந்த நாளை நாடுமுழுவதும் விடுதலை நாளாகக் கொண்டாடுவதென்று தீவிரப் போராட்டவாதிகள் தீர்மானம் செய்கிறார்கள். இதில் முன்னே நிற்பவர், நம் அமரகவி பாரதி.

ஓ, விடுதலை அடைந்து விட்டால் நாம் எப்படி இருப்போம்?

விடுதலை என்பது யாருக்கு? யார் அதன் பயனை அடைய வேண்டும்?

சமுதாயத்தில் கௌரவத்தில் கடை கோடியாக இருப்பவர்கள். ஆனால் அவர்களில்லாமல், நாம் - இந்த சமுதாயம் முழுவதும் உயிர் வாழ முடியாது.

கிராமங்களில், மண்ணின் மைந்தர்களாகப் பயிர்த் தொழிலில் ஈடுபட்ட ஆண் பெண்களே அவர்கள். விடுதலையடைந்ததும் அவர்கள் எப்படி மகிழ்வார்கள்?

இதையே அன்று, ஆடுவோமே பள்ளுபாடுவோமே - ‘ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோமென்று’ என்று

For more ebooks visit: https://getmyebook.in/

துவங்கிப் பாடினார் அமரகவி பாரதி. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். வெறுமே உழைப்பில்லாமல் உண்பதும் களிப்பதுமான வாழ்க்கையைக் கண்டனம் செய்வோம். இனிமேல் நம் உழைப்பை அந்நியர் கொண்டு செல்ல விடமாட்டோம். நமக்குள்ளே கீழ்ச்சாதி மேல்சாதி, ஆண்டான், அடிமை, ஆண், பெண் என்ற பாகுபாடுகள் இல்லை என்றெல்லாம் காட்டுகிறார். எல்லோரும் சமம் என்ற வெற்றிச்சங்கை ஊதுகிறார். அவர் இப்பாட்டைப் பாடி ஏறக்குறைய நாற்பது ஆண்டுக்காலம் சென்று விடுதலை பெற்றோம்...

இந்நாட்களில் - பின்னும் ஐம்பது ஆண்டுக்காலம் சென்றிருக்கிறது.

“புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட போரிடும் உலகினை வேருடன் சாய்ப்போம்” என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வாக்கு. எந்த மட்டில் மெய்யாக இருக்கிறது? 'புதியதோர் உலகு செய்வோம்’ என்று முயற்சிகள் நடந்திருக்கின்றன. அதுவும், எழுபது, எண்பதுகளுக்குப் பிறகு, இந்த முயற்சிகள் தீவிரமாகியிருக்கின்றன. புதியதோர் உலகு செய்வதற்கு அடி நிலையாக என்ன அமைய வேண்டும்? நாம் அறியாமையை முதலில் கெல்லி எறிய வேண்டும். கல்வி என்ற அடிநிலை அமைக்க வேண்டும்.

கல்வி என்ற அடி நிலை நன்கு அமைந்துவிட்டால், புதிய உலகை, இலட்சியங்களை நாம் அடைந்து விட்டதாகவே நினைக்கலாம். சுதந்தரம் பெற்றபின், நமது அரசு, பல வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி,

For more ebooks visit: https://getmyebook.in/

செயல்படுத்தி இருக்கின்றன. இன்றும் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. கிராமப்புறங்கள், சுயதேவைப் பூர்த்தி அடைய வேண்டும் என்பது, நல்ல உணவு, உடை, இருப்பிடம். இவை அடிப்படைத் தேவைகள். கிராமங்களே இந்தத் தேவைகளுக்கான உற்பத்தி மையங்கள். நாம் சுதந்தரம் பெற்ற நிலையில், உணவுக்காக வெளிநாட்டிலிருந்து வரும் கப்பலை எதிர்பார்த்திருந்தோம். அன்றைய மக்கள் தொகை ஏறக்குறைய நாற்பது கோடி. ஆனால் இன்று, தொண்ணுறுக்கும் மேல் போய்விட்டது. இருந்தும், நம் கடைகளில் தானியங்கள் இருக்கின்றன. சர்க்கரை இருக்கிறது; ஒரு போகம் விளைவித்த இடங்களில் புதிய தொழில் நுட்பமும், அறிவியலும், மூன்று போகம் காண முன்னேறி இருக்கிறது. பொருளாதாரம் என்று நோக்கினால், நிச்சயமாக நாம் முன்னேற்றம் பெற்றிருக்கிறோம். ஒரே சேலையை இரண்டு பெண்கள் உபயோகிக்கும் அவலம் இன்று நிச்சயமாக வறுமையினால் இல்லை. பஞ்சினிலாடைகளும் பட்டினிலாடைகளும் இன்று கடைகளில் நிறைந்திருக்கின்றன.

ஆடை மட்டுமில்லை. எத்தனை விதமான கவர்ச்சிப் பொருட்கள்? பெண்கள் கூந்தல் அலங்காரம் செய்து கொள்ள உதவக்கூடிய வண்ணவண்ணப் பூக்கிளிப்புகளிலிருந்து பல்வேறு அழகுசாதனங்கள் பட்டி தொட்டி எங்கும் விற்பனையாகின்றன. எதுவுமே இல்லாமை இல்லை. ‘இல்லாமை என்ற சொல்லை இல்லாததாக ஆக்குவோம்’ என்ற கவிவாக்கு பலிக்காமல் இல்லை.

For more ebooks visit: https://getmyebook.in/

ஆனால்... ஆனால்?

எல்லாம் இருந்தும், வளமைகள் கொழித்தும், கிராமங்களில் இருந்து மக்கள், இந்த நகரங்களில் நெருங்குகிறார்கள். நகரங்கள், சாக்கடை நகரங்களாகின்றன. கிராமத்துப் பெண் இன்னும் விடுதலை காணவில்லை. படிப்பு, வேலை வாய்ப்பு, பணம்... விதவிதமான ஆடைகள்; சினிமா, தொலைக்காட்சி களிப்பு, அடுப்படியில் வாடாமல், கல்லைக் கட்டி இழுக்காமல், அரைக்காமல் கரைக்காமல், குளுகுளு அறையில் உட்கார்ந்து, கண்டும் கேட்டும், உண்டும் ருசித்திராத பண்டங்களின் சுவைகள், இதெல்லாம் கிராமத்தில் சாத்தியமில்லை.

பட்டணக் கனவில், ஆணும் வருகிறான்; பெண்ணும் பெயர்ந்து விடுகிறாள். கனவுகள் இங்கே வந்தபின் தான் வெறுமை என்று புரிகிறது. இங்கு தங்க இடமில்லை; தண்ணீர் இல்லை, காற்று இல்லை. வேலை வாய்ப்பைக் காட்டினும், சூதும் வஞ்சகமும் மோசடியுமே இருக்கின்றன.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்த மக்கள் தொகை, இந்நாள் நகரத்தில் பத்துமடங்குகள் பெருகிவிடுகிறது. கிராமங்கள் சுயதேவைப் பூர்த்தியடையவில்லை. கிராமங்களை நகரங்கள் சுறண்டிப்பிடுங்கி விழுங்கித் திணறுகிறது. கிராமங்களில் விளையும் பொருட்கள், கிராமங்களுக்குப் பயன்பட்டு, அவர்களை மேம்படுத்தவில்லை. நமது பொருளாதாரம் உற்பத்திகளும் மக்களுக்கு ஆதாரமான உணவு, உறையுள் என்ற தேவைகளை நிறைவேற்றிக்

For more ebooks visit: https://getmyebook.in/

கொள்வதற்காக இல்லாமல், லாபமாகிய பணத் தேவைகளின் அடிப்படையில் தான் பெருகி இருக்கிறது. பயிர்த்தொழிலை உயிர் நாடியாகக் கொண்ட கிராமத்து மக்களிடம் மனிதத் தன்மை உண்டு. கிராமத்து வீடுகள் மண்சுவர்களும், ஓலைக் கூரையும் கொண்டவையானாலும், வந்தவர்கள் இளைப்பாறத் திண்ணைகள் உண்டு. தாகத்துக்குத் தண்ணீர் உண்டு. பசித்து வந்தவரை விட்டுவிட்டு அவர்கள் உண்ணமாட்டார்கள். அவர்களிடம் பணம் இருக்காது; மனம் உண்டு. எழுத்தறிவு இருந்திருக்கவில்லை. எனினும், வாழ்க்கையனுபவங்களில் பெற்ற விவேகம் உண்டு. பரம்பரையாகத் தொடர்ந்து வந்த சில பழக்கங்களை அவர்களால் விடமுடியாது. சிலவற்றுக்கு அறியாமையாதாரமாக இருந்தாலும், சிலவற்றில் பரம்பரை அநுபவம், இன்றும் தள்ளிவிடும்படி இல்லை. எடுத்துக் காட்டாக, சுற்றுப்புறச்சுகாதாரம் பேணும் வழக்கங்கள், சில.

பொழுது விடிந்ததும் வீட்டையும் வாயிலையும் சுற்றுப்புறத்தையும் சாணநீர் தெளித்துப் பெருக்குவார்கள். அந்நாட்களில் கிராமங்களிலும் வெட்ட வெளிகள், தரிசுகள், இருந்ததனால், வீடுகளருகே அசுத்தம் செய்யாமல், எங்கோ செல்வார்கள். கோயில்கள் ஏறக்குறைய பொது இடங்களாக சமுதாயத்தினர் கூடும் இடங்களாக, கலாசார மையங்களாக இருந்தன. சமுதாயத்தில் பழங்காலத்தில் இருந்த நிலைக்கேற்பச் சில சட்டதிட்டங்கள் இருந்தன. அறிவியலும் தொழில்

For more ebooks visit: https://getmyebook.in/

நுட்பமும் இந்த ஐம்பதாண்டுக் காலத்தில் எத்தனையோ மாற்றங்களை அன்றாட வாழ்வில் கொண்டு வந்துவிட்டன. ஆனால், ஒரு குறிப்பிட்ட வழக்கத்தை, வழக்கங்களை ஏனென்று கேட்கும் மனமே இல்லாமல், விடாப்பிடியாகப் பற்றிக் கொள்ளும் அறியாமை, எழுத்தறிவு கூடிப் பட்டங்கள் பதவிகளாகக் காய்த்த பின்னரும் அழியவில்லை.

கிராமங்களில், மனிதரை மனிதர் இழிவு செய்யும் வழக்கத்தை ஒழிப்போம் என்று சொல்லப்பட்டது. சட்டபூர்வமாகத் தீண்டாமை ஒழிக்கப்பட்டது. ஆணும் பெண்ணும் சமம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். உண்மையில் 'தீண்டாமை' நகரச்சந்தையில் நசித்துப் போயிற்று. ஓட்டல்களில், போக்குவரத்து சாதனங்களாகிய பஸ்-ரெயில் நெருக்கடிகளில், அது வாழமுடியவில்லை.

ஆனால், கிராமங்களில் இன்னும் அது சாகவில்லை!

தேநீர்க் கடைகளில், பொது இடங்களில் அது சாகாத நோய்க்கிருமிகள் போல் சமுதாயத்தைப் பீடித்துள்ளது. பெண்மக்களிடம் அது பற்றிக் கிடக்கிறது. இந்நாட்களில் சட்டபூர்வமாக, எல்லா மக்களும் எல்லாத் தெருக்களிலும் குடியேறலாம். ஆனால் குடியேறி இருக்கிறார்களா?

பொருளாதார வசதிகூட, ‘காலணி' ஆட்கள் என்ற முத்திரை இட்டே அவர்களை ஒதுங்கச் செய்கிறது.

மனதளவில் ஏன் இந்த வறுமை? பழைய வஞ்சங்கள் புதுப்பிக்கப் படுகின்றன. புதிய பணவசதி,

For more ebooks visit: https://getmyebook.in/

சுயநலத்தையும் ஆணவத்தையும் வளர்க்கிறது. உணவுப்பயிரில் பசியாறும். பணப்பயிரின் வண்மை, சக மனிதர்களையே அந்நியமாக்குகிறது.

குடும்பங்கள் உடைபடக்கூடாது என்று, ஒன்றுக்குள் ஒன்று என்று சம்பந்தம் செய்து கொண்டார்கள். அத்தை மகன் - மாமன் மகள் - மாமன் மகன் - அத்தை மகள் என்ற பிணைப்பு எக்காலத்திலும் முதல் உரிமையாக இருந்தது. ஆனால் இந்நாள், பெண்ணை, எடைபோடுவது, 'பவுன்', பட்டு, ரொக்கம் ஆகியவற்றுக்கே. ஏழைக்குடிசைகள் கடனில் தத்தளிக்கின்றன. ஒரு பெண் பிறந்தால், ‘வீட்டுக்கு லட்சுமி வந்திருக்கா' என்று கொண்டாடிய வீடுகள் இன்று கிராமங்களிலும் இல்லை; நகரங்களிலும் இல்லை. அது கண் விழிக்குமுன்பே, அது 'ஆளாகி’, பெற்றோருக்குப் பாரமாக, செலவுக்குரிய மலையாக நிற்பதே உறுத்துகிறது.

‘வயிற்றுப் பிள்ளைக்காரியைப் பொன்மணி போலும் கண் மணி போலும் பார்க்க வேண்டும்’ என்று போற்றி மகிழ்ந்த மரபுகள் இன்று அழிந்துவிட்டன. ‘ஆசுபத்திரில சோதிச்சிப் பாக்குறாங்களாமே? பொட்டபுளையானா எதுக்கு? ஆனானப் பட்ட பட்டணத்து ஆளுவளே பொம்புளப் புள்ள வானம்னு கலைச்சிடுறாங்களாமே? நமக்குக் கைக்கு வாய் எட்டல. வெள்ளாம செஞ்சி கட்டல. துண்டு துண்டு பூமியாகி அவங்கவங்க பட்டணம் பாக்கப் பிழைக்கப் போயிட்டாங்க. பேசாம வித்துப்போட்டு, எதுனாலும் வியாபாரம் பண்ணிப் பிழைச்சிக்கலாம்னு நாமும் போயிடவேண்டியது தா.இதென்னாத்துக்கு? ஊசி போட்டுக் கிட்டு வா,

For more ebooks visit: https://getmyebook.in/

இன்னொரு பொட்ட எதுக்கு? இப்ப வசதி இருக்கில்ல? எங்க காலத்தில தா, இந்த வசதி இல்ல... என்று முடிவெடுப்பதன் வாயிலாக, அறிவியல் வசதியால் கண்களில் ஒன்று குத்தப்படுகிறது. எப்படிப் புதியதோர் உலகம் காண்போம்? அல்லது படைப்போம்? இந்த ஐம்பது வருட வரலாற்றைப் பார்க்கும்போது, பெண்கள் சுயச்சார்பு ஆற்றலும் பெறாமல், எந்த அறிவியல் முன்னேற்ற வளமையும் சமுதாயத்தை மாற்றி அமைக்காது முடியாது என்று நன்றாகத் தெளிவாகிறது. பெண் அறிவு பெற்றிருந்தால், அறியாமையில் மலரும் பல குருட்டு நம்பிக்கைகள் ஒழிந்திருக்கும்; பெண் சுயச்சார்பும் சக்தியும் பெற்றிருந்தால் அவள் யாரோ காப்பாற்றி வாழ்வளிக்க வேண்டும் என்று, வீனுக்கு உழைத்துத் தன்னை இழக்கமாட்டாள். இத்துணை பெண் சிசுக் கொலைகளும் பாலியல் வன்முறைகளும், கதைகளில் கூட இடம் பெற இயலாதபடி, சமுதாயம் விழிப்பாக இருக்கும். அடி தடி, கொலை, வன்முறைகள், நிச்சயம் வந்திருக்காது.

எனவே, இன்றையச் சிறுமைகளெல்லாம், பெண் பூச்சியாக ஒடுங்கி இருந்ததனால் கிளைத்த முட்கள்..."எனக் கொண்ணுந் தெரியாது. அவுக இருக்காங்க, பெத்தவங்க, ஊர்ப் பெரியவங்க, அவங்க ஆம்புளங்க, நா பொம்பள.” என்ற தாழ்வுமனப்பான்மையைத் தூக்கி எறிய வேண்டும்.

காலம் காலமாக வேரோடிவிட்ட இந்தத் தாழ்மையுணர்வைத்துக்கி எறிவது எளிதில்லை தான். மேலாதிக்கம் செலுத்திய இனம் அப்படி அதை எளிதாக்காதுதான். ஆனால், இது முனைந்தால்

For more ebooks visit: https://getmyebook.in/

சாத்தியம். நம்பிக்கை நட்சத்திரங்கள், உறுதி சொல்கின்றன. அவற்றைப் பார்ப்போம்.

முதலில், பெண்கள் எப்படிச் சக்திபெற முடியும்?

துணிவு அறிவுச் சுயச் சார்பு.

இவள் தன் காலால் நிற்கும் துணிவு பெற்றாலே, மக்களை உறுதியுடன் முன்னுக்கு நடத்திச் செல்ல முடியும். தடைகளையும் எதிர்ப்புகளையும் வெல்லும் வேகம் வரும். புதிய சமுதாயம் அமைக்கப் புறப்படலாம்.

## 2

சக்திக்கு ஆதாரம், பொருளாதார சுயச்சார்பு

பெண் உழைக்கிறாள். வீட்டிலும் உழைக்கிறாள்; வெளியிலும் உழைக்கிறாள். ஆனால் அதற்கு ஏற்ற மதிப்பு அவளுக்கு இருக்கிறதா? இது கேள்விக்குறிதான். ‘பொருளாதாரம்’ என்ற உற்பத்தியில் பெண் இன்று எல்லாப் படிகளிலும் உழைப்பைக் கொடுக்கிறாள்.

மிகக் குறைவான சதவிகிதத்தினர்தாம் மேல் வருக்கங்களில் உட்கார்ந்து அதிகாரம் செய்து உண்பவர்கள், அநுபவிப்பவர்கள்.

ஆனால் நகர்ப்புறங்களில் பெண்கள் பட்டமும் பதவியும் பெற்று, போக்குவரத்து நெரிசல்களில் பிதுங்கிக் கொண்டு அலுவலகங்களுக்குச் சென்று உழைக்கிறார்கள். இந்த உழைப்பு மாதச் சம்பளம் ஊதியம் பெறும் உழைப்பு.

For more ebooks visit: https://getmyebook.in/

ஆனால் அதிகாலையில் எழுந்து இயந்திரம் போல் வீட்டுக்குள், குழந்தைகள் என்று தேவைகளைக் கவனிப்பதும், சமைப்பதும், பகலுணவு கட்டுவதும், நிர்வாகம் செய்வதும், அவள் செய்ய வேண்டிய வேலைகள். இந்த வேலைக்கு விடுப்பு சலுகை எதுவும் கிடையாது.

இதேமாதிரி கிராமப்புறங்களில் பெண் செய்யும் வேலைகள் என்று பல தீர்ந்து இருக்கின்றன. அன்றும், இன்றும், என்றும், வீட்டுக்கான உணவு சமைக்க... தீ... சக்தி... விறகு, அவள் பொறுப்பாக இருக்கிறது. அடுத்தது தண்ணிர். பல கிராமங்களில், ஊருணியோ, ஏரியோ, வற்றும் காலங்களில், இவள் குடி தண்ணீருக்காகப் பல காதங்கள் நடக்க வேண்டியவளாகிறாள். இன்னமும், குழாய் வசதி செய்தும் அது சரியில்லாததாலும், பொறுப்பற்றவர்களின் அடாவடித்தனங்களாலும், பெண் இரவும் பகலும் தண்ணிருக்காக நடக்கும் சோகம் மாறவில்லை. நாடு முழுவதும் தண்ணீர்ச் சுமையைத் தங்கள் தலைமேல் வைத்துச் சுமக்கும் கோடானு கோடி பெண்களுக்கும் சக்தி இல்லையா? அவர்கள் முனைந்து மனது வைத்தால், இயங்காத சக்கரத்தையும் இயக்க முடியாதா? முடியும்.

ஆனால் இந்த உழைக்கும் பெண்கள், தண்ணீர் சுமப்பது கடன். விறகு தேடுவது கடன். புருஷன் நம் கையிலிருப்பதைப் பிடுங்கிக் கொண்டு போய்க் குடித்து விட்டு வந்து அடித்தால் பொறுப்பது கடன் என்று கருதுகிறார்கள். இது தருமம் என்று ஒரு பாசி பிடித்துப் போன நியதியில் தன்னுணர்வே இல்லாமல்

For more ebooks visit: https://getmyebook.in/

புதைந்திருக்கிறார்கள். கிராமங்களில், முக்கிய தொழிலான உழவு, பயிர்த் தொழிலில் முக்காலும் பெண்களே ஈடுபட்டிருக்கிறார்கள். இல்லையேல், அதுசார்ந்த துணைத் தொழில்கள் அவர்கள் வாழ்க்கைக்கு ஈரம் பாய்ச்சுகின்றன. மாடு வைத்துப் பராமரித்து பால், தயிர், வெண்ணெய் என்று வண்மை காண்பது நெடுங்காலமாகப் பெண்கள் மேற்கொள்ளும் தொழில் என்றாலும் அவள் பாலும் தயிரும் உண்டு, கொழு கொழுவென்றோ, மினுமினுவென்றோ இருப்பதில்லை. முக்காலும் பொறுப்பற்ற ஆணின் காரணமாக, குடும்பத்து வறுமையை ஈடுகட்ட அவள் அந்த உழைப்பால் பொருள் தேட வேண்டி இருக்கிறது; கட்டாயமாகிறது; காய்கறித் தோட்டம் போடுகிறாள். ஒன்றுமில்லை எனினும் வீட்டுப் புறத்தில் கீரையேனும் விதைக்கிறாள். கோழி வளர்க்கிறாள். ஆடு வளர்க்கிறாள், ஆனால் அவற்றின் பயனை இந்நாட்களில் பெரும்பாலும் அவள் அடைவதில்லை.

வாழ்க்கைத்தரம் எளிமையாக இருந்த நாட்களில், பணத்தின் தேவை கட்டாயமாக இருக்கவில்லை. திருமணங்கள் மிக எளிமையாக நடைபெற்றன. தங்கம், வெள்ளி கட்டாயமில்லை. உறவும், பாசமும்தான் குறிப்பாக இருந்தன. வீட்டுக்கு மிக அவசியமான, அண்டா, குண்டான், செம்பு, விளக்கு ஆகிய பொருட்கள் பொருளாதார வளமையைப் பொறுத்துப் பித்தளை, வெண்கலம் என்று வாங்கினார்கள். ஆனால் இந்நாட்களில் திருமணங்கள், சமூகத்தில் ஒரு கவுரவத்தைத் தேடிக் கொள்ளும் வாய்ப்பாக

For more ebooks visit: https://getmyebook.in/

மாறிவிட்டது. “கூலி வேலை செய்யும் பயல், அவனுக்குரிஸ்ட்வாட்ச், மோதிரம், செயின், பான்ட் சட்டை, இருபத்தோரு ஸில்வர் ஏனங்கள், ரேடியோ - எல்லாம் வாங்கித் தந்து கலியாணம் கட்டி யிருக்காங்க. ஃபோட்டோக்காரர் வந்து, போட்டோ பிடிச்சாங்க. மைக்கு செட்டு, வீடியோ என் பையன் படித்தவன்” என்று பிள்ளையைப் பெற்றவள் அடுக்குகிறாள். தேவையற்ற ஆடம்பரங்கள், தெய்வ விழாக்களிலும் கூட அதிகமாகிவிட்டன. பக்திப் பெருக்கு என்பது, ஆடம்பர வெறியாகவும், நான் பெரிசா, நீ பெரிசா என்று பெருந்தலைகள் கட்சி சேர்ந்து போடும் போட்டிப் பரீட்சைக் களங்களையே தோற்றுவித்திருக்கின்றன. பலன், பல கிராமங்களில் தெய்வவிழாக்கள் வெட்டு குத்து, கோர்ட்டு வழக்கு என்று கிராமப் பொருளாதாரத்தையே குழி பறிக்கிறது.

இத்தகைய பலப்பரிட்சைகளுக்கும், பழி பாவங்களுக்கும் பெண்ணின் உடலும் உழைப்புமே பலியாகின்றன. விவசாயம் என்பது வரவுக்கும் செலவுக்கும் கட்டுப்படியாகாத தொழில் என்று, சிறு விவசாயிகள் சோர்ந்து போகும்படி ஆணின் உழைப்புக்குக் கூலியும் அதிகமாகிவிட்டது. பெரும்பாலும் ஆண் எட்டாவது படித்துத் தேறிவிட்டால், அழுக்கு ஒட்டாத வேலை தேடி மண்ணை விட்டு பெயர்ந்து செல்கிறான். இல்லையேல், குறுக்கு வழியில், பணம் சம்பாதிக்கக்கூடிய சட்டத்திற்குப் புறம்பான தொழில்களில் ஈடுபடுகிறான். தனக்கு அடங்கிய பெண்களையும் ஈடுபடுத்துகிறான். இம்மாதிரியான ஆண் மேலாதிக்கங்களை எதிர்க்கும்

For more ebooks visit: https://getmyebook.in/

நியாய உணர்வே பெண்களிடம் இல்லை. அவளே கள்ளச்சாராய விற்பனையில் ஈடுபடுத்தப்படுகிறாள்; பிடிபட்டு மான அவமானங்களைச் சகிக்கிறாள். வாழ்க்கையே நரகமாகிறது. எனவே பெண் உழைத்தும் பயன் காணாமலிருக்கும் நிலையை மாற்ற வேண்டியது அவசியமாகிறது. அந்த மாற்றம், அவள் தன்னுணர்வு பெற்றாலே சாத்தியமாகும்.

நாம் இவ்வளவு உழைக்கிறோமே? பாடுபட்டுத் தேடி, ஆக்கியதைக் கணவன் குழந்தைகள் என்று போட்டுவிட்டு, எஞ்சியிருந்தால் மட்டும் கரைத்துக் குடித்துவிட்டு, அரை வயிறானாலும் போதும் என்று படுக்கிறோமே, அது சரியா என்று எந்தப் பெண்ணும் நினைப்பதில்லை. இந்த நிலைக்கு என்ன காரணம் என்று அவள் ஆராயாமலேயே பல நூற்றாண்டுகள் கழிந்திருக்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில் கிராமங்கள் தோறும் பள்ளிகள் பெருகி இருக்கின்றன. ஆண் குழந்தைகளுடன், பெண் குழந்தைகளும் படிக்க வேண்டும் என்ற பிரச்சாரம் பலனளித்துக் கொண்டிருக்கிறது. தலைவாரிப் பூச்சூடி, பாடசாலைக்குப் போவென்று பெண் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பச் சொன்ன பாவேந்தர் வாக்கு மெய்யாகி வருகிறது. இன்று ஒரு விவசாயக் கிராமத்துக் குடும்பத்தில் புதிதாக மணம் புரிந்து வந்திருக்கும் பெண் ஒருத்தியை “ஏம்மா, படித்திருக்கிறாயா?” என்று கேட்டால்,

“ஆம் நான் எஸ்.எஸ்.எல்.ஸி பாஸ் பண்ணி யிருக்கிறேன்” என்று பதில் வருகிறது.

For more ebooks visit: https://getmyebook.in/

ஆகா! எத்தனை தெம்பாக இருக்கிறது?

“உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கு”

“ஒரு ஏகரா?”

“தண்ணீர் வசதி இருக்குதா?”

“ம். ஏரிப்பாசனம் கிணறும் இருக்கு பொதுவிலே...”

“நீ, வயலில் இறங்கி வேலை செய்வாயா?”

"ம்..."

“உங்க வீட்டுக்காரர்.”

“அவுரு வேலை செய்யமாட்டாரு. சைக்கிள் கடை வச்சிக்காரு.”

“அப்ப நீ மட்டும் என்ன வேலை செய்வே?”

“நா, நாத்து நடுவேன், களைபறிப்பே, அல்லாந்தான் செய்வேன்... மாமியாருக்கு உடம்பு சுகமில்ல. இல்லன்னா அவுங்களும் வருவாங்க...”

“உழவு...?”

“அது கூலிக்கித்தா வைப்போம். ஆம்புள கூலி எம்பது ரூபா. ஒரு நாளைக்கி...”

“பொம்புளக்கி..?”

“பொம்புள... நடவாளுங்கதானே? முன்ன பன்னண்டாம். இப்ப பதினைஞ்சி...”

“ரொம்பக் குறவாயிருக்கு?

“அதெப்படி? கட்டுப்படியாகணுமில்ல? இதே அதிகமாயிருக்குது...”

For more ebooks visit: https://getmyebook.in/

“ஏம்மா, ஆம்புளயும் உன்னப்போலதானே உழைக்கிறான்? அவன் கூலி நாலு, அஞ்சு மடங்கு மேலா இருக்கு?

“அது உழவுங்க. பொம்புள ஏரு புடிக்க முடியுங்களா?”

“முடியாதா?....”

“தொடக்கூடாதுங்க. பொம்புள வேல இதெல்லாந்தா”

"அறுவடை?..."

“அது செய்யலாம். ஆம்புளயும் செய்வாங்க; பொம்புளயும் செய்வாங்க.”

“அதுக்கு ரெண்டு பேருக்கும் ஒரே மாதிரி கூலியா?”

“அதெப்படிங்க? அவங்களுக்கு நாப்பது ருபா, ஒரு மயக்கா நெல். இவங்களுக்கு நெல்லு கிடையாது...”

"என் பொம்பிளங்க உழைப்பு மட்டும் குறைச்சல்னு நினைக்கிறே”

“அதப்படித்தாங்க... என்னன்னாலும் பொம்புள தாங்களே..." சிரிக்கிறாள்

மாதர் சங்கக்காரர்களும், பெண்ணியம் பேசுகிறவர்களும், 'சம வேலை, சம கூலி' என்று கூச்சல் போட்டுப் பயனில்லை.

“ஏம்மா, நீ எந்த வருசம் படிச்சே.? அதாவது பாஸ் பண்ணின?"

“தெரியலிங்க ஞாபகமில்ல.”

“என்னம்மா, இதுகூட ஞாபகமில்ல? உனக்கு எப்ப கலியாணமாச்சி?"

“அஞ்சி வருசம் ஆச்சுங்க..."

For more ebooks visit: https://getmyebook.in/

“முன்னியே படிச்சி முடிச்சிட்ட?”

"ம்..."

“அப்ப எத்தினி வருசம் கழிச்சிக் கலியாணம்?"

“இருக்குமுங்க, ஒரு ரெண்டு வருசம்...”

“ரெண்டு வருசம் என்ன செஞ்கிட்டிருந்தே?”

“சும்மாதா இருந்தேங்க...”

“இந்தப் பயிர் வேலை எல்லாம் அப்பவே தெரியுமா?"

“தெரியுங்க. இவரு என் அத்த மகன்தான்....” என்று நாணத்துடன் தலை குனிகிறாள்.

எஸ்.எஸ்.எல்.எஸி. படிப்பு, இவளுக்கு எந்த வருசம் தேர்ச்சி பெற்றாள் என்பது நினைப்பில்கூட நிற்கவில்லை.

“ஏம்மா, உனக்கு என்ன வயசாகுறது?..."

“தெரியலீங்க...” நமக்கு அதிர்ச்சியாக இருக்கிறது.

“உன் டேட் ஆஃப் பர்த், நினைப்பில்ல?”

“சர்ட்டிபிகேட்ல இருக்குமுங்க நினைப்பில்ல.”

எஸ்.எஸ்.எல்.சி.க்களின் நிலை இதுதான் என்பதைச் சீரணிக்க முடியவில்லை. இவளுடைய பாட்டியிடம்,"உங்க வயசென்னம்மா?” என்று கேட்டாலும் இதே பதிலைத்தான் சொல்கிறாள். இந்த எஸ்.எஸ்.எல்.சி. வீட்டில் இரண்டு வருஷம் சும்மா இருந்தபோது, வீட்டு வேலை எல்லாம் செய்திருப்பாள். தாய், உழவு, நடவு, களை எடுத்தல் என்று போனால், பத்து இருபது பேருக்குச் சோறு பொங்கி எடுத்துக் கொண்டு போயிருப்பாள். மாடு கன்று பார்த்திருப்பாள்.

For more ebooks visit: https://getmyebook.in/

வீட்டு வேலை பலவும் செய்திருப்பாள். ஆனால், எதுவும் நினைவில்லாத இவள் கல்யாணமாகி அந்து வருஷம் ஆவதை மட்டும் சரியாக எப்படிச் சொ ல்கிறாள்?

“எம்மா, உனக்குக் குழந்தை இருக்கா?”

“இல்லீங்க…”

ஒரு மாதிரி துக்கம் துருத்துகிறது.

“ஏம்மா, உண்டாகவே இல்லையா?”

“இல்லீங்க…”

அழுதுவிடுவாள் போல் இருக்கிறது.

இந்த ஐந்து வருசம் என்ற கணக்கு மட்டும் எப்படி நினைவிருக்கிறது என்று புரிகிறது. இது சொல்லிக் காட்டப்பட்டிருக்கும்.

“டாக்டர்கிட்டக் காட்டினிங்களா?”

"உம்"

“என்ன சொன்னாங்க?”

"ஒண்ணும் குறையில்ல… ஆவும்னு சொன்னாங்க?"

“பின்னென்ன? அஞ்சு வருசம்தானே ஆவுது? உனக்கென்ன, இப்ப இருபத்திரண்டு வயசிருக்கும்; பிறக்கும்…” என்று தேற்ற வேண்டி இருக்கிறது. புருஷன் டாக்டரிடம் பரிசீலனை செய்து கொண்டானா என்று கேட்டால் என்ன பதில் இருக்குமோ? அதுதான் துயரத்துக்குக் காரணமோ? அல்லது, இவள் பாட்டி, முப்பாட்டிக் கிழவிகள், இன்னொரு கல்யாணம் என்று நிற்கிறார்களோ?

For more ebooks visit: https://getmyebook.in/

ஆக, படிப்பு, இவள் தன்னுணர்வுக்குக் கை கொடுக்கவில்லை.

“கோயிலுக்கெல்லாம் போயி வந்தாச்சி. பெறக்கும்னு சொல்றாங்க. அந்த ஆண்டவன் எப்ப கண் தொறந்து பாக்குறானோ? எங்க வமுசத்துல இப்புடி ஆரும் இல்ல. நா மனுசியாயி மறுமாசமே இவுங்க தாத்தா வூட்டுல கேட்டு வந்துட்டாங்க. அடுத்த வருசம் என் பொண்ணு பெறந்தாச்சி...” என்று அருகிலிருக்கும் பாட்டி, வேதனைக்கு வெந்நீர் ஊற்றுகிறாள். இப்போது இந்த முதிய தலைமுறைகளைச் சாடத் தோன்றுகிறது. ஆனால் பயனில்லை.

இந்தப் புதிய தலைமுறை, கல்வியினாலும், புதிய தொழில் நுட்பங்களாலும் பயனடைய வேண்டும்.

இத்தனை ஆண்டுகள், கிராமங்களில் விவசாயிகளுக்கு என்று, உழவர் பயிற்சித் திட்டங்கள் பல வகைகளிலும் செயல்பட்டிருக்கின்றன. புதிய ஆய்வுகளின் பயன் பயிர்த் தொழில் செய்பவர்களிடம் சென்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

புதிய சோதனைகள், புதிய தொழில்நுட்பங்கள், புதிய அறிவியல் கண்டுபிடிப்புக்கள், எளிய கிராம விவசாயியையும் எட்டும் வகையில், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை சாதனங்கள் இவர்களுக்கென்றே தனித் துறையாக இயங்குகின்றன. ஆனால் இந்தப் பயன்களும் கிராம மகளிரை சுயச்சார்பும், தன்னுணர்வும் பெறுவதற்கு உதவியிருக்கவில்லை என்பதே உண்மை.

For more ebooks visit: https://getmyebook.in/

ஆனால், கடந்த சில ஆண்டுகளில், மகளிருக்கென்று, பண்ணை மகளிருக்கென்று புதிய தொழில் நுட்பங்களையும், முறைகளையும் பயிற்றுவிக்கும் திட்டம் செயல்படத் தொடங்கிய பிறகு, அந்தத் தன்னுணர்வையும் சுயச்சார்பையும் அவர்களிடையே தோற்றுவிக்க முடியும் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது. கிராமங்களில் புதிதாக மலர்ந்துவரும் அறிவொளி இயக்கத்தின் பயன் தன்னம்பிக்கை ஆண்கள் தாம் செய்யலாம் என்று கூசியிருந்த கூச்சத்தை அது துடைத்துவிட்டது. இன்று, கிராமத்துப் பெண், சைக்கிளில் பால் 'கேனை'க் கட்டிக் கொண்டு வாடிக்கையாளரிடம் போகிறாள். நடவு செய்யும் பெண்களுக்கு வீட்டில் சோறு பொங்கி எடுத்துச் சைக்கிளில் கட்டிக் கொண்டு விவசாயப் பெண் போகிறாள். இது மிகப் பெரிய மாற்றம். இந்த மாற்றம், தண்ணீரில் சிதறவிட்ட எண்ணெய்த்துளிகளாய், சமுதாய முழுமைக்குமாகப் பரவும் என்று எதிர்பார்க்கலாம்.

## 3

டென்மார்க்... வடக்கு ஐரோப்பாவில், உள்ள வளர்ச்சி பெற்று முன்னேற்றம் எய்திய நாடு. இந்திய மகளிர் சமுதாயம் மேன்மை பெற அந்நாட்டின் வாயிலாகப் பாரதநாடு உதவி பெறுகிறது. அந்த உதவி கொண்டுதான் பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம், கடந்த ஒன்பது ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம், கிராமப்புற மகளிருக்கு, விவசாயம்,

For more ebooks visit: https://getmyebook.in/

கால்நடை, கோழி வளர்ப்பு ஆகிய தொழில்களில், புதிய தொழில் நுணுக்க - அறிவியல் பயிற்சியைக் கொடுக்க இருநூறு விவசாயத் துறை ஆய்வில் தேர்ச்சி பெற்ற மகளிர் அலுவலர்களைப் பயிற்சியாளராக்கியிருக்கிறது. இவர்கள் நாடு முழுதுள்ள விவசாயத்துறை இயக்ககத்துடன் இணைந்து, பயிற்சி பெறுவதற்குரிய பண்ணைமகளிரை அணுகித் தேர்வு செய்கின்றனர். தன் நிலத்தில் தானே வேலை செய்யவும் நிர்வகிக்கவும், இந்தப் புதிய தொழில் துணுக்கங்களில் பயன்பெறவும் மிகுந்த ஊக்கத்துடன் முன்வந்திருக்கின்றனர். கல்லூரிப் பட்டமும், மேல் தகுதிகளும் பெற்று, உயர்தரம் என்று வட்டத்துள் அடங்கிய பெண் அலுவலர், இந்தக் கிராமத்து அறியாமைக்குள் முடங்கி இருந்த பெண்களை விரிந்த எல்லைகளில் ஒருங்கிணையச் சேர்த்திருக்கின்றனர். ஐந்து நாட்கள் பயிற்சி. இருபத்தைந்து பேர் பயிற்சி பெறுபவர். இவர்களில் சாதி-மத பேதங்கள், மேல் கீழ் என்ற பிளவுகள் மறைகின்றன. மண்பரிசீலனை செய்வதும், நாற்றங்கால், விதைத்தேர்வு செய்வதும், நடவு வயல் பராமரிப்பு, அடியுரமிட்டு நாற்று எடுத்து நடவு செய்தல், மேலுரம் இடுதல், ஈறாக அறுவடை செய்து சேமிப்பு வரையிலும் இந்தப் பயிற்சியில் அடங்குகிறது.

“ஏம்மா, விவசாயக் குடும்பம்னுறீங்க. நீங்க வேலை செய்திருக்கீங்களா?...”

“இல்லீங்க. நா வயல்ல எறங்கி வேலை செய்யமாட்டே சோறு கொண்டாருவே. கூடமாட

For more ebooks visit: https://getmyebook.in/

எடுத்துப் போடுவேன். இருபது வருசம் இப்பிடித்தான்,.. ஆனா இப்ப அரைஏக்கர், இவங்கசொல்லிக் கொடுத்தபடி, பார்த்து செய்தேங்க. வழக்கத்தை வுடக்கூடப் பத்துமுட்டை நெல் கண்டிருக்கு”

இந்தப் பெண்மணிக்கு முகத்தில் புதிய ஒளி மின்னுகிறது.

"மண் பரிசோதனைக்கு அனுப்பினேன். எல்லாம் நானே, செய்தேங்க... அதுக்குத்தக்கனபடி, தழைச்சத்து போடச் சொன்னாங்க. இவங்க சொன்னாப்பல விதைக்கு திரம் மருந்து போட்டுக் குலுக்கி விதைச்சோம். அது பூச்சிகளை வராம கட்டுப்படுத்திடிச்சி. நாத்து நடுறப்ப, நடுவே ஓரடி விட்டு பத்தி நடவு செய்தோம். முன்னெல்லாம் நெருக்க நெருக்கமா குத்துக்குத்தாக வச்சிடுவோம். இப்ப குத்துக்கு ரெண்டு இல்லாட்டி மூன்று நாத்துத்தான். அடியுரமா யூரியா போடுறப்ப, அளவா, வேப்பம் புண்ணாக்குக் கலந்து வச்சோம். பிறகு உயிருரம் போடுறோம் இல்ல? பசபசன்னு பயிரு வந்திச்சி. ஒருகள, ரெண்டுகள 25ம் நாளு, முப்பத்தஞ்சாம் நாளு எடுத்து மேலும் போட்டோம். நம்ம புள்ள வளக்கிறாப்பில தாங்க பயிரும் முதமுதல்ல அதுக்கு கொஞ்சம் கொஞ்சமாத்தான் செரிசிக்கும். முதல்லல்லாம் தெரியாதுங்க. எங்கூட்டுக் காரம் ஊரியாவ நெறயப்போட்டத்தான் நெல்லுதுன்னு நெறய நெறயப் போடுவாருங்க. இப்ப பாருங்க, பூச்சி, அது முப்பதிதஞ்சு நாப் பயிரா வரப்பதான் வேப்பம் புண்ணாக்கு இல்லாம சீரணிக்குச்சிக்குனு தெரியிது. பிறகு பாருங்க. மேடம் சொன்னாங்க, முப்பத்தஞ்சு

For more ebooks visit: https://getmyebook.in/

நாளைக்குமேல, அம்பது நாள் பயிரிலே மேலோ, உரம்தானேன்னு போட வேண்டாம். முப்பத்தஞ்சாம் நாளில் உங்களுக்கு வீட்டில் அசவுரியம், கல்யாணம் காட்சின்னு ஊருக்குப் போறீங்க, பத்துநாள் கழிச்சி வந்து போட்டுக்கலாம்னு இருக்க முடியாதுங்க. ஏன்னா, அது பச்சை பிடிச்சி, பூத்து, பால் பிடிக்கும் பருவத்திலேயே, கதிர்மணி எத்தனைனு தீர்மானிச்சிக்குது. அப்பவே ஊட்டம் குடுத்திடணும்னு சொன்னாங்க. பின்னால குடுக்கிறது வீண்ணு சொன்னாங்க. அத்த கெட்டிமா முடிஞ்சிட்டேங்க. பதினஞ்சு, மிஞ்சினா பதினெட்டு மூட்டை கெடச்ச அதே வயல்ல முப்பது மூட்டை மணி ஒரு பதரு. பூஞ்சை இல்லீங்க சின்ன சின்ன விசயம்தான்.” என்று பெருமையுடன் கூறுகிறாள்.

இந்த இருபத்தைந்து பேர்களும், ஒவ்வொருவரும் பத்துப் பெண்களுக்குத் தாமே இந்தத் தொழில் நுட்பத்தை இரண்டுநாள் பயிற்சியாகச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதை அந்தப் பெண் அலுவலர் மகிழ்ச்சியுடன் மேற் பார்வை செய்கிறார்கள். இந்தப் பட்டம், இந்த ரகம் உகந்தது என்று இவர்களே. இந்தப் பெண்களே தீர்மானிக்கிறார்கள். தங்களால் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கை, இந்த கிராமப்பெண்களிடம் மிகப் பெரும் மாறுதலைக் கொண்டு வந்திருக்கிறது.

இதுவரை, மேற்குடிப் பெண், காலனியாட்கள் என்று இருந்த மனதளவிலான தீண்டாமை இங்கே அடிபட்டுப்போகிறது. “அக்கா? புதுமாதிரி பத்தி நடவு செய்யிறது எப்பிடின்னு கொஞ்சம் வந்து

For more ebooks visit: https://getmyebook.in/

சொல்லுறீங்களா?” என்று கேட்டால், இவள் யோசனை கூறி மேற்பார்வை செய்ய, அடுப்பை இழுத்து வைத்துவிட்டுப் போகிறாள். கணவனின் கோபமும், கடும் பேச்சும் நியாயமில்லை என்று அதைப் பொருட்டாக்காமல் தான் கற்றதைப் பிறருக்குச் சொல்லப் போகிறாள்.

“த, யார்னாலும் வந்து கூட்டா ஓடுற?” என்று குடிப்பிறப்பு அங்கே குறுக்கிட்டால், “யோவ், சும்மா இருங்க! அல்லாக் குடியும் ஒண்ணுதா, அல்லா ஒடம்பிலும் சேப்பு ரத்தம்தான் ஒடுது!" என்று சொல்லத் தயங்குவதில்லை.

அவன் ஆத்திரத்தில் இவள் பயன்படுத்தும் சாமானை உடைத்தால், இவள் புதிய சாமானை வாங்கிக் கொள்ள முடியும் என்று அச்சுறுத்த முடிகிறது. ஏன்? இது வெறும் பொருளாதார சுயச்சார்பு மட்டும் இல்லை. தானும் ஒரு மனுஷி. ஒரு கணவனின் கைப்பாவை இல்லை, மேலாதிக்கத்துக்கு அடிமை இல்லை என்ற உணர்வு வந்துவிடுகிறது. ‘கொல்லைமேடு' என்று அசட்டையாக விட்ட இடங்களிலும், வேர்க்கடலை, எள், பயறு, உளுந்து, புன்செய்ப் பயிரெல்லாமும், புதிய தொழில் நுணுக்கங்களைக் கையாண்டு பயன் அதிகமாகப் பெறலாம் என்று உற்சாகத்துடன் இந்தப் பெண்கள் இயங்குகிறார்கள். சந்திப்புகள், மாநாடுகள், இவர்களை ஒருங்கிணைக்கிறது. மேலும் மேலும் முன்னேற்றம் காண அடிவைக்கிறார்கள்.

ஒன்றுமில்லாத சப்பு சவறு, கந்தல் சாக்கு இவற்றைக் கறையான் வளர்க்கப் பயன்படுத்திக் கோழிகளை

For more ebooks visit: https://getmyebook.in/

ஊட்டமாக வளர்க்கலாம் என்று கண்டு கொள்ளும் செவந்திக்கு எத்தனை மகிழ்ச்சி! “ஆனா பூச்சி மருந்து, காரமான எறும்புத்துள் இதெல்லாம் இல்லாத எடத்துல வையி!” என்று கவனமாகப் பயிற்சி பெற்றவள் சொல்கிறாள். கறவை மாட்டுக்குப் போடும் வைக்கோலில், யூரியா கரைத்த நீர் தெளித்து, நுண்ணுயிர் ஊட்டம் ஏற்றும் முறையை இன்னொருத்தி காட்டுகிறாள்.

“பண்ணைமகளிர் பயிற்சி எடுத்து அஞ்சு வருசம் ஆவுதுங்க. இப்பதாங்க இந்த வீட்டைக் கூரை எடுத்து மச்சு வூடாக் கட்டிட்டிருக்கிறோம்.” என்று பிரேமா கொல்லத்துக்காரர்கள் இடையே நின்று ஐந்து வருஷங்களில், ஐம்பதாயிரம் திரட்ட முடிந்த வெற்றியைத் தன் முகத்தில் தேக்கிக் கொண்டு பேசுகிறாள்.

“யம்மா. ஒரு விசயம். ஏரியில கண்டமானிக்கும் மணல் எடுக்கிறாங்க. ஒரு பக்கம் பூராப் பள்ளமாயி, மதகுப்பக்கம் தண்ணிர் பாய எடமில்லாம செய்யிறாங்க. அத்தோட, விளை நிலமெல்லாம் வித்துப் போட, ரியல் எஸ்டேட்காரங்க வந்து ஆசை காட்டுறாங்க கூலி கொடுத்துக் கட்டுப்படியாவுல, வித்துப்போடலாம்னு விக்கிறாங்க. நாங்க என்ன ஆனாலும், இனி இந்த மண்ணை வுட்டுப் போகமாட்டோம்.”. இவர்களில் சிலர் சங்கம் என்று இயங்குகிறார்கள். பொதுநலம், சுத்தம், சுகாதார வசதி, விளக்கு வசதி குறித்து பஞ்சாயத்து நிர்வாகத்துடன் மின்துறைக்காரருடன் பேசித் தீர்வு காண்பதும் உண்மை. இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்

For more ebooks visit: https://getmyebook.in/

தன்னம்பிக்கையும், பொது அக்கறையும், கண்டு வியப்பாக இல்லை?

ஒரு பெண் வங்கியில் 'லோன் எடுத்து' மாடு வாங்கினாள். அந்த மாடு வந்த நாளிலிருந்து சரியாகக் கரக்கவில்லை. ஐந்தாறுமாதங்கள். அப்படியும் இப்படியும் தள்ளினாள்.ஒருநாள் அது நோவு கண்டு இறந்துபோயிற்று. டாக்டர் பார்த்து, அதன் நோவு, சாவு இரண்டுக்கும் கொடுத்த சான்றிதழ் இருக்கிறது. வங்கியினரிடம் அதற்கான காப்பீட்டுத் தொகையினால் கடனை ஈடுசெய்ய வேண்டும் என்று போகிறாள்.

வங்கியினரோ, அதன் காதில் கடன் பெற்றதற்கான வளையம் இருக்குமே, அந்த அத்தாட்சியைக் கேட்கிறார். மாடு மேயப்போன இடத்தில் எங்கோ அது விழுந்து தொலைந்து போயிற்று. அதைத் தேடிப் பார்த்துக் கிடைக்கவில்லை. அவளுக்கு அந்தக் கடனை அடைக்க வழியில்லை என்று சொல்கிறார்கள்.

‘தான் எந்த வருஷம் பிறந்தோம்’ என்றுகூடத் தெரியாமல் இருந்த நிலை மாறிவிட்டது. இவள் இன்று வங்கிக்காரரிடம் இதற்காக நியாயம் கேட்கப் போகத் தயங்கவில்லை. டாக்டர் நோவுக்குச் சிகிச்சை செய்ததும் அது இறந்து போனதற்கான அத்தாட்சியும் பொய்யா? அதைவிட அந்தக் கம்மல் பெரிதா? அது மாடு மேயப் போன இடத்தில் புதரிலோ எங்கோ, குட்டையில்கூட விழுந்திருக்கக்கூடாதா? என்று எதிர்த்துச் சட்டம் பேசத் துணிவு பெற்றிருக்கிறாள்.

இந்தப் பயிற்சி பெற்ற பெண்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் முதிய பெண்மணியொருத்தி ஆச்சரிய மாக, “இப்படி ஒரு அதிசயம் பார்க்கலாம்னு

For more ebooks visit: https://getmyebook.in/

எங்களுக்குத் தெரியலியே? நாங்களும் சாணி - எருச் செமந்தோம், ஆடுமாடு மேச்சோம். ஆனான பாடும் பட்டோம். பாதியும் சாவியும் பதருமாப் போச்சு உழுதவன் கணக்கு ஒழக்குத் தேன்னு இருந்தமே?” என்று முணுமுணுக்கிறாள்.

இவளுக்கென்றிருந்த கையகல பூமியையும் விற்று எடுத்துக் கொண்டு மகன் பட்டணம் பெயர்ந்துவிட்டான். இப்போது இந்தத் தள்ளாத காலத்தில் புல்லறுத்தும் களையெடுத்தும் ஊர்த்தயவில் கால் வயிற்றுக் கஞ்சி குடிக்கிறாளாம்.

கிராமத்துப் பெண்கள் சக்தி பெறுகிறார்கள். அறிவியலும் தொழில் நுட்பமும் இவர்களை மேலும் சமுதாயப் பொறுப்புடையவர்களாக இயங்கச் செய்யும். இவர்கள் தங்கள் மக்களைக் கல்வி கற்க அனுப்புவதில் மிகவும் கருத்தாக இருக்கிறார்கள்.

“ஏம்மா? எத்தினி பிள்ளைங்க உங்களுக்கு?”

“ரெண்டு பொண்ணுங்க.”

“பெரியவங்களா?”

“ஒண்ணு ஆறு வயசு, இன்னொன்னு நாலு வயசு. ரெண்டும் ஸ்கூலுக்குப் போகுது.”

‘மூணாவது புள்ள வேணுன்னு ஆசையா?”

"இல்லங்க. ஆபரேசன் செய்துக்கிட்டேன்.”

"ஏ.? உங்கூட்டுக்காரர், மாமனார், மாமியார் பிள்ள வேணும்னு சொல்லல?”

"அவங்க சொன்னா, ஆருங்க இமுசப்படுறது? ஏற்கனவே இந்த காக்காணியும் வித்துப் போட்டாங்க.

For more ebooks visit: https://getmyebook.in/

குடிச்சிக் குடிச்சி, குடல் ஆபரேசன் பண்ணிட்டு வேலைக்குப் போக முடியாம உக்காந்திருக்காங்க இப்பத் தான் எதுனாலும் வாரத்துக்குப் பயிர் பண்ணலான்னு தோணுது. இந்தப் புதுமுறை வந்த பெறகு தெரிஞ்சிட்ட பெறகு, அந்தக் காக்கானிய ஏன் வித்துப் போட்டோம்னிருக்கு."

பெண் தானே முடிவெடுக்கும் வளர்ச்சி பெற்று வருகிறாள்.

இவளால் குடும்பத் தலைமையை ஏற்க முடியும். குடிக்கும் புருசனை, அறியாமை இருளில் மூடப்பழக்கங்களைப் பற்றி இருக்கும் முதிய பெண்களை, மாற்ற முடியும். பொது நிர்வாகங்களில் பொறுப்புடன் பங்கெடுக்க முடியும். ஊருக்கு எது நன்மை, சமுதாயத்துக்கு எது நன்மை என்பதை நான்கு பேருடன் கூடிச் சிந்தித்துத் தெளிவாக ஒரு முடிவு செய்து செயலாற்ற முடியும்.

சில இடங்களில் இப்பெண்கள், கூடிப் பொருள் சேகரித்து முதல் போட்டு, தொழில் பண்ணவும் முன் வந்திருக்கிறார்கள்.

உழவு கடினம். ஆனால் பெண் எளிதாக உழவு செய்யும்படியாக ஒரு சாதனம் உருவானால் அந்தப் பிரச்னை தீருமே?

பெண் தொழில் சாதனையாளர் ஒருவர், அதற்கான புதிய இயந்திர சாதனம் ஒன்றை உற்பத்தி செய்ய முனைகிறார். அதைக் கிராமத்து எளிய விவசாயப் பெண் ஒட்டிப் பார்த்து குறை நிறை கண்டு, மேலும் தரமாக்க யோசனைகள் நல்குகிறாள். தலைமுறை

For more ebooks visit: https://getmyebook.in/

இடைவெளிகள், மேல்-கீழ், அதிகாரி, ஊழியர், பயிற்சியாளர் - மாணவி - நகரம் - நாட்டுப்புறம் என்ற எல்லா நிலைகளிலும் உள்ள இடைவெளிகள் பரிவாலும் சமுதாய அக்கறையினாலும், முன்னேற்ற ஆர்வத்தினாலும் அடிப்பட்டுப் போகின்றன.

பயிர் வளர்ச்சியைத் திசைமாற்ற களைகள் முளைக்கின்றன; பூச்சிகள் வருகின்றன. சுற்றுப்புறச் சூழலின் நச்சுக்கிருமிகள் அதன் துளிரையே வேரையே கடிக்கின்றன.

இது நெற்பயிரை மட்டும் குறிப்பாக்கவில்லை.

சமுதாய மேம்பாடாகிய புதிய வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்திலேயே இந்தச் சூழல் பாதிக்கக்கூடும்.

வீட்டில் ஆண் பொருளிட்டி நிர்வாகம் செய்யும் போது, வீட்டுச் செலவுக்குக் கொடுத்த பணத்தில் பெண் எப்படியும் மிச்சம் பிடித்திருப்பாள் என்று நிச்சயமாகத் தேடுவான். அவள் கைப்பொருள் நாசமாகாது. மிஞ்சினாலும் அது கம்மலாக, மூக்குத்தியாக, கைவளையலாக, ஆபத்துக் காலத்தில் கை கொடுக்கக்கூடிய பொருளாகவே இருக்கும். இன்று பெண்ணே நிர்வாகம் செய்ய முன்வந்தபிறகு, அவளுக்கு முன்னெப்போதைக் காட்டிலும் பொறுப்பும் அதிகமாகிறது.

ஆனால், இவர்கள் சிந்தனையைக் கவர்ந்து இழுக்க, கைப்பொருளைப் பறிக்க, ஆசை காட்டும் எத்தனையோ தந்திரங்களை இன்றைய வாணிப உலகு கையாள்கிறது. வானொலிப் பெட்டியும், தொலைக்காட்சிச் சாதனமும், இன்று குடிசையிலும்

For more ebooks visit: https://getmyebook.in/

கோலோச்சும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அது நியாயம். வெளி உலகை அறிய முடிகிறது.

ஒரு பயிற்சி பெற்ற பெண் சொல்கிறாள். “நா காலையிலே ரேடியோ கேட்பேன். அதுல உழவர்களுக்கு சொல்லுவாங்க. இப்பதா, ஒரு டி.வி.வாங்கிருக்கிறோம். கலரில்ல. எப்பன்னாலுந்தா பாக்க நேரம் இருக்கும். ஆனா, கண்டமானிக்கும் பொம்புளகள ஆடவுடுறாங்க புள்ளங்க ரெண்டும் பாக்குதுங்க.நெல்லால்ல." ஆனால் அதில் வரும் சோப்பு, முகப்பசை, பவுடர், நகை, காபி, டீ, மால்ட், சாக்லேட் எல்லாம் வாங்கி அநுபவிக்கும் ஆசை பெரும்பாலான பெண்களுக்கு அடங்காமல் இருக்கிறது.

“பொட்டிபோல இருக்கு மாவ வச்சி மூடி சுச்சி போட்டா, ரொட்டி வருது, கிளாசுகுப்பி போல ரெண்டு செவுத்துல மாட்டி குழாய் போடுறாங்க சுத்தமா தண்ணி வருமாம். இட்டிலி மாவரைக்கிற கிரைண்டர்போல வூடு துடைக்கிற மிசினு, துணி துவைக்கிற மிசினு இதெல்லாம் வூட்டுல கொண்டாந்து வய்க்கிறாங்களா - இங்கியே வந்திருக்குதாம்”

“அரியாமனையில் உக்காந்து, எல்லாம் சீவிப் போடுவோம். அரிஞ்சி போடுவோம். அதுக்கு ஒரு மிசினாமில்ல?”

“ஐயோ அது எவ்ளோ நெல்லா சுத்தமா சக்குசக்குனு சீவுது? எப்படிண்ணாலும், அது ஒண்னு வாங்கனும். இட்டிலி ஆட்டுற மிசினு கிரைண்டர் புது மாதிரியா வந்திருக்கு. துக்கவே வேணாம். சலிச்சி மாவக்

For more ebooks visit: https://getmyebook.in/

கொட்டிடலாம். புதுசாப் பொட்டிபோல கிளாஸ் மூடி. அஞ்சாயிரம்.”

“அதெல்லாம் வாணாம். தோச சுடுற கல்லு, ஒட்டாம வருது. அது ஒண்னு மட்டும் வாங்கனும்க்கா. அது நானுத்துச் சில்லறைதே.”

“ஆங். எங்கூட்ல கெடக்குது, எங்க மாமியா காலத்துக் கல்லு. நெல்லா தோசைவரும். இதெல்லாம் சும்மா. அதுல ஏதோ பூசிருக்காங்களாம். அது பூடிச்சின்னா ஒட்டும்.”

“அப்ப டிவில வர்ற தெல்லாம் பொய்யா?” “அடச்சீ! அதுல வர பொம்புள சீவிச்சிங்காரிச்சிட்டுச் சிரிச்சுப் பேசுறா. ஆயிரம் சோப்புக் காட்டுறா. நாம வாங்கிபோட்டுப் பாக்குறப்பதான பிரியுது. நமக்குத் தேவை எதுவோ அத்தத்தான் நாம தீர்மானிச்சிக்கணும். புள்ளங்களுக்குச் சத்துள்ள சாப்பாடு குடுக்கணும். தானியம் முளைட்டி தேங்காய் வெங்காயம் போட்டு தாளிச்சிக்குடு. பாலு பாய்ச்சிக் குடு புள்ளிக்கும் உனுக்கும் பால் இல்லாம காசுக்கு வித்து, காசு வாங்கி, அவம் போடுற புட்டா மாவெல்லாம் வாங்கனுமா? கொல்ல கீரை, ஆராக் கீரை, தவசுக் கீரை, பண்ணைக் கீரை, பொன்னாங்கண்ணி, இதெல்லாம் சேத்துச் சாப்புடறோம்.."

"ஆமா நெலத்துக்குக்கூட உயிர் உரம்னுசொல்லுறாங்க. வேப்பம் புண்ணாக்கு பூச்சி வராதுன்னு சொல்றாங்க போடுறம். நம்ம சுத்துப்புறத்துக்கு, மரம் நட்டுப் பயிர் பண்ணச் சொல்றாங்க. இதெல்லாம் சரி, நம்ம சுத்துப்புறத்தை, தூய்மையா வச்சிக்கணும். ரெண்டு புள்ளதான்னு

For more ebooks visit: https://getmyebook.in/

தீர்மானிச்சிட்டோம். ஆணானாலும் பொண்ணானாலும் படிக்க வைக்கிறோம். ஒரு தொழில் செய்ய ஆளாக்குறோம். அதெல்லாஞ்சரி, ஆனா, முகத்துல அழுத்திக்கிற மிசின் வேணும் - தலையச் சுருட்டிவுட்டுக்கிற- ஏதோ ஒண்ணு வேணும், மத்து இழுக்கிறாப்போல ஒண்ணு அதுல பயிற்சிப் பண்ணா, ஒடம்பு நல்லாவும்ன்னு காட்டுறாங்க. இப்பவே பணம் கட்டுங்க, பொருள் உங்கூட்டுக்குத் தேடி வரும்னு சொல்றாங்க. ஒடனே, பாலுவித்த பணத்தையோ, சீட்டுநாட்டு எடுத்த காசையோ, கட்டி வாங்கிட்டு வரதா?"

“அட இல்லம்மா, நமக்கு என்ன வருமானம்? நமக்கு முதத் தேவை என்ன? அத்தப் பாக்கணும். குடிக்கக் கூழு அடிப்படைத் தேவை. அதே கஷ்டமா இருக்கறப்ப, நாலு பேருக்கு மெய்ப்பா இருக்கணும்னு கொப்புளிக்க பன்னீரு வாங்கறது தா தப்பு:”

“நம்ம ஊரு நல்லா இருக்கணும். புள்ளங்க நல்லா வளரணும். அவங்க வெளில போறாங்க. நல்லதவுட கெட்டதுதா நெறிய இருக்கு. வளர்ற புள்ளங்க சூதுவாதறியாம வுழறாங்க. போதை மருந்து, கஞ்சா, மாத்திரை இதெல்லாம், நல்லது கெட்டது தெரியாம, பயந்தெரியாம எதையும் புதுசா அனுபவிக்கனும்னு தா வுழறாங்க. அதுக்கு நாமத்தான் அவங்களுக்குச் சின்ன புள்ளலேந்து, நல்லது கெட்டது தெரிஞ்சிக்க, ஒழுக்கம்ங்கறது நம்மப் பாத்துதா தெரிஞ்சிக்க நடக்கணும். அப்பன் நிதம் குடிச்சிட்டு வந்து ஆத்தாள உதச்சாப் புள்ளை எப்பிடி நல்லொழுக்கம் கத்துக்கும்? பொம்புள புருசன்கிட்டப் பொய் சொல்லிட்டு, ஒரு

For more ebooks visit: https://getmyebook.in/

தப்பான காரியம் செஞ்சா, அத்தைப் பாத்திட்டிருக்கிற புள்ளைங்க எப்படி ஒழுக்கம் கத்துக்கும்?

“இன்னைக்கு மொத்த சமுதாயத்திலும், பொய்யும் புரட்டும் வஞ்சகமும் மோசடியும் வந்திருக்குதுன்னா, அது இப்படி வீடுகளிலிருந்துதான் பிரச்னைகளால் சீர் குலைவாப் பெருகுது. நாம வீட்டை ஆரோக்கியமா ஆக்கணும்.”

“ஆரோக்கியமா ஆக்கணும்னு பொம்புள மட்டும் சொன்னாப் போதுமா? இத சரோசா வூட்டுக்காரரு, இந்த மண்ணு வாணாம்னு லாரி ஓட்டப் போறாரு லாரில சரக்குக் கொண்டுட்டு, ஆந்திரா போறேன், மைசூரு போறேன்னு சொல்றாரு, அப்பப்ப வாரப்ப, ஏதோ ஒரு பூவு, அலுவா, புள்ளைங்களுக்குத் துணின்னு கொண்டிட்டு வராரு, அத்தோட பயமில்லாம இருக்க முடியிதா?.”

“ஆமாம்மா. குட்சிப்போட்டு வண்டி ஓட்டுறாங்க. லாரி கவுந்திச்சி, வண்டி மோதிச்சி, ரோட்டு சாவுன்னு டி.வி.ல போட்டுக் காட்டுறப்பலாம் கப்பு கப்புன்னு நெஞ்சடிக்குது. முருகா....ன்னு சொல்லிக்கிறேம்மா..."

"அதொண்ணுமட்டுமில்லைம்மா... இப்ப எட்டுப் பது நா வூட்டுக்கு வாராம, ஒரு நெல்ல சோறு காணாம, இருக்காரு இல்ல? . அவுரு எங்கே போறாரு, என்ன சாப்பிடுறாருன்னு தெரியுமா?"

"இல்ல மெய்தாம்மாதா, போன தபா ஒருமாசமாயிட்டது இன்னொரு ஆளு இல்ல. நானே இன்னொரு ட்ரிப் போயிட்டு வாரன்னாரு. சம்பாதன இன்னாவோ நெறியதா. ஆனா, வெளியில ரொம்ப

For more ebooks visit: https://getmyebook.in/

செலவுப் பண்ணிடறாரு இப்பதா தோணுது. இந்த உழைப்பை மண்ணுல இவரு குடுத்தா, நா உழவோட்ட, நாத்துக்கட்ட, அறுப்பு அறுக்கன்னு ஆளு தேடிட்டுப் போக வாணாமில்ல?..”

சரோசாவின் இந்தக் கவலை மேலோட்டமானது இல்லை. இதற்கு வேரோட்டம் இருக்கிறது.

“சரோசா.... இப்பதா, டி.வி. வானொலிலல்லாம் போடுறாங்க. கூச்ச நாச்சமே இல்லாம போச்சின்னு ஒரு பக்கம் சொல்லுறம், முன்னெல்லாமும், கட்னவள வுட்டுப் போட்டு எங்கியோ போயி, சீக்குக் கொண்டாந்த ஆம்புளைங்க உண்டு. ஆனா அப்பல்லாம் இப்பிடி இந்த மாதிரி 'எய்ட்ஸ்' சீக்கு இல்லை. இது எப்படியோ, நம்ம நாட்டில வந்திடிச்சி. இதுக்கு மருந்தே இல்ல. மருந்தே கெடயாது. அப்பிடின்னு சொல்றாங்க....”

“அப்படித்தான் சொல்றாங்க. ஒருவனுக்கு ஒருத்தின்னு வாழணும்னு நெறியும் சொல்லிட்டே இருக்காங்க. இப்படி ஒரு புரையோடுற ஓட்டய வச்சிட்டு நாம என்னத்த முன்னேற்றம் காணுவம்? நெனைச்சா பயம்மா இருக்கு. ஆம்புள ஒருமாசம் கழிச்சி வாராங்க. ஏதோ கண்ணுல கண்டத ஆசயா வாங்கிட்டு வாராங்க... இன்னும்... எத்த வாங்கிட்டுவாராங்கன்னு எப்பிடிம்மா தெரியிது? அது முதமுதல்ல தெரியவே தெரியாதாமே? ‘எச்.ஐ.வி.’ தொற்று இருக்குதான்னு கண்டாலே கவனமாக இருக்கணும்...”

“அது மூச்சுப்பட்டாக்கூட ஒட்டிக்கும்ங்கறாங்க? புள்ளங்கள எடுத்துக் கொஞ்சுவாங்க, முத்திக்குவாங்க. நா எப்பிடி வாணான்னு சொல்ல? புள்ளங்களுக்குகூடத் தொத்திக்கும்னு சொல்றாங்க...”

For more ebooks visit: https://getmyebook.in/

“அப்டில்லாம் இல்லியாம். புள்ள தாய் கருப்பத்திலே பத்திட்டாத்தான் அப்படி இது ரத்தத்தின் ஒட்டு மூலமாத்தான் வருமாம். அதான் இப்பல்லாம் ஊசி போட்டா ஒடனே அத்தைக் குப்பத் தொட்டில போடுறாப்பில அல்ல வச்சிருக்காங்க? முன்ன மாதிரி ஊசியே போடுறதில்ல. ஒரே ஊசியில பலருக்கும் குத்துனா, ரத்தம் மூலமா அது பரவ வழி இருக்குதாம்...”

“மெய்யாலுமா?... இப்ப, எங்க மூத்தாரு மவ, போன மாசம், இத இங்க மெயின் ரோட்டுல போறப்ப வண்டி மோதி வுழுந்திட்டா, ஆசுபத்திரிக்கு செங்கல்பட்டுக்கு இட்டுப்போயி ரத்தம் குடுத்தாங்க. அதுல இருக்காதா? ஆரோடயோ ரத்தம்தான?”

“...அதெல்லாம் ஆசுபத்தியில இப்பல்லாம் 'எய்ட்ஸ்’ கிருமி இல்லாத ரத்தம் தா வச்சிருப்பாங்கன்னாலும், பொம்புளங்க நாமதா காபந்தா இருக்கணும்மா... நாமதான் அநுபவிக்கிறவங்க...? நாமல்லாமே சுகாதார நிலையத்துக்கு போயி இதெல்லாம் வெவரமா தெரிஞ்சிட்டு வரணும். பொம்புளதா இன்னைக்கு மலபோல நிக்கணும். இந்தக் குடிச்சிட்டு வர ஆம்புளகளயெல்லாம் பொம்புளகள்ளாம் ஒண்ணா சேந்து தெருமுனையில் நின்னு மடக்கினா என்ன?.”

“அது நெல்ல யோசனதா. ஆனா, ஏம் புருசன் குடிக்க மாட்டாரு அவுரு இராமர். நா ஏண்டி வாரணும்னு குடிக்காத ஆளுன்னுற பொருளில இருக்கிறவ வருவாளா?”

“அதாங் கூடாது. இத பாரு; நாம, எத்தினியோ விதத்திலே வேறவேறன்னு நினைச்சிட்டிருந்தோம். இந்தப் பண்ணை மகளிர் திட்டம், நமுக்கும் ஒரு கவுரதி,

For more ebooks visit: https://getmyebook.in/

பவுர் குடுத்திருக்கு ஏ எல்லாரும் வித்தியாசமில்லாம, ஒருத்தொருத்தர் உதவிசெஞ்சிக்கிட்டு, கூட்டா, இருந்ததாலதான், அப்படி, இதுலயும் கூட்டா நிக்கணும்....... லச்சுமி வூட்டுக்காரு, மின்ன வூட்ட வுட்டு அவ வெளியே போனா கூச்சல் போடுவாரு இப்ப?. உழவர் பயிற்சின்னு புதுசா, தொண்ணு வந்தாலும் அவருக்குத் தா காயிதம் வருது. போயித் தெரிஞ்சிட்டு வாரா. அவுரு ஒண்ணுமே சொல்லுறதில்ல. ஏன் லச்சுமி?"

'கம்மாவா? அஞ்சு வருசத்துல, வூடுகட்டியாச்சி, பையனும் படிக்கிறா, பொண்ணுக்குக் கலியாணம் செய்யப் பேறா."

"அதா, அவ அண்ண மகந்தானே?"

"அதில்ல."

"ஏ...?"

"அண்ணிக்காரிக்கு முப்பது சவரன் வேணுமாம். கையில முப்பதாயிரம். எங்க பொண்ணு சொல்லிடிச்சி. அவன் படிப்பு நானும் படிச்சிருக்கிற, அவனைவிட உழைக்க முடியும். எனக்குதா அவ சவரனும் பணமும் குடுக்கணும்னு கண்டிப்பா சொல்லிடிச்சி! பின்னென்ன?"

பெண்கள், இப்போதெல்லாம், யாருக்கோ தன்னை ஒப்புக் கொடுத்தபின், இயந்திரம் போல் தன்னுணர்வின்றி இயங்குவதில்லை.

அவள் தன்னைப் புரிந்து கொள்கிறாள்; தன் உழைப்பைப் புரிந்து கொள்கிறாள்; தன்னை முடக்கும் சக்திகளை, ஆரவாரமின்றியே கழற்றிவிட அவள்

For more ebooks visit: https://getmyebook.in/

தெரிந்து கொண்டுவிட்டாள். அவள் இப்போது தன்னை, தாயை, தாய்மண்ணை, மக்களை, குடும்பத்தை, தன்னை மதித்துப் போற்றும் புருஷனை நேசிக்கத் தெரிந்து கொண்டு விட்டாள். எனவே, இவள் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் குறுக்கே வரும் எந்தச் சக்தியையும் இவள் கண்களை மூடி அநுமதிக்கமாட்டாள். இவளுடைய வழி மரபு வழிதான். ஆனால் இதே வழியில் தளைகளை நீக்கத் தெரிந்து கொண்டதால், புதிய உலகம் அமைக்கும் நம்பிக்கை ஒளி மின்னுகிறது.

**'சென்னை வானொலி' - 1998**

## ஆசிரியை திருமதி. **ராஜம் கிருஷ்ணன்**

1952-ல் நடந்த அகில உலகச் சிறுகதைப் போட்டியில் இவரது '**ஊசியும் உணர்வும்**' என்ற சிறுகதை தமிழ்ச் சிறுகதைக்குரிய பரிசைப் பெற்று '**ஹிந்துஸ்தான் டைம்ஸ்**' வெளியீடாக வந்த உலகச் சிறுகதைத் தொகுப்பில் அதன் ஆங்கில வடிவம் இடம் பெற்றது.

1953, கலைமகள் நாராயணசாமி ஐயர் நாவல் பரிசைப் பெற்றது. இவரது '**பெண்குரல்**' நாவல்.

1958-ல் ஆனந்தவிகடன் நடத்திய நாவல் போட்டியில் இவரது '**மலர்கள்**' நாவல் முதல் பரிசைப் பெற்றது.

1973-ம் ஆண்டில் சாகித்திய அகாதமி விருதை '**வேருக்கு நீர்**' என்ற நாவலுக்காக இவர் பெற்றார்.

1975-ல் சோவியத்லாந்து நேரு பரிசை கோவா விடுதலைப் போராட்டத்தைச் சித்திரிக்கும் இவரது

For more ebooks visit: https://getmyebook.in/



‘**வளைக்கரம்**’ நாவல் பெற்றது.

1980-ல் இலக்கியச் சிந்தனையின் பரிசை இவரது ‘**கரிப்பு மணிகள்**’ நாவல் பெற்றது.

1982-ல் இலக்கியச் சிந்தனைப் பரிசையும் பாரதீய பாஷா பரிஷத் பரிசையும் பெற்றது இவரது ‘**சேற்றில் மனிதர்கள்**’ நாவல்.

1987-க்கான தமிழக அரசின் பரிசை தமது ‘**சுழலில் மிதக்கும் தீபங்கள்**’ நாவலுக்காகப் பெற்றார்.

1991-ல் தமிழக அரசின் திரு.வி.க. விருதைப் பெற்றார் இவர்.

1994-ல் சரஸ்வதி பரிசை இவரது ‘**அவள்**’ சிறுகதைத் தொகுப்பு பெற்றது.

1995-ல் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்க விருதைப் பெற்றார்.

1996-க்கான ‘**அக்னி**’யின் அட்ஷர விருதைப் பெற்றார்.

திருச்சி மாவட்டத்தில் 5.11.1925-ல் பிறந்த இவர், ஒரு நாவலுக்கான பொருளை முன்பே திட்டமிட்டு, சம்பந்தப்பட்ட இடங்களில் பிரயாணம் செய்து, மக்களின் வாழ்வைக் கண்டறிய அங்கேயே தங்கி உய்த்துணர்ந்த பின்னரே, நாவலை எழுதுகிறார். இதுவே இவரது தனிச் சிறப்பாகும்.

For more ebooks visit: https://getmyebook.in/

# இந்த மின்னூலைப் பற்றி

உங்களுக்கு இம்மின்னூல், இணைய நூலகமான, விக்கிமூலத்தில் இருந்து கிடைத்துள்ளது[1].

இந்த இணைய நூலகம் தன்னார்வலர்களால் வளருகிறது. விக்கிமூலம் பதிய தன்னார்வலர்களை வரவேற்கிறது. தாங்களும் விக்கிமூலத்தில் இணைந்து மேலும் பல மின்னூல்களை அனைவரும் படிக்குமாறு செய்யலாம்.

மிகுந்த அக்கறையுடன் மெய்ப்பு செய்தாலும், மின்னூலில் பிழை ஏதேனும் இருந்தால் தயக்கம் இல்லாமல், விக்கிமூலத்தில் இம்மின்னூலின் பேச்சு பக்கத்தில் தெரிவிக்கலாம் அல்லது பிழைகளை நீங்களே கூட சரி செய்யலாம்.

இப்படைப்பாக்கம், கட்டற்ற உரிமங்களோடு (பொதுகள /குனு -Commons /GNU FDL )[2][3] இலவசமாக அளிக்கப்படுகிறது. எனவே, இந்த உரையை நீங்கள் மற்றவரோடு பகிரலாம்; மாற்றி மேம்படுத்தலாம்; வணிக நோக்கத்தோடும், வணிக நோக்கமின்றியும் பயன்படுத்தலாம்

இம்மின்னூல் சாத்தியமாவதற்கு பங்களித்தவர்கள் பின்வருமாறு:

For more ebooks visit: https://getmyebook.in/

- Fathima Shaila
- Victory-King
- Pavithra Kannan
- பிரபாகரன் ம வி
- Balajijagadesh
- சத்திரத்தான்
- Balu1967
- Arularasan. G
- Info-farmer
- TI Buhari
- HoboJones
- Fleshgrinder
- Be..anyone
- Patricknoddy~commonswiki
- Rocket000
- Xato
- Mecredis

---

1. ↑ http://ta.wikisource.org
2. ↑ http://creativecommons.org/licenses/by-sa/3.0/
3. ↑ http://www.gnu.org/copyleft/fdl.html

For more ebooks visit: https://getmyebook.in/